வெளியீடு 27-2-2004 Issued 27-2-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 28, 2003 – தொகுதி 45 – எண் 2

**Monday the 28th April, 2003 – Volume 45 – No. 2**


சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

28-4-2003

## உள்ளடக்கம்

பக்கங்கள்


1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 285-321

2. சிறப்புக் கவன ஈர்ப்பு—

(அ) கோவை, சத்தியமங்கலம் சாலையில் கொள்ளை மற்றும் கொலை 322-326

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் 322-324

திரு. ஐ. கணேசன் 324-325

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 325-326

(ஆ) வேலூர், கழிஞ்சூர், ஆர்.எம்.எஸ். காலனியில் கொள்ளை மற்றும் கொலை 327-336

திரு. சி. ஞானசேகரன் 327-328

திரு. ஐ. கணேசன் 328-329

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 329-330

திரு. வை. சிவபுண்ணியம் 331

திரு. லா. சந்தானம் 331-332

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 332-336

3. கவன ஈர்ப்பு—

அரசு மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சை அளித்தல் 336-340

4. அறிக்கை அளித்தல்—

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 340

பக்கங்கள்

5. **அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு, 2003 — 340-341

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா

6. **மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 24—உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்

(ஆ) கோரிக்கை எண் 46—போக்குவரத்துத் துறை — 341-482

*மா[illegible] விசுவநாதன் — 342,350,360, 362,363-364, 393,404,410, 413,418,419, 421,423-424, 425,428, 441-473

*திரு. கே. [illegible] — 361-370

*திரு. பி.கே சேகர்பாபு — 370-383

திரு. ஐ. கணேசன் — 384-386,387, 389-396,474,477

திரு. வி.ஆர். ராஜாங்கம் — 395,397-402

திரு. கே. மகேந்திரன் — 402-406,409, 410-411

திரு. வை. சிவபுண்ணியம் — 412,414,415, 416, 417,418, 420-421,422-423,424,426-429, 475


185078
சென்னை 600 008




பக்கங்கள்

6. **மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 24—உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்

(ஆ) கோரிக்கை எண் 46—போக்குவரத்துத் துறை

*திரு. ப. அரசன் — 356-357

*திரு. சி. சண்முகவேலு — 434-441

7. **அறிவிப்பு—**

உறுப்பினர்களுக்கான கணினி பயிற்சி நேரத்தில் மாற்றம் — 411

8. **அரசினர் தீர்மானம்—**

விதி 32-ஐத் தளர்த்தல் — 482-483

9. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** — 483


V27,31'P63
P03, 45.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 15, சுபானு-திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 ஏப்ரல் 28, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி*
*இன்பம் பயக்கும் வினை."*

இன்பம் தரக்கூடிய செயல் என்பது துன்பம் வந்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் துணிவுடன் நிறைவேற்றி முடிக்கக் கூடியதேயாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 341, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**341—**

**மயானப் பாதை**

***1643—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், கோரணம்பட்டு காலனிக்கு மயானப் பாதை அமைத்துத் தர அரசு முன்வருமா?

[2003 ஏப்ரல் 28

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், கோரணம்பட்டு கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் காலனியில் வசிக்கும் மக்களுக்கு ரீ-சர்வே எண் 90/எ-2, 79/2, 91/3, 214/2, 228/2எ மற்றும் 90/15எ ஆகிய புலங்களில மயானப் பாதை வசதி ஏற்கெனவே உள்ளதாலும், மேலும் அப்பாதை தற்போது மேற்படி காலனி மக்களின் பயன்பாட்டில் உள்ளதாலும், புதியதாக மயானப் பாதை அமைத்துத் தா வேண்டிய தேவை ஏற்படவில்லை.

**திரு. தி. வேல் முருகன்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதன் பிறந்து வளர்ந்து ஆளாகி கடைசியில் வாழ்ந்து மறைகின்றபோது, சுடுகாட்டுக்கு அந்த உடலை எடுத்துச் செல்கின்றபோது தமிழகத்திலே பல்வேறு கிராமங்களிலும், பல்வேறு காலனி பகுதிகளிலும் அந்த உடலை எடுத்துச் செல்வதற்கான மயானப் பாதை இல்லாமல் அந்த மக்கள் அவதிக்கு உள்ளாகின்ற காட்சி இன்றைக்கு நிகழ்ந்துகொண்டிருக்கிறது. அந்த வகையிலே என்னுடைய பண்ருட்டி தொகுதி, கோரணம்பட்டு கிராமத்தில் இருக்கின்ற காலனிப் பகுதி மக்களுக்கு மயானப் பாதை இருக்கின்றது. இடையில் சில நிலச்சுவான்தாரர்களுடைய பட்டா நிலங்கள் வருகின்ற காரணத்தினால், அவர்கள் அந்த வழியாக அந்த உடலை எடுத்துச் செல்வதற்கு மறுக்கின்றார்கள்; தடுக்கின்றார்கள். அப்படி தடை ஏதும் இல்லாத ஒரு நிலையை இந்த அரசு உருவாக்கித் தருவதற்கு வழிவகை காணுமா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், கோரணம்பட்டு கிராமத்தில் சுமார் 275 ஆதிதிராவிடர்கள், 95 குடும்பங்களாக, காலனி மற்றும் புதுக் காலனி ஆகிய பகுதிகளில் வசித்து வருகின்றனர். இவ்விரு காலனிகளுக்கும் மயானம் ரீ-சர்வே எண் 79/2-ல் 0.09.0 ஹெக்டர் பரப்பில் பொதுவாக உள்ளது. மேற்படி மயானத்திற்குச் செல்ல இவ்விரு காலனிகளிலிருந்து மயானப் பாதை ரீ-சர்வே எண் 91/3-ல் 0.03.5 ஹெக்டர், 214/2-ல் 0.03.0 ஹெக்டர், 228/2எ-ல் 0.18.5 ஹெக்டர், 90/15எ-ல் 0.12.0 ஹெக்டர் நிலப்பரப்பில் உள்ளது. ரீ-சர்வே எண் 214/2-ல் உள்ள 0.03.0 ஹெக்டர் நிலம் நல்ல சாலையாக உள்ளது. எனவே மேற்படி பாதையினை உபயோகப்படுத்திட எந்தவித ஆட்சேபணையையும் எவரும் ஏற்படுத்தவில்லை.



2003 ஏப்ரல் 28]

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், கோரணம்பட்டு கிராமத்தில் ஆதிதிராவிடர்களின் மயானப் பாதையின் ஒரு பகுதி 1999-2000 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ.50 ஆயிரம் மதிப்பீட்டில் சீர் செய்யப்பட்டுள்ளது. ரீ-சர்வே எண் 19/5எ-ல் 0.02.0 ஹெக்டர் நிலப் பரப்பிற்கு மற்றொரு பகுதி, ஆதிதிராவிட நலத் துறை மூலமாக ரூ.16,500/- செலவில் 3-12-2001-ல் கிராவல் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. ஆதலால், பண்ருட்டி வட்டம், கோரணம்பட்டு கிராம ஆதிதிராவிடர்களுக்கு மயானப் பாதை வசதி முழு அளவில் செய்யப்பட்டுள்ளது. எனவே பாதை வசதி இல்லை எனக் காரணம் காட்டி பிரச்சினைகள் ஏதும் இதுவரையில் எழவில்லை.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு கிராமங்களில்—காலனியாக இருந்தாலும் அல்லது கிராமமாக இருந்தாலும், மயானபீ பாதை இல்லாமல், பல்வேறு கிராம மக்களும், காலனி மக்களும் அந்தப் பிணத்தைக் கொண்டுபோய் புதைப்பதறகான வழிவகை இல்லாமல் (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம், தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. வேல் முருகன், கோரணம்பட்டு பற்றிக் கேட்டீர்கள்; அதற்குப் பதில் சொல்லிவிட்டார். மற்ற இடங்கள்பற்றிக் கேட்டீர்கள் என்றால், அவர் எப்படிச் சொல்வார்?

**திரு. தி. வேல் முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதையொட்டி வந்துவிடுகிறேன். அந்த மக்கள் அந்த இறுதி ஊர்வலத்தைக்கூட நடத்த முடியாமல் அந்தந்த காலனிப் பகுதியிலேயே புதைத்துக்கொள்கின்ற ஓர் அவலச் சூழ்நிலை இருக்கின்றது. என்னுடைய தொகுதியிலேகூட பல்வேறு கிராமங்களில் அந்த நிலை இருக்கிறது. அந்த நிலையை மாற்றி கண்டிப்பாக அனைத்துக் காலனி மக்களுக்கும் மயானப் பாதை—கிராமமாக இருந்தாலும்கூட மயானப் பாதை அமைத்துத் தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்புதான் ஆதிதிராவிட மக்களின் பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து வைப்பதற்காக கடந்த ஆண்டு இடுகாடு மற்றும் இடுகாட்டுப்

[2003 ஏப்ரல் 28

பாதைக்காக நிலம் கையகப்படுத்தும் திட்டத்தின்கீழ் ரூ.44 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. அதுபோல நடப்பு ஆண்டிற்கு இதற்கு ரூ.103.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல இடங்களில் என்று பொத்தாம்பொதுவாகக் கூறுகிறார். குறிப்பிட்ட இடங்களில் இருக்கிறது என்று சொன்னால் அதற்காக நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு தக்க நடவடிக்கை எடுத்து இதுபோன்ற பிரச்சினை இல்லாமல் ஆங்காங்கு மயானத்திற்கு, கடைசி இறுதி ஊர்வலத்தின்போது உடலை எடுத்துக்கொண்டு செல்வதற்கு, அங்கே பிரச்சினை இல்லாமல் அடக்கம் செய்வதற்கு சிறந்த முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களின் மயானப் பாதைக்குரிய கேள்வி. இதை மிக முக்கியமான கேள்வியாகக் கருதுகிறேன். காரணம், அமைச்சர் அவர்களிடத்திலே போதுமான விளக்கம் கையிலே இருக்கிற காரணத்தாலே கேட்கின்றேன். தமிழகம் முழுமையும் இருக்கிற ஆதிதிராவிட மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிற பகுதிகளுக்கு மயானச் சாலை இல்லை என்ற பொதுவான குறைபாடு இருந்துகொண்டே இருக்கிறது. நேற்றுமுன்தினம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், அதற்குத்தான் 44 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று அவர் பதில் சொன்னார்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரேயொரு யோசனை. நேற்று திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரிக்குப் பக்கத்திலே கிளரியம் கிராமத்தில் ஒரு பிணத்தைப் புதைக்க முடியாமல் சிக்கல் ஆகிவிட்டது. இதுபோன்ற பிரச்சினைகள் தொடர்ந்து தமிழகத்திலே இருக்கிற காரணத்தாலே அரசு ஒரு பொதுத் திட்டமாகவே எடுத்து, ஆதிதிராவிட மக்களுக்கு உரிய கிராம மயானச் சாலைகள் அனைத்தையுமே செப்பனிடுவதற்கான ஒரு தொலைநோக்குப் பார்வையோடு கூடிய பொதுத் திட்டத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னமாதிரி கடந்த ஆண்டு, மயானம்,



2003 ஏப்ரல் 28]

மயானப் பாதை ஆகியவற்றிற்கு நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக, கையகப்படுத்தும் பணிகளுக்கு ரூ.44 இலட்சம் செலவு செய்யப்பட்டு, பல்வேறு பணிகள் முடிவடைந்துள்ளன. இப்போது நடப்பு ஆண்டிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கூடுதலாக ரூ.103.50 இலட்சம் நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆகவே நிதியை ஒதுக்கித் தந்ததன் விளைவாக, எங்கெல்லாம் இந்தமாதிரி பிரச்சினை—தனியார் நிலத்தில் மயானப் பாதை—இருக்குமேயானால் அந்தத் தனியாரிடத்தில், அந்த நில உரிமையாளரிடத்தில் நிதியைக் கொடுத்து முறையாகப் பாதையை ஆர்ஜிதம் செய்து, அந்தப் பாதையை சீர் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 342, திரு. ஜெக. வீரபாண்டியன், மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**342—**

## விவசாயிகளுக்குக் கரும்புத் தொகை வழங்கல்

***17808—திரு. ஜெக. வீரபாண்டியன்:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கரும்புக்குரியத் தொகையை வழங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மயிலாடுதுறை நடிப்பிசைப் புலவர் திரு. கே.ஆர். இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, 2001-2002-க்கான, கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய கரும்புப் பணத்தினை நிலுவை ஏதுமின்றி வழங்கிவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, வணக்கம். ஆலையிலே இப்போது கொடுக்கக்கூடிய கரும்புகளுக்கு எல்லாம் 635 ரூபாய் statutory minimum price கொடுத்து

[2003 ஏப்ரல் 28

கொண்டிருக்கிறார்கள். ஆனால் 15 நாட்களுக்குள் கொடுக்கப்பட வேண்டிய தொகையை கிட்டத்தட்ட 2 மாதங்கள் வரை கொடுக்காமல் அவர்கள் இழுத்துவிடுகிற காரணத்தால் பக்கத்தில் இருக்கிற ஒரு தனியார் கரும்பு ஆலை நமது ஆலைகளுக்குப் போட்டியாக இருக்கிறது. அரசு ஆலைகளுக்கு, கூட்டுறவு ஆலைகளுக்குப் போட்டியாக இருக்கிறது. அவர்கள் உடனுக்குடன் நிலுவைத் தொகையைக் கொடுத்துவிடுகிற காரணத்தால், நாம் அவர்களோடு போட்டி போட்டுக்கொண்டு நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கக்கூடிய அந்த ஆலையை தூக்குப்பிடிக்க வேண்டிய திறனும் சூழ்நிலையும் நமக்கு இருக்கிறது. ஆகையால், தற்போது நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு உள்ள மொத்தக் கடன் 111 கோடி ரூபாயாக இருக்கிற காரணத்தால் ஆலையை சரியாக் நடத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அரசு இந்த ஆலையைச் சிறப்பாக நடத்துவதற்கு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் எல்லாமே கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலிருந்து தொடர்ந்து நட்டத்திலே இயங்கி வந்துகொண்டிருக்கின்றன. இந்த என்.பி.கே.ஆர்.ஆர். சர்க்கரை ஆலைக்கு 111 கோடி ரூபாய் நிலுவை இருக்கிறது. டன் ஒன்றுக்கு ரூ. 620.50 காசுகள் கொடுத்து வருகிறோம். விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை எப்படியாவது நிலுவை பாக்கியில்லாமல் கொடுப்பதற்கு அரசினால் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன்.

(முற்பகல் 10-10

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலையிலேயிருந்து வருகின்ற கழிவிலேயிருந்து எத்தனால் தயாரிக்கின்ற முயற்சி இருந்தாலோ அல்லது மின்சாரம் தயாரிக்கின்ற முயற்சி இருந்தாலோ, நிச்சயமாக ஆலைகளை நல்ல நிலையில் கொண்டுவாலாம் என்று வல்லுநர்கள் கருத்து சொல்கிறார்கள். தமிழக அரசு, மயிலாடுதுறை, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின்மூலம் வெளியேறும் கழிவிலே, எத்தனால்



2003 ஏப்ரல் 28]

தயாரிக்கின்ற திட்டம், நமது அரசிற்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலைகள் அனைத்தும் நட்டத்திலே இயங்கிவருகிற காரணத்தினால், எத்தனால் தயாரிக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவுச் சர்க்கரை ஆலையினுடைய விவசாயிகளைக் குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்கள் அருமையான கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இப்போது, மாண்புமிகு பிரதமர் அவர்கள்கூட, கரும்பு விவசாயிகளினுடைய பிரச்சினையை, அதிலும் குறிப்பாக, உத்தரப்பிரதேச மாநிலத்தினுடைய கரும்பு விவசாயிகளுடைய பிரச்சினையைக் கவனிப்பதற்காக, அதற்கு ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு கரும்பு விவசாயிகளினுடைய பிரச்சினையையும் அதிலே சேர்த்துக்கொள்வதற்கு, நம்முடைய மாநில அரசு பிரதமருக்குக் கடிதம் எழுதி, நம்முடைய பிரச்சினையையும் வலியுறுத்தி, கரும்பு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

வினா எண் 343, திரு. ஆர். சாமி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**343—**

**துணை மின் நிலையம்**

***19608—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 28

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியில், 110 மெகாவாட் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணி, நடப்பாண்டில் தொடங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடப்பாண்டில், பணிகள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இருட்டில் கிடந்த தமிழகத்தை வெளிச்சப் பாதைக்குக் கொண்டுவந்து, நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், என்னுடைய மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் 110 மெகாவாட் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கு, இந்த நடப்பாண்டே அமைத்துத் தரப்படும் என்று சொன்ன டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 344, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**344—**

**நுகர்வோர் கடன்**

**•7879—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதவைகளின் மறுவாழ்விற்கு கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் நுகர்வோர் கடன் திட்டத்தின்கீழ், கடன் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில், நுகர்வோர் கடன் திட்டத்தின்கீழ், விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற கடன் திட்டம் ஏதும் தனியாக இல்லை. என்றாலும்கூட, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் செயல்படுத்தப்படும் மகளிர் சிறுவணிகக் கடன் மூலமாக, இந்த விதவைத் தாய்மார்கள் பயனடையலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் நுகர்வோர் கடன் திட்டத்தில், தமிழகத்தில் உள்ள அனைத்து விதவைகளுக்கும் கடன் கொடுக்கும் திட்டத்தினை அளிக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதனையும், விதவைகளின் துன்பத்தையும், துயரத்தையும் போக்கும் வண்ணம், அம்மாவின் ஆட்சியில் நீண்டகாலக் கடன் உதவிகளை அளித்து, ஒளியிழந்த அவர்களின் வாழ்க்கையில் விளக்கேற்றி வைக்குமா என்பதனையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே செயல்பட்டுக்கொண்டிருக்கிற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், ரூ.25 இலட்சம் வைப்புத் தொகைக்குமேல் இருக்கிற அந்த வங்கிகளின் மூலமாகப் பெண்களுக்கு, விதவைத் தாய்மார்களுக்கெல்லாம் சிறுவணிகக் கடன் தந்து கொண்டிருக்கிறார்கள். அது, ரூ.100-லேயிருந்து ரூ. 5 ஆயிரம் வரை தருவதற்கு இந்த அரசு நன்முயற்சி எடுத்துக்கொண்டு வந்திருக்கிறது. மேலும், தாய்மார்களுக்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்புத் திட்டங்களாகப் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, சீரமைக்கப்பட்ட மகளிர் சிறுவணிகக் கடன், நம்முடைய மாநிலத்தில், ரூ.1,718 இலட்சம் அளவிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோன்று உழைக்கும் மகளிர் கடன் திட்டத்தின்கீழ், ரூ.1,127 இலட்சம் மகளிருக்காக வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோன்று, மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டத்தின்கீழ், நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர் ரூ.291 இலட்சம் அந்த அடிப்படையிலே, இந்தக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

[2003 ஏப்ரல் 28

வசதிகளின் மூலமாக, விதவைத் தாய்மார்களும், மகளிரும் வங்கிக் கடனைப் பெற்றுப் பயனடையலாம் என்பதை மாமன்றத்திற்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கென்றே, தனிக் கவனம் செலுத்தும் அம்மாவின் ஆட்சியில், எதிர்காலத்திலாவது, நீண்டகாலக் கடன் கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சுட்டிக்காட்டியதைப்போல இங்கே உறுப்பினர் அவர்களுடைய கேள்விககு முதலிலேயே நான் பதிலை அளித்து இருக்கிறேன். எனவே இந்தத் திட்டத்தின் அடிப்படையில் அவர்கள் அந்தக் கடனைப் பெறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே இருக்கின்ற பல கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படாத சங்கங்களாக, அதாவது over due அதிக வட்டியாகி பணம் கட்ட முடியாத நிலையில் அவையெல்லாம் செயல்படாத சங்கங்களாக பல கிராமங்களிலே இருக்கின்றன. அந்தக் கிராமச் சங்கங்களுக்கு கடன் வழங்குகின்ற நிலை இல்லை. எனவே அப்படிப்பட்ட சங்கங்களிலும் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குகிற ஒரு நிலையை அரசு ஏற்படுத்தித் தருமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி நலிவுற்ற அந்தச் சங்கங்களெல்லாம் இப்போது கண்டறியப்பட்டு, அந்தச் சங்கங்கள் முடக்கி வைக்கப்பட்டு பக்கத்திலே இருக்கிற, நல்ல சங்கங்களோடு, பொருளாதாரத்தில் நல்ல நிலையில் இருக்கிற சங்கங்களோடு இப்போது இணைக்கப்பட்டு வருகின்றன. அப்படி இணைக்கப்பட்டு அந்தப் பகுதிவாழ் மக்கள் இந்தத் திட்டத்தின் மூலமாகப் பயனைப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 ஏப்ரல் 28]

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செ. வெங்கடாஜலம்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிர் சிறு வணிகக் கடன் வழங்குவதிலே, நுகர்வோர் கடன் வழங்குவதில் வங்கிகளுக்குக் குறிப்பிட்ட அளவுதான் கடன் வழங்க வேண்டும் என்று அரசாணை உள்ளதா? அப்படி இருக்குமேயானால், நகர்ப்புறங்களில் இருக்கின்ற அந்த ஆணையைத் தளர்த்தி அதிக அளவிலே கடன் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, வங்கிகளிலே கடன்களைப் பெறுகின்றபோது அவர்கள் என்ன மாதிரியான கடன்களைப் பெற இருக்கின்றார்கள் என்பதற்கேற்ப ரூ.1 இலட்சத்திலேயிருந்து 10 இலட்சம் வரைகூட கடன்களை வழங்க வங்கிகள் தயார் நிலையிலே இருக்கின்றன. அவர்கள் சொல்கிற அந்த விதிமுறைகளுக்கு ஏற்ப நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்கள் அணுகுவார்களேயானால் அந்தக் கடன்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 345, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்

**345—**

**முழுநேர நியாய விலைக் கடை**

**•14826—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதியில் 500-க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ள ஊர்களில் இயங்கிவரும் பகுதிநேர நியாயவிலைக் கடையினை முழுநேர நியாயவிலைக் கடையாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 ஏப்ரல் 28

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதியில் 23 பகுதிநேர நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. 23 பகுதிநேர நியாயவிலைக் கடைகளிலும் 500 குடும்ப அட்டைகளுக்கும் குறைவாக உள்ளது. 500 குடும்ப அட்டைகளுக்குமேல் உள்ள பகுதிநேர நியாயவிலைக் கடைகள் இந்தத் தொகுதியில் ஏதும் இல்லை. எனவே பகுதிநேர நியாயவிலைக் கடைகளை முழுநேர நியாயவிலைக் கடைகளாக மாற்றும் வாய்ப்பு தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இக்கேள்வியை ஓராண்டு காலத்திற்கு முன்பு போட்ட நேரத்தில் 6 இடங்களில் இப்பிரச்சினை இருந்தது. கூட்டுறவு D.R. அவர்களும், J.R. அவர்களும் சரி செய்து இருக்கிறார்கள். இருப்பினும் எனது தொகுதி ஜெனங்கோட்டை என்ற ஊரில் நடத்தப்பட்டு வருகின்ற கூட்டுறவு அங்காடியில் 380 குடும்ப அட்டைகள் இருக்கின்ற காரணத்தாலும், அந்தப் பகுதி மலைப்பகுதியாகவும், ஆற்றுப் பகுதியாகவும் இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு ஒரு தனிக் கடை அமைத்துக் கொடுக்க புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு முன்வருமா என்பதை இந்த நேரத்தில் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன் எனது வேடசந்தூர் தொகுதி, போகாநத்தம் என்கிற ஊரிலிருந்து மலைப்பட்டி என்ற ஊர் 6 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. 6 கி.மீ. தொலைவில் இருக்கிற ஊரில் 340 குடும்ப அட்டைகளும், தாய்க்கடையான போகாநத்தம் ஊரில் இருக்கிற கடையில் 680 குடும்ப அட்டைகளும் இருக்கிற காரணத்தினால், அந்த மலைப்பட்டிக்கு ஒரு பகுதிநேரக் கடை பிரித்துக் கொடுக்க புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்வதோடு, நகராட்சி, பேரூராட்சிகளில் ஆயிரம், இரண்டாயிரம் என்று கூடுதலான எண்ணிக்கையுள்ள குடும்ப அட்டைகள் கொண்ட ஒரே கடை இருக்கிறது. அதைப் பிரித்து, ஒரு குறிப்பிட்ட அளவு குடும்ப அட்டைகளுக்கு ஒரு கடையை வைத்துவிட்டு, மக்களுடைய வசதிக்காக கடைகளைக் கூடுதலாக்கிக் கொடுக்க, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு



2003 ஏப்ரல் 28]

நடவடிக்கை எடுக்குமா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் பகுதியில் 23 கடைகள் இருப்பதாக முன்பே நான் குறிப்பிட்டேன். அதேபோன்று இங்கே பல பகுதிகளிலே அதிகமான அட்டைகள் இருக்கின்றன என்றாலும், குறைவாக இருந்தாலும், அது மலைப்பகுதியாக இருக்கிறது, அந்த பகுதிகளுக்கு அந்தக் கடையைத் தரவேண்டுமென்று மலைவாழ் மக்களினுடைய சிறப்பை முன்னிட்டு உறுப்பினரவர்கள் கேட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மலைப்பகுதிகளுக்கு இந்த நியாயவிலைக் கடைகளை பகுதி நேர கடைகளாக ஆக்குவதற்கு தகுதிகள் உண்டு என்கின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே உறுப்பினரவர்களுடைய பரிந்துரை குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கருத்துரு பெறப்பட்டு நிச்சயமாக ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைப்பட்டி மக்களுடைய ஆதங்கத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்ற அமைச்சருடைய விளக்கத்திற்கு அந்தப் பகுதி மக்கள் சார்பாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 346, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**346—**

**கால்நடை மருத்துவமனை**

***10873—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திருவம்பலாபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், திருவம்பலாபுரம் கிராமத்திலும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் 12,600 என்று தெரிய வருவதால், புதிய கால்நடை மருந்தகங்கள் தொடங்குவதுபற்றி அரசு பரிசீலிக்கும்போது திருவம்பலாபுரம் கிராமத்திலும் புதிய கால்நடை மருந்தகம் ஏற்படுத்துவதுபற்றி கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருவம்பலாபுரம், அதைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகள், ராதாபுரம் பகுதி ஆகியவை மழை மறைவுப் பிரதேசம். விவசாயமே முழுமையாகப் பாதிக்கப்பட்டு விட்டது. பெண்கள் பீடி சுற்றி குடும்பம் நடத்துகின்றார்கள் அல்லது ஆங்காங்கே கால்நடைகளை வளர்த்துத்தான் அவர்கள் குடும்பம் நடத்துகிறார்கள். திருவம்பலாபுரத்தைச் சுற்றியிருக்கின்ற மேலபார்க்கனேரி, கீழபார்க்கனேரி, சங்கனாபுரம், உலகாட்சகர்புரம், தோட்டாவிளை, திருவம்பலாபுரம், ஆத்தங்கரை பள்ளிவாசல், கூத்தங்குளி, இடிந்தகரை, மேலவிஜயாபதி, கீழவிஜயாபதி, அரசர் குளம், மொத்தங்குளம், காடுதுலா, தில்லைநகர், தில்லைவனம் தோப்பு, ஆவுடையாள்புரம், காமனேரி போன்ற கிராமங்கள் மிக வறண்ட பகுதி. அங்கே மங்களுடைய முக்கியத் தொழிலே விவசாயம், கால்நடைகள் வளர்ப்புதான். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால்நடை மருத்துவமனை ஆரம்பிக்கும்போது பரிசீலிக்கப்படும் என்ற உத்தரவாதத்தைத் தந்ததற்கு நன்றி கூறி, அதற்கு முன்னால் அந்தக் கால்நடை மருத்துவமனை ஆரம்பிக்கும் வரை பகுதிநேர கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தருவார்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கால்நடை மருந்தகம் அமைப்பதுபற்றிக் கேட்டிருந்தார்கள். கால்நடை கிளை மருத்துவ நிலையம் அமைப்பது என்றால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக இந்த ஆண்டே பரிசீலித்து, ஆவனசெய்து, அமைத்துக் கொடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே பகுதி நேர கால்நடை மருத்துவமனையும், அதேபோன்று கால்நடை மருத்துவமனை தமிழகத்தில் அமைக்கும்போது இதற்கு முன்னுரிமையும் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தமைக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 347, திரு. க. பாரமலை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**347—**

**தொழிற் கூடங்கள்**

***6487—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, முத்தனேந்தல் சோமசுந்தரம் நூற்பாலையின் அருகில் உள்ள சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் (சிட்கோ) தொழிற்கூடங்கள் பல வருடங்களாகச் செயல்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்தொழிற்கூடங்கள் இயங்க அரசின் நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தொழிற்பேட்டை அமைத்த பிறகு தொழில் முனைவோர் முன்வராத காரணத்தினால் அவை பயன்படுத்தப்படாமல் உள்ளன. ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வந்தால், தொழிற்கூடங்கள் வாடகை/தவணைமுறை/மொத்த விற்பனை முறையில் ஒதுக்கீடு செய்யப்படும். அரசு நிறுவனங்கள் ஏதேனும் பயன்படுத்த முன்வந்தாலும் அவை ஒதுக்கித் தரப்படும்.

[2003 ஏப்ரல் 28

முற்பகல் 10-25

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்பேட்டை எந்த ஆண்டு தொடங்கப்பட்டது? எத்தனை தொழிற்கூடங்கள் இதில் அமைக்கப்பட்டிருக்கின்றன? இதுவரை அரசு நிறுவனங்களுக்கோ அல்லது தனிப்பட்ட யாருக்காவது அவை ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா? சமீபத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த விவசாயம் சார்ந்த தொழில்கள் 50 சதவீதத்திற்கு, குறைந்த முதலீட்டில், அமைக்க முன்வருவோர்க்கு அதை ஒதுக்கீடு செய்ய அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை, மானாமதுரை வழித்தடத்தில், சிவகங்கை மாவட்டத்தில் கிருங்காகோட்டை என்னும் இடத்தில் 1995 ஆம் வருடம் 21.85 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கப்பட்டது. அதில் 5 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டன. ஆனால் இதுவரை ஆர்வமுள்ள தொழில் முனைவோர் யாரும் முன்வராத காரணத்தால் அவை காலியாக உள்ளன. ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வந்தால் தொழிற்கூடங்கள் வாடகை/தவணை முறை/மொத்த விற்பனை முறையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 348, திரு. பி.எச். பால மனோஜ் பாண்டியன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**348—**

**புதிய தொழிற்பேட்டை**

***8244—திரு பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமுல்லைவாயிலில் அமைக்கப்படவிருக்கும் புதிய தொழிற்பேட்டை மூலம் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்?

(ஆ) அதன் விவரம் என்ன?



2003 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆரம்பகட்டமாக நேரடியாக சுமார் 5,000 நபர்களுக்கும், மறைமுகமாக 15,000 நபர்களுக்கும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

(ஆ) திருமுல்லைவாயில் தொழிற்பேட்டையில், சிட்கோ முதற்கட்டமாக பெண்களுக்கான தொழிற்பேட்டையை 218.46 ஏக்கர் நிலத்தில் ரூ. 610 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகளைத் தொடங்கியுள்ளது. இதில் 356 பெரிய மனைகளாகவும், 194 மனைகள் குறுந்தொழில் முனைவோருக்காகவும் பிரிக்கப்படவுள்ளன. மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்து, மனைகளாகப் பிரிக்கப்பட்ட பின்னர் தொழில் முனைவோரிடமிருந்து முறையான விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படும்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பெண்களுக்கு முதலிடம் கொடுத்து, பெண்களுக்காக ஒரு தொழிற்பேட்டை அமைக்க உத்தரவிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்தத் தொழிற்பேட்டையின் ஆரம்பகட்டப் பணிகள் எப்போது முடிவடையும் என்பதையும், அங்கே வேலைவாய்ப்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமுல்லைவாயில், திருச்சி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் பணிகளை அதிவேகமாகத் துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த வேலைகளெல்லாம் முடிவடைந்த உடனே, அவை மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஒப்படைக்கப்படும் என்று மாண்புமிகு பேரவை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 349, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.

[2003 ஏப்ரல் 28

**349—**

**உதவித்தொகை**

**•10722—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்களில் விவசாயப் பணியின்போதும், குடிசைகளில் வசிக்கும் போதும் விஷப்பாம்பு கடித்து இறந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) விஷப்பாம்புகளைப் பிடித்து வனத் துறை மூலம் அடர்ந்த காடுகளில்விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) சிறப்புத் திட்டத்தின்கீழ் இறந்தவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் உதவித்தொகை வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) தஞ்சை, திருவாரூர், நாகை போன்ற மாவட்டங்களில் விஷப்பாம்பு மற்றும் நல்ல பாம்புகள் கடித்து விவசாயப் பணிபுரியும்போதும், குடிசைகளில் வசிக்கும்போதும் இறந்தவர்களின் எண்ணிக்கை வனத் துறையிடம் இல்லை. விஷப்பாம்புகள் இருப்பது குறித்து தகவல் தெரிவிக்கப்படும்போது, அப்பாம்புகளைப் பிடித்து காடுகளில் விடும் பணியை மட்டும் வனத் துறை மேற்கொண்டு வருகிறது. சிறப்புத் திட்டத்தின்கீழ் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் ஏதும் வனத் துறையிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மூன்று கேள்விகளுக்குமே இல்லையென்ற பதிலை அளித்திருக்கிறார்கள். இந்தக் கேள்விகளே நான்கு தடவை வந்து வந்து—புற்றிலிருந்து பாம்பு தலையை எட்டிப் பார்ப்பது போல வந்து வந்து, இன்றைக்குத்தான் அது வெளிப்பட்டிருக்கிறது. ஆனாலும் பதில் திருப்திகரமாக இல்லாமல்



2003 ஏப்ரல் 28]

இருக்கிறது. அநேகமாக இது வருவாய்த் துறை மூலமாக வர வேண்டியிருக்கும் என்ற காரணத்தால் அப்படி ஒரு பதிலை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாம்பை வெளியே விடக்கூடாது என்பதால்தான் வந்து போய்க்கொண்டிருக்கிறது. (சிரிப்பு)

முற்பகல் 10-30

**திரு. வை. சிவபுண்ணியம்:** நல்லவேளை கடிக்காமல் விட்டுவிட்டது என்பதுதான் மகிழ்ச்சி.

குறிப்பாக, விவசாய மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலே உள்ள விவசாயத் தொழிலாளர்கள், ஏழைக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள்தான் இப்படிப்பட்ட பாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள். ஆகவே இந்த விஷப் பாம்பு கடித்து இறக்கிற அந்த நிலைமைகளைப் போக்க வேண்டும் என்பதற்கான முயற்சியின் அடிப்படையிலேயும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டும் என்ற அந்த நோக்கத்தின் அடிப்படையிலேயும்தான் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் வனத் துறையின் மூலமாக எந்தப் பதிலும் இல்லையென்று சொல்கிறார். பாம்புக்குப் பொறுப்பு வனத் துறைதான். ஆனால் நிவாரணத்திற்குப் பொறுப்பு வருவாய்த் துறையாக இருக்கிறது. இரண்டு துறைகளும் கலந்து பேசி, நிவாரணம் வழங்குவதற்குரிய முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று கேள்விகளுக்கும் இல்லையென்று பதில் சொன்னேன் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இரண்டாவது கேள்விக்கு பாம்பை பிடித்து காட்டில் விடப்படும்; அதாவது எங்கெங்கு பாம்பு இருக்கிறது என்று தெரிந்தால் அதை வனத் துறை பிடித்து, காடுகளில்—காப்புக் காடுகளில் விடும். அதைத்தான், இரண்டாவது கேள்விக்குப் பதிலாகச் சொல்லியிருந்தேன். மேலும் பாம்பு கடித்து இறந்தவர்களுக்கு நிதி கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நம் புரட்சித் தலைவி அரசு இதைப்பற்றிச் சிந்திக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன்.

[2003 ஏப்ரல் 28

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விஷப் பாம்புகளைப் பிடித்து வனத் துறை மூலம் அடர்ந்த காடுகளில் விடப்படுமா என்ற இரண்டாவது கேள்விக்கு, தகவல் கிடைத்தால் அதைக் கண்டுபிடித்து காடுகளில் விடப்படும் என்று சொல்கிறார். பாம்பு இருக்கிற இடத்தைக் குறித்து complaint செய்து பின்னர் வனத் துறை போய்ப் பிடித்து விடுகிற வரைக்கும் பாம்பு அந்த இடத்திலேயே இருக்குமா என்பது கேள்வி. அடுத்தது, பாம்புபற்றிப் பேசுகிறபோது, துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். திரு. சிவபுண்ணியம் அவர்கள் கேட்டார்கள், கடிக்காமல் விட்டதே பரவாயில்லை என்று. என்னுடைய வருத்தம், குறைந்தபட்சம் சீறக்கூட இல்லை, ஏன்?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாம்பு அவ்விடத்தில் இருக்குமா என்று கேட்டார். ஆனால் நாங்கள் வனத் துறை மூலமாக பாம்பு இருந்த இடத்தை—எங்கு தெரிவிக்கப்பட்டதோ—குறிப்பாக மயிலாடுதுறையில் N.P.K.R. இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் பக்கத்தில் 450 பாம்புகள் இருந்து அவை பிடிக்கப்பட்டு, குற்றாலம் காப்புக் காட்டில் விடப்பட்டிருக்கின்றது. அதேபோல, Tamil Nadu Newsprint and Paper Mills Limited காகிதபுரம்—கரூரில், தொல்லை கொடுத்து வந்த 128 பாம்புகளைப் பிடித்து, அதாவது மகாபலிபுரத்திலுள்ள இருளர் பாம்பு பிடிக்கும் நிறுவனத்தின் மூலம் 5-7-2001 அன்று பிடிக்கப்பட்டு, அந்தப் பாம்புகள் கொல்லிமலை காப்புக் காட்டில் விடப்பட்டுள்ளன. அதேபோல, எங்கு பாம்பு இருக்கிறது என்று தெரிவித்தால், உடனே வனத் துறை மூலமாக, மக்களுக்குத் தொந்தரவு இல்லாமல் அதைப் பிடித்து காப்புக் காட்டில் விடப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 350, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.



2003 ஏப்ரல் 28]

**350—**

## அலுவலகக் கட்டடம்

***16656—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியத்தில் வனக் காப்பாளருக்கு சொந்த அலுவலகக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சீர்காழி தொகுதியின் பெரும் பகுதி கடற்கரைப் பகுதியாகும். அதில் திருமுல்லைவாசல், கூழையார், தொழுவாய், மடவாமேடு, பழையார் மற்றும் கொடியம்பாளையம் போன்ற கடற்கரைப் பகுதிகளிலும், சீர்காழி தொகுதியைச் சுற்றிலும் வனத் துறைக்குச் சொந்தமான பல ஏக்கர் நிலங்கள் உள்ளன. அதில் தேக்கு மரங்கள் மற்றும் சவுக்கு மரங்கள் அதிகமாக உள்ளன. சீர்காழி நகரத்திலிருந்துதான் மேற்கண்ட வனப் பகுதிகளை வனக் காவலர்கள் தினமும் சென்று பார்க்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. தேக்கு மரங்களும், சவுக்கு மரங்களும் சில சமூக விரோதிகளால் வெட்டப்பட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன. சீர்காழி ஒன்றியம் மற்றும் கொள்ளிடம் ஒன்றியம் ஆகிய பகுதிகளில் பணிபுரியும் வனக் காப்பாளர்களுக்குத் தனித் தனியே அலுவலகக் கட்டடமும், அவர்கள் குடியிருப்பதற்கு குடியிருப்புக் கட்டடமும், சீர்காழி நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற வனச் சரக

[2003 ஏப்ரல் 28

அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடமும் இந்த ஆண்டிலேயே கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா எனப் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வனச் சரகர் 683 பேர் வனத் துறையில் பணிபுரிகிறார்கள். அதுபோல வனக் காப்பாளர்கள் 2,154 பேர் பணிபுரிகிறார்கள். இவர்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்றால் பல கோடி ரூபாய் செலவாகும். இந்த நிதி நெருக்கடியான காலத்தில் இதைச் செயல்படுத்த முடியாது என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் பணியாற்றும் வனச் சரகர் மற்றும் வனப் பாதுகாப்பாளர்களுக்கு 4 சக்கர வாகனங்கள் மற்றும் வனப் பாதுகாப்புக்குத் தேவையான உபகரணங்களை வழங்க அரசு முன்வருமா என பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** நிதிநிலையைப் பொறுத்து அரசு இதுபற்றிச் சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் T.A.P. மூலமாக வன இலாகாவில், அந்தந்தப் பகுதியிலே வனக் குழுத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது நடைமுறையில் பணி செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த வனக் குழுத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் எல்லாம், சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தவறாகத் தேர்தல் நடத்தி முறைகேடாக அந்தப் பதவியிலே வந்திருக்கிறார்கள். டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலேயே அந்த வனக் குழுத் தலைவர்கள், உறுப்பினர்கள் எல்லாம் பல முறைகேடுகள் எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே



2003 ஏப்ரல் 28]

அவர்களிடம் எடுத்துக்கேட்டால் எங்களுடைய பதவிக் காலம் 3 ஆண்டு காலம் இருக்கிறது என்று பட்டும்படாமலும் அவர்களுடைய போக்கிலேயே செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவை எல்லாம் அமைச்சருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? தவறு செய்கிற அந்த வனக் குழுத் தலைவர்கள், உறுப்பினர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? புதிய வனக் குழுத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தக் கிராமத்தில் வனக் குழுத் தலைவர் தவறு செய்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினால், விசாரணை செய்து அப்படி அந்தத் தலைவர் தவறு செய்திருந்தால் அவர்மீது கண்டிப்பாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அரசு நடவடிக்கை எடுக்கும். ஒரு வனக் குழுத் தலைவருடைய பதவிக் காலம் 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகள்-அந்தத் திட்டம் நிறைவேறும் வரையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பாக, எந்த இடத்தில் தவறு நடக்கிறது என்பதைத் தெரிவித்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 351, திரு. கே.சி. கருணாகரன். வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**351—**

### வீட்டு வசதி வாரியம்

***3251—திரு. கே.சி. கருணாகரன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்காததால் அடிப்படை வசதிகள் செய்யப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

[2003 ஏப்ரல் 28

(ஆ) இவ்வாரியக் குடியிருப்புகளுக்குரிய தொகையைச் செலுத்தி, உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) அறியும்.

(ஆ) ஆகவேதான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்தக் குறைகளைப் போக்குகிற வகையிலே அரசாணை வெளியிட்டுள்ளது. அரசாணை எண் 289, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 26-11-2002 வெளியிடப்பட்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் திட்டமிடப்பட்ட மேம்பாட்டுப் பணிகள் செய்து முடிக்கப்பட்டவுடன், அத்திட்டப் பகுதியில் தொடர் பராமரிப்புப் பணிகளை தற்போது நடைமுறையில் உள்ளபடியே சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி அரசு, ஆணை வெளியிட்டுள்ளது.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில், குறிப்பாக சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் 4-க்கும் மேற்பட்ட வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதிகள் உள்ளன. உப்பிலிப்பாளையம், எஸ்.ஏ.எஸ்.எச். காலனி, ஹட்கோ காலனி, கணபதி வீட்டு வசதி வாரியம் என்று 4 பகுதிகளுக்கு மேற்பட்ட பகுதிகள் உள்ளன. அந்தப் பகுதிகளில் பல ஆண்டு காலமாக அக்குடியிருப்புகளின் பாரமரிப்பை உள்ளாட்சித் துறையிடம் வீட்டு வசதி வாரியம் ஒப்படைக்கவில்லை. உள்ளாட்சித் துறை, கோவை மாநகராட்சி இந்த வாரியக் குடியிருப்புகளை இன்றைக்கு இருக்கக்கூடிய வாரிய நிபந்தனைகளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அவர்கள் ஏற்று அதைச் செயல்படுத்த வேண்டும் என்று சொன்னால் பல கோடிக்கணக்கான ரூபாய் பணம் செலவாகும் என்று கோவை மாநகராட்சி எடுக்கவில்லை. உள்ளாட்சி மன்றம்தான் இந்தப் பராமரிப்புப் பணிகளைச் செய்ய வேண்டும் என்பதற்காக வீட்டு வசதி வாரியமும் செய்யவில்லை. முற்றிலும் பழுதுபட்டு மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இந்தக் குடியிருப்புகள் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே இன்றுள்ள



2003 ஏப்ரல் 28]

நிபந்தனைகளை வீட்டு வசதி வாரியம் தளர்த்துமா அல்லது வீட்டு வசதி வாரியமே பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய பகுதியிலே பல்வேறு குடியிருப்புகள் சீரமைக்கப்படவில்லை; உள்ளாட்சி அமைப்புகளும் அதைச் சீர்படுத்தவில்லை என்ற குறைகளைச் சொன்னார்கள். ஆனால் கோயம்புத்தூரிலே கட்டப்பட்ட மொத்த வீடுகள் 635. அதில் ஏற்கெனவே 467 வீடுகள் பராமரிப்பிற்காக கோவை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. இன்னும் 168 வீடுகள் பராமரிப்பிற்காக கோவை மாநகராட்சி கவுன்சிலில் வைத்து ஒப்புதல் பெற்று எடுத்துக்கொள்ளப்படும் என்று கோவை மாநகராட்சி தெரிவித்துள்ளது. அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையான பராமரிப்புப் பணிகளைச் செய்வதற்கான வழிவகைகளை உள்ளாட்சி மன்றத்திடம் ஒப்படைத்து அது சரி செய்யப்படும். மேலும், வீட்டு வசதி வாரியத்தால் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு திட்டத்திற்கும் வெவ்வேறு காரணங்களைச் சுட்டிக்காட்டி மேம்பாட்டுப் பணிகளை வீட்டு வசதி வாரியத்திடமிருந்து எடுத்துக் கொள்வதற்கு உள்ளாட்சித் துறைகள் சில இடங்களில் தயக்கம் காட்டி வருகின்றன. சொத்து வரியை சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் துறைகளே வசூலித்து வருவதால் மேம்பாட்டுப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வீட்டு வசதி வாரியத்திடம் போதிய நிதியாதாரம் இல்லாததாலும், சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் துறை, வீட்டு வசதி வாரியத்தால் உருவாக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படை வசதிகளை, தொடர் பராமரிப்பை மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்துகளை வலியுறுத்தி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆணை பிறப்பித்து, ஆணை வெளியிடப்பட்டு தகுந்த அறிவுரைகள் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆகவே, விரைவிலே உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தந்திருக்கக்கூடிய விளக்கம் வாரிய

மற்றும் நிர்வாக அதிகாரிகள் மூலமாக கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவல். என்னுடைய அன்பான வேண்டுகோள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முறை இந்தத் தொடர் கூட்டத்திற்குப் பிறகு நேரடியாக வருகை தந்து அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டு, உண்மையான நிலையைக் கண்டறிய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தது, இதோடு இணைந்த துணைக் கேள்வி என்னவென்றால், மாநகராட்சி எடுத்துக்கொள்ளவில்லை என்பதும், வீட்டுவசதி வாரியம் கவனிக்கவில்லை என்பதும்தான் இன்று வரை இருக்கும் உண்மையான நிலைமை. ஆகவே நேரடியாக அமைச்சர் வந்து பார்வையிட்டு இதற்குத் தீர்வு காணுவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மக்களுடைய நியாயமான அடிப்படைக் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற அரசாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கருத்தின் அடிப்படையில் அவர்களுடைய பகுதிக்குச் சென்று அந்தக் குறைகளை நிவர்த்தி செய்கின்ற பணிகளைச் செய்யும். குறிப்பாக, வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் சிறிய பழுதுகளாக இருந்தால் இரண்டு வருடத்திற்குள் பழுதுபார்க்கப்படுவதற்கான வழிவகைகளும், பெரிய பழுதுகளாக இருந்தால் ஐந்து வருட அடிப்படையிலே பழுது பார்க்கப்படும் என்ற வாரியத்தினுடைய திட்டங்களும், அதற்குப் பிறகு ஐந்து வருடம் கடந்த பின்பு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற குடியிருப்பவர்களே சங்கங்களை அமைத்துத்தான் பராமரிக்க வேண்டுமென்ற திட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அந்த வகையிலே, அந்தப் பணிகளில் தொய்வு ஏற்பட்டிருக்கலாம். உள்ளாட்சி அமைப்புகளிடம் அதை ஒப்படைத்து, வழியில் நிறைவு செய்கின்ற அந்தப் பணிகளை எங்களுடைய துறை கண்டிப்பாகச் செய்யும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்கின்ற பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கண்டிப்பாகச் செய்யும் என்ற உறுதியைச் சொல்லிக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ஆவடி நகராட்சியில் காமராஜர் நகர்





Housing Board குடியிருப்புகள் பல ஆண்டுகளுக்கு—7 ஆண்டுகளுக்கு முன்பே நிறைவு பெற்றும், இதுவரை உள்ளாட்சித் துறையால் எடுத்துக்கொள்ளப்படவில்லை. காரணம், அந்தப் பகுதியில் தி.மு.க.-வைச் சேர்ந்த நகராட்சித் தலைவர் இருப்பதால் Housing Board எங்களுக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்தால்தான் நாங்கள் எடுத்துக்கொள்வோம் என்று இரண்டு ஆண்டுகளாக மறுத்து வருகிறார்கள். உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுத்து ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய பகுதியிலே இருக்கின்ற குறைகளைச் சொன்னார்கள். அந்தக் குறைகளை நிவர்த்தி செய்கின்ற வழியிலே அரசு ஆவன செய்யும்; இதற்காக அவர்கள் தனியாக ஒரு கேள்வி கேட்பார்களேயானால், துறை மூலம் பதிலைப் பெற்றுத் தருவேன் என்ற உறுதியைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தமிழகத்திலே உள்ள பெரும்பாலான பகுதியிலே இருக்கிறது. நகராட்சிகள், ஊராட்சிகள், பேரூராட்சிகளுக்கும் வீட்டு வசதி வாரியத்திற்குமிடையே இது ஒரு போராட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. இவற்றைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளையும், வீட்டுவசதி வாரிய அமைப்புகளையும் இணைத்து ஒரு கூட்டத்தைக் கூட்டி இதற்கு உடனடியாக ஒரு தீர்வு காணுகின்ற வகையில்—அந்தப் பகுதிக்கு குடிநீர்க் குழாய்கூட போட முடியாத சூழ்நிலை. அப்படிக் குடிநீர்க் குழாய் போட்டிருந்தால்கூட நகராட்சி மூலம், பேரூராட்சி மூலம் பராமரிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது—இதற்கு ஒரு தீர்வு காண்பாரா என்பதை உங்கள் மூலமாக அமைச்சரிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குறைகள் தமிழகம் முழுவதும் உள்ள வீட்டுவசதி வாரியத்தில் உள்ளது என்ற அடிப்படையிலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்

[2003 ஏப்ரல் 28

தலைவி அம்மா அவர்கள் அரசு பதவி ஏற்றவுடன் அரசினுடைய கவனத்திற்கு வந்து, அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, இன்றைக்கு உள்ளாட்சியினுடைய அதிகாரிகளை அணுகி அந்த அரசாணையின் அடிப்படையிலே எந்தெந்தப் பகுதிகள் எல்லாம் இணைக்கப்பட வேண்டுமோ அந்தப் பகுதிகள் எல்லாம் இணைக்கப்படக்கூடிய திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியும், உள்ளாட்சி அமைப்புகளுடன் கலந்து பேசி நிறைவு செய்யப்படும் என்பதை உறுதியுடன் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்காணும் பிரச்சினை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் உள்ளது. எனது பொன்னேரி தொகுதியிலுள்ள மணலி புதுநகர் பகுதியில் சுமார் 1000-க்கும் மேற்பட்ட வீடுகள்/குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. பத்தாண்டு காலத்திற்கு மேலாகியும் அந்தப் பகுதி ஊராட்சியிலும் சேர்க்கப்படவில்லை. வளர்ச்சிக் குழுமமும், போதிய அடிப்படை வசதிகளைச் செய்து தாவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தற்போது ஒன்று, ஊராட்சியுடன் இணைக்கப்பட வேண்டும் அல்லது அங்குள்ள ஜனத்தொகையைப் பொறுத்து பக்கத்திலே உள்ள நாப்பாளையத்தையும் மணலி புதுநகரிலுள்ள அந்த மக்களையும் ஒருங்கிணைத்து ஒரு பேரூராட்சியாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் துங்கள வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குறைகள் பல்வேறு பகுதிகளில் இருக்கிற காரணத்தினால்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வந்தவுடன் அரசாணை எண் 209-ஐ 26-11-2002-ல் வெளியிட்டு உள்ளது. அதன் அடிப்படையில் இன்றைக்கு உள்ளாட்சி அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகளிடம் கலந்து பேசி ஒவ்வொரு பகுதியினுடைய குடியிருப்புகளும் அந்த உள்ளாட்சியுடன் இணைந்து செயல்படுவதற்காக, திறம்படுத்துவதற்காக அரசு முயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். ராஜம்மாள்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தின் அமைச்சராக இருக்கும் அவர்கள் பகுதியிலே, என்னுடைய தொகுதியிலிருக்கும் வீட்டுவசதி வாரிய வீடுகளும் நகராட்சியில் ஒப்படைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். தண்ணீர் வசதிகூட இல்லாமல் 10 ஆண்டு காலமாக கஷ்டப்படுகிறார்கள். அது நகராட்சியில் சேர்க்கப்பட்டால்தான் குடிநீர் கிடைக்கும் என்பதனால் அதையும் நகராட்சியில் சேர்த்துக் கொள்வார்களா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்ன பதிலில் அது அடங்கும். மேற்குறிப்பிட்ட அந்தப் பகுதியில் குடிநீருக்காக அந்த வாரியத்தின் மூலம் ரூ. 20 இலட்சம் கட்டி, அதற்கான பணிகள் நிறைவு பெறவில்லை என்ற கருத்து அரசுக்கு வரப்பெற்று, உடனடியாக குடிநீர் கொடுப்பதற்கான பணிகளை விரைவுபடுத்த வேண்டுமென்று குடிநீர் வாரியத்திற்கு பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே வெகுவிரைவிலே அந்தப் பகுதியிலே குடிநீர் கிடைப்பதற்கான வழிவகைகள் காணப்படும் என்பதை இந்த அவையின் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீட்டுவசதி வாரிய குடியிருப்புப் பகுதிகள் சம்பந்தமாக தமிழ்நாட்டில் பல பகுதிகளில் இந்தக் குறைகள் இருந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமான பதிலைத் தந்திருக்கிறார்கள். அடிப்படை வசதிகள் இல்லாத பல பகுதிகளில் சில பகுதிகள் நகராட்சியால் பராமரிக்கப்படுகின்றன. சில பகுதிகள் பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்படுகின்றன. சில இடங்களில் வீட்டுவசதி வாரியத்தால் பராமரிக்கப்படுகிறது. ஆகவே இந்த மூன்று துறைகளையும் ஒருங்கிணைத்து ஒரு கூட்டம் கூட்டி உடனடியாக அந்தப் பகுதியினுடைய மக்களுக்கு என்னென்ன அடிப்படை வசதிகள் வேண்டுமோ அவற்றைச் செய்து தர ஒரு அமைப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 28

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பல்வேறு இடங்களில் குறைகள் உள்ளது; மூன்று துறைகளையும் சேர்த்து ஒருங்கிணைத்து கூட்டம் அமைத்து சரி செய்யப்படுமா என்பதைக் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆலோசனையின்பேரில் அந்த மூன்று துறைகளையும் இணைத்து தமிழ்நாட்டு மக்களுடைய எந்தக் குறைகளாக இருந்தாலும், நிவர்த்தி செய்யப்படுகின்ற பணிகளை அம்மா அவர்களது அரசு மேலான கவனத்துடன் செய்யும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *352*, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை, தள்ளி வைக்கப்படுகிறது.

வினா எண் *353*, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**353—**

**ஆவின்**

**•12543—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் ஆவின் பால் உற்பத்திப் பொருட்கள் விற்பனை நிலையங்கள் தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை நகரத்தில் ஆவின் பால் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்ய புதுக்கோட்டை நகராட்சி 7 இடங்களை ஒதுக்கீடு செய்துள்ளது. அந்த இடங்களில் ஆவின் பாலகங்கள் விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-50*

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேளுங்கள் தரப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்' என்பதற்கு



2003 ஏப்ரல் 28]

இணங்க, கோரிக்கை வைத்த உடனே நிறைவேற்றுகின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு எங்களுடைய தொகுதி மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். தொடங்கப்படுகின்ற அந்த விற்பனை நிலையங்களிலே, வேலை இல்லாமல் இருக்கக்கூடிய இளைஞர்களையும், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த பெண்களையும் முகவர்களாக நியமித்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக்கொள்ள அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகரில் பால் உப பொருட்கள் விற்பனை செய்ய தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள ஏழு இடங்களில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின் அடிப்படையில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலும் மற்றும் தனியார்களை முகவர்களாக நியமனம் செய்து விற்பனையை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகரிலே மட்டும் அல்லாமல், புதுக்கோட்டை மாவட்டத்திலே இருக்கிற எல்லா தாலுகா தலைமை நகரங்களிலேயும் இந்த விற்பனை நிலையங்கள் தொடங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா அலுவலகம் மட்டுமல்லாமல் அரசு சம்பந்தப்பட்ட பல்வேறு இடங்களில், மருத்துவமனைகள், பஸ் நிலையங்கள், இரயில்வே நிலையங்கள் போன்ற இடங்களில், பொதுப் பணித் துறை மற்றும் நகராட்சி, மாநகராட்சி இடங்களில், அனுமதி

பெற்று அனைத்து இடங்களிலும் இதுபோன்ற பாலகங்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *354*, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**354—**

**கூட்டுறவுச் சங்கக் கட்டடம்**

***19944—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்ப்பட்டு கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம், கீழ்ப்பட்டு கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏதும் இல்லை. எனவே சங்கத்திற்குக் கட்டடம் கட்டும் வினா எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி காசாம்பு பூமாலை:** பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் ஒன்றியத்தில், கீழ்ப்பட்டு கிராமத்திலே பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் இந்த நிதியாண்டிலாவது கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பதியவில்லை. அதனால் அங்கே கட்டடம் கட்டுவதற்கு உண்டான வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *355*, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**355—**

**அண்ணா கலையரங்கம்**

***23649—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரிலுள்ள அண்ணா கலையரங்கை இடித்துவிட்டு, பல்லடுக்கு மாளிகை கட்டி, கீழ்த்தளத்தில் அரங்கும் மற்ற தளங்களில் அலுவலகங்களையும் கட்டிட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் அண்ணா கலையரங்கம் தற்போதுதான் ரூபாய் *10.00* இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு திரையரங்கமாக நடத்தப்பட்டு வருவதால், இதனை இடித்துவிட்டு பல அடுக்கு மாளிகை கட்டி, கீழ்த்தளத்தில் அரங்கம் மற்றும் பிற தளங்களில் அலுவலகங்களைக் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் அண்ணா கலையரங்கம் இருக்கக்கூடிய பகுதி ஒரு Commercial Area. அந்த இடத்தில் இப்போது *10* இலட்சம் ரூபாய் செலவு செய்து இருக்கைகளை மட்டும் சரி செய்திருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, அந்த அண்ணா கலையரங்கம் முழுமையான புதுப் பொலிவு பெறவில்லை. ஆகவே அந்தக் கட்டடத்தை முழுமையாக எடுத்துவிட்டு, கீழ்த்தளத்தில் அரங்கத்தையும், மேல் தளத்தில் பல அலுவலகக் கட்டடங்கள் போன்றவற்றை எல்லாம் கட்டினால், அந்தத் துறைக்கும் வருவாய் வரும்; அந்த இடத்தில் அந்தக் கலையரங்கமும் கொஞ்சம் பொலிவோடு விளங்கும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கட்டடத்தை முழுமையாக அப்புறப்படுத்திவிட்டு, புதியதாக பல அடுக்கு மாளிகைக் கட்டடத்தைக் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை (நிலை) எண் 115, செய்தி மற்றும் விளம்பரத் துறை, 12-6-2000-ன்படி பொதுப் பணித் துறைக்கு ஒப்பளிப்பு செய்து, ரூபாய் 10 இலட்சத்தில் வேலூரில் அண்ணா கலையரங்கில் புதிய இருக்கைகளை அமைத்தல், பொய்க் கூரை அமைத்தல், புதிய திரைச் சீலை, புதிய மின் விசிறி மற்றும் விளக்குகள் அமைத்தல் மற்றும் புதிய வர்ணம் பூசுதல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்ட அண்ணா கலையரங்கினை திரையரங்கமாகவே தொடர்ந்து நடத்தச் செய்யலாம் என்றும், அரசு மற்றும் தனியார் நிகழ்ச்சிகள் நடைபெறுகிறபோது, ஏற்கெனவே நடைமுறையில் உள்ள திரைப்படக் காட்சிகளை இரத்து செய்து நிகழ்ச்சிகளுக்கு அரங்கத்தினை ஒதுக்கீடு செய்யலாம் என்றும் மக்கள் பிரதிநிதிகளும், உள்ளாட்சிப் பிரதிநிதிகளும், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கூட்டம் நடத்தி, அரசுக்குப் பரிந்துரை செய்து அதன்படி 28-8-2001-ல் அரசு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது. 19-11-2001-ல் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் திறந்து வைக்கப்பட்டு தொடர்ந்து திரையரங்கமாக நடத்தப்பட்டு வருகிறது. நிதி நெருக்கடியான சூழ்நிலையிலும் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு வேலூர் அண்ணா கலையரங்கத்தைச் சீரமைக்கும் பணிக்காக ரூ.10 இலட்சம் வழங்க அனுமதிக்கப்பட்டு இன்று புதுப்பிக்கப்பட்டு, அந்தக் கலையரங்கம் தொடர்ந்து திரையரங்கமாக நடைபெற்று வருவதால் நிதிநிலை சீரான பின்னர் மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கையை ஏற்பது குறித்து அரசு சிந்திக்கும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10—55*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூரில் சங்கீத சபா என்கிற ஒரு இடம் அரசுக்காக ஒதுக்கப்பட்டு, அங்கு கட்டடங்கள் எல்லாம் கட்டப்படாமல் சில நேரங்களில் சாராயக்கடையாகவும் இருந்து, பிறகு இன்று பயனற்றுக் கிடக்கிறது. எங்களுடைய வேலூரில் வேறு பொழுதுபோக்கு அம்சம் எதுவுமே இல்லாத ஒரு சூழ்நிலையில், இப்பொழுது சங்கீத சபா போன்ற அமைப்புகள், ஏதாவது கலை பண்பாட்டு நிறுவனங்கள், அந்த இடத்திலே ஒரு டிராமா நடத்துவதற்கோ, கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கோ அதிகமான கட்டணத்தைக் கொடுத்து கல்யாண மண்டபங்கள் எடுக்க வேண்டிய





நிலையில் இருக்கிறார்கள். நம்முடைய இந்த அண்ணா கலையரங்கத்திலும்கூட தொகை அதிகமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. குறைந்த கட்டணமாக, ஒரு நாளைக்கு ரூ.300/- வாடகை என்கிற வகையில், இந்தக் கலையை வளர்க்கின்ற முகத்தான் அங்கே கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு, பொது நிறுவனங்களுக்குக் கொடுப்பதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கையை அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 356, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**356—**

## சித்திரைப் பொருட்காட்சி

**•36019—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகரில் பொழுதுபோக்கு வசதியில்லாமையால், 50 ஏக்கர் பரப்பளவில் மதுரை சித்திரைப் பொருட்காட்சியை நிரந்தரமாக அமைக்க இடம் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசாணை (நிலை) எண் 233, செய்தி மற்றும் சுற்றுலாத் (பொருட்காட்சி) துறை, நாள் 24-12-1996-ன்படி அரசுப் பொருட்காட்சி மதுரையில் ஆண்டுதோறும் ஏப்ரல்-ஜூன் திங்களில் 45 நாட்கள் நடைபெற்று வருகிறது. மதுரையில் சித்திரைப் பொருட்காட்சி, மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான தமுக்கம் மைதானத்தில், பொருட்காட்சியில் கிடைக்கும் நிகர வருவாயில் 50 சதவீதம் மதுரை மாநகராட்சிக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் நடைபெற்று வருகிறது. எனவே 50 ஏக்கர் பரப்பளவில் மதுரை சித்திரைப் பொருட்காட்சியை நிரந்தரமாக

[2003 ஏப்ரல் 28

அமைக்கத் தேவையான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணையால் இந்த மாமன்றத்தில் அமரக்கூடிய பாக்கியத்தை நான் பெற்றவுடனேயே இதே கேள்வியை நான் கேட்டிருந்தேன். எங்களுடைய கோரிக்கை மட்டுமல்ல, மதுரை மக்களுடைய அனைத்துத் தரப்பு மக்களுடைய கோரிக்கையும் நிரந்தர பொருட்காட்சி அமைய வேண்டும் என்பதுதான். இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அந்தச் சித்திரைப் பொருட்காட்சியைத் தொடங்கி வைத்தது நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள். அந்த விழாவிலே நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள். சித்திரைத் திருவிழா வருடத்திற்கு ஒரு தடவை நடந்தால்தான் பெருமை. அதேபோல் சித்திரைப் பொருட்காட்சியும் ஒரு தடவை நடந்தால்தான் பெருமை என்று சுட்டிக்காட்டினார்கள். அதையே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் வழிமொழிந்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இப்பொழுது நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புவது, நீங்கள் சித்திரைப் பொருட்காட்சியை நிரந்தரமாக அமைக்காவிட்டாலும்கூட, மதுரை மக்களுக்கு நிரந்தரமான கடற்கரைகளோ, இயற்கையாக அமைந்த கடற்கரைகளோ, பெரிய பூங்காக்களோ எதுவுமே கிடையாது— பொழுதுபோக்கு அம்சமாக அமைவதோடு அங்கே படித்துவிட்டு வேலையில்லாமல் தவிக்கின்ற இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டுமுகமாக அமையும் பொருட்டும், அங்கே பெருவாரியான மக்கள் செய்து கொண்டு இருக்கின்ற அந்த வட்டித் தொழிலை இப்பொழுது செய்யமுடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்களே, அந்த மக்கள் புதிய தொழிலைத் தொடங்குவதற்கு வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு வழிகாட்டும் முகமாகவும் அங்கே நிரந்தர தொழில் கண்காட்சி அமைக்கப்படுமா என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சரிடத்திலேயிருந்து அறிய விரும்புகிறேன்.



2003 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிற அந்தக் கோரிக்கையை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, தொழில் பொருட்காட்சி அமைப்பதற்கு அரசு சிந்திக்கும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சித்திரைப் பொருட்காட்சி வருடத்திற்கு ஒரு முறை சிறப்பாக தமுக்கம் மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தத் தமுக்கம் மைதானத்திற்குப் பக்கத்திலேயே சட்டக் கல்லூரிக்கு அருகில் தல்லாகுளம் என்ற ஒரு குளம் இருக்கிறது.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகிற வரைக்கும் வினா-விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. க. பாரமலை:** அந்தத் தல்லாகுளத்தாலே பாசனம் பெறும் நிலங்கள் எல்லாம் இப்போது வீடுகளாக மாறிவிட்டன. ஆனால் தல்லாகுளம் பகுதியில் ஏறக்குறைய 100 ஏக்கருக்கு அதிகமான பரப்பு இருக்கிறது. அதில் கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமிப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இருக்கின்ற பகுதியை மீட்டு 50 ஏக்கருக்கு அதிகமாக இருக்கின்ற பகுதிகளிலே நிரந்தரமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஒரு நிரந்தர பொருட்காட்சியை மதுரையில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வைத்திருக்கின்ற கோரிக்கையின் அடிப்படையில் நிச்சயமாக அரசு இதைச் சிந்திக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

*[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) கோவை, சத்தியமங்கலம் சாலையில் கொள்ளை மற்றும் கொலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 20-4-2003 அன்று கோவை, கணபதியில் வீடு புகுந்து கொள்ளையர்கள், இருவரைக் கொலை செய்து, கொள்ளையடித்துச் சென்றது குறித்து திருஎஸ்.ஆர் பாலசுப்பிரமணியன் அவர்களும், திரு. ஐ. கணேசன் அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக ஏற்றுக்கொண்டு முதலில் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களை இதுபற்றிச் சுருக்கமாக விளக்குமாறு அழைக்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கடந்த 20-4-2003 ஞாயிற்றுக்கிழமை அன்று, கோவை, கணபதியிலே ஒரு இரட்டைக் கொலை நடைபெற்றிருக்கிறது. அது மக்கள் சந்தடி அதிகமுள்ள பகுதி. அங்கே பஸ் நிலையம் இருக்கிறது. பஸ் நிலையத்திற்கு அருகிலேயே அந்த வீடு இருக்கிறது. வீட்டுக்கு முன்னாலே கடைகளைக் கட்டிவிட்டிருக்கிறார்கள். அந்த வீட்டுக்காரர் வாடகைக்குக் கடைகளை கட்டிவிட்டிருக்கிறார். உள்ளேயும் ஒரு பட்டறை இருக்கிறது. அந்தப் பட்டறையும் வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை என்ற காரணத்தினாலே அங்கே அன்றைய தினம் அவர்கள் யாரும் இருக்கவில்லை. மாலை 6-30 மணி சுமாருக்கு வேல்மயில்சாமி என்கிற குடும்ப நண்பர் அந்த வீட்டைச் சேர்ந்த வேலுசாமி 64 வயது, ராஜலட்சுமி 55 வயது, இவர்களைப் பார்ப்பதற்காக வருகிறார். வந்து பார்க்கின்ற நேரத்திலே, சந்தடியே இல்லாமல் இருந்ததைப் பார்த்து, சந்தேகப்பட்டு உள்ளே பார்த்தால் கர்ண கொடூரமாக அவர்கள் இரண்டுபேரும் கழுத்து அறுபட்டு, வெட்டப்பட்டு, கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பது புரியவருகிறது. இரத்தம் ஏகமாக சிந்தியிருக்கிறது. அந்த அம்மையாரைப் பொறுத்தவரையில், கழுத்திலே இருந்த தங்கத் தாலி அப்படியே இருக்கிறது. கையிலே இருந்த தங்க வளையல் இருக்கிறது. படுக்கையிலே ஒரு தங்க வளையல் கிடந்திருக்கிறது. அங்கே இருக்கிற டீப்பாயின் மேலே இரண்டு டீ





டம்ளர்கள் டீயோடு இருந்திருக்கின்றன. சமையல்கட்டிலே டீ தயாரிக்கப்பட்டு இரண்டு டம்ளர்களிலே இருந்திருக்கிறது. வேர்க்கடலை கொஞ்சம் சிந்தியிருக்கிறது. ஆக, வந்தவர்கள் நிச்சயமாக வீட்டுக்காரர்களுக்குத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். இரண்டு பேர் வந்திருக்கலாம், மூன்று பேர் வந்திருக்கலாம், 4 பேர் வந்திருக்கலாம், குறைந்தபட்சம் இரண்டு பேர் வந்திருக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இரண்டு டீ அந்த டீப்பாயில் இருந்திருக்கிறது. வீட்டு சமையல்கட்டிலே இன்னும் இரண்டு டீ இருந்திருக்கிறது. ஒன்று, அந்த இரண்டு டீயும் வந்தவர்களுக்கும், உள்ளே இருந்த இரண்டு டீ வீட்டுக்காரர்களுக்கும் இருக்கலாம், அல்லது வந்தவர்களே 4 பேராகவும் இருக்கலாம், வந்தவர்கள் 3 பேராகவும் இருக்கலாம், நிச்சயமாக அத்தனைபேரும் தெரிந்தவர்களாக இல்லாவிட்டாலும்கூட, அதிலே ஒருவராவது நன்கு அறிமுகமானவராக, பரிட்சயமானவராக, தெரிந்தவராக இருக்க வேண்டும். கொலை செய்யப்பட்ட பிறகு, அங்கே இருந்த பீரோ உடைக்கப்பட்டிருக்கிறது. பீரோவுக்கு உள்ளே கொஞ்சம் பணம் இருந்திருக்கிறது. பணத்தை முழுவதுமாக எடுத்துக்கொண்டுபோய் இருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. கொஞ்சம் பணம் இருந்திருக்கிறது. கொஞ்சம் நகையும் இருந்ததாகச் சொல்கிறார்கள். ஆக இதனுடைய நோக்கம் என்ன? யார் செய்தார்கள்? கொள்ளைதான் அடிக்கப்பட்டது என்று சொன்னால், கொஞ்சம் பணத்தை விட்டுவிட்டு பதட்டத்திலே, கொலை நடந்த பதட்டத்திலே பணத்தைத் தேடி எடுக்கும்போது கொஞ்சம் பணம் விடுபட்டுப் போயிருக்கலாம். உள்ளே ரூ.5,000/- இருந்ததாகச் சொல்கிறார்கள். அதுவெல்லாம் சரியா என்று பார்க்க வேண்டும். அதேபோல கொஞ்சம் நகையும் இருந்ததாகச் சொல்கிறார்கள். கொஞ்சம் நகையை எடுத்துக்கொண்டு கொஞ்சம் நகையை விட்டுவிட்டுப் போயிருக்கலாம். பதட்டத்திலே ரூ.5,000 விடுபட்டுப் போயிருக்கலாம். வேறு பெரும் தொகையை எடுத்துக்கொண்டு போயிருக்கலாம். அந்த இரண்டு பேரைப் பொறுத்தவரையிலே எந்தவித சர்ச்சைக்கும் இடம் இல்லாதவர்கள் என்று பொதுவாக அங்கே கருத்து நிலவுகிறது. காரணம் அவர்களுடைய சொந்த ஊரில்—வேளாங்குறிச்சியில் நிலம் இருக்கிறது. விவசாயம் இருக்கிறது. சகோதரர்கள் மத்தியில் எந்தவித குடும்பத் தகராறும் கிடையாது. அவர்களுக்கு இரண்டே இரண்டு பிள்ளைகள், ஒரு பெண், ஒரு ஆண். பெண்ணுக்கு திருமணம் ஆகியிருக்கிறது. பையனைப் பொறுத்தவரையில் எம்.பி.ஏ. படித்துக்கொண்டிருக்கிறார். இதுதான்

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்] [2003 ஏப்ரல் 28

அவர்களுடைய குடும்பம். இப்படி இருக்கின்ற நேரத்திலே, இன்றைய தினம் 8 நாட்கள், 9 நாட்கள்—கொலை நடைபெற்று 9 நாட்கள் ஆகின்றன. இன்றுவரை கொலையாளிகள் கைது செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. எந்த அளவுக்குப் புலன் விசாரணை முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று யாருக்கும் தெரியவில்லை. எனவே அந்தப் பகுதியிலே ஒரு பதற்றம் நிலவுகிறது. பீதி நிலவுகிறது. இதைப் போன்ற இடத்தில், மக்கள் சந்தடி உள்ள இடத்தில், அதுவும் பஸ் நிலையத்திற்கு அருகிலேயே வாழ்ந்துகொண்டிருந்த இரண்டு பேர் பட்டப் பகலிலே கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால்—அங்கே பீதி நிலவத்தான் செய்கிறது. 6½ மணிக்கு வந்த நண்பர் பார்த்தார் என்றால்கூட, கொலை 4 மணியளவில் நடைபெற்றிருக்கலாம் அல்லது 3½ மணியிலிருந்து 4½ மணிக்குள் நடைபெற்றிருக்க வேண்டும் என்று பொதுவாக் அங்கே ஒரு கருத்து நிலவுகிறது. எனவே உடனடியாக கொலையாளிகளைக் கைது செய்து நீதியின் முன்னே நிறுத்த வேண்டும். இதையெல்லாம் முழுமையாக அரசு விசாரித்து இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, யார் கொலைகாரர்களாக இருந்தாலும், யார் கொள்ளையர்களாக இருந்தாலும் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து நீதியின் முன்னே நிறுத்தி, உரிய தண்டனை வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே நம்முடைய எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்னதுபோல் சந்தடி நிறைந்த பகுதியிலே, இந்தக் கொலை பஸ் நிலையத்திற்கு அருகிலே நடந்திருக்கிறது. இந்தக் கொலை நடந்து இதுவரை 9 நாட்கள் ஆகியும் இன்னும் கொலையாளியை சரியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது உள்ளபடியே வருத்தப்பட வேண்டிய செய்தி. கொலைக்கு முக்கிய காரணம் என்னவென்று புலப்படாமல், அந்தப் பகுதி மக்கள் மிகவும் பரபரப்பாக பதைத்துக்கொண்டிருக்கிறார்கள். காரணம் நகையும் பீரோவிலே இருக்கிறது. பணமும் பீரோவிலே இருக்கிறது. கொலையுண்ட அம்மையாரிடத்திலே நகை இருக்கிறது. இத்தனையும் இருந்து, எதற்காக, எந்தக் காரணத்திற்காக அந்தக் கொலை நடந்தது என்பது இதுவரை கண்டறியப்படாமல் இருக்கிறது.



2003 ஏப்ரல் 28] [திரு. ஐ. கணேசன்]

இந்த அரசு மிக விரைவிலே என்று சொல்வதைவிட, 9 நாட்களிலே நிச்சயமாக இதனுடைய உட்கரு அரசுக்குத் தெரிந்திருக்கும், தெரியவந்திருக்கும். ஆகையினாலே, எதற்காக இந்தக் கொலை நடந்தது என்பதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெளிவுபடுத்தி, கோவை மக்களுடைய அந்த பரபரப்பான சூழ்நிலையைப் போக்க முன்வருவார் என்ற நம்பிக்கையோடு, இந்தக் கொலையை யார், எதற்காக எப்படிச் செய்திருந்தாலும் அவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனையை அளிக்க இந்த அரசு முன்வருமா என்பதனை உங்கள் மூலம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தைச் சார்ந்த எண் 217 சத்தியமங்கலம் சாலை, கணபதி என்ற முகவரியில் வசித்து வந்த, முதிய தம்பதியர் வேலுச்சாமி (வயது 60) மற்றும் ராஜலட்சுமி (வயது 55) ஆகியோர், 20-4-2003 அன்று மாலை, அவர்களது வீட்டில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தனர்.

வேலுச்சாமி மற்றும் அவருடைய மனைவி ராஜலட்சுமி இருவரும், அவர்களுடைய வீட்டில், தனியாகவே வசித்து வந்தனர். மேற்படி தம்பதியருக்கு, வித்யா தேவி என்ற மகளும் பதிஷ் பிரவீன் என்ற மகனும் உள்ளனர். வித்யா தேவி, ஜெயப்பிரகாஷ் என்பவருக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ளார். மகன் பதிஷ் பிரவீன் பெருந்துறையில் படித்து வருகிறார்.

மேற்படி தம்பதியரின் உறவினரான, வேல்மயில்சாமி என்பவர், 20-4-2003 அன்று மாலை, சுமார் 6-15 மணியளவில், அவர்களது இல்லத்திற்குச் சென்றபோது, முதிய தம்பதியர் இருவரும், கழுத்தில் வெட்டுக் காயங்களுடன் கொலை செய்யப்பட்டுக் கிடந்ததையும், இரும்பு அலமாரி உடைக்கப்பட்டு, பொருட்கள் வீட்டினுள் சிதறிக் கிடந்ததையும் கண்டுள்ளார். வேலுச்சாமி, முன் கூடத்தில் இருந்த குளியல் அறையின் அருகே, தரையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். அவரது மனைவி ராஜலட்சுமி, அருகில் உள்ள அறையில், தரையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார்.

இதன் தொடர்பாக, பி-9 சரவணம்பட்டி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் குற்ற எண் 150/2003, இந்திய தண்டனைச் சட்டம், சட்டப் பிரிவு 302 மற்றும் 380 ஆகியவற்றின்கீழ்,

வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோவை மாநகர காவல் துறை ஆணையரும், சட்டம்-ஒழுங்கு, குற்றப்பிரிவு துணை ஆணையர்களும் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, விசாரணை மேற்கொண்டனர். தடய அறிவியல் நிபுணரும், விரல் ரேகை நிபுணர்களும், புகைப்பட நிபுணர் மற்றும் மோப்ப நாயுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, ஆய்வு மேற்கொண்டனர். கொலையாளிகளைக் கண்டுபிடிக்க, மூன்று தனிப் படைகள் அமைக்கப்பட்டன. பிரேதங்கள் பரிசோதனை முடிக்கப்பட்டு, அவர்களது மகன் பதிஷ் பிரவீனிடம் ஒப்படைக்கப்பட்டன. பிரேதத்தின் உள் உறுப்புகள், இராசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு, அறிக்கை பெறப்படவுள்ளது. சம்பவ இடத்திலிருந்த அனைத்துத் தடயங்களும் கைப்பற்றப்பட்டு, துப்பு துலக்கப்பட்டது. சம்பவம் நடந்த நேரத்தில், அந்தப் பகுதியில் நடமாடிக் கொண்டிருந்த நபர்கள், அடையாளம் காணப்பட்டு, அவர்கள் அந்நேரத்தில் அங்கிருந்ததற்கான காரணம் மற்றும் அவர்களுக்கு ஏதேனும் குற்றப் பின்னணி உள்ளதா என்பதுபற்றி ஆராயப்பட்டது. மேலும், ஆதாயத்திற்காக அல்லாமல், வேறு பின்னணி எதுவும் இந்தக் கொலைக்குக் காரணமாக இருக்குமா என்பது பற்றியும் விசாரிக்கப்பட்டது.

கொலைசெய்யப்பட்ட வேலுச்சாமி, சில மாதங்களுக்கு முன்பாக தனது மகள் திருமணத்தை முன்னிட்டு, ஒரு சில நபர்கள் மூலம் தன்னுடைய வீட்டில் வெள்ளை அடிக்கும் பணியை மேற்கொண்டார். இதனடிப்படையில் காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டபோது ஆரோக்கியசாமி என்ற நபர் வெள்ளை அடிப்பதற்காக வந்துள்ளார் என்பது தெரிய வந்தது. மேலும், சம்பவ இடத்தில் கிடைத்த தடயங்களைக் கொண்டு ஆரோக்கியசாமியைத் தனிப்படையினர் தேடிச் செல்லும்போது ஆரோக்கியசாமியின் நண்பராகிய கனகன் என்கிற கனகராஜை 27-04-2003 அன்று மாலை சந்தேகத்தின் பேரில் விசாரித்து சோதித்தபோது அவரிடமிருந்து ஒரு தங்க வளையலும் ரூ. 4,200/- ரொக்கமும் கைப்பற்றப்பட்டன. இதன் தொடர்ச்சியாக கனகராஜ் கைது செய்யப்பட்டு அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி இன்னும் சில நபர்கள் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். மற்றவர்களைத் தேடும் பணியில் தனிப்படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்தக் குற்றத்தில் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரையும் விரைந்து கைது செய்ய வேண்டுமென்று காவல் துறையினருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.





*முற்பகல் 11-10*

## (ஆ) வேலூர், கழிஞ்சூர், ஆர்.எம்.எஸ். காலனியில் கொள்ளை மற்றும் கொலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 21-04-2003 அன்று வேலூர், கழிஞ்சூர், ஆர்.எம்.எஸ். காலனியைச் சேர்ந்த இருவரை கொள்ளையர்கள் கொலை செய்துவிட்டு, கொள்ளையடித்துச் சென்றது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. சி. ஞானசேகரன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. சோ. இராசேந்திரன் ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. லா. சந்தானம் அவர்களும், கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி, திரு. ஐ. கணேசன் ஆகியோரும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இவற்றை சிறப்புக் கவன ஈர்ப்பாக ஏற்றுக்கொண்டு, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், முதலில் திரு. சி. ஞானசேகரன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, இதிலே நானும் அறிவிப்புக் கொடுத்திருந்தேன். முந்தைய ஒத்திவைப்புத் தீர்மானத்திலும் பேச அறிவிப்புக் கொடுத்தேன், இதிலேயும் அறிவிபபுக் கொடுத்திருந்தேன், என் பெயரே வரவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன என்று பார்க்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 21-04-2003 ஆம் தேதி பட்டப் பகலில் வேலூரை அடுத்து இருக்கக்கூடிய கழிஞ்சூர் பேரூராட்சிக்குட்பட்ட ஆர்.எம்.எஸ். காலனியில், வீட்டிலிருந்த பிரேமகுமாரி என்கிற அம்மாவையும், அதேபோல பிரசாந்த் என்கிற அவருடைய 12 வயது மகனையும் சிலபேர் அவர்களுடைய வீட்டின் உள்ளேயே நுழைந்து அவர்களைக் கொலை செய்துவிட்டு, நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றிருக்கிறார்கள். எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் கடந்த 10 நாட்களுக்குள்ளாகவே நடந்த இரண்டாவது சம்பவம் இது. இப்படிக் கொள்ளையர்கள் திடீரென்று எங்களுடைய மாவட்டத்திற்கு வருகை தந்து சிலபேரை துப்பாக்கியால் சுட்டுவிட்டுச் செல்வதையும், சிலபேர் இப்படி வீட்டுக்குள் நுழைந்து கொள்ளையடித்துக் கொண்டிருக்கக்கூடிய நிகழ்ச்சிகள் மக்களிடையே பீதியை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்த இரண்டு நிகழ்வுகளிலுமே—ஏற்கெனவே வேலூர் நகரத்தில் ஒரு

[திரு. சி. ஞானசேகரன்] [2003 ஏப்ரல் 28

நகைக் கடையிலே நடந்த கொலையிலும் சரி, இதிலேயும் சரி, இதுவரை கொள்ளையர்கள் பிடிபடவில்லை. அவர்கள் பிடிபடாத சூழலில், இன்னும் மக்களுக்கு பீதி அதிகமாகிக் கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நான் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம், இந்தக் கொலையாளிகளை, இந்தக் கொள்ளையர்களை உடனடியாகப் பிடித்து, அவர்களைச் சட்டத்தின் பிடியிலே சிக்கவைத்து, அவர்களுக்கு உரிய தண்டனையை நீங்கள் பெற்றுத் தந்தால்தான் எங்களுடைய பகுதியில் அமைதியை, அதேபோல பீதியற்ற ஒரு நிலையை அந்த இடத்திலே உருவாக்கும். இந்தக் கொள்ளையர்களைப் பிடிப்பதற்குத் தனிப் படைகளை வைத்திருப்பதாக இப்போது சொல்லப்படுகிறது. அங்கு ஏற்கெனவே Additional D.G.P. அவர்கள் வருகை தந்தார்கள். அதேபோல, I.G. Incharge அவர்கள் அந்த இடத்திற்கு வருகை தந்தார்கள். கொள்ளையர்களைக் கண்டதும் சுட உத்தரவு என்று இன்று பத்திரிகையிலே பேட்டி கொடுக்கிறார்கள். ஆனால் அவர்களைக் கண்டால் அல்லவா சுடுவதற்கு? அவர்கள் அப்படிச் சொல்வதனாலே எந்தவிதமான பயனும் இல்லை. உடனடியாக உளவுத் துறையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொஞ்சம் முடுக்கிவிட்டு, இப்படிப்பட்ட சம்பவங்கள், கொள்ளையர்கள் எங்கெங்கெல்லாம் சுற்றிக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களை வேரறுப்பதற்கும், அவர்களை முழுமையாகக் கண்காணித்து, கைது செய்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா? இழந்த பொருட்களை எல்லாம் மீட்பதற்கும், இதே மாதிரி குற்றங்களைச் செய்திருப்பவர்களை உடனடியாகப் பிடித்து, அவர்களை விசாரணைக்குட்படுத்தி அவர்களுக்கு ஒரு மரண தண்டனையைப் பெற்றுத்தந்தால்தான், இப்படிப்பட்ட நிகழ்வுகள் இனி நடக்காமல் இருப்பதற்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும் என்கிற காரணத்தினாலே, அரசு உடனடியாக இதிலே நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோல, ஆர்.எம்.எஸ். காலனியிலே ஒரு தாயும் மகனும் துடிதுடிக்க வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; அதற்கு முன்பாக ஒரு வாரத்திற்குள்ளேயே, ஒருவர், இருவர் துப்பாக்கியோடு சென்று பலரைச்



2003 ஏப்ரல் 28] [திரு. ஐ. கணேசன்]

சுட்டு, சர்வ சாதாரணமாகத் தப்பித்து வெளி மாநிலங்களுக்குச் சென்றிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். நம்முடைய தமிழகத்திலே சட்டம்-ஒழுங்கை இவ்வளவு தூரம் நல்ல முறையிலே நிர்வகித்து வந்தபோதிலும், வேலூர் மாவட்டத்திலே இதுபோல தொடர்ந்து கொலையும் கொள்ளையும் நடந்து கொண்டு இருக்கின்றது. அதை உடனடியாகத் தடுக்க, அங்கே இருக்கக்கூடிய Police Commissioner, Superintendent-க்கு கொலையாளிகளைக் கண்டால் சுட்டுக் கொல்லுங்கள் என்று உத்தரவிட்டும், இதுவரை எந்தக் கொலையாளியையும் கைது செய்யவோ, சுட்டுத் தள்ளவோ போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை. இப்படித் தொடர்ந்து கொலையும் கொள்ளையும் நடந்துகொண்டிருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே, காவல் பலத்தை இன்னும் அதிகப்படுத்த இந்த அரசு முயற்சிக்குமா என்பதை உங்கள் மூலம் கேட்டு, அமர்கிறேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரத்தையும், தமிழகத்தையும் கலக்கக்கூடிய முறையிலே, ஒருசில நாட்களுக்கு முன்னால்தான் ஒரு மிகப் பெரிய கொலையும், அதோடு கொள்ளையும் நடைபெற்றது. அதற்குப் பிறகு 4 நாட்களோ, 5 நாட்களோதான் இருக்கும். இந்த வேலூர் ஆர்.எம்.எஸ். காலனியிலே பிரேமகுமாரி என்ற பெண்ணைக் கொலை செய்து, அதன் பிறகு நகைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று தகவல்கள் வெளிவருகின்றன. நான் அரசை குறை சொல்வதற்காக வேண்டிச் சொல்லவில்லை. ஆனாலும், காவல் துறையினுடைய பொறுப்பை ஏற்றிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருந்துகொண்டிருப்பதன் காரணமாக, அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்று சென்னை நகரத்திலேயும், வேலூர், காஞ்சிபுரம் போன்ற இடங்களில் இருந்தெல்லாம் பத்திரிகைகளில் ஏராளமான கொலை, கொள்ளை, இது சம்பந்தமான விவரங்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. ஒருசில நாட்களுக்கு முன்னால்தான் திருச்சியிலேயிருந்து ஒரு நகை வியாபாரி இங்கே வந்து, அவர் பல இலட்சங்கள் மதிப்புள்ள பொருட்களை ஏற்றிச் செல்லக்கூடிய நேரத்திலே, அவரை கொலை செய்வதற்கு முயற்சித்து, அவருடைய

பொருட்கள் எல்லாம் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இன்று காவல் துறையைப் பொறுத்த அளவிலே, ஒரு பயமில்லாத நிலை தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறதா என்ற ஐயப்பாடு மக்களுக்கு ஏற்படுகிறது. அது ஒரு வேளை—காவல் துறை ஒன்றும் செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. பல வழக்குகளை அவர்கள் கண்டறிகிறார்கள். சில கொலையாளிகளை எல்லாம் கைது செய்திருக்கிறார்கள்; கொள்ளைக்காரர்களை கைது செய்திருக்கிறார்கள். ஆனால் ஒட்டுமொத்தமாக, இன்று தைரியமாக எதையும் செய்கிற, இதுமாதிரி உள்ள நிகழ்ச்சிகளைச் செய்யலாம் என்ற நிலை தமிழகத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலே வந்திருக்கிறது. இது மக்களிடையே ஒரு பெரிய ஐயப்பாட்டை, பயத்தை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு மக்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், காவல் துறையிலே, உதாரணமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறிப்பிட்ட சம்பவத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்கிறேன். ஒரு நிமிடம்தான். அதிக நேரம் எடுக்கவில்லை. I am not going out of the subject also. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், மதுரையிலே ஸ்ரீலங்காவைச் சேர்ந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கெல்லாம் தனியாக வர வேண்டும் நீங்கள். இந்தச் சம்பவத்தை மட்டும் சொல்லுங்கள். இத்துடன் நீங்கள் முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** 9 நாட்கள் ஆனதற்குப் பிறகும், காவல் துறை எடுத்திருக்கிற நடவடிக்கையிலே எனக்கு திருப்தி இல்லை என்று அந்தப் பெண்ணினுடைய தகப்பனார்—அவர் ஒரு Accountant-General-ஆக இருக்கக்கூடியவர்—அவருக்கு அப்படி ஒரு சந்தேகம் ஏற்படக்கூடிய முறையிலே, மதுரை மாநகரத்திலே இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி ஏற்படுகிறது என்றால், மற்றப் பகுதியிலே என்ன நிலை இருக்கும் என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டிய நிலையிலே இருந்துகொண்டிருக்கிறோம் ஆகவே இன்றே காவல் துறையை முடுக்கிவிட்டு, இப்படிப்பட்ட கொள்ளை, கொலைகளைத் தடுத்து நிறுத்தக்கூடிய முறையிலே ஒரு நிலையை தமிழகத்திலே ஏற்படுத்துவது இன்று தேவை என்று நான் சுட்டிக்காட்டி, அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை எந்த அளவிற்குத் தடுத்து நிறுத்த முடியுமோ, அதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டு அமர்கின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரத்திலேயும் அதன் அருகிலும், கொலை, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவது மிகப் பெரிய பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதுபோன்று தமிழகத்திலும் பல இடங்களில் நடைபெற்றுக் கொண்டுவருவது என்பது வருத்தமளிக்கிறது. குறிப்பாக, காவல் துறையினுடைய நடவடிக்கை என்பது துரிதப்படுத்தப்பட வேண்டுமென்ற மக்களுடைய எதிர்பார்ப்பு வலுவாக இருக்கிறது. பல்வேறு வழக்குகளிலே துரிதமான நடவடிக்கைகளை எடுக்கின்ற நம்முடைய தமிழகக் காவல் துறை, இந்தக் காரியங்களிலே ஏன் மெத்தனமாக இருக்கிறது என்ற கேள்வி எழுகின்றது. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கைகள் மூலமாக விரைவாக நடவடிக்கை எடுத்து, இந்தக் கொலையாளிகளைக் கண்டுபிடித்து, தக்க தண்டனையை வழங்க வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். குறிப்பாக, சமீபகாலமாக இப்படிப்பட்ட கொலைகளும், கொள்ளைகளும் நடைபெறுவது என்பது, தமிழகத்திலே பதற்றத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தி, அச்சம் இல்லாமல் மக்கள் நடமாடுவதற்குரிய உத்தரவாதம் இல்லாமல் போகிறது என்ற வருத்தம் ஏற்பட்டிருக்கிறது. இதை நிவர்த்தி செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன், வணக்கம்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரிலே தொடர்ச்சியாக இரண்டு சம்பவங்கள் நடந்தேறி இருக்கின்றன. நகைக் கடையிலே 3 பேர் கொலை செய்யப்பட்டு, அங்கு நகைகள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவங்கள் நடந்துமுடிந்த மறுநாளே, அதே வேலூர் நகரிலே பிரேமகுமாரியும், அவரது குமாரனும் கொலை செய்யப்பட்டு, அவர்களுடைய பொருட்கள் எல்லாம் எடுத்துச்செல்லப்பட்டிருக்கின்ற ஒரு நிலையிருக்கிறது. இதுபோல, எல்லா நகரங்களிலும், பெரும்பாலும்—கோவையிலே நடந்த ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டினார்கள். அதைப்போல மதுரை. இப்படி நகர்ப்புறங்களிலேதான் இந்தக் கொலை என்பது வெகு சாதாரணமாக நடந்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், காவல் துறை மிக கவனமாகச் செயல்பட வேண்டும்.

அதைப்போல காவல் துறையின் தலைவராக இருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் நகர்ப்புறங்களிலே மிக விழிப்புணர்ச்சியோடு காவல் துறை செயல்படுவதற்கு, அதற்கென்று ஒரு தனிப் படையைக்கூட, இந்தப் பெருநகரங்களிலே அமைத்து, இந்தச் சம்பவங்களையெல்லாம் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அவையின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், விருதம்பட்டு காவல் நிலையத்திற்குட்பட்ட, கழிஞ்சூரைச் சேர்ந்த குமரேசன் என்பவரது மனைவி பிரேமா என்கிற பிரேமகுமாரி, வயது 35 மற்றும் அவரது மகன் பிரசாந்த், வயது 12 ஆகிய இருவரும் 21-04-2003 அன்று மதியம், எண் 10/1, இரண்டாவது தெரு, ஆர்.எம்.எஸ். காலனி, கழிஞ்சூர் என்ற முகவரியில் உள்ள அவர்களது வீட்டில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தனர். பிரேமா அணிந்திருந்த நகைகள் காணப்படவில்லை.

சொக்கலிங்கம் என்பவரது மகனான குமரேசன், வயது 45, பாரத ஸ்டேட் வங்கியின் வேலூர் பிரதானக் கிளையில், முதுநிலை உதவியாளராகப் பணியாற்றி வருகிறார். அவர் 21-04-2003 அன்று, ஒரு நாள் அலுவலகப் பயிற்சியில் பங்கேற்க சென்னைக்குச் சென்றிருந்தார். வீட்டில் அவரது மனைவி பிரேமா என்கிற பிரேமகுமாரி மற்றும் அவர்களது ஒரே மகன் பிரசாந்த் ஆகிய இருவர் மட்டும் இருந்திருக்கின்றனர். அதே பகுதியைச் சேர்ந்த சண்முகம் என்பவரது மகன் பாஸ்கர், அன்று மாலை சுமார் 5-00 மணியளவில், விருதம்பட்டு காவல் நிலையத்தில் சம்பவம் நடந்த வீடு திறந்து கிடப்பதாகவும், உள்ளே தாயும் மகனும் இறந்து கிடப்பதாகவும் தகவல் தெரிவித்தார். உடனே வேலூர் சரகக் காவல் துறை துணைத் தலைவரும், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரும் மற்றும் வேலூர் உட்கோட்ட காவல் துறை துணைக் கண்காணிப்பாளரும் விரைந்து சென்று அந்த வீட்டைப் பார்வையிட்டனர். வீட்டினுள் பிரேமா என்கிற பிரேமகுமாரி படுக்கை அறையில் இருந்த கட்டிலில் மல்லாந்து படுத்த நிலையில் இறந்து கிடந்தார். அவரது கைகள் முன்பக்கமாக நைலான் கயிற்றால் கட்டப்பட்டிருந்தன. அவரது இடது கால், கட்டிலில் இருந்து தொங்கிய நிலையில் இருந்தது. அவரது கழுத்தில் நெரிக்கப்பட்ட அறிகுறி காணப்பட்டது. அவர் அணிந்திருந்த சுமார் 8 சவரன் மதிப்பிலான





தாலி, நான்கு வளையல்கள் மற்றும் ஒரு தங்கச் சங்கிலி ஆகியன காணப்படவில்லை என்று விசாரணையில் கூறப்பட்டது. அவரது மகன் பிரசாந்த் அருகிலிருந்த அறையில் தரைமீது மல்லாந்து படுத்த நிலையில் இறந்து கிடந்தான். அவன் அரைக்கால் சட்டை மற்றும் மேல் சட்டை அணிந்து காணப்பட்டான். அவன் உடலில் காயங்கள் ஏதும் காணப்படவில்லை. இருவரும் கழுத்து நெரிக்கப்பட்டோ, மூச்சுத் திணறலுக்கு உள்ளாக்கப்பட்டோ கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

முற்பகல் 11-25

சோளிங்கரைச் சேர்ந்த கொலையுண்ட பிரேமாவின் சகோதரர் உமாசங்கர் என்பவரது புகாரின் பேரில், விருதம்பட்டு காவல் நிலையத்தில், குற்ற எண் 154/2003, இந்திய தண்டனைச் சட்டம், சட்டப் பிரிவு 302, 380 ஆகியவற்றின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. விசாரணையில், கொலையுண்ட சிறுவன் பிரசாந்த், பக்கத்திலிருந்த மணிகண்டன் என்பவரது கடையில் பகல் 2-30 மணியளவில், தன் வீட்டிற்கு இரண்டு குளிர்பானங்கள் வாங்கிச் செல்லும்போது கடைசியாக உயிருடன் பார்க்கப்பட்டுள்ளான் என்பது அறியப்பட்டுள்ளது. காவல் துறையினர், தடய அறிவியல் நிபுணர்கள், கைரேகை நிபுணர்கள் புகைப்பட நிபுணர் மற்றும் மோப்ப நாயுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சோதனை மேற்கொண்டனர். இதில் சம்பந்தப்பட்டுள்ள குற்றவாளிகளைப் பிடிக்க 4 தனிப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு படைகள் அண்டை மாநிலங்களிலுள்ள குற்றவாளிகளின் தொடர்புகள் குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சந்தேகத்திற்குரிய நபர்களின் கைரேகைகள், சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட கைரேகைகளுடன் ஒப்பிடப்பட்டு வருகின்றன. வாகனத் தணிக்கை முடுக்கிவிடப்பட்டு, விடுதிகள், பேருந்து நிலையம், இரயில்வே நிலையம் ஆகியவற்றில் சோதனைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இருவரது பிரேதங்களும் பிரேதப் பரிசோதனை முடிக்கப்பட்டு, பிரேமகுமாரியின் கணவர் குமரேசன்வசம் ஒப்படைக்கப்பட்டன. பிரேத உள் உறுப்புகள் இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு, இறப்பின் காரணம் குறித்த அறிக்கை பெறப்பட உள்ளது. சம்பவ இடத்திலிருந்து அனைத்துத் தடயங்களும் கைப்பற்றப்பட்டு, துப்பு துலக்கப்பட்டு வருகிறது. இதுவரை 12 சந்தேக நபர்கள் இவ்வழக்கில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், பகல் 2-30 மணியிலிருந்து 5-00 மணிக்குள்ளாக குற்றம்

நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதால், அந்த நேரத்தில் அந்த வீட்டிற்கு வந்த மற்றும் அந்தப் பகுதியில் நடமாடிக் கொண்டிருந்த நபர்கள் யார் யார் என்று கண்டறிந்து அவர்களின் குற்றப் பின்னணி மற்றும் அந்த நேரத்தில் அவர்கள் அங்கு இருந்ததற்கான காரணங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. இந்தக் கொலைக்கு ஆதாயம் தவிர, வேறு ஏதாவது காரணங்கள் இருக்கக்கூடுமா என்பது பற்றியும் விசாரிக்கப்பட்டு வருகிறது. வேலூர் சரக காவல் துறை துணைத் தலைவர் மற்றும் மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் புலன் விசாரணையைத் தொடர்ந்து மேற்பார்வையிட்டு வருகிறார்கள். இந்தக் குற்றத்தில் சம்பந்தப்பட்டுள்ள குற்றவாளிகளை விரைந்து கண்டுபிடிக்க வேண்டும் என்று காவல் துறையினருக்கு நான் ஆணையிட்டுள்ளேன். விரைவில் இந்த வழக்கில் துப்பு துலக்கப்பட்டு, குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினைமீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஞானசேகரன், திரு. கணேசன், திரு. ஹேமச்சந்திரன், திரு. சிவபுண்ணியம் ஆகியோர் இந்த அரசின்மீது தேவையில்லாத சில குற்றச்சாட்டுகளைக் கூறினார்கள். இன்றைய காலகட்டத்தில், இந்தியாவில் கொலைகளும், கொள்ளைகளும்; இதுபோன்ற குற்றங்களும் நடைபெறாத மாநிலங்களே இல்லை. அப்படிப் பார்க்கப்போனால், பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், சட்டம்-ஒழுங்கு தமிழ்நாட்டில்தான் மிகச் சிறப்பாக, மிக நன்றாக பராமரிக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற கொலைகளும், கொள்ளைகளும் நடைபெறுகின்றபோது, குற்றங்களைக் கண்டிபிடிக்க, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க ஒரு கால வரம்பை நிர்ணயிக்க முடியாது. குற்றம் நடந்து 7 நாட்கள் ஆகிவிட்டதே— குற்றம் நடந்து 8 நாட்கள் ஆகிவிட்டதே, இன்னும் யாரையும் கண்டுபிடிக்கவில்லையே என்றெல்லாம் ஒரு காலவரம்பை இதற்கு நாம் நிர்ணயிக்க முடியாது. பல மாநிலங்களில் இன்றைக்கு நாம் ஆராய்ந்து பார்த்தோமானால், சட்டம்-ஒழுங்கு மிக மோசமாக இருக்கின்ற காரணத்தினால், கொலை, கொள்ளைக் குற்றங்கள் மிக அதிகமாக நடைபெறுகின்ற காரணத்தினால், பெரும்பாலான மாநில முதலமைச்சர்கள் இன்றைக்கு இந்த உள் துறை இலாகாவையே தங்கள் வசம் வைத்துக் கொள்வதில்லை. குறிப்பாக, காவல் துறை இலாகாவைத் தங்களிடம் வைத்துக்கொள்வதில்லை. இதற்கெல்லாம் வேறு யாராவது ஒரு அமைச்சர் பதில் சொல்லட்டும் என்று விட்டுவிடுகிறார்கள். பொறுப்பை இன்னொருவர் தலைமீது கட்டி



விடுகிறார்கள். ஆனால் நான் தைரியமாக உள் துறை இலாகாவை என் வசமே வைத்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதையே ஒரு காரணமாகக் காட்டி, இங்கே பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், காவல் துறையை மாண்புமிகு முதலமைச்சர் தன்வசம் வைத்திருப்பதால், இந்தக் கேள்வியைக் கேட்கிறோம் என்கிறார்கள். ஆமாம். தெரிந்துதான் துணிவோடு, உறுதியோடு, தைரியத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இலாகாவை நான் என்வசம் வைத்திருக்கிறேன். நிச்சயமாக சட்டம்-ஒழுங்கை நல்ல முறையில் பராமரிக்க முடியும் என்ற நம்பிக்கையில்தான் நான் இந்த இலாகாவை என்னிடம் வைத்திருக்கிறேன்.

நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வது, தயவுசெய்து காவல் துறையினரைக் கொச்சைப்படுத்தாதீர்கள். உங்களுக்கும் சேர்த்து பாதுகாப்பு வழங்குவது இதே காவல் துறையினர்தான். ஆகவே காவல் துறையினருக்கு ஒரு வருத்தம் ஏற்படுகின்ற வகையில், மன வருத்தம் ஏற்படுகின்ற வகையில், பணியில் அவர்களுக்கு சோர்வு ஏற்படும் ஒரு நிலையை, ஒரு மனச் சோர்வு ஏற்படும் ஒரு சூழ்நிலையை தயவுசெய்து ஏற்படுத்தாதீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 11-30*

குற்றங்கள் நிகழாத ஒரு மாநிலமே இன்றைக்கு இந்தியாவில் கிடையாது. ஆனால் குற்றங்களின் எண்ணிக்கை என்ன? கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் விழுக்காடு என்ன? காவல் துறைக்கான மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்தின்போது, இந்தப் புள்ளிவிவரங்களை இந்த அவைக்கு நான் தெரிவித்தேன். கடந்த ஆண்டுகளைவிட, இந்த ஆண்டு, அதாவது முந்தைய ஆண்டுகளைவிட, கடந்த ஆண்டில் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் விழுக்காடு அதிகரித்துள்ளது என்பதை இந்த அவைக்கு நான் சுட்டிக்காட்டினேன். ஆகவே கொலைகள், கொள்ளைகளை முற்றிலுமாகத் தடுக்க முடியாது. நிகழ்ந்து கொண்டேதான் இருக்கும். ஏனென்றால், அதுதான் மனித இயல்பு. குற்றங்களுக்கு, கொலைக் குற்றங்களுக்கு மரண தண்டனை இருந்தபோதிலும்கூட, கொலைகள் நடைபெறாத மாநிலம் எங்கேயாவது இருக்கிறதா? ஆகவே குற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும். எத்தனைக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன; கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் விழுக்காடு என்ன என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். ஆகவேதான் சொல்கிறேன்; தயவுசெய்து காவல் துறையினரைக் கொச்சைப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 ஏப்ரல் 28

பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், இந்தக் குற்றங்கள் நிகழ்ந்துவிட்டதால் தமிழகத்தில் அவர்கள் குறிப்பிட்ட ஊர்களில் ஒரு பதற்றம் நிலவுகிறது; மக்கள் பீதியடைந்திருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். எந்தப் பதற்ற நிலையும் இல்லை; எந்த பீதியும் இல்லை. ஜம்மு-காஷ்மீர், ஆந்திரா, அஸ்ஸாம் போன்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழ்நாடு மிகவும் அமைதியாகத்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அளவுகூட குற்றங்கள் நிகழாதவண்ணம், தடுப்பதற்கு இந்த அரசும், காவல் துறையும் தேவையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

## 3. கவன ஈர்ப்பு

### அரசு மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சை அளித்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள். (குறுக்கீடு) இதிலே விவாதம் கிடையாது. திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் சிகிச்சை பெறும் குழந்தை நோயாளிகளை மேல்சிகிச்சைக்காக அரசினர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு அனுப்புவதில் ஏற்படும் காலதாமதம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 28] [திரு. செ. செம்மலை]

### அறிக்கை

சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவமனைகளில் குழந்தை நோயாளிகளை கவனிப்பதற்காக குழந்தைகள் நல மருத்துவர்களைக் கொண்ட பிரிவுகள் இயங்கி வருகின்றன. இங்கு வரும் குழந்தை நோயாளிகளுக்கு சிறப்பாக சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், இங்கு சிகிச்சை பெறும் குழந்தைகளுக்கு, மேல்சிகிசசை தேவைப்படும்பட்சத்தில், குழந்தைகள், எழும்பூரிலுள்ள அரசு குழந்தைகள் நல மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையினைப் படித்தேன். குழந்தைகளுக்குத் திடீரென்று உடல் நலக் குறைவு, விபத்து போன்ற உபாதைகள் ஏற்படுகின்றபோது சிகிச்சைக்காக அருகிலே உள்ள ஏதேனும் ஒரு பொது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வது வழக்கம். உடனடியாக அந்த மருத்துவமனையில் உள்ளவர்கள், எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல அறிவுறுத்துகிறார்கள். இப்படி எடுத்துச் செல்கின்றபோது, காலதாமதத்தினாலும், சிகிச்சை தொடராததாலும் விரும்பத்தகாத நிகழ்வுகள் சில சமயங்களில் நடைபெறுகின்றன. இதைத் தடுக்கும்பொருட்டு, குழந்தைகளை மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்ல, எல்லா சிறப்பு முதலுதவி சிகிச்சைகளையும் அளிக்கக்கூடிய வகையில், ஆம்புலன்ஸ் வண்டியினை அனைத்துப் பொது மருத்துவமனைகளுக்கும் வழங்குவதோடு, பொது மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு ஏற்படும் எல்லா உபாதைகளுக்கும் உடனடியாக சிகிச்சை அளிக்கக்கூடிய வகையில் சிறப்புப் பிரிவுகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிற அரசு ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனை இரண்டுமே referral centres-தான். அந்த இரண்டு மருத்துவமனைகளும் refer செய்கிற மருத்துவமனைகளாக

இருக்கக்கூடாது என்பதுதான் இந்த அரசினுடைய விருப்பம். ஆக, இந்த 2 மருத்துவமனைகளிலுமே குழந்தைகள், பெரியவர்கள் ஆகிய அனைத்துத் தாப்பினர்களுக்கும் வேண்டிய சிகிச்சை அளிக்க அனைத்துப் பிரிவுகளும் அங்கே உருவாக்கப்பட்டு, தகுதியுள்ள டாக்டர்கள் அங்கே நியமனம் செய்யப்பட்டு, அந்தப் பிரிவுகள் மிகவும் சிறப்பாக பயன்பாட்டிலே இருந்துவருகின்றன. அங்கே, Paediatric medical side case-ஆக இருந்தாலும் சரி அல்லது Paediatric surgical side case-ஆக இருந்தாலும் சரி, எந்தக் case-களுமே, எழும்பூரிலே இருக்கிற Institute of Child Health-க்கு அனுப்ப வேண்டிய அவசியமே இல்லாத அளவிற்கு, அங்கே பிரிவுகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன.

*முற்பகல் 11-35*

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுபோன்ற பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனை ஆகியவற்றில் கூட்ட நெரிசலைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் புறநகர் மருத்துவமனைகளை பலப்படுத்த வேண்டும், மேம்படுத்த வேண்டும் என்ற அந்த உயரிய நோக்கத்தோடு அந்தப் புறநகர் மருத்துவமனைகள்—peripheral hospitals எல்லாம் இன்றைக்கு மேம்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அனைத்து மருத்துவ்மனைகளுக்கும் ஆம்புலன்ஸ் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு குறிப்பிட்ட சிகிச்சைக்காக, சிறப்பு சிகிச்சைப் பிரிவு இருக்கிற ஒரு மருத்துவமனைக்கு நோயாளிகளைக் கொண்டு செல்ல வேண்டுமென்று சொன்னால் அல்லது குழந்தைகளைக் கொண்டு செல்ல வேண்டுமென்று சொன்னால், நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதிலே தடங்கல் எதுவும் இருக்கக் கூடாது, காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும் என்ற அந்த எண்ணத்தில், புதியதாக எங்களுக்கு ஒரு அறிவுரை சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒரு குழந்தைக்கோ அல்லது ஒரு நோயாளிக்கோ அவசர சிகிச்சை அளிக்க வேண்டுமென்று சொன்னால், உடனடியாக பக்கத்தில் இருக்கிற மருத்துவமனையிலிருந்து தகுதியான டாக்டரை Call செய்து அவரை உடனடியாக அழைத்துக்கொள்ள வேண்டும். அல்லது





நோயாளியை அந்த மருத்துவமனைக்குக் கொண்டு செல்கிறபோது அந்த ஆம்புலன்சிலேகூட ஒரு டாக்டரும் செல்ல வேண்டும். காரணம், நோயாளிகளை மட்டும் அனுப்பினால் அந்த நோயாளிகள் அந்த மருத்துவமனைக்குச் சென்று எந்தப் பிரிவில் யாரை அணுகுவது என்பதிலே காலதாமதம் ஏற்பட்டு உயிர்ச்சேதம்கூட—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல-நடந்துவிடுகிறது. அதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு ஆம்புலன்சோடு நோயாளி போகிறபோது குறைந்தபட்சம் ஒரு டாக்டர் அல்லது P.G. Graduate பட்ட மேற்படிப்பு படிக்கிற ஒரு மருத்துவராவது உடன் செல்ல வேண்டும் என்று எங்களுக்கு அறிவுறுத்தியதன்பேரில், அதற்கு எழுத்துமூலமான உத்தரவை நாங்கள் அனைத்து மருத்துவமனைகளுக்கும் வழங்கியிருக்கிறோம். எனவே இனிமேல் சிகிச்சை அளிப்பதில் தாமதமோ அல்லது சிகிச்சை அளிப்பதிலே குறைபாடோ நிச்சயமாக இருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, குழந்தைகள் நலத்தின்மீது அக்கறை கொண்டு எடுத்துவருகிற பல்வேறு நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் விரிவாக, விளக்கமாக இங்கே உரைத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்ற அதே நேரத்தில், என்னுடைய தொகுதியான டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியிலே அமைந்திருக்கிற சென்னை புறநகர் ஸ்டான்லி மருத்துவமனையில் இப்படி குழந்தைகளுக்கு என்று அனைத்து சிகிச்சைகளுடன்கூடிய, தனியாக, ஒரு வார்டு உருவாக்கித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நலனில் அக்கறை கொண்ட நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தான் அறிவித்த 18 அம்ச திட்டத்திலே ஒரு அம்சமாக, குழந்தைகள் நலனையும் சேர்த்து இருக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் அனைவருக்கும் தெரியும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்களுடைய தொகுதியிலே

[திரு. செ. செம்மலை] [2003 ஏப்ரல் 28

இருக்கிற தண்டையார்பேட்டை புறநகர் மருத்துவமனைக்கு மட்டும் நம்முடைய உறுப்பினர் அவர்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்ததன் பேரில் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 60 இலட்சம் ரூபாயை ஒதுக்கி, அந்த மருத்துவமனையை மேம்படுத்துவதற்கும், விரிவுபடுத்துவதற்கும் உத்தரவிட்டு, ரூ. 40 இலட்சம் கட்டட செலவிற்காகவும், ரூ. 20 இலட்சம் அங்கே நவீன கருவிகள் வாங்குவதற்கும் உத்தரவளித்து, அந்தப் பணி இப்போது நடைபெற்று வருகிறது. சில குறிப்பிட்ட சிகிச்சைப் பிரிவுகள் தேவைப்படின், அதுவும் அந்த மருத்துவமனைக்கு நிச்சயமாக வழங்கப்படும். காரணம், வட சென்னைப் பகுதி மக்கள்தொகை அதிகமாகவுள்ள பகுதி. அந்தப் பகுதிக்கு மருத்துவ சேவை அதிகம் தேவை என்பதை புரட்சித் தலைவி அரசு உணர்ந்திருக்கிறது. எனவே தேவையான வசதிகள் அந்த மருத்துவமனைக்கு நிச்சயமாக செய்து கொடுக்கப்படும்.

## 4. அறிக்கை அளித்தல்

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001—2003 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தி ஏழு முதல் முப்பது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



2003 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11-40

## 6. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 24 — உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்

### (ஆ) கோரிக்கை எண் 46—போக்குவரத்துத் துறை

### (அ) கோரிக்கை எண் 24—உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக்

கோரிக்கை எண் 24—உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 42,15,91,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 742, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4389, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5777, திருமதி காசாம்பூ பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6578, திரு. அ.இரா. மலையப்பசாமி.



**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7424, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7755, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7992, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8165, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8417, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8844, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4254, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6038, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4908, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7077, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7519, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5069, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6108, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6284, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5004, திரு. சோ. இராசேந்திரன்.





**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கிராமங்களுக்கு பேருந்து வழித்தடங்கள் தேர்வு செய்ய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 983, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மோட்டார் வாகனங்கள் மீதான வரி உயர்வையும், பசுமை வரியையும் இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 280, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மோட்டார் வாகன வரிகளை உயர்த்தாமல் சென்ற ஆண்டு விதித்த வரியைப் போன்றே தொடர்ந்து வசூலிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4175, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருகிவரும் சாலை விபத்துகள் காரணமாக ஏற்படும் அதிக அளவிலான உயிர் இழப்புகளைத் தடுக்கும் வகையில் சாலைப் போக்குவரத்தில் புதிய மாற்றங்கள் செய்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4723, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாலை விதிகளை மீறுவோர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1243, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மகளிர் ஆய்வாளர், உதவி ஆய்வாளர்களுக்கு வாகனங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7058, திரு. டி. சுதர்சனம்.



**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாகன ஆய்வாளர்களுக்கு வாக்கி-டாக்கி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6878, திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசியில் இயக்கூர்திகள் ஆய்வாளர் அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7588, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாரமங்கலம் பேரூராட்சி, ஓமலூர் பேரூராட்சி, மேச்சேரி பேரூராட்சி ஆகிய ஊர்களுக்கு ஷேர் ஆட்டோ அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை - இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.42,15,91,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4575, திரு. கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

**(ஆ) கோரிக்கை எண் 46 - போக்குவரத்துத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46—போக்குவரத்துத் துறை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.16,70,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 731, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைகக வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4399, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5247, திரு. மு. கார்த்தி.



**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5828, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7103, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7334, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. அ. இரா. மலையப்பசாமி] [2003 ஏப்ரல் 28

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8177, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8319, திரு ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8663, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2003 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5038, திரு. வை. சிவபுண்ணியம் :

**திரு. வை. சிவபுண்ணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4898, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6749, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7065, திரு. சு. சிவராஜ்.

**திரு. க. சிவராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5749, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6133, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8344, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5035, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதியில், கிராமப்புறங்களுக்கு இயக்கப்படுகின்ற பேருந்துகளைத் தங்குதடையின்றி இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5576, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நல்லம்பள்ளி ஒன்றியம், பூதனஹள்ளி ஊராட்சி, பூதனஹள்ளி கிராமத்திற்குப் பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6180, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதிக்குட்பட்ட கடம்பத்தூர் ஒன்றியத்தில் விடையூர் கூவம் புதிய கிராமம், வாசனம்பட்டு, இலுப்பூர், முருகூர், விஎன். கண்டிகை, உளுந்தை நயப்பாக்கம், உசேன்ள நகரம், முகுகூர், விஎன். கண்டிகை, ஏகாட்டூர், கேஜி. கண்டிகை, ஜாகீர் மங்கலம், கொண்டாரெட்டிபுரம் ஆகிய கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7813, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், காம்பூர், ராஜபாளையம் ஆகிய கிராமங்களுக்கு திருப்பத்தூரிலிருந்து புதிய பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1287, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை வில்லோனி எஸ்டேட் போன்ற பகுதிகளுக்கும் ஊருக்குள் மக்கள் குடியிருக்கும் பகுதிக்கும் பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4696, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி நகரிலிருந்து கோவை, நெல்லை, தேக்கடிக்கு பேருந்து இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7589, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாரமங்கலம்—மேட்டூர் ஆர்.எஸ். (வழி குஞ்சாண்டியூர், குட்டப்பட்டி, கௌசம்பட்டி) கூடுதலாகப் பேருந்து வழித்தடங்கள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7695, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டத்தில், ஊத்துக்கோட்டை—பிளேஸ்பாளையம் வரை புதிய பேருந்து வழித்தடம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4566, திரு. கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7495, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் தொகுதி, பாபநாசம் நகரிலிருந்து சென்னைக்கு தனியாக அரசு விரைவுப் பேருந்து ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம்

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 0324, திரு. கே.வி. முரளிதரன்.

***THIRU K.V. MURALIDHARAN :** Hon. Speaker Sir, "To discuss the need to introduce more buses from Tamil Nadu and Karnataka on reciprocal basis on the following routes:

(1) Hosur to Hosankota *via* Chikha Tirupatti;

(2) Nuddanapalli to Bangalore;

(3) Kelamangalam to Bangalore *via* Aggondapally and Kundhumananapally;

(4) Bevanattam to Bangalore *via* Kelamangalam--Byramangalam;

(5) Bangalore to Kalingaveeram *via* Hosur, Sholagiri".

I move--

"that the sum of Rs.149,27,29,000/- allocated under Revenue Account and Rs. 16,70,000/- allocated under Capital Account under Demand No.46-Transport Department, be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் [illegible], திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவையிலிருந்து தெங்குமரஹாடா கிராமத்திற்கு இயக்கப்பட்டுக் கொண்டிருந்த பேருந்தை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 0892, திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதியில் தற்போது நிறுத்தப்பட்டுள்ள கிராமப்புறங்களுக்குச் சென்றுகொண்டிருந்த அரசுப் பேருந்துகளை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 278, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழக பழைய பேருந்துகள் 300-ஐ உடனே மாற்றி புதிய பேருந்துகள் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 0283, திரு. வா. சந்தானம்.

**திரு. வா. சந்தானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போக்குவரத்துத் துறையில் உள்ள பழுதுபட்ட பேருந்துகளைப் பழுதுபார்த்து பயணிகள் தடை இல்லாமல் பயணம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. லா. சந்தானம்] [2003 ஏப்ரல் 28

"போக்குவாத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6974, திருமதி எஸ். மகேஸ்வரி.

***திருமதி எஸ். மகேஸ்வரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போக்குவரத்துக் கழகங்களிலுள்ள மிகவும் பழுதடைந்துள்ள பழைய பேருந்துகளை மாற்றிவிட்டு புதிய பேருந்துகளை இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"போக்குவாத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,70,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8351, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் மற்றும் போக்குவரத்துத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில அவற்றிற்கு உரிய விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 485 முதல் 532 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



2003 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. கோபிநாத்.

***THIRU K. GOPINATH :** Hon. Speaker Sir, first I should say thanks to you for giving me this opportunity to speak in the Transport Demand.

(மாண்புமிகு உறுப்பினர் கன்னடத்தில் பேசினார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோபிநாத், இது என்ன கன்னடமா? தெலுங்கா?

**திரு. கே. கோபிநாத்:** கன்னடம், தெலுங்கு, உருது ஆகியவைகளில்-ஏனென்றால், Minority Language என்பதாலே, தெலுங்கு, உருது, கன்னடம் மூன்றும் சேர்த்துப் பேசலாம் என்று ஒரு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்றும் சேர்த்துப் பேசப் போகின்றீர்களா?

**திரு. கே. கோபிநாத்:** கொஞ்சம், கொஞ்சம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எங்களைக் குழப்பி கொண்றே விடுவீர்கள், நீங்கள். (சிரிப்பு) சரி, பேசுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** நான் தமிழிலேயும் பேசுவேன். ஆனால் எனக்கு தமிழ் அவ்வளவு தெளிவாகப் பேச வராது. நான் தமிழிலே பேசினால் நீங்கள் மணியடித்துவிடுவீர்கள். பிறகு நேரம் கிடைக்காது. அதனாலேதான்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணியடிக்கவில்லை, பேசுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** நான் தமிழிலே பேச நிறைய நேரம் கொடுப்பதாக இருந்தால், தமிழிலே பேச முயற்சி பண்ணுகிறேன். (கன்னடத்தில் பேசினார்)

Transport என்பது நமது நாட்டைப் பொறுத்தவரையில் முதுகெலும்பு போன்றது. இதிலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு தங்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழிலே சொல்கிறேன். இந்த Transport -ஐப் பொறுத்த அளவிலே, முதலிலே மற்ற State -ஐ வைத்து compare பண்ணுகிறபோது நம்முடைய இந்தியா முழுமைக்கும் Tamil Nadu Transport, No.1 என்ற நிலை மாறி, இன்றைக்கு நாம் மற்ற மாநிலங்களைப் பார்த்து சிலவற்றையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறோம்.

உதாரணத்திற்கு, 1973-லே போடப்பட்ட Reciprocal Agreement கிட்டத்தட்ட 30 வருடங்களாகியும்கூட இதுவரையில் அதற்குப் பிறகு அந்த agreement போடப்படவில்லை. அதனால் அந்த agreement போடப்படாத காரணத்தினால், ஒரு stay என்ற நிபந்தனையிலே, இப்போது நம்முடைய Transport Corporations அத்தனையுமே, easy-யாக மற்ற மாநிலங்களுக்கு, குறிப்பாக கர்நாடகாவிற்குப் போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த stay vacate-செய்யப்பட்டால் பல கோடி ரூபாய் நம்முடைய அண்டை மாநிலமான கர்நாடகாவுக்கு.....

முற்பகல் 11-50

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தொடக்கத்திலேயே, சபைக்குத் தவறான தகவல்களைத் தந்து கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, 1973-லே அல்ல; 1975 முதல் Reciprocal Supplementary Agreement, Inter-State Agreement போடப்பட்டது. அதற்குப் பின்பாக, 1998-லே ஒரு தடவையும் போட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்பாக, இப்போது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்பு, கர்நாடக அரசும், தமிழ்நாடு அரசும் இப்போது அதிகாரிகள் அளவிலே, உயர்மட்ட அளவிலே, போக்குவரத்து ஆணையர்கள் அளவிலே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. அந்தப் பேச்சுவார்த்தைகள் முடிந்து, அதற்கு அடுத்த கட்டமாக செயலாளர்கள் அளவிலே, அமைச்சர் அளவிலே, அந்தப் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும். ஆகவே அந்தப் பணிகள் எல்லாம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அதேபோல, ஆந்திர மாநிலத்திற்குரிய Reciprocal, Inter-State Agreement-க்கும் உரிய நடவடிக்கைகளை எடுத்து, ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எல்லாம் இப்போது நடைபெற்று வருகின்றன. மிக விரைவிலே, அந்த ஒப்பந்தம் போடப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. கோபிநாத்:** அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி.

அதேபோன்று, நம்முடைய மாநிலத்திலே, இப்போது இருக்கிற நம்முடைய Transport Corporations எவ்வளவு distance போனாலும், ஒரே standard ஆன வண்டிகள்தான் நம்மிடத்திலே இருக்கின்றன. ஆனால் கர்நாடகாவிலே பார்க்கும்போது, ஆந்திராவிலே பார்க்கும்போது,



கிட்டத்தட்ட long distance-க்கு நிறைய புதுப்புது கவர்ச்சியான பெயர்களில் பேருந்துகள் உள்ளன. உதாரணத்திற்கு, Mysore to Bangalore போக வேண்டுமென்றால், மைசூர் மல்லிகை, Bangalore to Chennai வந்தால், சென்னை எக்ஸ்பிரஸ், சூப்பர் டீலக்ஸ், அல்ட்ரா சூப்பர் டீலக்ஸ், செமி டீலக்ஸ்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோபிநாத், நீங்கள் எத்தனை பஸ்கள் வைத்திருக்கிறீர்கள்? (சிரிப்பு)

**திரு. கே. கோபிநாத்:** 6 பஸ்கள் வைத்திருக்கிறேன். அல்ட்ரா டீலக்ஸ், செமி டீலக்ஸ், ராஜா அம்சா இந்த மாதிரி புதுப்புது கவர்ச்சியான பேருந்துகளை விட்டு, அதிலே நிறைய வசதிகள் இருக்கின்றன. உதாரணத்திற்கு, air suspension — இந்த air suspension—ஐப் பொறுத்தவரைக்கும், நம்முடைய போக்குவரத்தைப் பொறுத்தவரைக்கும், ஒரு வண்டிகூட நம்மிடத்திலே air suspension வண்டிகள் கிடையாது. இதனால் different ஆன பேருந்துகள், different ஆன கட்டணத்தை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு, இப்போது Bangalore to Chennai வரவேண்டுமென்றால், மற்ற பேருந்துகளைப் பொறுத்தவரைக்கும் குறைந்தபட்சம் 300 ரூபாயிலே இருந்து 350 ரூபாய் வரை கொடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. 350 ரூபாய் கொடுத்துப் போவதற்கு இப்போது மக்கள் தயாராக இருக்கிறார்கள். நம்முடைய பேருந்துகளைப் பொறுத்தவரையிலே, இப்போது என்னுடைய தொகுதி Hosur to Chennai வரவேண்டுமென்றால், 113 ரூபாய் கொடுத்து நாம் வந்து செல்கிறோம். ஆகவே இதுபோன்ற பேருந்துகளிலே நாம் Hi-tech bus விட்டால், நம்முடைய transport develop ஆவதற்கு நல்லதொரு வாய்ப்பு இருக்கிறது. அதேமாதிரி, நம்முடைய Transport Corporations-ஐப் பொறுத்தவரைக்கும் இப்போது, Corporation-களிலேயெல்லாம் கட்டாயப்படுத்துகிறார்கள். ஒரு நாளைக்கு 350 கிலோ மீட்டர் compulsory ஆக ஓட்டி கிலோ மீட்டரை close பண்ண வேண்டுமென்று. இத்தனை கிலோ மீட்டர் ஓட்டியாக வேண்டுமென்ற கட்டாயத்திற்கு இப்போது நம்முடைய Corporation அதிகாரிகள், நம்முடைய drivers-ஐயும், conductors-ஐயும் force செய்வதனால், வண்டிகள் load இல்லாத நேரத்திலும்கூட, காலியாக வண்டிகள் கிலோ மீட்டரை close பண்ண வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக....

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல,

இவ்வளவு கிலோ மீட்டர் ஓட்டியாக வேண்டுமென்று கட்டாயப்படுத்துவதில்லை. ஆனால் இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பின்பு, கடந்த 2 ஆண்டு காலத்தில், இயக்கத் திறனைக் கூட்டுவதற்காக, இதற்கு முன்பு இருந்ததைவிட இயக்கத் திறனைக் கூட்ட வேண்டுமென்ற அந்த நடவடிக்கையின் மூலமாக, அதற்குத் தொழிலாளர்கள் தந்திருக்கிற ஒத்துழைப்பின் காரணமாக, இப்போது ஏறத்தாழ 350 கிலோ மீட்டர் அல்ல; சராசரியாக ஒரு பேருந்து 413 கிலோ மீட்டர் இயக்கப்படுகின்ற அளவுக்கு இயக்கத் திறனைக் கூட்டி சாதனையைச் சாதித்திருக்கிறது என்பதைத்தான் இங்கு பெருமையோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-55

**திரு. கே. கோபிநாத்:** அதேபோல, இன்றைக்கு நம்முடைய டிரான்ஸ்போர்ட் அமைச்சர் இந்த மேக்ஸி கேப் வண்டிக்கு ரூ.250/-லிருந்து ரூ.500/- ஆக உயர்த்தி tax போட்டு இருக்கிறார்கள். Motor Vehicles Act பிரகாரம், tax கூட்ட வேண்டுமென்றால், maximum 50% வரைதான் ஏற்ற வேண்டும் என்று Motor Vehicles Act-ல் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலும் தவறான தகவலைத்தான் தருகிறார். அது 50% அல்ல; 100% போடலாம். அந்த அளவிற்கு இப்போது 500 ரூபாய் மேக்ஸி கேப்பிற்கு போட்டிருப்பது சட்டத்திற்கு புறம்பானதல்ல. சட்டத்திற்கு உட்பட்டுத்தான் அந்த வரி போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. கோபிநாத்:** அமைச்சரின் பதிலுக்கு நன்றி. அப்படிப் போடப்பட்டிருந்தாலும்கூட, இது ரொம்ப அதிகமாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

அதேபோன்று, educational institution-ஐப் பொறுத்தவரையில்—வண்டிக்கு 500 ரூபாயாக இருந்த quarterly tax என்பது, ஒரு சீட்டுக்கு ரூ.150/- என்று போடப்பட்டிருக்கிறது; Institution-க்கு நஷ்டம் கிடையாது. கண்டிப்பாக அந்த உயர்த்தப்பட்ட வரி படிக்கிற மாணவ மாணவிகளிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் அமைச்சர் அவர்கள் நிச்சயமாக உயர்த்தியதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல், ஊட்டி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு எச்.எம். ராஜு தொகுதியிலிருந்து ஊட்டி-திருப்பதி, ஊட்டி-பாண்டிச்சேரிக்கு ஏற்கெனவே ஓடிய வண்டிகள் இப்போது நிறுத்தப்பட்டுள்ளன. நிச்சயமாக, மீண்டும் அந்தப் பேருந்துகளை ஓட்ட வேண்டும். பாண்டிச்சேரிக்கும், திருப்பதிக்கும் வண்டிகளை விட்டுவிட்டு, இப்போது வழக்கமாக சென்றுகொண்டிருக்கிற கோயம்புத்தூர்-ஊட்டிக்கு every half an hour there is a vehicle. ஆனால் இன்றைக்கு இருக்கிற season காரணமாக, நிறைய tourists ஊட்டிக்கு வருகிறார்கள். அதனால் அந்த அரை மணி நேர இடைவெளியை 15 நிமிடமாகக் குறைத்து, இன்னும் நிறைய பேருந்துகளை விட வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது.

அதேபோல, வால்பாறையிலிருந்து சத்தி எஸ்டேட்டுக்கு உள்ளே போவதற்கு வால்பாறையிலிருந்து சத்திக்கு ஒரு பேருந்து விட வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது.

அதுபோல, என்னுடைய பக்கத்து தொகுதியான தளி தொகுதியிலிருந்து சென்னைக்கு பேருந்து வசதி இல்லை. மொத்தம் 234 தொகுதிகள் உள்ளன; பெரும்பாலான தொகுதிகளிலிருந்து சென்னைக்கு வர பேருந்துகள் வசதி இருக்கிறது. ஆனால் தளி தொகுதியைப் பொறுத்தவரையில், தளியிலிருந்து சென்னைக்கோ அல்லது வேறு இடத்திற்கோ எந்தப் பேருந்து வசதியும் செய்துதரப்படவில்லை. (தெலுங்கில் பேசப்பட்டது) நிறைய பேர் சிரித்துவிட்டார்கள்; இருந்தாலும், எனக்கு வேறு வழியில்லை. 1978-ல் introduce பண்ணிய பிளஸ் 2-ல் என்னமோ, எங்களுக்குப் பெரிய சாபக்கேடு ஏற்பட்டுள்ளது; எங்கள் குழந்தைகள் படிப்பது தெலுங்கில்; அவர்கள் examination எழுதப்போவது தெலுங்கிலேதான்; ஆனால் எங்களுக்கு examination-க்காக வருகிற question paper மட்டும் ஆங்கிலத்தில் வந்துகொண்டிருக்கிறது. அந்த question paper ஆங்கிலத்தில் வந்ததுபற்றி பல தடவை ஏற்கெனவே இருந்த நம்முடைய கல்வி அமைச்சர், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர், டாக்டர் தம்பிதுரை அவர்களிடம் சொன்னேன்; அவர் பரிசீலனை செய்வதாகச் சொன்னார். உயர் அதிகாரிகளிடமும் நிறைய தடவை சொல்லிப் பார்த்தேன். ஆனால் அதற்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. (தெலுங்கில் பேசப்பட்டது) அந்த வினாத்தாள் தெலுங்கில் இல்லாமல் ஆங்கிலத்தில் வருவதால், அங்குள்ள மாணவர்கள் தேர்ச்சி பெறமுடியாத நிலை உள்ளது. எனவே சிறுபான்மை வகுப்பினரின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுகிறேன்.

இந்த ஆட்சி வந்த பிறகுகூட, கிட்டத்தட்ட 14 ஆயிரத்துக்கு மேற்பட்ட teachers post-களில் நியமனம் கொடுத்து இருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய பாராட்டுகள். ஆனால் minority language-ல் ஒரு teacher post கூட நிரப்பப்படவில்லை. அது ஏனென்று தெரியவில்லை. ஏற்கெனவே 14 ஆயிரத்துக்கு மேற்பட்ட teacher-களை நியமித்து இருக்கிறீர்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போக்குவரத்து மானியக் கோரிக்கையில் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்களா?

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் போக்குவரத்தில் நிறைய பேச வேண்டுமென்று இருந்தேன். ஆனால், என்னுடைய தொகுதிபற்றி பேச எனக்கு நேரம் கிடைக்கப்போவதில்லை. அதனால் போக்குவரத்திலிருந்து நேராக இந்த subject-க்கு வந்துவிட்டேன்.

தெலுங்கு ஆசிரியர் ஒரு பணியிடம் கூட நிரப்பப்படவில்லை; தெலுங்கிலும் போடவில்லை; உருது மொழி டீச்சரும் போடவில்லை. காரணம் தெரியவில்லை. ஏன் இந்தமாதிரி இருக்கிறது என்று தெரியவில்லை. கிட்டத்தட்ட 300 posts அப்படியே vacant ஆக இருக்கின்றது. எங்களைப் பொறுத்தவரையில், ஒரே ஒரு தெலுங்கு டீச்சர் போட்டு இருக்கிறார்கள். அதேமாதிரி எங்கள் தெலுங்கு பண்டிட்கள்,—பி.டி., பி.ஜி., பாஸ் பண்ணியவர்களுக்கு யாருக்குமே Promotion கிடைக்கவில்லை. (தெலுங்கில் பேசப்பட்டது.)

நண்பகல் 12-00

அதேமாதிரி, 'சர்வ சிக்ஷா அபியான்' Central Government Scheme-ல் கிட்டத்தட்ட 3300 posts கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த 3300 post-ல் ஒரு post கூட தெலுங்குக்கு ஒதுக்கவில்லை. காரணம் இந்த B.R.C....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் "ஏற்கெனவே இந்தக் கோரிக்கையை பலமுறை வைத்திருக்கிறேன். ஆனால் நடவடிக்கை இல்லை" என்கிறார். அவர் இதைப்போலவே தெலுங்கிலேயே பேசியதால்தான் மாண்புமிகு கல்வி அமைச்சருக்கு அவர் என்ன கோரிக்கை வைக்கிறார் என்று புரியவில்லை என்று கருதுகிறேன். இப்போது நான் மொழிபெயர்த்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு மந்திரி அவர்களுக்குச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளபடியே உறுப்பினருடைய கோரிக்கைபற்றி நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழாக்கம் சொல்லி இங்கே மன்றத்திலே சொன்னபோதுதான் எனக்கு முழுமையாகத் தெரிய வந்தது. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதுமே சிறுபான்மை மக்கள் மீதும், அதுபோல மொழி சிறுபான்மை மக்கள் மீதும், அவர்களுடைய நலனிலே மிகுந்த அக்கறை கொண்டவர்கள். 'சர்வ சிக்ஷா அபியான்' என்ற அந்தத் திட்டத்தின்கீழும், ஏற்கெனவே தெலுங்கை பயிற்று மொழியாகப் படித்து வருகின்ற தருமபுரி மாவட்டத்திலே தளி, ஓசூர் போன்ற பகுதிகளிலே இருக்கின்ற பள்ளிகளுக்கு தெலுங்கு ஆசிரியர்களை நியமிப்பதற்கு புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டு, நியமிக்கப்படவிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பணி இப்போது நடந்து வருகிறது. அந்த ஆசிரியர்கள், தெலுங்கு ஆசிரியர்கள் நிச்சயமாக விரைவிலே நியமிக்கப்பட்டுவிடுவார்கள்.

கேள்வித்தாளைப் பொறுத்தவரையில், கேள்வித் தாள்களைத் தயாரிப்பதற்கு என்று எங்களுடைய துறையிலே ஒரு Question Paper வங்கி இருக்கிறது. அதிலே குறிப்பிட்ட ஒரு நபர்தான் அதைத் தயாரித்து, அதை இரகசியமாக வைத்திருக்க வேண்டும். மற்றவர்களைவிட்டு கேள்வித் தாள்களைத் தயாரித்தால், அது வெளியிலே வந்துவிடும், வெளியாகிவிடும். எனவேதான் நாங்கள் இரகசியமாக அதைத் தயாரிக்கிறோம். எனவே எங்களுடைய துறையைப் பொறுத்தவரையிலே, ஒருவேளை தெலுங்கு தெரிந்த, அதுபோன்ற தேர்வுத் தாள்களைத் தயாரிக்கின்ற ஆசிரியர்கள் அல்லது அதிகாரிகள் இல்லாமல் இருந்திருக்கலாம். அதனாலே இந்தக் குறைபாடு இருந்திருக்கும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கையை ஏற்று, இனி எதிர்காலத்தில் தெலுங்கை பயிற்று மொழியாகக் கொண்டிருக்கிற அந்தப் பள்ளிகளுக்கு, அந்த மாணவ, மாணவிகளுக்கு கேள்வித் தாள்களை தெலுங்கிலேயே தயாரிப்பதற்கு அம்மா அவர்கள் இப்போது உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய துறை அதுகுறித்து வருகிற கல்வி ஆண்டிலேயே அந்த முறையை நிச்சயமாக அமல்படுத்தும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழி சிறுபான்மை பள்ளிகளில் உரிய பாதுகாப்பு வேண்டும் என்ற அளவிலே அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல ஆணை பிறப்பிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில், மாநிலத்தினுடைய எல்லையோரப் பகுதிகளில் இருக்கக்கூடிய பள்ளிகளிலே தமிழ்நாட்டிலே தமிழ் பாடமே இல்லாமல் பல பள்ளிகள் இருக்கின்றன. இது மிகுந்த வேதனை. தமிழ்நாட்டிலே தமிழ்ப் பாடம், ஒரு மொழிப் பாடம்கூட இல்லை என்று சொன்னால், இது எவ்வளவு பெரிய வேதனை? அப்படி தமிழ் மொழிப் பாடம் அந்தப் பள்ளிகளிலே கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையை, கல்வித் துறை மானியக் கோரிக்கையாக்கி விடாதீர்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது, இந்தப் பேரவைக்குத் தெளிவாக அறிவித்திருக்கிறோம். இனிமேல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் தமிழ் கட்டாயப் பாடம் ஆக்கப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோபிநாத், உங்கள் கோரிக்கையும் நிறைவேறிவிட்டது.

**திரு. கே. கோபிநாத்:** ஒரே ஒரு கோரிக்கை என்னவென்றால்—முதலிலே என் சார்பிலும், தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து தெலுங்கு மக்கள் சார்பிலும் முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிற்பகல் 12-05

தமிழ்நாட்டில் 6% இருக்கிற உருதுவிற்கு அகாடமி கொடுத்திருக்கிறீர்கள். தயவுசெய்து தெலுங்கிற்கு ஓர் அகாடமி கொடுத்துவிட்டால்—அதை நீங்கள் மட்டும்தான் கொடுக்க முடியும். Heartfully I am telling. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு தயவுசெய்து மற்றவர்கள் தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் நினைத்தால் மட்டுமே தெலுங்கிற்கு அகாடமி கொடுக்க முடியும் என்பது என்னுடைய personal feeling. தயவுசெய்து இப்போதே நீங்கள் அந்தக் கொடுத்துவிட்டீர்கள் என்றால், ரொம்ப ரொம்ப நன்றியுடன் இருப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அம்மா வாயே திறக்கவில்லை.



அதேபோன்று, எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அது இயற்கைக்கும் தெரிந்துபோயிற்று. எங்கள் மாவட்டம், ரொம்ப பின்தங்கிய மாவட்டம் என்ற காரணத்தாலே, மற்ற மாவட்டங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எங்கள் மாவட்டத்திலே மழை குறைவாகப் பெய்திருக்கிறது. Total ஆக எங்கள் மாவட்டத்தில் வறட்சி. இயற்கைகூட எங்களுக்கு சதி பண்ணியதாலே, இந்த ஆண்டு எங்களுக்கு வரவேண்டிய மழை ரொம்பக் குறைவாகப் பெய்திருக்கிறது. ஆனால் மற்ற மாவட்டங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எங்கள் மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய தொகுதியில் இருக்கிற கிணறுபள்ளி என்கிற டேம், ஏற்கெனவே முன்னாள் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களால் கட்டிக் கொடுக்கப்பட்ட அந்த டேம், கிட்டத்தட்ட 17 வருடங்களாக அந்த டேமில் தண்ணீர் நிறுப்பதற்கு ஆணையிடவில்லை. ஆனால் இந்த அரசு வந்து ஆணையிட்டதால், தண்ணீர் வந்து நிற்கிறது. அதற்கு என்னுடைய பகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றியைச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த டேமில் உள்ள தண்ணீர்—தமிழ்நாட்டில் உள்ள எந்த டேமில் தண்ணீர் வற்றினாலும், அந்த டேமில் தண்ணீர் வற்றாது. 365 நாளும் அந்த டேமில் தண்ணீர்— இருக்கும். ஆனால் அந்த டேமில் ஏற்கெனவே போடப்பட்ட channel-ஐ repair செய்யாமல் அப்படியே விட்டதால் தண்ணீர் அப்படியே நின்று கொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீரினால் எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை. அதனால் உடனடியாக— ஒரே ஒரு பாயிண்ட்; channnel-ஐ repair செய்வதற்கு ஒன்றரை கோடி ரூபாய்தான் செலவாகும். கிட்டத்தட்ட 8,000 ஏக்கர் இருக்கிறது. அம்மா அவர்கள் என்னுடைய மாவட்டத்திற்கு வரும்போது, தளி, புளி, களி, கம்பளி என்று சொன்னார்கள். ஆனால் இந்த டேமில் தண்ணீர் மட்டும் வெளியிலே வந்தால், எங்களுக்கு களி மட்டும் அல்ல; நிச்சயமாக எங்களுக்கு சோறு கிடைக்கும். கிட்டத்தட்ட 8,000 ஏக்கரும் பயன்படும். கிட்டத்தட்ட 75 கி.மீ.—ஒரு ஏக்கருக்கு 6 பேருக்கு

வேலைவாய்ப்பு கிடைத்தால், கிட்டத்தட்ட 8,000 ஏக்கருக்கு 48,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். நிச்சயமாக இது கெலவரப்பள்ளி அணை என்பது. அது நந்தியூத்திலிருந்து பெண்ணையாறு நதியில் வந்து சேருகிறது. 365 நாட்களும் தண்ணீர் அங்கேயே இருக்கும். ஆனால் நீங்கள் போட்ட உத்தரவில் வெறும் தண்ணீரை மட்டும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதனால் பயன் எங்களுக்கு இல்லை. தயவுசெய்து உடனடியாக நீங்கள் நடவடிக்கை எடுத்தால்.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப்போல், இந்தக் கால்வாய்களைச் செப்பனிடுவதால் 8,000 ஏக்கர் நிலம் பயனடையும் என்று சொன்னால், அது உண்மையானால், நிச்சயமாக இந்த அரசு உடனடியாக அந்தக் கால்வாய்களைத் தூர் வாரி செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு கே. கோபிநாத்:** *(தெலுங்கில் பேசினார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோபிநாத், உங்கள் இரண்டு கோரிக்கைகளும் நிறைவேறிவிட்டன. இன்னும் இரண்டு நிமிடங்களில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீரு ஒக்க மாட்ட அர்த்தம் சேசுகோவாலி, கொன்னி விஷயாலு, நேனே இக்கட செப்பகனலு, கொன்னி விஷயாலுகி காபினெட் மீட்டிங் ஜெரிபி அக்கட நிர்ணயம் தீஸ்கோவாலி, நேனே வெண்டனே செப்பலேனு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு கே. கோபிநாத்:** *(தெலுங்கில் பேசினார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு.

பிற்பகல் 12-10

**•திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். அம்மா, ஆறரை கோடி மக்களின் ஆருயிரே, எங்கள் அனைவரையும் காக்கும் ஓருயிரே, நீங்கள் சுட்டுவிரல் காட்டினால் தொடுவானம் உரசும்; நட்சத்திரங்கள் பூக்களாகப் பாதங்களில் உதிரும். பசுமைக்கு மலர்ந்த பாரிஜாதமே, உங்கள்



புகழ்பாடும் பாக்கியம் எங்கள் வாழ்வில் போதுமே! மனித வடிவில் வந்த புனிதமே! மாண்புமிகு அம்மா! உங்களின் பெருமைகளை மட்டுமே வாசிப்பேன், சுவாசிப்பேன், விசுவாசிப்பேன். காலம் உங்களைக் கவனித்தபோது எதிரிகளோ காலணிகளை எண்ணிக்கொண்டிருந்தார்கள். இன்று அரியாசனத்திலே அரிமா போல நீங்கள்! அறிவாலயத்திற்குள் முடங்கினார்கள் அவர்கள்! தர்மமும் தெய்வமும் ஜெயித்துக் கொண்டேயிருக்கும். இன்று உலகத் தமிழர்கள் உள்ளம் எல்லாம், இல்லம் எல்லாம் உச்சரிக்கும் ஒரே மந்திரம் எங்கள் அம்மாவின் புகழ் மட்டுமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்றாவது நிதிநிலை அறிக்கையில் போக்குவரத்து மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் போக்குவரத்துத் துறையில் முந்தைய ஆட்சியாளர்கள் போக்கு என்பதையும் வரத்து என்பதையும் தனித்தனியாகப் பிரித்து, வெறும் போக்கை வைத்துக்கொண்டு இந்தத் துறைக்கு வரத்து என்பதை, அறவே இல்லாமல் செய்துவிட்டார்கள் என்றுதான் நான் கூற வேண்டும். போக்கு என்பது முழுக்க முழுக்க அரசுக்கு உரியது. எவ்விதம் என்றால் கடன் வாங்குவது, பஸ் வாங்குவது, டயர், டியூப் வாங்குவது, உதிரி பாகங்கள் வாங்குவது, டீசல் வாங்குவது, ஓட்டுவது, சம்பளம் தருவது, இதுதான் போக்கு என்பதன் பணி. அதோடு மட்டுமல்ல, வாங்கிய கடனுக்குக் கொஞ்சம் தவணை செலுத்துவது, கொஞ்சம் வட்டி செலுத்துவது, இதுதான் கூடுதல் பணியாக இருந்தது. வரத்து என்பது தனியார் பஸ்களுக்கு, மினி பஸ் என்ற பெயரில் அனுமதி கொடுத்து, அதன்மூலம் ஆதாயம் தேடிக் கொண்டதுதான் வரத்தாக கடந்த ஆட்சியிலே நிலவிக்கொண்டிருந்த சூழ்நிலை.

கடந்த தி.மு.க. ஆட்சியின் முடிவில் விட்டுவிட்டுச் சென்ற பேருந்துகளின் எண்ணிக்கையில் 36.5 விழுக்காடு பேருந்துகள் சாலையில் இயங்குவதற்குத் தகுதியற்றவை. இந்த வகையில் மொத்தம் 6,123 புதிய பேருந்துகள் மாற்றப்பட வேண்டிய கட்டாயத்திற்கு நாம் ஆளாக நேர்ந்தது. 2003 மார்ச் மாதம் 1,047 பேருந்துகள் புதிதாக வாங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதி ஆண்டில் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் அளிக்கும் ரூ. 30 கோடி கடன் உதவி மூலம் மேலும் 300 பேருந்துகள் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. என்ற அறிவிப்பு, தேவையை ஓரளவிற்கு சமாளிக்க பேருதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்கட்டான நிதிப் பற்றாக்குறை போக்குவரத்துத் துறையில் மட்டும் என்பதல்ல, எல்லாத் துறைகளிலும் இதே நிலைதான். இந்த நிலையில்தான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். சீரிய சிந்தனையால், செம்மையான நிர்வாகத்தால், நிர்வாகத் திறமையால் ஒவ்வொரு துறையாகச் சீரமைத்து, எல்லாவிதமான இழப்பீடுகளையும் ஈடுசெய்து, முழுமையாக மேன்மைப்படுத்தி வருகிறார் என்பதை இங்கே சொல்லியாக வேண்டும். இத்தனை சிரமங்களுக்கு இடையேயும், எதிர்கால இந்தியாவின் தூண்களான குழந்தைகள் படித்துப் பட்டம் பெற வேண்டும் என்பதற்காக அவர்கள் பெற்றுவரும் இலவசப் பயணச் சலுகைகளுக்கு முதலிடம் தந்திருக்கிறார்கள். 2002-2003 ஆம் நிதி ஆண்டில் மட்டும் 23,44,068 மாணவ மாணவிகள் பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட நான் விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. கோபிநாத் அவர்கள் இந்திய துணைக் கண்டத்திலே, தமிழகத்திலே மாத்திரம் போக்குவரத்துத் துறை மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாக எடுத்துக் கூறினார்கள். அவருக்கு நான் ஒன்றைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரையிலேயும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்த காலங்களில், தமிழகப் போக்குவரத்து 40 விருதுகளைப் பெற்றது என்பதை இங்கே அவருக்கு கோடிட்டுக் காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமாத்திரமல்ல, புரட்சித் த லைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான், கடந்த இரண்டு ஆண்டு ஆட்சியை எடுத்துக்கொண்டால் மத்திய அரசாங்கம் பல்வேறு காலக்கட்டங்களில் டீசல் விலையை, பெட்ரோல் விலையை உயர்த்தியதற்குப் பிறகுகூட, இந்திய துணைக் கண்டத்திலே போக்குவரத்துக் கட்டணம் தமிழகத்திலேதான் மிகக் குறைந்த அளவிலே வாங்கப்படுகிறது என்பதை இங்கே நான் அவருக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் கடந்த 2001 ஆட்சி அமையும்போது அரசுப் பேருந்துகள் 17,000 இருந்தன. அவற்றில் பாதிக்குமேல் பாதிக்கப்பட்டவை. ஏறத்தாழ 9000 பேருந்துகள் மழையில் குடை பிடித்துப் பயணம் செய்யும் நிலையில் நிலைகுலைந்து இருந்தன. அந்தப் பேருந்துகளில் சத்தம்





வராத ஒரே பகுதி ஹார்ன் மட்டும்தான். தட தட தட், தட் என சாலைகளில் தடகளப் போட்டியைச் சந்தித்து புகையைக் கக்கிக்கொண்டும், இருமிக்கொண்டும், உறுமிக்கொண்டும் ஓடுகிற நிலையில் இருந்தன.

பிற்பகல் 12-15

1996 ஆம் ஆண்டிலிருந்து தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தவர் 3,249 மினி பஸ்களுக்கான permit-ஐ, தனக்கு வேண்டியவர்களுக்கு வழங்கினார். இதனால் ஆண்டுக்கு ரூ.48 கோடி என்ற கணக்கில் 5 ஆண்டுகளுக்கு ரூ.240 கோடி போக்குவரத்துத் துறைக்கு இழப்பு ஏற்பட்டது. ஆனால் கோபாலபுரத்திற்கும், விழுப்புரத்திற்கும் பல கோடி ரூபாய் வரவு என்பதை இன்றையதினம் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர் ஓய்வூதிய நிதியத்திற்கு தி.மு.க. அரசு செலுத்த வேண்டிய ரூ.257 கோடி அதுவும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியின்மீது சுமையாக விழுந்திருக்கிறது. தேவையற்றதற்கெல்லாம் கொடி பிடிக்கும் கம்யூனிஸ்ட் தோழர்களே, இந்தக் குரல் உங்கள் காதுகளில் விழவில்லையா?

போக்குவரத்துத் துறையில் எல்லாப் பேருந்து தடங்களையும் தனியாருக்குத் தரப் போகிறார்கள் என்ற புரளியை கிளப்பி மக்களின் நடுவே கோஷம் போடுகின்ற கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்களுக்கு இது புரிந்தால் சரி. மிக விரைவில் 1,550 புதிய பேருந்துகளுடன் இந்தப் போக்குவரத்துத் துறை முற்றிலும் புதுப்பொலிவுடன் மக்கள் சேவையில் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் என்பது நிச்சயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் ஆக்கிரமிப்புச் செய்திருப்பவர்களை வெளியேற்ற வேண்டும் என்று நீதிமன்றத் தீர்ப்பே இருக்கிறது. ஆனால் நீதிக்கே அநீதி இழைக்கும் ஒரு குடும்பம் மாநகராட்சி மழைநீர் வடிகால்மீது வீடு கட்டி வாழ்ந்து வருவதை இந்த அவைக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் தமிழ்நாட்டிலே ஆட்சி அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து முதன்முதலில் அரங்கேற்றியவர்கள் இதற்கு முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள் என்பதை யாரும் மறுக்கலாகாது.

1967 ஆம் ஆண்டு அன்றைக்குப் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தவர் புறம்போக்கு நிலமாகத்தான் பார்த்து கை வைத்தார். இந்தப் புறம்போக்கு நிலம் மயிலாப்பூர் கிராமம் சர்வே எண் 81-ன்கீழ் 1 என்ற எண்ணில் ஓடுகின்ற வாய்க்கால். சுமார் 60-க்கு 13 அடி என்கிற அளவில் 780 சதுர அடி நிலத்தை ரூ.3,250-க்கு அன்றைக்கு பெற்றார். போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்து பின்னால் 1969 ஆம் ஆண்டு முதலமைச்சர் ஆனவுடன் மனு எண் 39804/எ2/69-1 நாள் 12-5-1969, அதாவது பேரறிஞர் அண்ணா மறைந்து ஓராண்டுகூட ஆகாத நிலையில் சத்தமில்லாமல் அரசுப் புறம்போக்கு நிலத்தை அபகரிப்பது எப்படி என்பதை அரங்கேற்றிக் காட்டினார். மழைநீர் கால்வாயை ஆக்கிரமித்து 780 சதுர அடியில் தான் கட்டியுள்ள வீட்டின் நிலத்தை மீண்டும் அரசுக்குத் திரும்ப ஒப்படைப்பதாக 12-5-1969-ல் ஒரு கடிதம் எழுதினார். அதற்கான பணத்தைத் திரும்பக் கேட்கிறார் யார் தெரியுமா? அன்றையதினம் முதலமைச்சர் பொறுப்பிலே இருந்த ஒரு மகான். அதற்கு ஆதரவாக இந்த நிலம் கழிவு நீர் வடிகால் அமைப்பதற்காகத் தேவைப்படுவதாக சென்னை மாநகராட்சி ஆணையர் கடிதம் எழுதுகிறார். அதையொட்டி மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. நாள் 1-3-1978 அன்றைய தீர்மான எண் 266/1978. இதன்படி நிறைவேற்றப்பட்ட, ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தைத் திரும்பப் பெற சம்பந்தப்பட்ட கோப்புகள் கிடைக்கவில்லை. இந்தப் புறம்போக்கு நிலம் சம்பந்தமான கோப்புகள் சாக்காரியா கமிஷன் விசாரணையில் உள்ளது. திரும்ப வரவே இல்லை. ஒரு முதலமைச்சராக இருந்தவரே புறம்போக்கு நிலத்தை அபகரித்துக்கொண்ட நிலை இருக்கிறது. இதை ஏன் கூறுகிறேன் என்றால் கடந்த ஆட்சியாளர்கள் எப்படி எல்லாம் எங்கள் அம்மா அவர்களைப் பழிவாங்கும் நோக்கத்தோடு நடந்துகொண்டார்கள் என்பதற்காக இதைக் கூறிக்கொள்கிறேன். எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசின் 'Z' பிரிவின் பாதுகாப்பில் இருப்பதால் தன்னுடைய சொந்த இடத்தில், அவர்களைப்போல புறம்போக்கு நிலத்தில் அல்ல, எங்களுடைய அம்மா அவர்கள் உழைத்து சம்பாதித்த சொந்த நிலத்தில் வீட்டின் மதிற்சுவரைச் சற்று உயர்த்திக் கட்டியதற்காக, அன்றையதினம் மேயராக இருந்தவர் ஆட்களை அனுப்பி அட்டகாசம் செய்தார். தந்தை ஆண்டு அனுபவித்துவரும் புறம்போக்கைப் பற்றி தனயனுக்குக் கவலை இல்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் எத்தனையோ நன்மைகளைச் செய்தீர்கள். அத்தனையையும் இந்த நாடு





ஏற்றுக்கொண்டு ஆண்டிப்பட்டியிலும், சைதாப்பேட்டையிலும், வாணியம்பாடியிலும், அச்சிறுபாக்கத்திலும், சாத்தான்குளத்திலும் உங்களுக்கு வெற்றியினைத் தந்தார்கள். பாகுபாடின்றி இந்த ஏழையெளியவர்கள் அரசு நிலத்தில் வீடு கட்டி இருந்தாலும் அவர்களை வெளியேற்ற வேண்டும் என்று நீதிமன்றம் சொல்கிறது.

கோபாலபுரத்தில் மழைநீர் வாய்க்கால் செல்லும் நிலத்தை அபகரித்தவர்களிடத்திலிருந்து அதை மீட்க வேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இதை (மேசையைத் தட்டும் ஒலி) என் வேண்டுகோளாக வைக்கிறேன்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டின் பாதுகாப்பைக் கருதி தீவிரவாதிகள் அட்டகாசத்தை ஒடுக்க, பிரிவினைவாதிகளை வேரறுக்க 'POTA' சட்டத்தைக் கொண்டுவந்தபோது, மத்திய ஆட்சியிலுள்ள எல்லாக் கூட்டணிகளும் வரவேற்றன, ஆதரித்தன. ஆனால் அந்தச் சட்டமானது தேசவிரோத சக்திகளுக்குத் துணையாக இருப்பதைக் கண்டுகொள்ளாது என்று அவர்கள் நினைத்துவிட்டார்கள். இரு தினங்களுக்கு முன்பு இங்கே பேசிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'ஒரு தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்' என்று சொன்னார். இந்த 'POTA' சட்டம் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக, இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாக, பிரிவினை கோரும் சக்திகளுக்கு ஆதரவாக செயல்படுபவர்கள், பேசுபவர்கள்மீது பாயும் என்று தெரிந்தேகூட பேசிய வை.கோ. கைது செய்யப்பட்டார். அப்போது, இன்றையதினம் வீதிக்கு வந்து போராடுவேன் என்று கூறுகின்றவர் வாய் திறக்கவில்லை. பத்திரிகையாளர் பழநெடுமாறனை POTA-விலே கைது செய்தார்கள். அப்போதும் வீதிக்கு வந்து போராடுவேன் என்று வாய் திறக்கவில்லை. திமுக. ஆட்சியின்போது முதலமைச்சர் என்னை எங்கே அழைத்தாலும் அங்கே வந்து சரணடையத் தயார் என்றும், மதுராந்தகத்திலே உள்ள மலைப்பாலன் பங்களாவில்கூட வந்து சரணடையத் தயாராக இருக்கிறேன் என்று காட்டுக் கொள்ளையன் ஒருவன் அறிவித்திருந்தான். இப்படிக் காட்டுக் கொள்ளையனுக்கும், இந்த நாட்டை கொள்ளையடித்துக்கொண்டிருக்கிறவருக்கும் பாலமாக இருந்து, கடத்தப்பட்ட ஒரு நடிகரை மீட்பதற்காக பல கோடி ரூபாய் பணப் பரிமாற்றத்திற்கு ஏஜென்டாக இருந்த ஒருவரை POTA-வில் கைது

செய்தால் உடனே வீதிக்கு வந்து போராடுவேன் என்கிறார். ஒரு பத்திரிகையாளரை POTAவில் கைது செய்வதா என்று கும்பல் கூட்டி ஒப்பாரி வைக்கிறார். இவருக்கு நடந்த வரலாற்று உண்மை ஒன்றை இந்த அவைக்குச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒன்றை திரும்பிப் பார்க்க வேண்டும். 1975 ஆம் ஆண்டு முரசொலி பத்திரிகையில் வேலை பார்த்த பத்திரிகையாளர் அடியார் என்பவரை இந்திரா காந்தி அம்மையாருக்கு எதிராகத் தூண்டிவிட்டு தனித் தமிழ்நாடு கேட்கச் சொன்னார். அதற்காக அந்த அடியாரை நீட்டோலை என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்து நடத்தச் சொன்னார். தனித் தமிழ்நாடு கோரிக்கையை தி.மு.க. கைவிட்டுவிட்டாலும் நான் அதைக் கையிலே எடுத்துக்கொண்டிருக்கிறேன் என்று அன்றையதினம் அந்த அடியார் எழுதினார். அன்றைக்கு இருந்த காங்கிரஸ்காரர்கள் அதை மொழிபெயர்த்து டெல்லிக்கு அனுப்பினார்கள். மத்திய அரசு அங்கேயிருந்து முதலமைச்சரைக் கூப்பிட்டு மிரட்டியது. உடனே இரவோடு இரவாக அந்தப் பத்திரிகை நடத்தி வந்த பத்திரிகையாளர் அடியார் மற்றும் பெருஞ்சித்திரனார் மீது அன்றைக்கு அமலில் இருந்த N.S.A. சட்டம் பாய்ந்தது, இச்சட்டத்தைப் பாய்ச்சியவர் கருணாநிதி. பின்னர், நாட்டில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டபோது N.S.A. திரும்பப்பெறப்பட்டு MISA கொண்டு வரப்பட்டது. உடனே, பத்திரிகையாளர்களான அடியார்மீதும், பெருஞ்சித்திரனார்மீதும் MISA பாய்ந்தது. இதனையும், கருணாநிதியும் மற்றவர்களும் கண்டுகொள்ளவில்லை. இன்றைக்கு பத்திரிகையாளர்களை POTA-வில் கைது செய்வதா என்று கூக்குரல் இடுபவர்கள் ஒரு கணம் மறந்துவிடக்கூடாது என்பதற்காக இதை நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) POTA சட்டத்தின் 4-வது பிரிவின்படி தடை செய்யப்பட்ட பகுதிகளில் உரிமையில்லாமல் துப்பாக்கி வைத்திருப்பது மிகப் பெரிய தவறு. அப்படித் துப்பாக்கி வைத்திருந்ததற்காக நக்கீரன் ஆசிரியர் கைது செய்யப்பட்டார். ஏன் இதற்காக முன்னாள் முதலமைச்சர் துள்ளிக் குதிக்க வேண்டும்? இதன் இரகசியம் என்ன? அம்மா, இந்த இரகசியத்தை வெளிக்கொண்டு வருவதற்கு உங்கள் ஒருவரால்தான் முடியும் என்று இந்த நாடே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே இதை வெளிக் கொண்டு வரவேண்டுமென்று உங்கள் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். POTA-வில் உள்ள கோபால் விசாரணையின்போது, நடிகர் ராஜ்குமார் விடுவிக்கப்பட்ட பிறகு 14 நாட்கள் இடைவெளியில் வீரப்பனை



அதிரடிப்படை தேடாமல் விட்டுவிட்டதையும், கடத்தல் நாடகத்தில் பணப் பரிமாற்றத்தையும், வீரப்பனுக்கும் தடை செய்யப்பட்ட பிற இயக்கங்களுக்கும், ஆயுதங்கள் supply செய்வதற்கு உடந்தையாக இருந்ததையும் முன்னாள் முதலமைச்சர்தான் என்று வாக்குமூலம் அளித்துவிட்டால் தானும் POTA-வில் கைது செய்யப்படுவோமோ என்ற பயத்தின் காரணமாகத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் போராட்டம் என்று கூறிக்கொள்கிறார்கள். இன்றைக்கு காலையிலேகூட வேடிக்கையாக என் நண்பர் ஒருவர் கூறினார். இப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களுக்கு சாப்பிடுகின்ற பொருளான பொகடா என்ற பெயரைக் கேட்டால்கூட அதிர்ச்சியாக இருக்கிறது அவர்களுக்கு. ஏனென்றால், அந்தப் பொகடாவிலே பொடா ஒளிந்திருப்பதால்தான் அந்த உணவுப் பொருளைக்கூடத் தொடுவதற்கு இன்றையதினம் சங்கடப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப் போராட்டம் நடத்துகிறேன் என்று கூறிக்கொள்பவர்களுக்கு ஒன்றைக் கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

காலையில் பேசும்போதுகூட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒன்றை அறிவித்தார்கள்—இந்தக் காவல் துறையானது, எவ்வளவு கடினமான துறை. இந்தத் துறையை கையிலே வைத்திருப்பவர்களுக்கு எவ்வளவு ஏச்சுக்களும், பேச்சுக்களும் கிடைக்கும் என்று. ஆனால் இதையெல்லாம் மீறி துணிவோடு, உறுதியோடு, தைரியத்தோடு ஆட்சி நடத்தும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கையில்தான்—போராட்டம் நடத்துபவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்—காவல் துறை இருக்கிறது என்பதை. அப்படி நீங்கள் போராட்டம் என்று ரோட்டுக்கு வருவீர்களேயானால் உங்களது போராட்டத்தைத் தூள்தூளாக்கும் வல்லமை படைத்தவர்தான் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க.வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் 4 பேர்கள் கைது செய்யப்படுகிறார்கள், அதுவும் பெண்கள் கல்லூரியான இராணிமேரிக் கல்லூரியிலே அத்துமீறி நுழைந்ததற்காக, அந்தக் காவலாளிகளைத் தாக்கியதற்காக. உடனே அவர்கள் கைது செய்யப்பட்டதற்கு அரசியல் சாசனப்படி செயல்படுவேன் என்று உறுதிமொழி கூறுகிறார். மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த முறை ஆட்சியின்போது 1994-95 ஆம் ஆண்டில்

சுமார் 2,174 பேருந்துகளும், 1995-96-ல் சுமார் 1,800 பேருந்துகளும் புதிதாக வாங்கப்பட்டன. மாண்புமிகு அம்மா அவர்கள், தற்போது மேலும் 1047 பேருந்துகளை புதிதாக வாங்க உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இதற்காக எங்களுடைய நன்றியை அம்மா அவர்களுக்கு காணிக்கையாக்குகிறோம். ஆனால் தி.மு.க. ஆட்சியில் 1039 பேருந்துகள்தான் புதிதாக மாற்றப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வளவு மோசமான நிதி நெருக்கடியிலும், போக்குவரத்துத் துறையை சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிற நிகழ்ச்சி அம்மா அவர்களுடைய இன்றைய நிருவாகத் திறனுக்கு ஒரு சிறந்த சாட்சி என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக ஒன்றே ஒன்றை நான் நிச்சயமாகச் சொல்வதற்கு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டுகிறேன். ஆற்றைக் கடப்பதற்கு பாலம். நெருக்கடியைச் சமாளிப்பதற்கு பாலம் என்றுதான் பாலங்களை அமைப்போம். ஆனால் வாகனங்களின் மோதல்களை சாதகமாக்கிக் கொண்டு சுரண்டல்களை நடத்துவதற்கென்றே பாலங்களை அமைக்க ஒரு ஆட்சி நடத்துவது என்றால் அது முன்னால் நடைபெற்ற தி.மு.க. ஆட்சிதான். உதாரணமாக, சூளைமேடு கோட்டம் 76 தரைப்பாலமாக இருந்ததை மாற்றி சாலை மட்டப் பாலமாகக் கட்டியதில் பெரும் கொள்ளையே அடித்திருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கை போக்குவரத்து என்பதால் பாலங்களைக் கடந்துதான் போக்குவரத்து நடைபெறுவதால் இதைப்பற்றி இங்கே குறிப்பிட வேண்டியதாக இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சூளைமேடு தரை மட்டப் பாலத்திற்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் ஒப்பம் தயாரித்திருக்கிறார்கள். ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் சி.சி. லிமிடெட் நிறுவனம், ரூ.2.82 கோடி விலை பட்டியல் கோரியிருக்கிறது. ஆனால் திரு. மாணிக்கம் ரூ.2.92 கோடி ஒப்பம் கோரியிருக்கிறார். ரூ.4 கோடிக்கு மதிப்பீடுப் பணி தயாரித்துவிட்டு மாணிக்கம் தந்த ரூ.2.92 கோடிக்கான டெண்டர் ஏற்கப்பட்டு சி.சி. நிறுவனம் அளித்த ரூ. 2.82 கோடிக்கு டெண்டர் தள்ளுபடி செய்யப்படுகிறது. யாருக்காக இந்தப் பாலத்தின் திட்ட மதிப்பீடு ரூ.4 கோடிக்கு தயாரிக்கப்பட்டது? அதன்பிறகு ரூ.2.92 கோடியில் கட்டப்பட்டது. குறைந்த டெண்டரான ரூ.2.82 கோடி மறுக்கப்பட்டது. இந்தப் பாலத்திற்கு டெண்டர் விட்டதில் நிதி இழப்பு ரூ.14.59 லட்சம் என்று தணிக்கை அறிக்கை 1999-2000 வருடத்திய பக்கம் 16-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அம்மா அவர்களே, தயவுசெய்து இந்தப் பாலத்தில் மறைந்திருக்கின்ற மர்ம முடிச்சுகளை



அவிழ்த்து இந்த நாட்டுக்கு கடந்த ஆட்சியாளர்கள் பாலங்களை ஏன் கட்டினார்கள் என்ற விளக்கத்தினை இதன் வாயிலாகத் தெரிவித்துக் கொள்ள உங்கள் பாதம் தொட்டு பணிந்து கேட்டுக்கொள்கிறேன். சென்னைப் புற நகரில் 36 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.103 கோடி செலவில் நவீன பஸ் நிலையம் அமைத்திருக்கிறோம். அண்ணா சாலையிலும், கடற்கரைச்சாலை வழியாகவும் ஓடிய பஸ்கள் எல்லாம் அசோக் நகர் 100 அடி சாலையில் செல்வதால் அந்தச் சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகிவிட்டது. அதை ஒரு வழிப்பாதையாக மாற்றித்தர வேண்டுமென்று இந்த மானியக் கோரிக்கையில் பேசும்போது என் வேண்டுகோளாக வைக்கிறேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு அம்மா அவர்களே, வடசென்னை என்றாலே ஒரு அச்ச உணர்வோடு ஒதுக்கப்பட்டிருக்கின்ற ஒரு பகுதியாக கடந்த காலத்திலே பார்த்துக்கொண்டு இருந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான், கடந்த 5 ஆண்டுகளில்தான் வடசென்னை மாவட்டத்தின்மீது அதிகப் பற்று கொண்டு, வைத்தியநாதன் பாலம், ராயபுரம் மேம்பாலம் போன்ற பாலங்களை எல்லாம் கட்டிக் கொடுத்திருக்கின்றீர்கள். அதிலும் குறிப்பாக, சாலைகள், போக்குவரத்தில் சீரமைப்பு, கழிவுநீர், மழைநீர் வடிகால்வாய்கள் போன்றவற்றை அமைத்து, அந்த மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்வதற்கு வழிவகை செய்தீர்கள்.

இடைப்பட்ட காலத்தில் ஏற்றம் கொண்டோர், ஆட்சிக்கு வந்த பிறகு எல்லா வகைகளிலேயும், நிலைகளிலேயும் வடசென்னை மக்களுக்குச் சரிவைத்தான் ஏற்படுத்தினார்கள். அதனால்தான் இந்தச் சட்டமன்றத் தேர்தலிலே வடசென்னை மக்களுக்கு நீங்கள் சுட்டு விரல் காட்டிய நான்கு வேட்பாளர்களை இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக்கி இந்த மன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட மழை வெள்ளத்தாலே பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்ப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களே வடசென்னைக்கு வந்தபோது, தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள், சேதாரங்கள் அனைத்தையும் ஒத்திவைத்துவிட்டு, எங்களது அன்புத் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருகிறார்கள் என்ற செய்தியைக் கேட்டவுடன் அவரை வரவேற்க ஒட்டுமொத்தக் கூட்டமும் உங்கள்

காரை நோக்கி வருகை தந்ததை, ஈர நெஞ்சம் கொண்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மறந்திருக்கவே மாட்டார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களே, உங்கள் ஆட்சியில்தான், எங்களுடைய தொகுதியிலே இருக்கின்ற ஆறு இரயில்வே கடவுகளில், அவற்றிலே கொருக்குப்பேட்டை இரயில்வே கடவு என்பது ஒரு இரயில்வே கடவு. இந்தப் பகுதியிலே வசிக்கின்ற மக்களின் 40 ஆண்டுகால பிரச்சினையில் தற்போதுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, அதில் இரண்டு முறை ஆய்வினை மேற்கொண்டு, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், அண்ணா பல்கலைக் கழகம் இவை இரண்டும் ஒன்று சேர்ந்து, இந்தப் பாலம் அமைப்பதுபற்றி முழுமையாக ஆய்வு செய்து, அங்கே அந்தப் பாலத்தை அமைப்பதால் ஏற்படுகின்ற நிறை குறைகளை ஆய்வு செய்து. அங்கே சுரங்கப் பாலம் அமைக்க வேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். அந்தச் சுரங்கப் பாலமானது 2004-2005 ஆம் ஆண்டு திட்டத்திலே சேர்க்கப்பட்டு இருப்பதாக அறிகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களிடம் வேண்டிக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்தத் திட்டமானது 2003-2004 ஆம் ஆண்டிலேயே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று உங்கள் பாதம் பணிந்து, மண்டியிட்டு, மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். அம்மா, எங்கள் பகுதியிலே எச் 5 காவல் நிலையம் என்ற ஒரு காவல் நிலையம் இருக்கின்றது. அந்தக் காவல் நிலையம் சென்னைத் துறைமுகக் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்ற இடத்திலே வாடகைக் கட்டடத்திலே அமைந்திருக்கிறது. 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட காவல் நிலையம் என்பதால், இடநெருக்கடியும், கட்டடமும் முழுமையாகப் பழுதடைந்து இருக்கின்ற நிலையிலே உள்ளது. ஆகவே துறைமுகத்திடமிருந்து அதை வாடகைக்கோ, நீண்டகால குத்தகைக்கோ அல்லது விலைக்கோ பெற்று, அங்கே புதிய காவல் நிலையத்தை அமைத்துத் தர வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே சுமார் 350 ஏக்கர் பரப்பளவு கொண்ட குப்பை கொட்டும் நிலையம் கொடுங்கையூரிலே அமைந்து இருக்கிறது. அந்தக் குப்பைக் கொட்டும் இடங்களிலே சேருகின்ற குப்பையிலேயிருந்து இரும்பு போன்ற பொருட்களை எடுப்பதற்காக அந்தக் குப்பையினை எரிக்கிறார்கள். அந்தக் குப்பையிலேயிருந்து கிடைக்கின்ற பொருட்களை



எடுப்பதற்காக குப்பையினை எரிக்கின்றபோது உண்டாகின்ற புகையினால் அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு அதிக அளவில் சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே அந்தக் குப்பை கொட்டும் வளாகத்திற்கு ஒரு சுற்றுச் சுவரைக் கட்டித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களுடைய பாதம் வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

கண்டிப்பதில் மட்டுமல்ல, மன்னிப்பதில்கூட-

எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு

நிகரென்று சொல்ல எவருமில்லை!

தன்னைத் தள்ள நினைத்தவர்களைத் தாங்கிப் பிடித்துள்ளார்!

தன்னை ஏசியவர்களுக்கும் ஏற்றம் தந்துள்ளார்!

வஞ்சித்தவர்களையும் வாழ வைக்கும் தெய்வம்ச

குணம் கொண்டவர்தான் எங்கள் தாய்! (மேசையைத் தட்டும் ஒலி)

பெற்ற தாயாவது பிடிக்காத பிள்ளையைத்

தள்ளி வைக்கக்கூடும்!

உற்ற தெய்வமாவது வணங்காத பக்தனைச்

சோதிக்க நேரும்!

இவற்றுக்கும் மேலாக, இரக்கத்தின் வடிவாகத்

திகழ்பவர்தான் - தமிழ்த் திருநாட்டின் முதல்வராம்

எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்! (மேசையைத் தட்டும் ஒலி)

அவரது ஆட்சியில் வறட்சி வந்ததே தவிர, வறுமை வரவில்லை.

நிறைவாக, நிறைந்த வியப்புகளுடன் நிமிர்ந்துப் பார்க்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் அவையில் அமைவதே

ஒரு அறிவார்ந்த அம்சம்!

கேள்வி கேட்ட நொடித் துளிக்குள்.

*மின்னலெனத் துள்ளி எழும் புள்ளிவிவரங்கள்!*

*அள்ளி இறைத்துவிட்டு, வெள்ளிப் புன்னகை சிந்தும் பதில்,*

*எல்லாமே புதுச் சிந்தனை!*

*நுனி விரல் முனையில் இத்தனை நுட்பங்களை*

*கணிப்பொறியாலும் கற்பனை செய்ய முடியாது அம்மா!*

*நுனி விரலில் இத்தனை நுட்பங்களை கணிப்பொறியாலும் கற்பனை*

*செய்ய முடியாது அம்மா!*

*ஆழ்ந்த ஞானத்தின் வாழும் விலாசம் நீங்கள்!*

*ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்*

*ஆட்சிக் கட்டிலில் அமரும் கனவில்*

*அண்ணாந்து கொட்டாவி விடும் அரை வேக்காடுகளே!*

*அத்திப் பூவாவது ஒரு நாள் அதிசயமாக மலரக் கூடும்*

*அஸ்தமித்த உங்கள் வாழ்வோ...இனி கானல் நீர்தான்!*

*நீக்கமற நிறைந்த நிரந்தர முதல்வர் நீங்கள்!*

*பார்க்கும் இடமெல்லாம், மலரும் புன்னகைப் பூக்கள்! இனி இந்த முதன்மை - தமிழகத்தில் எந்த கொம்பனுக்கும் வாய்க்காது!*

*இனி இந்த முதன்மை - தமிழகத்தில் எந்த கொம்பனுக்கும் வாய்க்காது!*

*வாய்-காது-மூக்கு வைத்து கத்துபவர்கள் கத்தட்டும்!*

*கற்பூர வாசமறியாத அவற்றைப் பற்றி நமக்கென்ன கவலை!*

*எரிமலை தீப்பிழம்பையே மருதாணியாக்கும் உங்களுக்கு*

*எதிரிகளின் பெருமூச்சு எம்மாத்திரம்!*

*எரிமலை தீப்பிழம்பையே மருதாணியாக்கும் உங்களுக்கு எதிரிகளின் பெருமூச்சு எம்மாத்திரம்!*



*வாழும் சரித்திரம் நீங்கள் அம்மா!* எனக்கூறி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து பாதம் வணங்கி அமைகிறேன். நன்றி வணக்கம்! *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் பேசுகிறபோது இடையிலே குறுக்கிட வேண்டாம் என்றுதான் காத்திருந்தேன். ஒரே ஒரு கேள்வி மாத்திரம், முதலமைச்சரை வைத்துக் கொண்டே, உள் துறை பொறுப்பு வைத்துக் கொண்டு இருக்கிற முதலமைச்சர் போராட்டங்கள் நடக்கிறபோது அந்தப் போராட்டங்களை நொறுக்குகிறார் என்று சொன்னார். இது சாதாரணபூர்வமாக, ஜனநாயகபூர்வமாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர் பேசும்போது சொல்லுங்கள். கவிதை நடையிலே சில கருத்துகளைச் சொன்னார். அதிலே தவறு ஒன்றும் இல்லை. திரு. ஐ. கணேசன். (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அனுமதிக்க வேண்டும். இதுதான் அரசின் கொள்கையா என்பதற்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் பேசுகிறபோது, தொழிலாளர் போராட்டங்கள் என்று குறிப்பிடவில்லை. ஆகவே அவர் சொன்ன கருத்துக்கு மாண்புமிகு உறுப்பினர் ஒரு தவறான அர்த்தத்தைக் கற்பிக்கத் தேவையில்லை. வேண்டுமானால் வன்முறை போராட்டங்களை இந்த அரசு நொறுக்கும் என்று அவர் சொன்னதாக நீங்கள் வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன் என்ன, போராட்டம் என்றாலே கம்யூனிஸ்ட்தானா? *(சிரிப்பு)* திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து மானியத்தின்மீது பேச அழைத்த தங்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றி கலந்த வணக்கத்தை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல இந்த மானியத்திலே இங்கே பேசுவதற்காக என்னை அனுப்பிய ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவெள்ளி டாக்டர் அய்யா அவர்களுக்கும், பசுமை தாயகத்தினுடைய தலை நாயகன் பாட்டாளியின் இளைஞர் பட்டாளத்தின் அன்பு நண்பன் எங்களுடைய அன்பு மணிக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைச் சொல்லி, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன *(குறுக்கீடு)* நண்பர் மணி அவர்கள் அதுதானா? *(குறுக்கீடு)* *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொரு தடவையும் நான் குறுக்கிட்டு திரு. மணிக்கு நன்றிபெறும் வாய்ப்பை வழங்கிக் கொண்டிருக்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** நன்றி. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு அற்புதமான கருத்தினைச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் ஒரு வீடு. ஆளும கட்சி அதை வாடகைக்கு எடுத்துக்கொள்கிறது. மக்களின் நல்லெண்ணம் அதன் வாடகைப் பணம். அதன் கணக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை பார்க்கப்படுகிறது என்பது அண்ணாவின் தாரக மந்திரம். அந்த வகையிலேதான் ஆட்சி நடத்துகிறவர்கள், தன்னுடைய செயல் திட்டங்களைப்பற்றி கணக்கு பார்க்கக்கூடிய நேரம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை என்பதனைச் சொல்லி, இந்த போக்குவரத்து, தினசரி 16,670-க்கும் மேற்பட்ட பேருந்துகள் தமிழகத்திலே சென்று 62.84 இலட்சம் கிலோ மீட்டர் ஒரு நாளைக்குச் சென்று வருகிறது. அதிலே 156.28 இலட்சம் மக்கள் அந்தப் பேருந்துகளிலே பயணம் செய்கிறார்கள் ஒரு நாளைக்கு. கிட்டத்தட்ட 21 போக்குவரத்துக் கழகங்களாக இருந்த அதை ஏழு கழகங்களாக மாற்றுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்து வருகிறது. அதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் சீர்கெட்ட இந்தப் போக்குவரத்துக் கழகத்தைச் சீராக்கவும், போக்குவரத்துக் கழகத்திலே போட்டி மனப்பான்மை ஏற்பட்டு, நான் முந்தி, நீ முந்தி என்று அரசுப் பேருந்துகளை ஒரே



வழித்தடத்திலே விட்டு பல கோடி நஷ்டம் இருந்தது. அதையெல்லாம் சரிக்கட்ட வேண்டுமென்றால் இந்த மாற்றம் மிகவும் தேவை. மத்திய அரசு கம்பெனிகளின் சட்ட வாரியத்திலிருந்து விரைவிலே இதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று நான் சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக உங்கள் மூலமாக மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-40

அதேபோல் கடந்த காலத்திலே நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக மார்ச் 2003 முடிய போக்குவரத்துக் கழகத்தில், தொடர் நட்டம் ரூ. 2150.53 கோடி. பிறகு சென்ற ஆண்டு இந்த அரசு 1-12-2001 முதல் பேருந்துக் கட்டணத்தை உயர்த்திய பிறகும் 6-12-2001-ல் இந்த அவையிலே அந்தக் கட்டணத்தை ஓரளவுக்குக் குறைத்து அறிவித்தார்கள். இருந்தபோதிலும் அரசுப் பேருந்துகள் நல்ல லாபத்தை ஈட்டிக்கொண்டிருக்கக்கூடிய அந்த காலகட்டத்திலே, கிட்டத்தட்ட இந்த 1½ ஆண்டு காலத்திலே 8, 9 முறை டீசல் விலை ஏற்றத்தின் காரணமாக கிட்டத்தட்ட லாபத்திலே சென்றுகொண்டிருந்த அந்தப் போக்குவரத்துக் கழகம், ரூ.20.50 கோடி மட்டும் இந்த ஆண்டு இழப்பாக நட்டக் கணக்கிலே இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்திலே காட்டியிருக்கிறீர்கள் என்பதனை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நட்டம்கூட பேரவைத் தலைவர் அவர்களே, சிந்திக்க வேண்டும். மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் அளிப்பதன் காரணமாக இந்த அரசாங்கம் போக்குவரத்துக் கழகத்திற்குக் கொடுக்க வேண்டிய தொகை எவ்வளவு தெரியுமா? ரூ.252 கோடி. ரூ.252 கோடியை போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசாங்கம் அளிக்க வேண்டும். ஆனால் மிக நட்டத்திலே இருக்கிறது என்று சொல்லி மூன்றே மூன்று போக்குவரத்துக் கழகங்களுக்கு மட்டும் கிட்டத்தட்ட ரூ.85.76 கோடியை அளித்திருக்கிறார்கள். மீதியுள்ள போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.166.24 கோடி அளிக்கப்படவில்லை. அப்படி இந்தத் தொகையை ரூ.166.24 கோடியை அளித்திருந்தால், நட்டம் அந்த ரூ.20 கோடியை ஈடுகட்டி, ரூ.145.74 கோடியை இந்த அரசாங்கம் போக்குவரத்துத் துறையிலே இலாபத்தை ஈட்டியிருக்க முடியும். ஆனால் அதை அளிக்காததன் காரணமாக ரூ.145.74 கோடி போக்குவரத்துத் துறைக்கு நட்டம் இருந்தாலும், போக்குவரத்துக் கழகங்கள் அத்தனை சுமைகளையும் தாங்கி இப்போது ரூ.20.50

கோடிதான் நட்டக் கணக்கிலே காட்டியிருக்கிறார்கள். அதற்காக இந்த அரசாங்கத்தை உள்ளபடியே—கிட்டத்தட்ட ரூ.2000 கோடிகளுக்கு மேலே நட்டம் இருக்கக்கூடிய இந்தப் போக்குவரத்துத் துறை, ஆண்டு ஒன்றுக்கு ரூ.300, 400 கோடி நட்டக் கணக்கிலே வரக்கூடிய இந்தப் போக்குவரத்துத் துறை, அரசாங்கம் செலுத்த வேண்டிய பணம் ரூ.166 கோடியை செலுத்தாதபோதுகூட ரூ.20 கோடி நட்டத்திலே காட்டியிருக்கிறது.—இதை நான் பாராட்டுகிறேன். அப்படி இருக்கும்போதுதான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே நான் பார்க்கும்போது, எனக்கு மிக, மிக, மிக வேதனையாக இருக்கிறது. பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக்கடல் அறிஞர் அண்ணா அவர்கள் இந்த அவையிலே 1967-லே, தலைவர் அவர்களே, அண்ணாவின் பேச்சை, அவர் உரையாற்றியதை சட்டமன்றத்திலே இருக்கக் கூடிய நம்முடைய Library-யிலே சென்று கேட்டால் கொடுக்க முடியாது, ஒரே ஒரு காப்பிதான் இருக்கிறது என்றும். அதை நம்முடைய நிதியமைச்சர் ஏற்கெனவே போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கும்போது எடுத்துச் சென்றுவிட்டார் என்று சொல்லி (சிரிப்பு) எனக்கு அந்த ஒரு காப்பி, போட்டோ காப்பி வாங்குவதற்கு இரண்டு ஆண்டு ஆகிவிட்டது. சென்ற ஆண்டு கொடுக்கவேயில்லை. இந்த ஆண்டு பெரிய போராட்டத்திற்கு இடையிலே வாங்கியிருக்கிறேன். அண்ணா அவர்கள் அமர்ந்து ஆட்சி செய்த திராவிடக் கழக ஆட்சியிலே, அண்ணா கொண்டுவந்த அந்தத் திட்டம் இதே அவையிலே, கிட்டத்தட்ட 1967 ஜுன் 17 ஆம் நாள் அண்ணா அவர்கள் போக்குவரத்துக் கழகத்தை அரசின் கையிலே கொண்டுவர ரூ.2½ கோடியை முதன்முதலாக ஒதுக்கி, அண்ணா அவர்கள் போக்குவரத்துத் துறையை எடுத்தார்கள். இது ஒரு பொன் முட்டை இடும் வாத்து. இந்தக் கழகத்திலே இதற்கு முன்னால் இருந்த அரசு திறம்பட நடத்தாததன் காரணமாக நட்டம் இருந்தது; இப்பொழுது இந்த அரசு எடுத்து நடத்துவதனால் நீங்கள், இலாபத்தை ஈட்டுகிறீர்கள். அப்படி இருக்கும்போது இந்தப் போக்குவரத்துக் கழகத்தை, பஸ் முதலாளிகளுக்குக் கொடுக்கலாமா? இது நியாயமா? நீதியா?

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்விக்கு பலமுறை இந்த அவையில் நான் ஏற்கெனவே விளக்கம் அளித்துவிட்டேன். போக்குவரத்துக்



கழகத்தை தனியாரிடம் விடும் எண்ணம் இந்த அரசுக்குக் கிடையாது. போக்குவரத்துக் கழகங்களையோ, போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான பேருந்துகளையோ தனியாருக்கு தாரைவார்க்கின்ற எண்ணம் இந்த அரசுக்குக் கிடையாது. சில வழித் தடங்களில் தனியாரும் பேருந்துகளை இயக்க அனுமதிக்கப்படுவார்கள், அவ்வளவுதான்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் பலமுறை இந்த சட்டமன்றத்திலே சென்ற ஆண்டிலிருந்து சொல்லி வருகிறேன். ஒரே ஒரு பஸ் ரூட்டைக்கூட நம்முடைய அரசு, பஸ் முதலாளிக்கு கொடுத்தால், இது அண்ணாவிற்கு செய்யக்கூடிய மாபெரும் துரோகம். அண்ணாவின் இதயக்கனி புரட்சித் தலைவர், அண்ணாவின் கொள்கையை இந்தக் கட்சி ஆரம்பிக்கும்போது, கொள்கை என்ன என்று கேட்டபோது சொன்னார், இது அண்ணாயிசத்தின் கொள்கை என்று சொன்னார். அப்படி அண்ணாயிசத்தின் கொள்கையாகிய அண்ணாவின் கொள்கையை குழி தோண்டி புதைக்கக்கூடிய வகையிலே ஒரு ரூட்டை.... (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே விளக்கம் சொல்லிவிட்டார்கள். எந்தப் போக்குவரத்துக் கழகத்தையும் தனியாருக்கு விடவில்லை.

**திரு. ஐ. கணேசன்:** நான் பஸ் ரூட்டைத்தான் சொல்கிறேன். போக்குவரத்துக் கழகத்தைக் கொடுக்கவில்லை. அது தெளிவாக எனக்குத் தெரிகிறது. போக்குவரத்துக் கழகத்தை எந்தக் காரணத்தை முன்னிட்டும் கொடுக்கவில்லை. பஸ் ரூட்டைக் கொடுப்பதைக்கூட இப்பொழுது வழக்கு நிலுவையில் உள்ளதால் இதுவரைக்கும் வழங்கப்படவில்லை. எந்த ரூட்டும் வழங்கப்படவில்லை. நீதி மன்றத்திலே இருக்கிறது.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு வழித்தடத்தையும் இதுகாறும் தனியாருக்குத் தரவில்லை. அதுதான் உண்மை நிலை. அப்படியிருக்கும்போது இதற்காக ஏன் வீண் குற்றச்சாட்டு?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே இதற்கு முன்னாலே அறிவித்த ஒன்று. பேருந்துகள்

தனியார் மயமாக்கப்படும் என்ற ஓர் அறிவிப்பைச் செய்து, அதற்குப் பிறகு இப்பொழுது ஒரு சில வழித்தடங்களை மட்டும் தனியாருக்குக் கொடுக்கப் போவதாக அரசு சொல்கிறது. இருந்தாலும்கூட ஒரு சில வழித்தடங்கள் என்று அறிவிக்கின்ற இந்த அரசு காலப்போக்கிலே, படிப்படியாக நிறைய வழித்தடங்களை மாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதாலே....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் இந்த அரசு ஆரம்பத்தில் வேறு அறிவிப்புச் செய்தது போலவும், இப்பொழுது மாற்றி அறிவிப்பது போலவும் கூறுவது தவறு. ஆரம்பத்திலிருந்து நாங்கள் இதைத்தான் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். ஆரம்பத்திலிருந்தே போக்குவரத்துக் கழகங்களையோ, போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான பேருந்துகளையோ தனியாருக்கு விடும் எண்ணம் இல்லையென்றுதான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறோம். சில வழித் தடங்களில் தனியாரும் பேருந்துகளை இயக்குவது குறித்து பரிசீலித்து வருகிறோம் என்றுதான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு சில வழித்தடங்களை மட்டும் தனியாருக்குக் கொடுக்கின்ற நேரத்திலே, கிராமப்புறங்களுடைய போக்குவரத்து கட்டாயம் பாதிக்கப்படும். ஏழை எளிய மக்கள் வாழக்கூடிய கிராமப்புற போக்குவரத்து பாதிக்கப்படும் என்ற காரணத்தினாலே தயவுசெய்து அரசை நான் வேண்டி, விரும்பி வற்புறுத்திக் கேட்டுக்கொள்வது, எக்காரணம் கொண்டும் தனியாருக்கு விடக்கூடிய முறையை, இந்த நடைமுறையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதுதான் எங்களுடைய வேண்டுகோள்.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தகைய சூழ்நிலையிலும் போக்குவரத்து விஷயங்களில் கிராமப்புற மக்கள் பாதிக்கப்படுகின்ற எந்த முடிவையும் இந்த அரசு எடுக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) கிராமப்புற மக்கள் பாதிக்கப்படுவதை இந்த அரசு அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், இரண்டு மணித்துளிகளிலே உரையை முடியுங்கள்.





**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, இப்போதுதான் நான் ஆரம்பித்திருக்கிறேன். (சிரிப்பு) மணியை அவர் அடிப்பார், அன்பு அதிகம். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே கிட்டத்தட்ட 1½ ஆண்டு காலமாக இந்த விளக்கத்தைச் சொல்லி வருகிறார்கள். இது எங்களுக்கு நன்றாகத் தெரிகிறது. ஆனால் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே நீங்கள் இந்த பஸ் ரூட்டுக்களைக் கொடுப்பதற்கு ஓர் உயர்மட்டக் கமிட்டியைப் போட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதற்காக நாங்கள் சொல்கிறோம். நல்ல இலாபத்திலே, இந்த ஆண்டே நல்ல இலாபத்திலேயே ஓடிக்கொண்டிருக்கக்கூடிய இந்தப் போக்குவாத்துக் கழகத்தை, இவ்வளவு கிராமப்பகுதிகளுக்குச் சென்று கொண்டிருக்கக்கூடிய இந்தப் போக்குவாத்துப் கழகப் பேருந்துகளை, ஆயிரம் ஜனத்தொகை கொண்ட கிராமங்களுக்குக்கூட சென்றுவரக் கூடிய இந்தப் போக்குவாத்துக் கழகப பேருந்துகளை. அத்துடன் அண்ணாவின் காலத்திலிருந்து திராவிட ஆட்சியாளர்கள் ஆண்டவர்கள் அத்தனை பேரும் பல்வேறு சலுகைகளை அளித்திருக்கிறார்கள். உதாரணமாக மாணவர்களுக்குச் சலுகைகளை...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தை ஓரளவிற்கு சரிக் கட்டி, சரிக்கட்டும் அளவுக்கு வருவாயை ஈட்டியிருப்பதற்கு காரணம், பேருந்துக் கட்டணங்களை ஓரளவிற்கு உயர்த்தியதுதான் காரணம். பேருந்துக் கட்டணங்களை அரசு உயர்த்துகிறபோது, பேருந்துக் கட்டணத்தை உயர்த்துகிறீர்களே, உயர்த்துகிறீர்களே என்று போராடுகிறீர்கள். இப்போது பேருந்துக் கட்டணத்தை உயர்த்திய காரணத்தினால் இலாபம் வந்திருக்கிறது. இப்படி வந்த இந்த இலாபத்தை வைத்து மட்டும் போக்குவாத்துக் கழகங்களில் ஏற்பட்ட தொய்வை நாம் சரிகட்டிவிட முடியாது. ஏற்கெனவே ஒட்டுமொத்த நட்டம் என்ற நிலையில் இருந்து வருகிறது; பல கிராமங்களுக்கு பேருந்து வசதி இன்னும் இல்லாத நிலையும். இருந்து வருகிறது. பேருந்து வசதிகளே இல்லாத சில இடங்கள், ஓடுகிற பேருந்துகள் நட்ட நிலையில் இருக்கின்ற பகுதிகள், ஆங்கு கிராமப்புற மக்களுக்கு மேலும் வசதிகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்கம் ஆகியவை அடிப்படையில்தான் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

[2003 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள். இன்னும் 4 பேர் பேச வேண்டும். அதற்குப் பிறகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** பல்வேறு சலுகைளை, நம்முடைய சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்கூட அவருடைய மானியத்திலே எடுத்துச் சொன்னார்கள். மாணவர்களுக்கு, பத்திரிகையாளர்களுக்கு, நாடகக் கலைஞர்களுக்கு, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு, மொழிக் காவலர்களுக்கு, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, விடுதலைப் போராட்ட வீரர்கள் இறந்தால் அவர்களுடைய மனைவிக்கோ மற்றும் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு அங்கஹீனப்பட்டவர்களுக்கு, அதுவும் புற்று நோய் போன்ற கடும் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், கை, கால் ஊனமுற்றவர்களுக்கு, காது கேளாதவர்களுக்கு, கண் பார்வையற்றவர்களுக்கு, மன நிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு, மன வளர்ச்சி குன்றியவர்களுக்கு, வலிப்பு நோயாளிகளுக்கு, அது மட்டுமல்ல, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள். மேலவை உறுப்பினர்கள், அவர்களோடு ஒரு துணையும் செல்ல, இத்தனை சலுகைகளையும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களே அளித்து, இத்தனை கோடி ரூபாய் நட்டத்தையும் தாங்கி இந்தப் போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டு இலாபத்தை ஈட்டியிருக்கும்போது, நாம் ரூட்டைக் கொடுப்பதைப் பற்றிச் சிந்திக்கலாமா? நிச்சயமாக சிந்திக்கக் கூடாது.

அதேபோல, 1972 ஆம் ஆண்டு போக்குவரத்துக் கழகங்கள் அரசுடமையாக்கப்பட்டது சரி என்று உச்ச நீதிமன்றமே தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அப்படியென்றால் இந்த அரசு நீதிமன்றத்தை அவமதிக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணித்துளியில் உரையை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** நீங்கள், அண்ணா தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்தபோது, அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் அரசு ஊழியர்களாக்கப்படுவார்கள் என்று உறுதி கொடுத்திருக்கீறீர்கள். அந்த உறுதி என்னவாயிற்று? ஏற்கெனவே போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்தோர் இறந்தால் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். இதுவரை இந்த ஆண்டு எத்தனை பேருக்கு வேலை



வழங்கப்பட்டிருக்கிறது? (மணியடிக்கப்பெற்றது) நமது அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணித்துளியில் உரையை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, நான் இப்போதுதான் பேச ஆரம்பித்தேன். 5 நிமிடங்கள் கூடக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இன்னும் 4 பேர் பேச வேண்டும். (குறுக்கீடு) இன்னும் 4 பேர் பேச வேண்டும். பிறகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** உரையை முடித்துவிடுகிறேன், 5 நிமிடத்திலே உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 5 நிமிடமெல்லாம் கிடையாது. ஒரேயொரு நிமிடம்தான்.

**திரு. ஐ. கணேசன்:** ஐந்தே துளிகள். தலைவரே, ஐந்தே துளிகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. ஐ. கணேசன்:** முடித்துவிடுகிறேன். இன்னும் இரண்டு மானியங்கள் இருக்கின்றன, இதிலே. இன்னொரு மானியமும் இருக்கிறது. இருந்தாலும் பரவாயில்லை. விரைவில் நான் உரையை முடித்துவிடுகிறேன். வேகமாக உரையை முடித்துவிடுகிறேன். குறுக்கீடுகள் இல்லை என்றால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியிலே உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இன்னும் 4 பேர் பேச வேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** எங்கள் லாரித் தொழில் ரொம்பவும் பாதிக்கப்பட்டு, நாசமாகப் போய்விட்டது. அந்த லாரித் தொழிலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை மட்டும் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 12-55

**திரு. ஐ. கணேசன்:** அதை மட்டும் பேசுகிறேன். இப்படி அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக மோட்டார் வாகன வரியாக மட்டும் ஆண்டொன்றுக்கு ரூ.1,165 கோடி அரசுக்கு செலுத்துகிறது. அப்படி இருக்க அதை மாற்ற வேண்டிய காரணம் என்ன? அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக சென்னையிலிருந்து இப்போது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், லாரியைப் பற்றி மட்டும் பேசி முடியுங்கள். லாரியைப் பற்றி மட்டும். இன்னும் 4 பேர் பேச வேண்டும். அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** சொல்லவே வேண்டாம் என்றால் சொல்லிவிடுங்கள். நாங்கள் வெளியே போய் விடுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இது எங்கள் குரல்வளையை நெரிக்கிற மாதிரி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 மணித்துளிகளுக்கு மேல் கொடுத்தாகிவிட்டது.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, அவ்வளவும் குறுக்கீடுகள். 10 மணித் துளிகள் குறுக்கீடுகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் கழித்துத்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) 15 மணித்துளிகளுக்கு மேல் ஆகிவிட்டது. 1 மணித்துளியில் பேச்சை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** 2 நிமிடத்திற்குள் முடிக்கிறேன். அரசு விரைவுப் பேருந்துக் கழகத்தின் மூலமாக இதை எப்படி நடத்துவது என்று நிதியமைச்சர் சொன்னார். நான் அதற்குச் சொல்கிறேன். நீங்கள் வந்து பதில் சொல்லுங்கள். அதற்கு நான் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக சென்னையிலிருந்து சேலம் போக ரூ. 200-லிருந்து ரூ. 240 வரை பஸ் முதலாளிகள் வாங்குகிறார்கள். ஆனால் நம்முடைய போக்குவரத்துக் கழகம ரூ. 95 வாங்கி இலாபத்தை ஈட்டுகிறது என்றால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், உங்களுடைய இந்த லாரி விவகாரத்தைப்பற்றி மட்டும் பேசி முடியுங்கள். அதற்கு மட்டும் வாய்ப்புக் கொடுக்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவரே, இன்னும் 1 நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் 2002-2003-ல் எத்தனை வழித்தடங்கள் இதுவரை நிறுத்தப்பட்டுள்ளன? ஓட்டுநர், நடத்துநர் பற்றாக்குறையின் காரணமாக எத்தனை வழித்தடங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன?



**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர், நடத்துநர் பற்றாக்குறையால் எந்த வழித்தடங்களும் நிறுத்தப்படவில்லை. மாறாக, அகில இந்திய அளவில்—National average ஒரு பேருந்திற்கு 7.2 என்ற அளவிலே இருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திலும் அதே அளவிற்கு National average என்று சொல்லக்கூடிய வகையில் ஒரு பேருந்திற்கு 7.22 என்ற அளவிலே, இன்னும் சொல்லப்போனால் 0.02 சதவிகிதம் இன்றைக்குக் கூடுதலாகத்தான் நம்மிடம் பணியாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே எந்தப் பேருந்தையும் நிறுத்த வேண்டிய அவசியமும் இல்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்கு நீண்ட விளக்கம் கொடுக்க 2 மணி நேரம் காத்துக் கொண்டு இருக்கிறது. எனக்கிருப்பது இரண்டு மணித்துளிகள். தயவுசெய்து எடுத்துவிட வேண்டாம் என்று சொல்லி, பஸ் தொழிலாளர்களுக்கும், கல்வி, பண்டிகை முன்பணமாக அளித்து வந்ததை இப்போது இரண்டிலே ஒன்றுதான் பெற்றுக் கொள்ளலாம் என்று அரசு சொன்னதாகக் கூறுகிறார்கள். அது உண்மையா? அதே போல, தொழிலாளர் நல நிதியிலிருந்து பள்ளிக்குச் செல்லும், தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வந்த தொழிலாளர் நிதி மறுக்கப்படுவதாகச் சொல்லப்படுவது உண்மையா? அதேபோல, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, இந்தப் போக்குவரத்துக் கழகம் ஆரம்பித்தபோது 1972-லிருந்து 1975 வரை இந்தப் போக்குவரத்துக் கழகத்தினுடைய மொத்த சொத்தின் மதிப்பு எவ்வளவு? தற்போது 2002-2003 ஆம் ஆண்டு இந்த மார்ச் மாதம் முடிய இந்தப் போக்குவரத்துக் கழகத்தினுடைய மொத்த சொத்தினுடைய மதிப்பு எவ்வளவு என்று தெரிந்தால், இந்தப் போக்குவரத்துக் கழகம் எப்படி பொன் முட்டை இடும் வாத்து என்பது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னாரோ, அது உண்மையாகும். அதேபோல, நீங்கள் கொடுத்த கொள்கை விளக்கப் புத்தகத்தைப் படித்துப் பார்த்ததிலே பயணிகள் போக்குவரத்துக் கழகத்தால் நடத்தப்படுவது 16,843 வழித் தடங்கள்; பேருந்துகள். ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1 மணித்துளிக்குள் உரையை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்திலே நீங்கள் கொடுத்திருப்பது 16,670. வித்தியாசம் 173 வருகிறது. இதற்கு

என்ன காரணம் என்பதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நம்புகிறேன். அதேபோல, தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 60 இலட்சத்து 41 ஆயிரத்து 302 பேருந்துகள் செல்வதன் மூலமாக 2002-2003ஆம் ஆண்டு ரூ. 750 கோடி இலாபம் ஈட்டியது. அரசுக்கு வரியாக வந்தது. ஆனால் இந்த ஆண்டு 2003-2004-லே கிட்டத்தட்ட ரூ. 660 கோடி அரசுக்கு வருமானம் வரக்கூடிய ஒரு பெரிய துறையாக போக்குவரத்துத் துறை விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

கடைசியாக ஒன்றே ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். மணியிலே கையை வைக்காதீர்கள். Heart-லே அடிக்கிறது.

பசுமை வரி, பசுமை வரி என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வரியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதற்காகவே அவர்களுக்கு நோபல் பரிசு கொடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.ஆர். ராஜாங்கம். (குறுக்கீடு) இல்லை, போதும். திரு. மணி சிபாரிசு செய்தது 3 மணித்துளிகள், 4 மணித்துளிகளுக்குத்தான்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புல்லர்களின்...... (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரியைப் பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்போதிலிருந்து லாரியைக் கூப்பிடுகிறேன். வரமாட்டேன் என்கிறது.

**திரு. ஐ. கணேசன்:** அரசுக்குத் தேவையான, நாட்டு மக்களுடைய உள்ளக் குமுறல்களை எடுத்துச் சொல்லக்கூடிய இடம் இந்தச் சட்டமன்றம். இந்தச் சட்டமன்றத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நேரம் இல்லை. (குறுக்கீடு) இன்னும் 4 பேர் பேச வேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** இந்தப் போக்குவரத்து மானியத்தைத் தவிர வேறு எந்த மானியத்திலேயும் நான் பேசினேனா? முக்கியமானவற்றை...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், ஏதாவது ஒன்றைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை. திரு. கணேசன். (குறுக்கீடு) விவகாரம் செய்ய நேரமில்லை.

**திரு. ஐ. கணேசன்:** 15 ஆண்டுகளான பழைய இரு சக்கர வண்டிகளுக்கு ரூ. 500 வரி போட்டிருக்கிறீர்கள். இரு சக்கர வாகனம் அல்லாத வண்டிகளுக்கு ரூ. 1,000 பசுமை வரி போட்டிருக்கிறீர்கள். அது மட்டுமல்லாமல், இது மாசுபடுத்துகின்றது, அதனாலே இந்த வரி என்கிறீர்கள். எப்படி அது மாசுப்படுத்துகிறது? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் F.C.-யிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. பேச்சை முடித்துக் கொள்ளுங்கள். திரு. வி.ஆர். ராஜாங்கம்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புல்லர்களின் வாய்கூற்றைப் பொடிப் பொடியாக்கி, அன்பு, அறிவு, பண்பு, பாசம், ஆற்றல், துணிவு, தன்னலம் கருதாமை ஆகியவற்றின் இலக்கணமாய் அமையப் பெற்று, இனி எதிர்காலம் இல்லையென எக்காளமிட்ட எத்தர்களின் மத்தியில் இனி வருங்காலம் முழுவதும் என் காலமே என்று எத்திசை நோக்கினும் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிதோறும் வெற்றிப் படிகளாக்கி வீர வாகை சூடி, வெற்றித் திருமகளாக வீற்றிருக்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) மண் பொம்மையாக இருந்த என்னை மக்களுக்குச் சேவை செய்யும் சட்டமன்ற உறுப்பினராக்கிய அன்புத் தெய்வம் அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் மனதார மண்டியிட்டு வணங்குகிறேன்.

போக்குவரத்துத் துறை மானியத்தில் பேச வாய்ப்பு அளித்த அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்து உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே பலவகை நோயினால் பாதிக்கப்பட்டு, கோமா நிலைக்குத் தள்ளப்பட்டு, நோயாளியைப் போல இருந்த போக்குவரத்துத் துறை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் நிருவாகத் திறமையால் இன்று புதுப்பொலிவுடன் இயங்கும் துறையாக இருக்கிறது...

[2003 ஏப்ரல் 28

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், ஒரு மணித்துளியிலே பேசி முடித்துக்கொள்ளுங்கள். திரு. ராஜாங்கம், கொஞ்சம் இருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். பசுமை வரியை இந்த அரசு இரத்து செய்ய வேண்டும். இரத்து செயய (குறுக்கீடு) லாரிக்கு, லாரிக்கு.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பசுமை வரி ஏன் என்ற காரணத்தைக் கேட்கிறார். வாகனத்தைப் பொறுத்தவரைக்கும் 15 ஆண்டுகளுக்கு மேல் அந்த வாகனம், ஓடிவிட்டது என்றால், piston and rings in the engine will get totally damaged. Piston and rings மீண்டும் பழுதுபார்க்க முடியாத அளவிற்கு rebore செய்ய முடியாத அளவிற்குப் பழுதடைந்து விடுகிறது. அப்படிப் பழுதடைந்த நிலையில் கார்பன் மோனாக்சைடு will be emitted more. அது மாசினை உருவாக்கும் என்கிற காரணத்தால்தான் துறை அதனைப் பரிந்துரை செய்திருக்கிறது. இதுதான் அதற்கு விஞ்ஞானரீதியான காரணம்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்திலே குறுக்கீடு. நான் 37 வருடங்களாக போக்குவரத்திலே இருக்கிறேன். அதை எப்படி replace செய்து, எப்படி ஓட்டுவது, எப்படி certificate வாங்குவது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அவர் எங்கள் மாவட்டம்.

இருந்தாலும் கடைசியாக ஒன்றே ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். நல்ல விளக்கு வெளிச்சம் எப்படியோ, நல்ல வயலுக்கு விளைச்சல் எப்படியோ, அப்படித்தான் நல்ல ஆட்சியில் மக்களுக்கு நிம்மதி வேண்டும். ஆனால் அனைத்துத் தரப்பு மக்களினுடைய நிம்மதியையும் இந்த அரசு பறித்துவிட்டது என்று சொல்லி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய நிம்மதியைப் பறிக்காதீர்கள். பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், விவசாயிகள், நெசவாளர்கள் ஆகிய அனைத்துத் தரப்பு மக்களுடைய நிம்மதியையும் பறித்த இந்த அரசு...



2003 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜாங்கம், நீங்கள் பேசுங்கள்.

**திரு.வி.ஆர்.ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னிப்பேச்சு பேசும்போது திரு. கணேசன் அவர்கள் அடிக்கடி குறுக்கிடுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியில் பலவகை நோயினால் பாதிக்கப்பட்டு, கோமா நிலைக்குத் தள்ளப்பட்டு, நோயாளியைப் போல இருந்த போக்குவரத்துத் துறை, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களின் நிருவாகத் திறமையால் இன்று புதுப்பொலிவுடன் இயங்கும் துறையாக இருக்கிறது என்றால் அது மிகையாகாது.

சென்னையிலிருந்து விழுப்புரம் செல்ல பயணம் 3 மணி நேரம். அந்த 3 மணி நேரத்திற்கு, ஒரு பயணச் சீட்டை எடுத்து, 3 வெவ்வேறு பேருந்துகளில் பயணம் செய்த அனுபவம், கடந்த கால தி.மு.க. ஆட்சியில்தான் நடந்தது. பொது மக்களுக்கும் ஏற்பட்டது. ஏறிய பேருந்து செங்கல்பட்டை நெருங்கும்போது, brake பிடிக்கவில்லை என்று சொல்லி வேறொரு வண்டியில் ஏற்றிவிடுவார்கள். அந்தப் பேருந்து மேல்மருவத்தூரை நெருங்கும்போது tyre puncture என்று கூறி 3-வது பேருந்தில் ஏற்றிவிடுவார்கள். அவ்வளவு அவல நிலைமை மட்டுமின்றி, உடல் வலி, மன உளைச்சல் இதுவெல்லாம் கடந்த கால ஆட்சியின் இலவச இணைப்பு.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

பிற்பகல் 1-05

சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து, நாங்கள் வணங்கும் அன்பு தெய்வம் இல்லத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் ஒரு பேருந்து இயங்க முடியாமல், பயணிகள் இறங்கி பேருந்தைத் தள்ளிக்கொண்டு இருந்ததை கவனித்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், அப்பேருந்தினைப் பற்றிய விவரங்களை அறிந்து, இனிமேல் இதுபோன்ற பேருந்துகளை இயக்கக் கூடாது என்று ஆணை பிறப்பித்து, உடனடியாக அந்தப் பேருந்துக்கு மாற்றாக ஒரு பேருந்தை வரச் செய்து இயக்க அணையிட்டார்.

என் தொகுதியில் நடந்த இன்னொரு சம்பவத்தை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, அன்புத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனக்களித்த அருட்கொடையால் சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகி, நன்றி தெரிவிக்கும் விதமாக "பாலகிருஷ்ணாபுரம்" என்ற ஊருக்குச் சென்றபோது, அங்குள்ள மக்கள் மதுரையிலிருந்து இங்கு வரும் நகரப் பேருந்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கூறினார்கள். நான் விளக்கம் கேட்டபோது. ஓட்டைப் பேருந்தில் பயணம் செய்வதால் உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே உடனடியாக இதை அம்மா அவர்களிடம் தெரிவித்து நிறுத்திவிடுங்கள் என்று கூறினார்கள். இவ்வாறு போக்குவரத்துத் துறை சீரழிக்கப்பட்டு, கொள்ளை இலாபம் சுருட்டி, போக்குவரத்துத் துறையை பொன்முடியின் துறையாக மாற்றி போண்டியாக்கிவிட்டுச் சென்றவர்கள், வருடத்திற்கு 1,500 பஸ்கள் விடுகிறோம், 2,000 பஸ்கள் விடுகிறோம் என அறிக்கையை மட்டும் விட்டுவிட்டு, ஆட்சி நடத்தினார்கள். அநியாயமாக கொள்ளையடித்து, கும்மாளமிட்டுச் சென்றுவிட்டனர். அந்த அளவுக்கு திரு. கருணாநிதியின் ஆட்சியில் நிர்வாகம் சீர்கெட்டு இருந்தது., போக்குவரத்துக் கழகங்களில் பொதுமக்கள் படும் அல்லல்களை மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அம்மா அவர்கள் கருத்தில் கொண்டு. "எண்ணிய எண்ணியாங்கு முடிப்பர் சான்றோர்" என்ற வள்ளுவரின் வாக்குக்கிணங்க, அரசு கஜானா காலியாகி இருந்த நேரத்திலும், ரூ. 277 கோடி செலவில் 2,275 புது பேருந்துகளை வாங்கி மக்கள் நலம் பெற புதிய பேருந்துகளை வலம் வரச் செய்திருக்கிறார் என்றால், இது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையில் திரு. கருணாநிதியின் மூத்த மகன் செய்த அட்டூழியங்கள் உங்களுக்கும் தெரிந்திருக்கும். திரு. கருணாநிதி ஆட்சி நடத்திக்கொண்டிருந்தபோது 40 பேருந்துகளை தீ வைத்துக் கொளுத்தினர். அங்கே அராஜகத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். தன்னுடைய தந்தை கட்சி அவர் மேல் எடுத்த நடவடிக்கைகளுக்காக எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக அரசு பேருந்தைக் கொளுத்தியும், பொதுமக்களுக்கு இடையூறையும், கடை அடைப்பையும் ஏற்படுத்தி, 2 நாட்கள் "பந்த்"-ஐப் போல நடத்தப்பட்டது. மதுரை தெருக்களில் யாரும் நடமாட முடியாத ஒரு சூழ்நிலை அந்த ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டு, கடைகளை ரவுடிகளை ஏவிவிட்டு, உருட்டுக் கட்டைகளால் அடித்து நொறுக்கினார்கள். இப்படி அராஜக ஆட்சி,



அவல ஆட்சி நடத்திக் கொண்டிருந்த திரு. கருணாநிதி அதைக் கண்டுகொள்ளவேயில்லை. அப்போது இருந்த கருணாநிதியின் அரசும் இந்த அராஜகத்தை கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில் என்னைப் போன்ற தனியார் பஸ் உரிமையாளர்கள் எல்லாம் கவனத்துடன் பஸ்களை இயக்கும் எண்ணம் வந்து விடுகிறது. ஏனென்றால், திரு. கருணாநிதி ஆட்சிக் காலத்தில் அரசு பஸ்கள் ஆங்காங்கே பழுதாகி நின்று, எங்களைப் போன்ற தனியார் பஸ்களுக்கு வழி விட்டுவிடும். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில் அரசு பஸ்கள் புதுப் பொலிவுடன் புதிய பேருந்துகளாக ஓடுவதால், தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு வருமானம் குறைந்து, அரசுக்கு அதிக இலாபம் ஈட்டுகின்ற ஒரு சூழ்நிலையை அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்றால் இது சொல்லி மாளாது. அந்த அளவுக்கு இந்தத் துறையை அம்மா அவர்கள் மேம்படுத்தி உள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியாளர்கள் தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீது பொய் வழக்கு போட்டு, 28 நாட்கள் சிறையில் அடைத்தார்கள். கருணாநிதியை கைது செய்ததை எதிர்த்து வக்காலத்து வாங்கிய சில கட்சித் தலைவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களைக் கைது செய்த போது, ஒரு பெண்ணை இப்படிச் சித்ரவதை செய்து சிறையில் அடைக்கிறார்களே என்றுகூட அன்று திரு. கருணாநிதியைப் பார்த்துக் கண்டனம் தெரிவிக்கவில்லை. ஆனால் திரு. கருணாநிதியைக் கைது செய்தபோது மட்டும் பல சுயநலவாதிகள் எல்லாம் கூக்குரலிட்டனர். புரட்சித் தலைவி அவர்களை காவல் துறையினர் கைது செய்ய அழைத்தவுடன் தானாகவே முன்வந்து கைதானார். அத்தோடு விட்டார்களா? சிறையிலிருந்து தனி நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு அழைத்து வருகிறோம் என்று சொல்லி, அழைத்து வந்தார்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களை. ஒரு ஓட்டை காரை ஏற்பாடு செய்து, அதில் எங்கள் அன்பு தெய்வத்தை அமர வைத்து, இரு பக்கத்திலும் பெண் காவலர்களை இருக்க வைத்து நீதிமன்றத்திற்கு

அழைத்து வந்தார்கள். தாயின் தங்கத் திருமுகத்தைப் பார்க்க ஆயிரக்கணக்கான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் காத்துக் கிடந்தபோது, கருணாநிதியின் போலீஸ், கரை வேட்டி கட்டியவர்களையும், பெண்களையும் அடித்துத் துரத்தியது.

இந்த நேரத்தில் வரலாற்றில் நான் படித்த சம்பவம் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தேசியத் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களைக் கைது செய்ய வெள்ளைக்கார போலீஸ் திருமங்கலம் சென்றபோது, அவர் காவல் துறையினரை அழைத்து, 'நானே மதுரைக்கு வருகிறேன்; அங்கே வைத்து என்னைக் கைது செய்துகொள்ளுங்கள்' என்று கூறினார். மதுரையில், இன்றைக்கு தேவர் சிலை இருக்கும் இடத்திற்கு அருகே கைதும் செய்யப்பட்டார்.

பிற்பகல் 1-10

எங்கள் அன்பு தெய்வம், இதய தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்கள், இயக்கத் தொண்டர்களைப் பார்த்து விரலை அசைத்திருந்தால், அன்று தமிழகத்தினுடைய சட்டம்-ஒழுங்கு தடுமாறிப் போயிருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'நானே வருகிறேன்' என்று அன்றைக்கு சிறைக்கு வந்தார். ஆனால் இங்கே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர், ஈவு இரக்கமின்றி, புரட்சித் தலைவி அவர்களை அன்றைக்கு கொடுமை செய்தார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள், காவல் துறைக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காக, சட்டம்—ஒழுங்கு தன்னால் கெட்டு விடக்கூடாது என்பதற்காக, பொது நல நோக்கத்தோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் தான் ஒரு தேசியத் தலைவி என்பதற்கு இலக்கணமாய்த் திகழ்ந்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால நிகழ்வுகளைச் சொல்ல வேண்டாம் என்று நினைத்தாலும், என்னைப் போன்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒவ்வொரு தொண்டனுக்கும் அடிமனதில் ஏற்பட்ட வடுவினை என்றைக்கும் அழிக்க முடியாது. நாங்கள் போற்றி வணங்கும் எங்கள் அன்னையை, மனம் புழுங்கி, சோதனைக்கும், வேதனைக்கும் அன்று வித்திட்ட வீணர்கள், இன்றைக்கு வீதியில் விதியை நொந்து திரிகிறார்கள். இவ்வாறு பழி செய்த பாதகர்கள், பாலம் கட்டி, பாசாங்கு செய்த



பகற்கொள்ளைக்காரர்கள், ஏரியிலும், மருந்திலும் எண்ணற்ற ஊழல் செய்ததைப் பற்றி எடுத்துச் சொன்னால் ஏட்டில் அடங்காது. இவையாவற்றிலும் கைதேர்ந்த கபட வியாபாரிகள் இயல்பாக நடக்கும் எந்த நிகழ்ச்சியையும், 'அய்யோ, அய்யோ' என அவலக் குரலெழுப்பி, அழகான நாடகமாடி, நாட்டை ஏமாற்றும் நயவஞ்சகத் தந்திரத்தோடு, கோபாலபுரத்தை கோடீஸ்வரபுரமாக்கி, ஆலிவர் ரோட்டை அரண்மனையாக்கி, அழகு பார்த்து, புனைக் கதைகளிலும், போலிக் கற்பனைகளிலும், புகழ் தேடி, சேலையையும், செருப்பையும் சித்தரித்துக் காட்டிய சின்னமதி படைத்தோர், சிறுநரி குணத்தோர் செயல்பாடுகளைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தமிழா, தமிழுக்கு
துறைதோறும், துறைதோறும்
தொண்டு செய்வாய்'

என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடலின்படி, மைக்கைப் பிடித்துக் கொண்டிருந்த சட்டமன்ற உறுப்பினர்களின் கையில், கம்ப்யூட்டர் மவுஸைப் பிடிக்கச் செய்திருக்கிறார், எங்களது தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் கருணாநிதியோ, துறைதோறும், துறைதோறும், தொண்டு செய்யாமல், ஆங்காங்கே துறைதோறும், துறைதோறும், ஊழல் செய்ததோடு மட்டுமல்லாமல், தொடரும் தொல்காப்பிய ஊழலையும் இப்போது செய்துகொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னிப் பேச்சு பேசிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, எனது தொகுதியைப் பற்றி மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே எடுத்துரைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் அதிகமான வாகன விபத்துகள் கண்டெய்னர்கள், லாரிகள் மூலம் ஏற்படுகின்றன. சிறு வண்டிகள் செல்லும்போது விபத்துக்குள்ளாகின்றன. அதைத் தடுப்பதற்கு அருள்கூர்ந்து மாண்புமிகு அம்மா அவர்கள், நள்ளிரவு 1-00 மணியிலிருந்து காலை 5-00 மணி வரை, அந்த லாரிகளையும், கண்டெய்னர்களையும் நிறுத்தி வைத்தால் விபத்துகள் குறையும் என்பதை இந்தச் சிறுவனுடைய கருத்தாக

நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு தங்களின் வாயிலாக எனது கோரிக்கைகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மா அவர்களின் தொகுதியான ஆண்டிப்பட்டி, வைகை அணையிலிருந்து, மதுரை, இராமநாதபுரத்திற்கு விவசாயம் மற்றும் குடிதண்ணீருக்காக தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அவ்வாறு வரும் தண்ணீர் சோழவந்தான், திருமங்கலம், அவனியாபுரம், மதுரை, சேடப்பட்டி போன்ற ஊர்களுக்கு ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கப்படுகிறது. ஆதலால், சோழவந்தான் பகுதியில் விவசாயக் கிணறுகள் வற்றிப் போகின்ற சூழ்நிலை உருவாகிறது. ஆகவே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், திருவேடகம் மேலக்கால் அருகில் ஒரு தடுப்பணை கட்டித் தருமாறு வேண்டுகிறேன். வைகை ஆற்றிலிருந்து வாடிப்பட்டிக்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன். சாத்தையாறு அணையிலிருந்து பாலமேட்டிற்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன். அலங்காநல்லூருக்கு ஒரு தீயணைப்பு நிலையம் கட்டித் தர அம்மா அவர்களை வேண்டுகிறேன். சோழவந்தானுக்கு ஒரு புறவழிச் சாலை அமைத்துத் தந்து உதவிட வேண்டுகிறேன்.

எங்கள் அன்புத் தாயே, சுட்டெரிக்கும் தங்கள் சொல்லுக்கு சூரியக் கதிரும் நாணுமே, சூழ்ச்சி புனை பொய் வழக்கும் அம்மாவின் தூய புகழைச் சாடுமே, புலரும் பொழுதும் அம்மாவின் புகழ் பாடுமே, புவியில் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சி பூபாளமே என்று கூறி, போக்குவரத்துத் துறை மானியத்தின்மீது பேச எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னை வாழவைத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றிகூறி, அவர்களுடைய பொற்பாதங்களில் என்னுடைய வணக்கத்தைச் சமர்ப்பித்து, நன்றியோடு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை



அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய கொள்கைக் குறிப்பிலே, முன்னுரையில், முதல் வரியில், மக்களுக்குப் போக்குவரத்து வசதிகளை திறம்படச் செய்து தருவதில் தமிழக அரசு, இந்திய துணைக் கண்டத்திற்கே முன்னோடியாக அமைந்துள்ளது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். அதேபோன்று, உங்களது முந்தைய அரசால், 1995 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 10 ஆம் தேதி, இந்த அவையில் சமர்ப்பிக்கப்பட்ட கொள்கைக் குறிப்பில் ஒரு விவரம் சொல்லப்பட்டிருக்கிறது. பொருளாதார அடிப்படையில் நகரப் பேருந்துகளை இயக்குவது ஆதாயமற்றதாக இருப்பினும் பொது மக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்தில் போக்குவரத்துக் கழகங்கள் நகரப் பேருந்துகளை தொடர்ந்து இயக்குகின்றன. நகரப் பேருந்துகள் இயக்கபபடுவதால் இழப்பு ஏற்பட்டாலும், கிராம மக்களுக்குச் சேவை செய்தல் என்ற சமுதாயப் பணியை போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து செய்து வருகிறது என்று 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் தேதி இந்த அவையிலே கொடுக்கப்பட்ட கொள்கைக் குறிப்பிலும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-15

இப்போது மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் திரு. சேகர்பாபு அவர்கள் பேசும்போது கம்யூனிஸ்டுகள் போக்குவரத்துக் கழகங்களை தனியாருக்குக் கொடுக்கிறார்கள் என்ற புரளியைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள், கொடி பிடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் அப்படி எந்தப் புரளியையும் கிளப்பவில்லை. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும் சரி, ஆளுநர் உரையாக இருந்தாலும் சரி, அந்த ஆளுநர் உரையிலேயும், நிதிநிலை அறிக்கையிலேயும் சுட்டிக்காட்டப்பட்ட விஷயம், தெரிந்தெடுக்கப்பட்ட வழித்தடங்கள், பணிகள், சேவைகள், படிப்படியாக தனியார்மயமாக்கப்படும் என்று நீங்கள் இந்த அவையிலே வாசித்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய கொள்கைக் குறிப்பிலேயும்கூட 21-வது பக்கத்தில் இதுபோன்ற வாசகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 2002-2003 ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலும், பின்னர் வரவு-செலவுத் திட்ட உரையிலும், சில குறிப்பிட்ட தடப் பேருந்துகள் படிப்படியாகத் தனியார்மயமாக்கப்படும் என்று அரசு கொள்கை முடிவு அறிவிக்கப்பட்டது என்று கொள்கைக்

குறிப்பிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் புரளியைக் கிளப்பவில்லை. இந்த அரசுதான் மக்கள் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது என்பதை நான் பணிவன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் பேசுகின்றபோதுகூட சொன்னார்கள். கம்யூனிஸ்டுகள் போக்குவரத்துக் கழகங்களில், போக்குவரத்துக் கழகங்களையே தனியாருக்கு விடுவதாக புரளியைக் கிளப்பிக்கொண்டிருக்கிறார்களா என்று சொன்னார்களே தவிர, போக்குவரத்து வழித் தடங்களை தனியாருக்குக் கொடுப்பதைப் பற்றி அவர் குறிப்பிடவில்லை. ஆனால் நாங்கள் சொல்ல வருவது, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு முறை, இரு முறை அல்ல, ஏறத்தாழ இந்தக் கொள்கை விளக்கத்தை, கொள்கைக் குறிப்பைக் கொடுத்த, அறிவித்த நாளிலிருந்து பலமுறை, இங்கே போதிய விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். அவ்வளவு விளக்கத்திற்குப் பின்பும் நீங்கள் இன்னும் குழப்பிக்கொண்டிருக்கிறீர்களே என்ற ஆதங்கத்தில்தான் அவர் சொன்னார். எனவே போக்குவரத்துக் கழகங்களை தனியாருக்கு வழங்கவில்லை என்பதை பலமுறை சொல்லியதற்குப் பின்பும் நீங்கள் அடிக்கடி அதைச் சொல்வதால்தான் அவர் அதைக் குறிப்பிட்டுச் சொன்னார்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்கள் என்று நானும் இப்போது சொல்லவில்லை. கொள்கைக் குறிப்பிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விவரம்...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏற்கெனவே பேசி, விளக்கம் சொல்லிவிட்டார்கள் முதலமைச்சர் அவர்கள். அவர் பேசட்டும். (குறுக்கீடு) ஏற்கெனவே நீங்கள் சொன்னீர்கள். முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். மாறி மாறி அதையே பேசி என்ன பண்ணுவது? திரு. மகேந்திரன் பேசுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** போக்குவரத்துக் கழக வழித் தடங்களுக்கு என்று Motor Vehicles Act சட்டம் 6-ன்படி சில சிறப்புச் சலுகைகள் என்பது நம்முடைய கழகங்கள் இயக்கக்கூடிய பேருந்துகளுக்கு மட்டும் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு இந்த அரசு அந்தச்



சலுகைகளை Chapter 6-லிருந்து 5-க்கு மாற்றுவதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகிறார்கள். இவர்கள் கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையில்கூட, எந்த வழித் தடங்கள் தனியார்மயமாக்கப்படும், எந்த சேவைகள், பணிகள் என்பது படிப்படியாக தனியார்மயமாக்கப்படும் என்று இதுவரை தெளிவாகச் சுட்டிக்காட்டாத காரணத்தினால், இன்றைக்கு மக்கள் மத்தியில் ஓர் அச்சம் என்பது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தொழிலாளர்கள், இலட்சக்கணக்கான தொழிலாளர்கள், போராடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு இந்த அரசினுடைய கொள்கையாக இருந்தாலும் சரி, முந்தைய ஆட்சியாளர்களுடைய கொள்கைகளாக இருந்தாலும் சரி, 1,000 மக்கள் வாழக்கூடிய பகுதிகளுக்குக் கூட போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமென்ற கொள்கை என்பது நம்மிடமெல்லாம் இருக்கிறது. இன்றைக்கு தமிழகத்தில் தனியார் பஸ் முதலாளிகளால் இயக்கப்படக்கூடிய பேருந்துகள் என்பது 1,000 மக்கள் வாழக்கூடிய கிராமங்களுக்கு எல்லாம் செல்லுமா என்றால் செல்லாது. அப்படிச் செல்லாத காரணத்தினால்தான் 1972 ஆம் ஆண்டு தனியார்களிடம் இருந்த போக்குவரத்து அரசுடைமையாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் பணிவன்போடு நான் சுட்டிக்காட்டுவதோடு, இன்னொரு விவரமும் தொடர்ச்சியாக உங்களால் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு வகையான போட்டிச் சூழ்நிலை உருவாக்குவது; ஆகவே நாங்கள் தனியாரை அனுமதிக்கிறோம் என்று. இன்றைக்கு தமிழகத்திலே சென்னை மாநகரம், கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர, இருக்கின்ற இதர 26 மாவட்டங்களிலே தனியார் பேருந்துகள் என்பது இயக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. 6,000-க்கும் அதிகமான தனியார் பேருந்துகளும், 4,000-க்கும் அதிகமான மினி பேருந்துகளும் இன்றைக்கு தமிழகத்திலே இயக்கப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், நம்முடைய போக்குவரத்துக் கழகத்தால் நட்டத்தைச் சரிகட்டி லாபத்திலே இயக்க முடியும் என்பதற்கு நீங்களே உதாரணம் சொல்லியிருக்கிறீர்கள். தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் 23,44,608 மாணவர் பாஸ் என்பது வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த பாஸ் வழங்குவதன் மூலமாக மட்டும் போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.252 கோடி இழப்பு ஏற்பட்டு இருக்கிறது. அந்த இழப்பைச் சரிகட்டுவதற்கு அரசு நிதி தர வேண்டுமென்ற கோரிக்கை என்பது மாநில அரசிடம் வைக்கப்பட்டு, அந்தக் கோரிக்கை முழுவதும் ஏற்றுக்கொள்ளப்படாமல், வெறும் ரூ. 89 கோடிதான் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்றால், தொடர்ச்சியாக

மத்திய அரசினுடைய கொள்கைகளினுடைய விளைவாக, டீசல் விலை கடுமையான அளவிற்கு உயர்ந்துகொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், நம்முடைய போக்குவரத்துக் கழகங்களுக்கு வெறும் ரூ.20 கோடிதான் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது. இந்த பஸ் பாஸ் வழங்குவதன் மூலமாக மட்டும் போக்குவரத்துக் கழகங்கள் அரசிடம் கோரிய நிதி என்பது அரசால் வழங்கப்பட்டு இருந்தால், போக்குவாத்துக் கழகங்கள் இன்றைக்கு ரூ.150 கோடிக்கும் அதிகமான லாபத்தோடு இயங்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பணிவன்போடு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-20*

அதேபோன்று இன்றைக்கு போக்குவரத்துக் கழகம் படிப்படியாக தனியார்மயமாக்கப்படும் என்று—போக்குவரத்துக் கழகம் அல்ல; தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடங்கள், பணிகள், சேவைகள் என்பது படிப்படியாக தனியார்மயமாக்கப்பட்டால், பல்வேறு சலுகைகள்—இன்றைக்கு ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் சுட்டிக்காட்டியது போல, நாம் அனுபவிக்கக்கூடிய, மக்கள் அனுபவிக்கக்கூடிய பல்வேறு சலுகைகள் மக்களுக்கு மறுக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படும் என்ற காரணத்தினால், நஷ்டத்தை நம்மால் ஈடுகட்ட முடியும்; சிறந்த நிர்வாகத்தை உருவாக்க முடியும்; போக்குவாத்துக் கழகங்களை லாபத்திலே இயக்க முடியும் என்ற நம்பிக்கையோடு இந்தக் கழகங்களை நாம் நடத்தினோம் என்றால், நிச்சயமாக தெரிந்தெடுக்கப்பட்ட வழித் தடங்களைக்கூட தனியார்மயம் ஆக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேர்ந்திருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் இயக்கத்தினுடைய அகில இந்திய கொள்கை என்ன? மேற்கு வங்கத்திலே எதற்காக தனியார் துறையிடம் பேருந்துகளை எல்லாம் நீங்கள் விட்டுவிட்டீர்கள்? அங்கு ஒரு கொள்கை; இங்கு ஒரு கொள்கை என்று பேசுவது நியாயமில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், எங்கள் அரசின் கொள்கையைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவுபடுத்திவிட்டார்கள்; போக்குவரத்துக் கழகங்கள்



நாட்டுடைமையாகத் தொடரும்; தனியாருக்கு விடப்படாது என்று தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். ஆனால் மேற்கு வங்கத்தில்தான் தனியார் துறைக்கு பேருந்துகளை எல்லாம் நீங்கள் தாரைவார்த்து விட்டீர்கள். கொள்கை தெளிவு என்றால், ஒரே கொள்கையாக அகில இந்திய அளவில் நீங்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சராகக்கூட இருந்தவர்; அவர் மேற்கு வங்கத்திலே எல்லாம் தனியார் துறைக்கு பேருந்துகள் விடப்படவில்லையா என்று கேட்டார்கள். ஏற்கெனவே அங்கு புதிதாக, ஆட்சியிலே இருக்கிற அரசு வழித்தடங்களை, அதாவது அரசுப் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கிற வழித்தடங்களை, தனியாருக்கு மாற்றிக் கொடுக்கவில்லை; ஏற்கெனவே எந்தெந்த வழித்தடங்களிலே தனியார் துறை இயக்கிக்கொண்டிருக்கிறதோ, அந்த வழித்தடங்களிலேதான் அவர்கள் இயக்குகிறார்களே தவிர, இப்போது புதிதாக தனியாருக்குக் கொடுக்கப்படவில்லை. (குறுக்கீடு) தயவுசெய்து முடித்துவிடுகிறேன். தமிழகத்தைப் பொறுத்த அளவிலே எங்களுக்கு இருக்கிற கருத்துவேறுபாடு என்னவென்றால், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், பேருந்துகளை ஓட்டிக்கொண்டிருக்கிற வழித்தடங்களிலேயே இந்த வழித்தடங்களை தனியாருக்கு மாற்றிக் கொடுப்பது என்ற அரசினுடைய அந்த proposal இன்று மக்களைக் கடுமையாகப் பாதிக்கும். இன்று எவ்வளவோ வழித்தடங்களிலே புதிதாக தனியாருக்கு பேருந்துகளை ஓட்டுவதற்கான வாய்ப்பு இருக்கிற நேரத்திலே, அப்படிப்பட்ட ஒரு நிலையை எடுத்துக்கொள்வதைத் தவிர, இந்த அரசுக் கழகங்கள் ஓட்டிக்கொண்டிருககிற வழித்தடங்களில் தனியாருக்குக் கொடுப்பது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னெடு ஆண்டுகளாக மேற்கு வங்கத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் இயக்கத்தினுடைய தலைமையில் அங்கு ஆட்சி நடக்கிறது. அங்கு தனியார்வசம் கம்யூனிஸ்டு ஆட்சிக்கு முன்னால் ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் தடங்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுவது

சரியாக இருக்குமேயானால், இத்தனை வருடம் ஆட்சியிலே இருக்கிறீர்களே, ஏன் அந்தத் தனியார் வழித்தடங்களை எல்லாம் நீங்கள் அங்கு நாட்டுடைமையாக ஆக்கவில்லை? எதற்காக அந்தத் தனியார் கொள்கையை ஏற்று அங்கு செயல்பட்டீர்கள்? இங்கே தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் மிகவும் தெளிவாக நாங்கள் இருக்கிறோம். எந்தெந்த வழித்தடங்கள் மக்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக சேவை செய்ய முடியாத நிலையில் இருக்கிறதோ, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் எந்தெந்தப் பகுதிகளுக்கு மக்களுக்குத் தேவையான சேவையை ஈர்க்க முடியாத அளவிற்கு நலிந்த நிலையில் இருக்கிறதோ, அதைக் கண்டறிய வேண்டுமென்ற ஆய்வுதான் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

*பிற்பகல் 1-25*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது மேற்கு வங்காளத்தில் இருக்கிற அரசு ஒருசில வழித்தடங்களை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். ஒருசில வழித்தடங்களிலே பேருந்துகளை விடுவதைவிட அவர்கள் உபரி நிலங்களாக இருக்கிற 10 இலட்சம் ஏக்கரா நிலத்தை எடுத்து 20 இலட்சம் மக்களுக்கு நிலமற்ற விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே உள்ள நடவடிக்கையிலேதான் அதிகமான நாட்டம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன், இரண்டு மணித்துளிகளில் உரையை முடியுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களின் வாதம் வேடிக்கையாக இருக்கிறது. மேற்கு வங்காளத்தில் தனியார் துறையினர் பேருந்துகளை இயக்கினால், அது கிராமப்புற



மக்களை, பொதுமக்களைப் பாதிக்காது, தமிழ்நாட்டில் தனியார் துறையினர் பேருந்துகளை இயக்கினால் மட்டும் மக்களைப் பாதிக்குமா? இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Unfortunately, the Honourable Chief Minister has misunderstood me. என்னுடைய கருத்து என்னவென்றால், அங்கே ஏற்கெனவே ஓடிக்கொண்டிருக்கிற வழித்தடங்களில் பேருந்துகள் தனியாருக்குக் கொடுக்கப்படவில்லை. ஏற்கெனவே தனியார் ஓட்டியிருந்த வழித்தடங்களில்தான் அவர்கள் ஓட்டுகிறார்கள். அதை nationalise பண்ணுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்ததா? எடுக்கவில்லை. ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சொல்கிறார். (குறுக்கீடு) அதுதான். அவ்வளவுதான். திரு. மகேந்திரன், பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மற்ற route-களைப் பொறுத்தவரையில் அவர்கள் தனியாருக்குக் கொடுக்கவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவரவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) பேசி முடித்துவிடட்டும். உங்கள் கட்சி உறுப்பினர் பேசியாகிவிட்டது. திரு. மகேந்திரன் பேசி முடிக்கட்டும். பிறகு என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுபோன்று, கொள்கை விளக்கக் குறிப்பிலே சுட்டிக்காட்டி இருப்பதுபோல, இப்போது வயது மூப்பு அடிப்படையிலே இயக்கப்படக்கூடிய பேருந்துகள் என்பது 6,000-க்கும் அதிகமான பேருந்துகள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதிலே 1,000-க்கும் அதிகமான பேருந்துகள் என்பது புதிதாக வாங்கப்பட்டு இருக்கிறது. இன்னும் 6,000-க்கும் அதிகமான பேருந்துகள் வாங்கப்பட வேண்டும் என்ற விவரம் என்பது சொல்லப்பட்டிருக்கிறது. வாங்கப்பட்டு இருக்கக்கூடிய பேருந்துகளிலேகூட சென்னை மாநகரத்திற்கு என்று புதிய பேருந்துகளை விடுவதிலே இந்த அரசுக்குத் தயக்கம் இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய பேருந்துகளை, வயதான பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை வாங்குவதற்காக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்பு 2001-2002 ஆம் ஆண்டு அந்த இடைப்பட்ட காலத்தில் 263 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு, அடிச்சட்டங்கள் வாங்கப்பட்டு அவை இன்றைக்குப் பயன்பாட்டில் உள்ளன.

அடுத்தபடியாக, இந்த 2002-2003 ஆம் ஆண்டிற்காக 1,047 புதிய பேருந்து அடிச்சட்டங்கள் வாங்கப்பட்டு, இப்போது அதிலும் 16 பேருந்துகளைத் தவிர மற்றவையெல்லாம் பயன்பாட்டில் இருக்கின்றன. அந்த 16 பேருந்துகளும் இப்போது கூடுகட்டும் பணி நடைபெற்றவுடன் இங்கே நமது நடைமுறைக்கு வந்துவிடும், இயங்கத் தொடங்கும். அதுபோல இந்தப் பேருந்துகள் வாங்கியதில் சென்னை மாநகருக்கு எந்தப் பேருந்தும் வழங்கப்படவில்லை என்ற தவறான தகவலைத் தெரிவிக்கிறார். 127 புதிய பேருந்துகள் சென்னை மாநகரத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக 10 பேருந்துகள் வயதானவர்கள், மகளிர், உடல் ஊனமுற்றவர்கள் எல்லாம் ஏறுவதற்காக, கீழே, படி கீழே இருக்கிற, குறைவான படி உடைய 10 பேருந்துகளும் கூடுதல் விலையோடு, ஏறத்தாழ மற்ற பேருந்துகளுடைய விலையைப்போல இரண்டு மடங்கு விலை உள்ள அந்தப் பேருந்துகளை இன்றைக்கு வாங்கி 127 பேருந்துகள் சென்னை மாநகரிலே இயக்கப்படுகின்றன என்பதை அவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், இப்போது நடைமுறையிலே 534 புதிய பேருந்துகளை வாங்குவதற்காக பணிகள் இறுதி செய்யப்பட்டு இருக்கின்றன. அந்த 534 பேருந்துகளின் chassis-களிலும் அடிச்சட்டங்களிலும், போதிய அளவிற்கு, வேண்டிய அளவிற்கு சென்னை மாநகரத்திற்கு புதிய அடிச்சட்டங்கள், புதிய பேருந்துகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திற்கு என்று கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்கு நன்றி. அதுபோன்று 1-9-1998 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தொழில் துறை agreement-படி, 2000 ஆண்டு தொழிலாளர்களுக்கான pension திட்டம என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இப்போதுவரை அந்த pension திட்டத்தை தொழிலாளர்களால் அனுபவிக்க முடியவில்லை.



தமிழக போக்குவரத்துக் கழகங்களால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய Pension Trust-ற்குக்கூட இன்னும் மத்திய அரசினுடைய Income tax relaxation கிடைக்கவில்லை என்ற தகவல் என்பது சொல்லப்பட்டிருக்கிறது. அரசு அந்த விலக்கைப் பெறுவதற்கான முயற்சியை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இப்போது போக்குவரத்துக் கழகங்களிலே வாரிசுகளுக்கான வேலை என்பது மறுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதுபோன்று விபத்திற்கு உள்ளாகக்கூடிய ஊழியர்களுக்கு மாற்றுப் பணி வழங்கப்படுவது உள்பட, bonus என்பது மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் சீர்திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்திலே 30,000-க்கும் அதிகமான ஆட்டோக்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. 30,000-க்கும் அதிகமாக இயக்கப்படக்கூடிய இந்த ஆட்டோக்களுக்கு 1996 ஆம் ஆண்டு மீட்டர் கட்டணம் என்பது தீர்மானிக்கப்பட்டது. 1996 ஆம் ஆண்டிற்குப் பின்பு டீசல் விலை, பெட்ரோல் விலை கடுமையாக உயர்த்தப்பட்டதற்குப் பின்புமகூட மீட்டர்கள்.... (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மகேந்திரனுடைய பேச்சு நிறைவு பெற்றது. விவாதம் இன்று மாலை தொடரும். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கான பதில் உரையை வழங்குவார்.

## 7. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கான கணினி பயிற்சி நேரத்தில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கான கணினி பயிற்சி இன்று மாலை 4.30 மணிக்கு மாறாக 6-30 மணிக்குத் தொடங்கும்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4-30 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

[2003 ஏப்ரல் 28

## 6. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 24-உள் துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம்—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 46-போக்குவரத்துத் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்திற்கான மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கான, வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு மாலை நேர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். காலையில் மாமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை இங்கே அளித்திருக்கிறார்கள். குறிப்பாக போக்குவரத்துத் துறையின்மீது இருக்கிற ஒரு பிரதான கருத்துபற்றி இந்த அவையிலே நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அதைத் திரும்பத் திரும்பச் சொல்வதற்குச் சங்கடமாகவும், வேதனையாகவும் இருக்கிறது என்று சொன்னாலும், சொல்லாமல் இருக்க முடியவில்லை. காரணம், போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையிலும் நமது கொள்கை விளக்கக் குறிப்பிலே சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. இந்திய துணைக் கண்டத்திலேயே சேவையில் முன்னணி மாநிலமாக இருக்கிறது. இதர மாநிலங்களைக் காட்டிலும், கட்டணம் குறைவாக இருக்கிறது. எரிபொருள் சிக்கனத்திற்கான சிறந்த நிறுவனமாக 2001-2002 ஆம் ஆண்டு திருநெல்வேலி போக்குவரத்துக் கழகம், புதுடெல்லியினுடைய ஓர் அழைப்பின் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது என்ற சிறப்புகள் எல்லாம் நமது கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே நமது போக்குவரத்துக் கழகம் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்று சொல்லிவிட்டு, அப்படிச் சிறப்பாகவும், மக்களுக்குப் பயனுள்ள வகையிலேயும் செயல்படுகிற அந்தப் போக்குவாத்துக் கழகத்தை தனியார்மயமாக்குவோம் என்று சொன்னதுதான் பிரச்சினை. ஆனால் தனியார்மயம் ஆக்கபடாது என்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள்...



2003 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. சிவபுண்ணியம், ஏற்கெனவே அதைச் சொல்லிவிட்டார்கள். போக்குவரத்துக் கழகத்தை தனியார்மயம் ஆக்கவில்லை, சில வழித்தடங்கள் என்று சொல்லிவிட்டார்கள். மறுபடியும், மறுபடியும் அதையே எதறகுப் பேசிக்கொண்டிருக்க வேண்டும்?

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, நான் அதையே திரும்பச் சொல்லவில்லை. ஆனால் சொல்வதற்குரிய ஒரு வாய்ப்புப்பற்றி என்ன யோசனை வருகிறது என்றால், ஜாடியில் அடைக்கப்பட்டிருந்த பூதத்தினை, மூடியைத் திறந்துவிட்டு, வெளியிலே விட்டதே யார்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் சொன்னார்கள். நிதிநிலை அறிக்கையின்போதும் சரி, மாநில ஆளுநர் அவர்களுடைய அறிக்கையிலேயும் சரி, இடையிடையே வருகிற கருத்துகளிலே எல்லாம் சொல்லப்பட்டிருக்கிற கருத்து என்பது இந்த அரசின் சார்பில்தான் வெளியிடப்பட்டது. வெளியிடப்பட்டதன் காரணத்தினாலேதான் இது விவாதமாக மாற்றப்பட்டிருக்கிறதே தவிர, அப்படி ஒரு கருத்து வெளிவராமல் இருந்திருக்குமானால் அதைப்பற்றிப் பேசுவதற்குரிய வாய்ப்புகள் வராது....

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நாங்களும் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்கள் பலமுறை தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகங்களைத் தனியார்மயம் ஆக்கவில்லை. ஆனால் சில அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான, இயங்கிக்கொண்டிருக்கிற சில குறிப்பிட்ட வழித்தடங்களை, தேர்வு செய்யப்பட்ட சில வழித்தடங்களை, ஒருசில தனியாருக்குக் கொடுப்பதிலே என்ன தவறு இருக்கிறது? அதை நாங்கள் சொல்லியிருக்கிறோம், கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறோம். அதை இல்லையென்று சொல்லவில்லை. அதற்கான உரிய காரணங்களை எல்லாம் நான் என்னுடைய பதிலுரையில் விரிவாகத் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 ஏப்ரல் 28

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடங்கள் மற்றும் இயக்கங்களை என்று குறிப்பிட்டு, இப்போதிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலும் சொல்லப்பட்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடம் என்றால், அப்போது நம் கவனத்தின் மூலமாக அல்லது நம்முடைய கணிப்புப்படி பார்த்தால், ஆதாயம் இல்லாத வழித்தடத்தை விற்பது என்று அர்த்தமா? அப்படி என்றால், வாங்குபவர்கள் என்ன இளிச்சவாயர்களா? நான் கேட்கிறேன், ஆதாயம் இல்லாத வழித்தடத்தை எப்படி வாங்குவார்கள்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சிவசுப்பிரமணியன் அவர்களுடைய கவனத்திற்குச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** திரு. சிவபுண்ண்ணியம் அவர்கள் கவனத்திற்குச் சொல்கிறேன். சில வழித்தடங்களில், இப்போது மினி பேருந்துகள் mini buses விட்டிருக்கிறார்கள். ஒழுங்கான சாலை வசதிகளே இல்லை. மேடு, பள்ளம் என்ற நிலை இருக்கிறது. இருந்தாலும், அங்கு அவர்கள் அவற்றை இயக்கவில்லையா? அதைக் கருத்தில்கொள்ள வேண்டும். அதுபோலத்தான் வழித்தடங்கள் நட்டத்தில் இயங்குவதற்கு— என்ன காரணம்? போதிய மக்கள் அங்கு இல்லாமல் இருப்பார்கள். Occupancy ratio may be much lesser. அது ஒரு காரணம். சாலைப் போக்குவரத்து, சாலை வசதி சிறப்பாக இல்லாத பகுதிகளாக இருக்கும். தொடர்ந்து அரசுப் பேருந்துகள் ஓடுகிறபோது தொடர் நட்டம். சில பகுதிகளில் அங்குள்ள ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்குக்கூட வருமானம் இல்லாத அளவிற்கு தொடர் நட்டத்திலே இயங்குகின்ற வழித்தடங்களும் உள்ளன. இவற்றையெல்லாம் ஆய்ந்து, அந்த ஆய்வின் அடிப்படையிலே எந்தெந்த வழித்தடங்களில் கழகங்கள் பேருந்துகளை இயக்க முடியாது, முடியவில்லை என்ற நிலை வருகிறதோ, அங்குதான் இதுகுறித்து ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதுதான் அரசினுடைய கொள்கை.

*பிற்பகல் 4-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உங்களுக்கு வேண்டாமென்றால் விட்டுவிடுங்கள். வழித்தடத்தை வாங்குபவர்களைப் போட்டு ஏன் தொந்தரவு பண்ணுகிறீர்கள்?



2003 ஏப்ரல் 28]

**திரு. வை. சிவபுண்ணியம்:** வாங்குபவர்களைப்பற்றி, எனக்கு அவர்களின்மீது ஓர் அனுதாபம் இருக்கிறது என்ற காரணத்தால்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவுடைமை தத்துவத்தில் தனியார்மீது அனுதாபம் இருக்கிறது என்று கூறுகிறபோது மிக ஆச்சரியமாக இருக்கிறது. C.P.I. இயக்கத்தினுடைய கொள்கை தனியாருக்கும் உகந்த கொள்கையாக மாற்றப்பட்டுவிட்டது என்றுதான் அவர் பேச்சிலிருந்தே தெரிகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, போக்குவரத்துக் கழகமாக இருந்தாலும் சரி, அது நலிவு பெறாமல் இருந்தால்தான் அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்க்கை நன்மையடையுமே தவிர, அது நலிந்து போவதால் எந்த நன்மையும் கிடையாது. அந்தத் தொழிற்சாலை நலிந்து போகாமல் இருக்க வேண்டுமென்பதுதான் தொழிற்சங்க இயக்கத்தினுடைய முதல் கொள்கையாக இருக்கிறது. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியாததல்ல. அந்த நோக்கத்திலேதான் மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் சொல்கிறார்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, அரைத்த மாவையே அரைக்கிறது மட்டுமல்ல, அரைத்து தோசையாகப் போட்ட மாவைப் போட்டு அரைக்காதீர்கள். (சிரிப்பு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நட்டத்திலே இயங்கக்கூடிய வழித்தடங்கள் என்று சொன்னார்கள். பேருந்து போகாத வழித்தடங்கள் என்று சொன்னார்கள். இப்பொழுது பேருந்துகளெல்லாம் போய்க்கொண்டிருக்கின்றன. வழித்தடங்கள் சீராக இருந்துகொண்டிருக்கின்றன. • ஆனால் நட்டம் என்று காரணம் காட்டி, சரியில்லை என்று காரணம் காட்டினோம் என்று சொன்னால், கிராமப்புற போக்குவரத்து பெரிதும் பாதிக்கும். இப்போது குண்டூசி நுழையப் போய், நாளை கோணி ஊசியே நுழையப் போய்விடும். ஆகவே தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன்.

[2003 ஏப்ரல் 28

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதற்காகத்தான் நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். கிராமப் பகுதிகளில் பல இடங்களுக்கு அரசுப் பேருந்துகள் ஒரு **route** இருக்கும். ஆனாலும் அங்கு அரசுப் பேருந்துகள் போகாது. 5 **trip** போக வேண்டிய இடத்தில் ஒரு **trip**தான் போய்க்கொண்டிருக்கும். காரணம், **occupancy ratio** சரியில்லை அல்லது சாலை சரியில்லை என்று சொல்லிவிடுவார்கள். அரசுப் பேருந்துகளை நீங்கள் விடு, விடு என்றுசொன்னால்கூட, அந்தப் போக்குவரத்துக் கழகத்தினுடைய M.D. பேருந்துகளை அங்கே விடமாட்டார். இதுதான் உண்மையில் இருக்கின்ற பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாதது இல்லை. ஆனால் அப்படிப்பட்ட வழித்தடங்களில் தனியார் முன்வருவார்களேயானால், நாங்கள் அந்த மக்களுக்குச் சேவை செய்கிறோம், அந்தக் கிராமங்களைப் பாதுகாத்துக்கொள்கிறோம் என்று சொல்வார்களேயானால், அந்தக் கிராம மக்களுக்காக தனியார் முன் வருகின்றபோது எதற்காக நாம் தடைக் கல்லாக இருக்க வேண்டும்? கிராம மக்களுக்குப் பேருந்துகளை விடவேண்டுமென்பதுதான் அரசினுடைய கொள்கை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீடுகளையெல்லாம் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையின் காரணமாக பேசிக் கொண்டிருக்கிறேன். இந்தச் செய்தியைச் சொல்வதற்கு, நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், தனியார் வாங்குவார்கள் என்று நம்பிக்கை இருப்பதிலே எனக்கு மாற்று கருத்து இல்லை. ஆனால் எனக்கு இருக்கிற அச்சம் என்னவென்றால், இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடம் என்று ஒரு கணக்கினைக் கொடுப்பது யார்? அதிகாரிகள்தான் கொடுப்பார்கள். அவர்களேகூட இலாபகரமாகச் செயல்படுகிற வழித்தடங்களையும்கூட தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடத்திலே கொடுத்துவிட்டால் என்ன செய்வது? இப்படியெல்லாம் ஓர் அச்சமும், சந்தேகமும் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அதிகாரிகள்மீது குற்றச்சாட்டுகளைக் கூறுவது போல் இருக்கிறது. அந்த அதிகாரிகள் அரசுப் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த அதிகாரிகள். போக்குவரத்துக் கழகத்தினுடைய நலனைப் பேணுவதில், பாதுகாப்பதில் அக்கறை உள்ள அதிகாரிகள்தான் அந்தக் குழுவிலே இடம் பெறுவார்கள்.



2003 ஏப்ரல் 28]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுகிற அதிகாரிகள் என்பது வேறு. அதிலே பணியாற்றக்கூடிய பணியாளர்கள் அனைவருமே அது அரசுடைமையாகவே இருக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலேதான் இருக்கிறார்கள். ஆனால் உயர்மட்டக் குழு என்ற அடிப்படையிலேயும், வேறு சில வகையிலேயும் அப்படிப்பட்ட ஆலோசனைகள் பெறுகிறபோது அந்தக் கருத்து வந்துவிடுமே என்ற அச்சத்தின் காரணத்தாலே நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். குறிப்பாக, பேருந்து இயக்கத்தினுடைய செயல்பாடுகளைப்பற்றி குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. 16,670 பேருந்துகள் இயக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 62,84,000 கி.மீ. பயன்பட்டுக்கொண்டிருக்கிறது, செயல்படுகிறது. ஒரு நாளைக்கு பயணிகள் என்ற வகையிலே பார்த்தால், 1,56,28,000 பேர்கள் பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இது ஒரு மிகப் பெரிய சேவைத் துறை. ஆகவே இந்தச் சேவைத் துறை மக்கள் பயன்பாட்டுக்குரிய துறை என்ற அடிப்படையில்தான் இதைப் பார்க்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சேவைத் துறை என்ற அடிப்படையிலே போக்குவரத்துத் துறை, கல்வித் துறை, சுகாதாரத் துறை, அதைப்போல மின் துறை என்று இப்படிப்பட்ட துறைகளையெல்லாம் மக்களுக்கு, விவசாயிகளுக்கு, ஏழைகளுக்கு உரிய சேவைத் துறைகளாகத்தான் பாவிக்க வேண்டும். அதில் வருகிற நட்டத்தைக் கணக்காகக் கொண்டு அதன்மீது மாறுதல் செய்யக்கூடிய முயற்சியை எடுத்தால், மக்கள் பயன்பாடு, அவர்களுடைய தேவை குறைவாகி, மேலும் வாழ்க்கை நிலை, கீழ்நிலைக்குச் சென்றுவிடும் அபாயம் ஏற்படும் என்பதைத்தான் நான் இதிலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி நிருவாக ரீதியில் பார்த்தால்கூட, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் பேருந்துகளின் எண்ணிக்கையும் குறைந்து இருக்கிறது. பணியாளர்களுடைய எண்ணிக்கையும் குறைந்திருக்கிறது. கி.மீ. தூரம் என்பது, பயன்படுத்தப்பட்ட கி.மீ. தூரம் அதிகரித்திருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், இதில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் இந்தத் துறையை மேம்படுத்துவதற்காக, இலாபகரமாக செயல்படுவதற்காக, உறுதியாக அரசினுடைய இயக்கமாக செயல்படுவதற்கு, அந்த நல்ல நோக்கத்தின் அடிப்படையில் அவர்கள்...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளின் எண்ணிக்கையும் குறைந்திருக்கிறது, தொழிலாளர்களின் எண்ணிக்கையும் குறைந்திருக்கிறது, எப்படி, கி.மீ. கூடுகிறது என்று கேட்டிருக்கிறார்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு முன்பு இருந்த பணியாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் எல்லாம் வெவ்வேறு பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தார்கள். கூடுதல் பணியாளர்கள் இருந்த காரணத்தினால், இதற்கு முன்பு வெவ்வேறு பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டார்கள். இப்போது அவர்களை எல்லாம் மீண்டும் அந்த ஓட்டுநர் பணிக்கும், நடத்துநர் பணிக்கும் திரும்பவும் அந்த வேலையைச் செய்வதற்கு வலியுறுத்தி இருப்பதன் காரணமாக, கூடுதல் இயக்கம்-கூடுதல் தூரம் இப்போது இயக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-40

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு மிக முக்கியமான செய்தி. இது மக்களுக்கு சேவையாற்றுகிற துறை என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தைச் சொன்னார்கள். ஆகவே கிராமப்புறத்திலே வாழ்கிற நடுத்தரப் பகுதியைச் சேர்ந்த ஏழையெளிய மக்கள், சாதாரண விவசாய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் பெருமளவிலே இந்தத் துறையின் மூலமாகப் பயன்பெற்று அவர்களுடைய கல்வி அறிவை வளர்த்துக்கொள்வதற்கான முயற்சிகள் சிறப்பாக இருந்தது. ஆனால் அதில் இப்போது இடிவிழுந்தாற்போல ஒரு செய்தி. எல்லாவற்றுக்கும் சேர்த்து கல்வி நிறுவனங்களுக்குரிய கட்டணத்தை திடீரென்று ஒரு பேருந்துக்கு ரூ.36,000/- என்று விதித்து விட்டீர்கள். வரி விதித்துவிட்ட காரணத்தாலே சாதாரண ஏழை எளிய மாணவர்களுடைய தலையிலே அது சுமையாக வரப்போகிறது. இதைப் பரிசீலிக்கவில்லை என்று சொன்னால் மிகப் பெரிய பாதிப்பு தமிழகத்தில் வரும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவைக்குத் தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கிறார். தனியார் எஞ்சினியரிங் கல்லூரியாக இருந்தாலும் சரி, தனியார் English Medium என்று சொல்லக்கூடிய அந்த ஆங்கிலப் பள்ளிகளாக இருந்தாலும் சரி, ஏற்கெனவே பேருந்துகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்தப் பேருந்துகளில் பயணம் செய்கின்ற



மாணவர்களிடம் அளவுகடந்த கட்டணத்தை எல்லோரும் வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். இதை அரசுத் துறை அதிகாரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். உண்மை நிலையும் கூட. எந்தப் பள்ளிக்கு என்று தனியார் பள்ளியிலாவது அவர்களுக்கு-அந்தப் பேருந்துகள் இருந்து, கட்டணம் வாங்காமல் இலவசமாக மாணவர்களை அவர்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கு அழைத்து வருகிறார்களா? அப்படி அவர்கள் கட்டணத்தை வசூலிக்கிறார்கள். அந்தப் பள்ளி நேரம் போக அல்லது கல்லூரி நேரம் போக, மீதமுள்ள நேரங்களில், விடுமுறை நாட்களில் Contract Carriage போன்று சுற்றுலாவிற்கும் அவர்கள் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசு இழப்பைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது. ஆதாயத்தை தனியார் முதலாளிகள் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தனியார் முதலாளிகளுக்கு C.P.I. இயக்கம் ஆதரவு தரக் கூடாது. நீங்கள் அரசுக்கு ஆதரவு தர வேண்டும். அரசின் வருவாயைப் பெருக்குகிற வழியில் நாங்கள் எடுத்திருக்கிற முயற்சிக்கு உங்கள் ஆதரவு வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** ஒரு நிமிஷம், ஒரு நிமிஷம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் சொன்ன விவரங்களோடு, கூடுதல் விவரமாக, 1994 ஆம் ஆண்டு இந்த வகை வாகனங்களுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்பாக மற்ற வாகனங்களுக்கு எல்லாம் நான்கு முறை வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த நான்கு முறையும் இந்தக் கல்வி நிறுவனங்களுக்கான பேருந்துகளுக்கு வரி உயர்த்தப்படவில்லை. ஆகவே நான்கு முறை சிறிது சிறிதாக போட்டிருந்தால்கூட, அந்த வரியை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால், இப்போது போட்டிருப்பது கூடுதல் சுமையாகத் தெரியாது. ஆகவே இப்போது மாண்புமிகு அமைச்சர் சொன்னதுபோல, ஏற்கெனவே பல கல்வி நிறுவனங்கள் தேவைக்கு அதிகமாக மாணவர்களிடத்திலே கட்டணம் வசூல் செய்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் பார்த்தால், ஏதோ கல்வி நிறுவனங்களைத் தூண்டிவிட்டு—வரி கட்டியிருக்கிறார்கள், நீங்கள் கட்டணத்தைக் கூட்டுங்கள் என்று அவர்களுக்கு ஆலோசனை சொல்வதைப்போல—உங்களுடைய பேச்சு—அமைந்துவிடக்கூடாது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி நிறுவனங்கள் கட்டணத்தை ஏற்றாமல் இருந்தால்கூட, அவர்களை ஏற்றுங்கள் என்று சொல்வதைப்போல மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் பேச்சு அமைந்துவிடக்கூடாது. ஏற்கெனவே இந்த அவையில் நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். நாங்கள் சொல்வதெல்லாம் ஒருவேளை இந்த அறிவிப்புக்குப் பிறகு அப்படி கல்வி நிறுவனங்கள் ஏதாவது மாணவர்களைப் பாதிக்கிற வகையில் கட்டணத்தை ஏற்றினால் எங்களுக்குத் தகவல் கொடுங்கள். அந்தக் கல்வி நிறுவனங்கள்மீது நிச்சயமாக நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமக்களுடைய, சாமர்த்தியமான விளக்கத்திற்கு நன்றி. ஏனென்றால், நான் ஒன்று சொன்னால், அவர்கள் ஒன்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். என்ன செய்வது என்றே புரியவில்லை. நான் பேசுவது, மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள், நடுத்தர ஏழைக் குடும்பங்கள் பாதிக்கப்படும் என்ற கருத்தின் அடிப்படையிலேதான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். தனியார் கல்லூரிகளுக்கு நான் ஆதரவு தெரிவிக்க விரும்பவில்லை. அப்படிப்பட்ட தவறான காரியத்திலே ஈடுபடுகிற கல்லூரிகள்மீது நீங்கள் நடவடிக்கை எடுப்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் பணிவாகக் கேட்டுக்கொள்வது, அப்படி ஏதாவது சம்பந்தப்பட்ட கல்லூரிகள், அப்படித் தவறாக நடைமுறைப்படுத்துவார்களேயானால், அதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுங்கள். நான் இப்போது சொல்கிற இந்த விஷயத்தைப்பற்றி நீங்கள் மறுப்புக்காக சபையில் சொல்லுங்கள். தனியாக சிந்தித்து அதன்மீது ஒரு நல்ல முடிவை எடுங்கள் என்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள். நான் கட்டணத்தை உயர்த்தச் சொல்லவில்லை. யாருமே சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவர்களாகவே அதைச் செய்துவிடுவார்கள். அதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. பல கல்லூரிகளிலே அப்படிப்பட்ட மிக உயர்ந்த அளவு இருக்கிறது. பாதிக்கிறது என்ற நிலைமை இருக்குமானால் இதைச் சரி செய்யுங்கள். ஆனால் பொதுவாக இதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 4-45

குறிப்பாக, போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய பிரச்சினை என்ற வகையில் சில செய்திகளைச் சொல்ல விரும்புகிறேன். தொழிலாளர்களுடைய ஊதிய ஒப்பந்தம் 1-9-1998-ல் போடப்பட்டது. அது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை முடிந்து கிட்டத்தட்ட 20 மாதங்கள் ஆகியும் தொடங்காமல் உள்ளது ஏன் என்று தெரியவில்லை. அரசு காலம் கடத்தாமல் அனைத்துத் தொழிற் சங்கங்களையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்று தொழிலாளர்கள் விரும்புகிறார்கள். அதற்குரிய முயற்சியை அரசு எடுக்குமா என்பதைப்பற்றியும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்களுடைய கூட்டணி கட்சியாக West Bengal—மேற்கு வங்காளத்திலே ஆளுகின்ற அவர்களுடைய மாநிலத்திலே அந்த wage settlement—ஊதிய ஒப்பந்தம் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் போடப்படுகிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுடைய கட்சி கூட்டணியாக இருந்து ஆளுகிற மாநிலத்திலே ஒரு கொள்கை, இங்கே தமிழகத்திலே ஒரு கொள்கை என்ற இரட்டை நிலையை தயவுசெய்து நீங்கள் தவிர்த்திட வேண்டும். உங்களுடைய—நீங்கள் ஆளுகிற அந்த மாநிலத்திலே 5 ஆண்டுகளுக்கு ஒரு முறைகூட கிடையாது, 10 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் wage settlement போடப்படுகிறது என்பதை உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மேற்கு வங்காளத்திலே அப்படி இருக்கிறது என்றால், நான் முடிந்தால் அடுத்த முறை அங்கே சென்று போட்டியிட முயற்சி செய்கிறேன். ஆனால் நான் கேட்பது—தமிழகத்திலே இருக்கிற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இல்லை, நான் சொல்வது கொள்கை அடிப்படையிலே, நீங்கள் கொள்கை அடிப்படையிலேதான் எதையும் பேசுவீர்கள். ஆக, மேற்கு வங்காளத்திற்கு ஒரு கொள்கை,

மார்க்சிய கொள்கைகளிலும், கம்யூனிசக் கொள்கைகளிலும் தமிழ்நாட்டிற்கு ஒரு கொள்கை. மேற்கு வங்காளத்திற்கு ஒரு கொள்கை இருக்கிறதா? அப்படியானால் அந்தக் கொள்கையின் வித்தியாசத்தைச் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கு வங்காளத்திலே ஒப்பந்தம் என்றால 11-வது ஆண்டு, அடுத்த 10 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்படுகிறது. 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி சொல்லவில்லை. அரசாங்கம் சொல்லியிருக்கிறது. அங்கே இருக்கிற அரசாங்கம் ஒன்றும் சொல்லவில்லை. 3 ஆண்டுகள் முடிந்த பிறகும், 2 ஆண்டுகள் கடந்து ஏன் புதிய ஒப்பந்தம் போட மறுக்கிறார்கள் என்றுதான் கேள்வியே தவிர, அங்கே 10 வருடம், இங்கே 3 வருடம் என்று உருவாக்கியதில்லை. நீங்கள் உருவாக்கிய கொள்கை. அதை ஏன் அமல்படுத்தமாட்டேன் என்கிறீர்கள் என்பதுதான் கேள்வி.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலங்களை, இதா மாநிலங்களை ஒப்பிடுவதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் நமது மாநிலத்திற்கு என்று ஒரு கொள்கையை உருவாக்கிவிட்டு, அதன்மீது இன்னொரு மாநிலக் கொள்கையை திணிப்பதற்கான முயற்சி ஏன் எடுக்கப்படுகிறது என்பதுதான் அவருடைய கேள்வி. ஆகவே அங்கே 10 ஆண்டுகளாக இருக்கலாம். அங்கே இருக்கிற தொழிலாளிகள் போராடி அதற்குரிய உரிமையை அவர்கள் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். இங்கே 3 ஆண்டு என்று அரசு சொல்லியிருக்கிறது. அதை ஏன் செய்யவில்லை என்பதுதான் எங்களுடைய கேள்வி. அதைப்பற்றி பரிசீலித்து அனைத்துத் தொழிற்சங்கங்களையும் அழைத்துப் பேசி அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

அதேபோல தனியார் கொள்கைக்குரிய விஷயங்களைப்பற்றிப் பேசுகிறபோது அது நீதிமன்ற வழக்கிலே நிலுவையாக இருக்கிறது. நிலுவை முடிந்ததற்குப் பின்னாலே பரிசீலிக்கலாம் என்றுகூட நமது அமைச்சர் பெருமக்கள், நிதி அமைச்சர் அவர்கள்கூட அந்தக் கருத்தைச் சொன்னார்கள். நான் வேண்டிக்கொள்வது, அப்படி தனியார்மயம் ஆகாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்



தெளிவாக அறிவித்ததற்குப் பின்னாலே நீதிமன்ற வழக்கு நிலுவையிலே இருக்க வேண்டிய அவசியமே இல்லை. அதை உடனடியாக வாபஸ் பெற்று விட்டு, அந்தக் கொள்கையை விட்டு, அடுத்த நிலைக்குப் போவதற்கு உரிய முயற்சியை அரசு எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை விரைவாக முடித்துவிடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அடுத்தது, 2 ஆண்டுகளில் தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே வழங்கி வந்த சலுகைகள் இப்போது நிறுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, போனஸ் வெட்டு, பண்டிகை முன்பணம் மறுப்பு, சரண்டர் விடுப்புத் தொகை மறுப்பு, பொங்கல் ஊக்கத் தொகை மறுப்பு, இப்படிப் பார்த்தால் எல்லாமே மறுக்கப்பட்டுக்கொண்டிருந்தால் தொழிலாளி எப்படி வாழ்வான்? இது ஒரு பிரச்சினை.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போனஸ் மறுக்கப்படவில்லை. போனஸ் 8.33% மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே நமது போக்குவரத்துத் தொழிலாளிகளுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், இதையும் மேற்கு வங்காளத்தைச் சொல்கிறீர்களே என்று வருத்தப்படக் கூடாது. போனஸ் பிரச்சினையைப் பொறுத்த அளவில், தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் Bonus Act, போனஸ் சட்ட விதிமுறைகளைத் தளர்த்தி 8.33% என்ற அளவிலே போனஸ் வழங்கியிருக்கிறார்கள். Bonus Act என்பது மாதச் சம்பளம், 3,500/- ரூபாய்க்குக் குறைவாகப் பெறுகின்றவர்கள் மட்டும்தான் போனஸ் பெற முடியும் என்பது விதி. ஆனால் நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த உச்சவரம்பை, சம்பள உச்சவரம்பை நீக்கிவிட்டு, அனைத்துத் தொழிலாளிகளுக்கும் 8.33% போனஸ் வழங்கியிருக்கிறார்கள். ஆனால் உங்களுடைய கூட்டணி ஆட்சி ஆளுகிற மேற்கு வங்காளத்தில் 8.33% போனஸ் வழங்கியிருக்கிறீர்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் யாருக்கு? As per Bonus Act,

போனஸ் விதிமுறைப்படி அங்கே 8.33% வழங்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் மாதம் 3,500/- ரூபாய்க்குக் குறைவாகப் பெறுகிறவர்கள் மட்டும்தான் அங்கே 8.33% பெறமுடியும். அங்கே டிரைவர், கண்டக்டர்கள் பெற முடியாது. Technical Labourers பெறமுடியாது. அங்கே சாதாரண அடித்தளத் தொழிலாளர்கள் மட்டும்தான் இந்த 8.33% பெறமுடியும். டிரைவர், கண்டக்டருக்கு West Bengal-ல் போனஸ் இல்லை. அதேபோல, அந்தப் பணியாளர்களுக்கு போனஸ் இல்லை. இரண்டு சதவீத பணியாளர்கள் மட்டும்தான் அங்கே அந்த போனஸ் பெறுகிறார்கள். ஆகவே போனஸ் 8.33 சதவீதம் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வழங்கியிருப்பவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4-50

**திரு. கே.சி. கருணாகரன்:** அரசாங்கத்தினுடைய எல்லா நடவடிக்கைகளுக்கும் மேற்கு வங்காள அரசை கேடயமாகப் பயன்படுத்த வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கும் அந்த அரசு உங்களைக் காப்பாற்றட்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கு வங்காள அரசை குறிப்பிட்டு விளக்கம் சொல்கிறார்கள். எனக்கு மாறுபட்ட கருத்தில்லை. நான் கேட்பது என்னவென்றால், தமிழகத்திலே வழங்கி வந்த சலுகைகள் பறிக்கப்படுகின்றன. அதற்கு மேற்கு வங்கம் முன்னுதாரணமாக இருக்கிறதா அல்லது அப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றிருக்கிறதா? வழங்கப்பட்ட சலுகைகள் பறிக்கப்பட்டிருக்கிறதா மேற்கு வங்கத்திலே? அப்படி ஏதாவது இருந்தால் அதைப்பற்றிக்கூட சொல்லலாம். அந்த வழங்கப்பட்ட சலுகைகள் இங்கே மறுக்கப்பட்டிருக்கின்றன என்றுதான் நான் சொல்கிறேன். ஆகவே...

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும், திரு. நன்மாறன். திரு. சிவபுண்ணியம், கடைசி நேரத்தில் நிற்கிறார்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரு நிமிடம் சொல்லட்டுமே.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் இந்திய நாடு முழுவதும் உள்ள கட்சிக்கு கட்டுப்பட்டவர்கள்தான். ஆனால் ஒரு மாநிலத்தில், இங்கேதான் கொள்கை விளக்கக் குறிப்பு நேற்று இரவு எங்களுக்குக் கிடைக்கிறது, பேசுகிறோம். மேற்கு வங்கத்தினுடைய கொள்கை விளக்கக் குறிப்பும் தெரியாது, நடைமுறையும் புரியாது. திடீர் திடீரென்று அது ஒரு ஏவுகணை மாதிரி எடுத்து வீசிக்கொண்டிருப்பது தமிழ்நாட்டுக்குப் பொருந்தாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கிருந்து ஏதாவது நல்லதை எடுத்து நீங்கள் பயன்படுத்துங்கள் அல்லது தவறு என்றால் அங்கேயே இருந்துவிடட்டும். அதை இங்கே சொல்லிக்கொண்டே இருக்காதீர்கள். ஆகவே அதுதான் என்னுடைய கருத்தாக தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திடீர் திடீரென்று எடுத்து வீசவில்லை. வேண்டுமானால் அந்தப் புள்ளிவிவரங்களை, விளக்கங்களை, மேற்கு வங்காள அரசு தொழிலாளர்களுக்காக என்ன செய்திருக்கிறது என்ற விவரங்களை நீங்கள் மேற்கு வங்காளத்திலேகூட சென்று பெற வேண்டிய அவசியமில்லை, என்னிடம் கேட்டால்கூட நான் உங்களுக்குத் தருகிறேன். ஆகவே அங்கேயிருக்கின்ற நீங்கள், தொழிலாளர்கள் தோழர் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற உங்களுடைய கட்சி ஆளுகின்ற மாநிலத்திலேயிருக்கிற நிலைமையை, உண்மை நிலையைச் சொல்கிறோம், அவ்வளவுதான். அங்கேயிருக்கின்ற நிலைமையையும் இங்கேயிருக்கின்ற நிலைமையையும் ஒப்பிட்டுச் சொல்கின்றபோது நீங்கள் அங்கேயிருக்கின்ற தொழிலாளர்களுக்கு அந்த வசதியையெல்லாம் வாங்கிக் கொடுத்துவிட்டு, நீங்கள் எங்களைக் கேட்டால் உண்மையிலே நாங்கள் வரவேற்போம். ஆனால் அங்கேயிருக்கின்ற தொழிலாளிகளுக்கு உரிமைகள் மறுக்கப்படுகின்றன. ஆனால் இங்கே வந்து குரல் கொடுக்கிறீர்கள். காரணம், ஆளும் கட்சியாக வரக்கூடிய இடங்களிலே அடக்கி வாசிக்கிறீர்கள், ஆளும் கட்சியாக வர முடியாத இடங்களிலே உங்கள் இஷ்டத்திற்கு கோரிக்கைகளை வைக்கிறீர்கள், அவ்வளவுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தினுடைய சட்டமன்றத் தேர்தல் நடப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பாக நாங்கள் சொல்லவில்லை, நீங்கள்தான் சொன்னீர்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் போக்குவரத்துத் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவோம் என்று நீங்கள்தான் சொன்னீர்கள். மேற்கு வங்காளத்திலே சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. பழனிசாமி, திரு. சிவபுண்ணியத்தைச் சொல்லச் சொல்லுங்கள். அவர் பேசிக் கொண்டிருக்கிறார்.

**திரு. ஜி. பழனிசாமி:** நீங்கள்தான் சொன்னீர்கள். இப்போது நீங்கள், அரசு ஊழியர்களாக ஆக்கத் தயாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** இருக்கிற உரிமையைப் பறிக்கிற நீங்கள், வோட்டு வாங்குவதற்காக கேட்ட கேள்வியா, கொடுத்த கோரிக்கையா அது? இது என்ன? அதற்குப் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், திரு. பழனிசாமி சொன்னதை வழிமொழிந்து பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொல்கிறார்கள். இங்கே மேற்கு வங்கத்தைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். நான் ஓர் உதாரணத்தை இப்போது இங்கே சொல்ல விரும்புகிறேன். பாண்டிச்சேரியில் அந்த மாநில அரசு பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியபோது அங்கேயிருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கட்டணம் உயர்த்தக் கூடாது என்று எதிர்த்தது. ஆனால் இங்கே கட்டணம் உயர்த்துகிறீர்கள். இது என்ன கொள்கை, இதைப்பற்றி நான் கேட்கக் கூடாதா? பக்கத்திலே நம்முடைய அண்டை மாநிலத்திலே இந்த நிலைமை இருக்கிறது உங்களுடைய கட்சியில். ஆகவே அடுத்த மாநிலத்தை உதாரணமாக எடுத்துக்கொண்டு



பேசுவதற்காக இதைப் பயன்படுத்தக் கூடாது. நான் கேட்பது கடந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் இந்தச் சலுகைகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) தயவுசெய்து ஒரு ஐந்து நிமிடம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை. பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் கட்டண உயர்வைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய பதிலுரையிலேகூட நான் விளக்கமாகச் சொல்கிறேன். இன்றைக்கும் இந்தியாவிலேயே பஸ் கட்டணத்தைப் பொறுத்த அளவிலே புரட்சித் தலைவியினுடைய மாநிலமான தமிழகத்திலேதான் பஸ் கட்டணம் குறைவு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய பதிலுரையில் அதை விளக்கமாக ஒப்பிட்டுச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேசி முடித்துவிடுகிறேன். முக்கியமான இரண்டு விஷயங்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்வது, கடந்த காலங்களில் போராடிப் பெற்றிருக்கின்ற சலுகைகளை நீங்கள் வந்து பறிக்கக் கூடாது என்பதுதான். மீண்டும் வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஒரு செய்தி, திண்டுக்கல் மாவட்டத்தில் போக்குவரத்துக் கழக 'வீடு கட்டும் திட்டத்தின் மூலமாக தொடங்கப்பட்ட, ஒப்பந்த அடிப்படையிலே கட்டப்பட்ட வீடுகள் 18 மாதங்களாகியும் இன்றும் பூர்த்தி செய்யப்படவில்லை. குறிப்பாக, அந்த வீடுகள் கட்டப்பட்டிருக்கின்ற பணிகளில் தரம் இல்லாமல் இருக்கிறது. மோசமான நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளிகள், கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ரூபாய் வரையிலே இழப்பீடு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 366 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி நமது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்தில்

முறையிட்டு அவரும் நேரடியாக அந்த இடங்களுக்கு எல்லாம் சென்று பார்வையிட்டு, அதைப் பற்றி செய்தித்தாள்களில் பல செய்திகள் இங்கே வந்திருக்கின்றன. அதற்குரிய நிறைய ஆதாரங்களை அனுப்பியிருக்கிறார்கள். அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அந்தத் தொழிலாளிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 4-55

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் இதிலே சரியான தகவலைச் சொல்லியிருக்கிறார். திண்டுக்கல் மாவட்டத்தில் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்காக கட்டப்பட்ட வீடுகள், நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே ஏற்பாடு செய்யப்பட்டவை அல்ல, எடுத்த நடவடிக்கை அல்ல. இதற்கு முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அப்படிப்பட்ட மோசமான வீடுகளைக் கட்டி, அதிலே பெருமளவு முறைகேடுகள் நடைபெற்று இருப்பதாக நானே கேள்விப்பட்டேன். அதற்குப் பின்பு அந்த இடங்களையெல்லாம் நேரடியாகச் சென்று பார்த்ததில், உள்ளபடியே அதிலே முறைகேடுகள் நடைபெற்று இருந்திருக்கக்கூடிய வாய்ப்புகள் இருந்தது. அந்த அளவுக்கு முறைகேடாக அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற வகையிலே தரம் இல்லாத வீடுகள் அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் கட்டப்பட்டன. அதற்குரிய விசாரணைகள் எல்லாம் மேற்கொள்ளப்படும் என்றும், விசாரணை செய்து அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் அன்போடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புதிதாக தொடங்கப்பட்டிருக்கிற கோயம்பேடு பேருந்து நிலையம் கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் செலவிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மக்களுக்கு, பொதுமக்களுக்கு மிகப் பெரிய அளவிலே பயன்படுகிறது. ஆனால் என்னைப் போன்றவர்களுக்கு மிகப் பெரிய பாதிப்பு. காரணம், அங்கேயிருந்து இறங்கி இங்கே வர வேண்டும். இங்கேயிருந்து அங்கே சென்று பேருந்து ஏற வேண்டுமானால் ஒரு மிகப் பெரிய போராட்டமாக இருக்கிறது. இருந்தாலும், பரவாயில்லை. அங்கே பணியாற்றுகிற அந்தத் தொழிலாளர்கள், டிரைவர்கள், கண்டக்டர்கள் தங்குவதற்கான ஓய்வு அறை வசதி என்பது மிகக்



குறைவாக இருக்கிறது. அது ஒரு பெரிய குறைபாடாக இருப்பதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அங்கேயிருந்து நகரப் பகுதிகளுக்கு, பல இடங்களில் பேருந்து வசதி போதுமானதாக இல்லையென்ற குறைபாடு இருக்கிறது. பொதுவாக காலையில் நான் அங்கேயிருந்து இறங்கி நமது சட்டமன்ற உறுப்பினர் வளாகத்திற்கு வர வேண்டுமானால் பெரிய பிரச்சினை. இன்றைக்கு 27பி என்ற பேருந்து தான் இங்கே வருகிறது. கலைவாணர் அரங்கத்திலே இறங்கலாம் என்று நான் ஏறி அமர்ந்து விட்டேன். அவர் எக்மோர் இரயில்வே ஸ்டேஷன் வாசலில் நிறுத்திவிட்டு இதற்கு அப்புறம் செல்லாது என்று சொல்லி விட்டார். அது காலை 8½ மணிக்கு மேல்தான் போகுமென்கிறார். 27பி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட சிரமங்கள் நகரப்பகுதி மக்களிடத்தில் இருக்கிறது. அவர்களுக்கு அந்த சிரமங்களைப் போக்குகின்ற வகையிலே அதிக எண்ணிக்கையில் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வாகனங்கள் மாசுக் கட்டுப்பாடு சான்றிதழ் பெறுவது சம்பந்தமாக தமிழகம் முழுவதும் எப்போது அமல்படுத்தப்படவிருக்கிறது என்ற செய்தி. அது, கணினி மூலமாக சான்றிதழ்கள் வழங்கப்படுகிறதா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். இது எந்த அளவுக்கு அமலாகிறது என்பது பற்றியும் சொல்ல வேண்டுமென்று கேட்டு—ஒரே ஒரு தொகுதி கோரிக்கை. என்னுடைய திருவாரூர் மாவட்டத்தில் என்னுடைய மன்னார்குடிக்கு நீடாமங்கலம்-மன்னார்குடி வரையிலும் இரயில் வசதி இருந்தது. அந்த இரயில் வண்டி அடியோடு நிறுத்தப்பட்டது. ஆகவே அந்தப் புதிய இரயில் வசதி வேண்டுமென்ற கோரிக்கை வலுவாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த இரயில் வசதி என்பது மன்னார்குடியில் நிறுத்தப்படாமல் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் வரையிலும் நீடிக்கப்படுமானால் மிகப் பெரிய அளவிலே மக்களுக்குப் பயன்படும். பொருட்கள் போக்குவரத்திற்கு அது பயன்படும். ஆகவே வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, திருச்சி, சென்னை என்ற வழித்தடமாக உருவாவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. அதை, அரசு ஒரு முன்மாதிரியாக எடுத்து, மத்திய அரசுக்கு வலியுறுத்திப் பெறுவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முரளிதரன். *(குறுக்கீடு)* *திரு. அரசனா? யார்? (சிரிப்பு)* திரு. முரளிதரன் என்று பெயர் கொடுத்திருக்கிறார்.

**திரு. ப. அரசன்:** காலையில் மாற்றிவிட்டோம். *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடிக்கடி உங்களுக்கு மாறி விடுகிறது. *(சிரிப்பு).*

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையிலே உரையாற்றுவதற்கு வாய்ப்பு தந்த உங்களுக்கு இரண்டு முறை நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்று, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு. இன்னொன்று, காலையில் பசி நேரத்தில் பேச விடாமல் இப்போது கொஞ்சம் மாலை நேரத்திலே பேசுவதற்காகவும் இரண்டு முறை உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பி.ஜே.பி.-க்கு நீங்கள்தான் ஆஸ்தான வித்வான் போல் இருக்கிறது. *(சிரிப்பு).*

**திரு. ப. அரசன்:** காலையிலே உரையாற்றிய நமது சகோதரர் ராஜாங்கம் சொன்னதைப்போல் ஏற்கெனவே சென்னையிலிருந்து திருச்சி வரைக்கும் போனால் 10, 15 பஸ்கள் ப்ரேக் டவுன் என்று நிற்கும். ஜனங்கள் எல்லாம் அப்படியே சாலையிலே luggage-உடன், குழந்தைகளுடன் நிற்பார்கள். இப்போது, அந்த நிலை இல்லை என்பதற்காக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையிலிருந்து திருச்சிக்குப் போனால் ஓரளவுக்கு, அனேகமாக ஒரு பஸ், இரண்டு பஸ்கள் கூட பிரேக் டவுன் ஆவதில்லை. அந்த நிலைமை இல்லை என்பதற்காக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்ட விரும்புகிறேன். பாராட்டுகிற அதேநேரத்தில் இன்னொன்றையும் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய மன்னார்குடி சிவபுண்ணியம் அவர்கள் சொன்னதைப்போல் வாகனங்கள் புகை கக்குவதனாலே மிகப் பெரிய சுகாதாரக் கேடு உருவாகிறது என்பதை நீங்கள் உணர வேண்டும். வாகனங்கள் புகையைக் கக்குவதனாலே, இந்தப் புகை எல்லாம் போய் ஓசோன் மண்டலத்தை மூடி, மழையைக்கூட தடுத்து நிறுத்தி விடுவதாக ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். இந்தப்



புகை ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. ஐந்து மணிக்கு மேலே, ஆறு மணிக்கு மேலே ஆட்டோவிலே கோயம்பேடு எல்லாம் போகவே முடியாது. அந்த அளவிற்கு மிகப் பெரிய மாசுகள் இந்தப் புகையினாலே வருகிறது. அந்த..

பிற்பகல் *5-00*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகை மனிதனுக்குப் பகை என்பதை உணர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்த மாசுக் கேட்டைப் போக்குவதற்காக இப்போது கணினிமயமாக்கப்பட்ட—Computerised Emission Test என்று சொல்லக்கூடிய நவீன தொழில்நுட்பங்களை, கருவிகளை எல்லாம் பயன்படுத்தி இப்போது அந்தச் சான்றிதழைப் பெற்றதற்குப் பின்புதான் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆகவே மாசுக் கட்டுப்பாடு வாரியமும், போக்குவரத்துத் துறையும், காவல் துறையும் இணைந்து கடும் நடவடிக்கை எடுத்து, இப்போது அப்படிப்பட்ட மாசுக் கேட்டை, புகையைக் கட்டுப்படுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. என்றாலும், எங்களுடைய சிரமத்தைத் தெரிந்துகொள்வதற்காக, ஒரு நாளைக்கு அந்தப் பக்கம், அப்படியே அந்த மவுண்ட் ரோடிலேயிருந்து கத்திப்பாரா வரைக்கும் போய்ப் பாருங்கள், தெரியும்; கஷ்டம் தெரியும் என்பதைப் பணிவன்போடு நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எவ்வளவோ சொன்னாலும், பஸ்லை தனியார்மயம் ஆக்காதீர்கள் என்று சொன்னால், நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அதை ஏற்கெனவே சிவபுண்ணியம் அண்ணன் அவர்கள் சொல்லிவிட்டார்கள். நாங்கள் தனி route-ஐக் கொடுக்கப் போகிறோம்; நாங்கள் பஸ்லை தனியார்மயம் ஆக்கவில்லை என்று சொல்கிறீர்கள். நஷ்டத்திலே ஓடுகிற route-ஐ எப்படி தனியார் வாங்குவார்கள்? அந்த route-களிலே நீங்கள்தான் இயக்க வேண்டும். இது ஒரு சேவைத் துறை. மின்சாரத் துறையைப் போல, பள்ளிக் கல்வித் துறையைப் போல, இது ஒரு சேவைத் துறை. நீங்கள் இயக்கினால்தான் இயக்கலாம். வேறு யாரும் இயக்க முன்வரமாட்டார்கள். ரூ.10 இலட்சம், ரூ.15 இலட்சம்

முதலீடு போட்டு யாராவது நஷ்டத்திலே ஓட்ட வருவார்களா? ஆகவே தயவுசெய்து அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமாதிரி இன்னொன்று. அதைச் சொன்னாலும், கல்வி அமைச்சரும் கேட்கமாட்டார்; நீங்களும் கேட்க மாட்டீர்கள். ஒரு வரியைப் போடுகிறீர்கள். வரி, எப்படிச் சுற்றினாலும் அது Consumer-க்குத்தான் வருகிறது. அதுமாதிரி, பள்ளிக்கூடப் பிள்ளைகளினுடைய வாகனத்திற்கு வரி போட்டிருக்கிறீர்கள். நான் வேண்டுமானால், இப்போது என்னுடைய சகலையின் பெண் B.E. படித்துக்கொண்டிருக்கிறாள், புதுக்கோட்டையிலே. இந்த வருடத்திற்கு பஸ்ஸுக்கு கட்டிய இரசீதை நான் வாங்கி வைத்துக்கொள்கிறேன். அடுத்த வருடமும், சேர்ந்ததற்கு அப்புறம் நான் கொண்டுவந்து காண்பிக்கிறேன். உயர்ந்திருந்தால் நீங்கள் அதை மாற்றுவதற்குத் தயாராக இருக்கிறீர்களா? கட்டணத்தை உயர்த்தியிருந்தால், நீங்கள் அதை மாற்றுவதற்குத் தயாராக இருக்கிறீர்களா என்பதை நான் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். எப்படியோ அவர்கள் தலையிலேதான் கட்டுவார்கள். நீங்கள் வரியை உயர்த்திவிட்டால், நிச்சயமாக படிக்கிற மாணவர்களுடைய தலையிலேதான் அந்த வரியைச் சுமத்துவார்கள். ஆகவே அதையும் நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிறைய புது பஸ்கள் விட்டிருக்கிறீர்கள். உங்களைப் பாராட்ட வேண்டும். நான் கோயம்பேடு பஸ் ஸ்டாண்டிலே போய் நின்றால், தங்கரதம் மாதிரி பஸ் போகிறது. ஆனால் புதுக்கோட்டையிலே இருப்பவர்களும், ஆலங்குடியிலே இருப்பவர்களும், திருமயத்திலே இருப்பவர்களும், பொன்னமராவதியிலே இருப்பவர்களும், நாங்கள் என்ன பாவம் செய்தோம் என்று தெரியவில்லை. எங்கள் மாவட்டத்திற்கு ஒரு புது பஸ்கூட நீங்கள் விடவில்லை. புது பஸ் விடவேண்டும். அதுவும் ஏர் பஸ்ஸாக விடவேண்டும். நான் பஸ்ஸிலேதான் பயணம் செய்கிறேன். நீங்கள் இதை check பண்ணி வேண்டுமானாலும் பார்த்துக்கொள்ளலாம். ஆகவே புதுக்கோட்டை மாவட்டத்திற்கு, புதுக்கோட்டை தலைநகரத்திற்காவது புது பஸ் விட்டால்கூட, புதுக்கோட்டை வரைக்கும் போய்விட்டு, அங்கிருந்து நாங்கள் வேறு



பஸ்ஸிலே போய்க்கொள்கிறோம். புதுக்கோட்டைக்குப் போய்விட்டு, அப்புறம், திருமயத்திற்கு வேறு பஸ்ஸிலே போய்க்கொள்கிறோம். புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய தலைநகருக்காவது நீங்கள் அருமையான புது பேருந்துகளை இயக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாதிரி நாம் போய்க்கொண்டிருக்கும்போது, விழுப்புரத்திலே டீ சாப்பிட இறங்கினால், ஆயிரக்கணக்கான தனியார் ஆம்னி பஸ்கள் வருகின்றன. அவ்வளவும் புதுப் புது பஸ்களாக நிறைய வருகின்றன. நமக்கு வருகிற வருமானத்தை எல்லாம் தனியார் பஸ்கள் கொண்டு போய்விடுகின்றன. இந்த ஆம்னி பஸ்கள் கொண்டுபோய்விடுகின்றன. இவ்வளவு அனுமதிகளை வழங்கியது யார் என்பதை நான் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய அரசாங்கத்திற்கு வர வேண்டிய வருமானம் எல்லாம் தனியார்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. நிறைய பஸ்கள்; அதாவது 2 வருடங்களுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது கூடுதலாகியிருக்கிறது. 3, 4 வருடங்களுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது கூடுதலாகியிருக்கிறது. ஆக, தனியார்கள் இந்தப் போக்குவரத்துத் துறையிலே புகுந்து, நிறைய சம்பாதிப்பதற்கு நீங்கள் வாய்ப்பு அளித்திருக்கிறீர்கள். ஆகவே அதையும் குறைக்க வேண்டும் என நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளி மாணவர்களுக்கு பஸ் பாஸ் வழங்குகிறீர்கள். அது பாராட்டுக்குரியது. அதுபோல கிராமங்களிலேயிருந்து ஆர்வத்தின் காரணமாக, படிக்க வேண்டும் என்ற அந்த ஆர்வத்தின் காரணமாக, தனியார் பள்ளிகளிலே படிப்பதற்கும் மாணவர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு ஏதாவது செய்ய முடியுமா என்று நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். அரசாங்கத்திற்குக் கஷ்டம் இருக்கிறது; எங்களுக்கும் தெரியும். ஏதோ ரூ.25 கோடி, ரூ.30 கோடி வரலாம். அறந்தாங்கியிலேயிருந்து எங்களுடைய ஊருக்குப் போய், 20 கிலோமீட்டர் தொலைவிலிருந்து வருகிறார்கள். Mayil Matriculation School. அந்த மாதிரி 10, 20 மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்குப் படிக்க வருகிறார்கள். அந்தத் தனியார் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்குவதற்கு முடியுமா என்பதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என நான் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 5-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு.

•**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறரை கோடி தமிழ்ச் சமுதாயத்தின் ஆராதனைக்குரிய தெய்வம், இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கிட அயராது உழைத்து வரும் ஆற்றல்மிக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒரு சிறப்புவாய்ந்த நிதிநிலை அறிக்கையை இம்மாமன்றத்திலே வைத்ததைத் தொடர்ந்து இன்றையதினம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் போக்குவரத்து மானியத்தை இந்த அவையில் வைத்துள்ளார்கள். இதிலே கலந்துகொண்டு பேசுகின்ற பெருவாய்ப்பினை நல்கிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி, அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்குட் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நம்முடைய போக்குவரத்து மானியக் கோரிக்கையிலே சுதந்திரம் அடைந்ததிலேயிருந்து பேருந்தைப் பார்க்காத கிராமங்கள் எல்லாம் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் பேருந்தைக் கண்டார்கள் என்றால் யாரும் மறுக்க முடியாது.

அதேபோல சிக்கன நடவடிக்கையை எடுத்துக்கொண்டால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஆயிரக்கணக்கான பேருந்துகளை நிறுத்தினார்கள் என்பது இங்குள்ள மாமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் நன்கு தெரியும். அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பின்புதான் அந்த வழித்தடங்களில் எல்லாம் பஸ்கள் விடப்பட்டன என்பதும் மக்களுக்கு நன்கு தெரியும். அதேபோல துறைதோறும் நிர்வாகச் சீர்கேடு கடந்த ஆட்சிக் காலத்திலே இருந்ததை மக்கள் நன்கு அறிவார்கள். கஜானா காலியாக இருக்கக்கூடிய சூழ்நிலையிலும்கூட கடந்த ஆட்சி கொள்ளைக் கூடாரமாக விளங்கியது என்பது உங்கள் அத்தனை பேருக்கும் நன்கு தெரியும். அந்தச் சூழ்நிலையிலே கடந்த ஆட்சிக் காலத்திலே இங்கு கூறுகிறார்களே தனியாருக்கு பஸ்ஸைக் கொடுக்கிறார்கள் என்று, அந்தச் சூழ்நிலையில் இல்லாமல் கடந்த ஆட்சிக் காலத்திலே மினி பஸ் என்ற பஸ்ஸை இரவோடு இரவாக



கிராமப் பேருந்துகளை விட்டார்கள் என்பது மக்களுக்கு நன்கு தெரியும். அதனால் கிராமப் பேருந்துகள் எந்த அளவிற்கு நஷ்டங்களை அடைந்தன என்பதும் நம்முடைய போக்குவரத்துத் துறையிலே ஆய்வு செய்தால் நன்கு தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நாளும் ஒரு கோடியே ஐம்பத்தாறு இலட்சம் மக்களை ஏற்றிச் செல்லுகின்ற நமது போக்குவரத்துக் கழகமானது, நஷ்டத்திலே இயங்கக்கூடிய சூழ்நிலையைத் தவிர்க்கக்கூடிய வகையிலே பல்வேறு நடவடிக்கைகளை நம்முடைய அரசு எடுத்து வருகிறது. தனியார் பஸ் உரிமையாளர்களிடம் நமது அரசுத் துறையிலே உள்ள சில ஊழியர்கள் விலை போகாத வண்ணம் இருக்கக்கூடியவற்றை அந்தத் துறை கவனித்ததின் பயனாக இப்பொழுது சிறப்பான முறையிலே உள்ளது. இன்னும் அதைச் சரியான முறையிலே கவனிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நிதிநிலைக்கு ஏற்ப சாலைகள் சீர் செய்யப்பட்டதால் போக்குவரத்துச் செலவினம் குறையக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. அதேபோல போக்குவரத்துத் துறையிலே ரூ.2150.53 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. சரி செய்யக்கூடிய வகையிலே நம்முடைய அரசு நஷ்டத்திலே இயங்கக்கூடிய சில வழித்தடங்களை தனியாருக்குக் கொடுத்து, அதன் மூலமாக அந்த இழப்பைச் சரி செய்தால்தான் இந்த நஷ்டம் நிவர்த்தி ஆகக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை ஓரங்களில் நிறைய ஆக்கிரமிப்புகள் உள்ளன. பெருநகரப் பகுதியிலே அது அதிகமான அளவிலே உள்ளது. அதைப் போக்கக்கூடிய வகையிலே அந்தப் பாதையை பை-பாஸ் பாதையாக எல்லா முக்கிய நகரங்களிலும் கொண்டு வர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலே என்னுடைய மாவட்டத்தில் உள்ள உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி போன்ற இடங்களுக்கும் பை-பாஸ் பாதை அமைத்துத்தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல ஓட்டுநர் உரிமம் கடுமையாக்கப்பட வேண்டும். அதிலே பல தவறுகள் நடக்கின்றன. இதனால் பல்வேறு விபத்துகள் ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை உள்ளது. அதை அரசு தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வாகனப் புகையால் சுற்றுச் சூழல் மாசுபடுகிறது என்கிற நிலை நம்முடைய தமிழகத்தில் இருந்தாலும்கூட அதைப் போக்கக் கூடிய வகையிலே நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து, மாசற்ற பேருந்துகள், ஈரோ-2 என்ற பேருந்துகள், நம்முடைய சென்னை மாநகரிலே 127 பேருந்துகள் விடப்பட்டுள்ளன. அதை இங்கு மட்டுமல்லாமல் அனைத்து மாநகராட்சிப் பகுதிகளுக்கும் நடப்பு ஆண்டிலே கொண்டுவருவதற்கு நம்முடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சென்னையிலே உள்ளது போல் 6 நபர்களை ஏற்றிச் செல்லக்கூடிய அந்த ஆட்டோக்களை அனைத்து நகர்களுக்கும் கொண்டுவந்தால் பொதுமக்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-10

அதேபோல, புதிய பேருந்துகளை தற்போதுள்ள நிதிநிலைக்கேற்ப வாங்கினால் பழைய பேருந்துகளுடைய செலவினங்களைக் குறைப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதனால் அந்த நஷ்டத்தைக் குறைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, புகைக் கட்டுப்பாடு தற்போது சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், நீலகிரி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் அமலில் உள்ளது. இதை நம்முடைய மாநிலத்திலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் நடப்பு ஆண்டிலே கொண்டுவருவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை வரியானது—தமிழ்நாட்டிலே சுமார் இரண்டு இலட்சம் சரக்கு வாகனங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இரண்டுக்கு மேற்பட்ட அச்சு வாகனங்கள் நிறைய உள்ளன. கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்ட்ரா போன்ற மாநிலங்களில் வாகனங்களுக்கு சாலை வரியில் 25 சதவிகிதம் தள்ளுபடி உள்ளது. இதனால் தமிழ்நாட்டு வாகனங்களை அங்கே பதிவு செய்து இங்கே இயக்குகிறார்கள். இதன் காரணமாக சாலை



வரியிலே 25 சதவிகிதம் தள்ளுபடியும், பிற மாநில வாகனங்களுக்கான அபராதத் தொகையை அதிகரிக்கக்கூடிய வகையிலும், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் பிற மாநில வண்டிகளைப் பிடித்தால் அபராதம் டன்னுக்கு 100/- ரூபாய்தான். ஆனால் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ்நாட்டு வண்டிகளுக்கு அபராதம் ரூ. 3,000/- ஆக உள்ளது. இதனால் 2,900/- ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது.

அதேபோல, விற்பனை வரியை எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டைவிட விற்பனை வரி குறைவாக பிற மாநிலங்களில் உள்ளது. இதைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, பிற மாநிலங்களில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த அந்த லாரி அதிபர்கள் பதிவு செய்து அங்கே ஓட்டுவதன் பயனாக, இதனால் ஆண்டு ஒன்றுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணம், பதிவுச்சான்று, தகுதிச்சான்று, ஆண்டு வரி ஆகியவற்றில் நஷ்டம் ஏற்படக்கூடிய வகையிலே ஒரு வாகனத்திற்கு ரூ. 9,900/- நஷ்டம் ஏற்படுகிறது.

அதேபோல, பிற மாநிலங்களில் பதிவு செய்து தமிழகத்தில் வாகனங்களை விற்பவருக்கு வண்டி ஒன்றுக்கு ரூ. 40,000/- முதல் 60,000/- வரை லாபம் வருகிறது. அதேபோல சாலை வரியை எடுத்துக்கொண்டாலும் ஆண்டுக்கு ரூ.1,600/- லாபம் வருகிறது. இதனால் தமிழகத்தைச் சேர்ந்த 2,000 வண்டிகளை பிற மாநிலங்களிலே பதிவு செய்து ஓட்டுவதன் பயனாக நம்முடைய தமிழகத்திற்கு வரி இழப்பு ஏற்படுகிறது. இதை நிவர்த்தி செய்யக்கூடிய வகையிலே நம்முடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வருவாய் இழப்பைத் தடுக்கக்கூடிய வகையில் கர்நாடகா, கேரளா போன்று விற்பனை வரி தமிழகத்தில் வசூலிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கர்நாடகாவைப் போல் சாலை வரி 25 சதவிகிதத் தள்ளுபடி தமிழகத்திலேயும் வழங்கப்பட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக வாகனங்களுக்கு இருப்பதுபோல், பிற மாநில வாகனங்களுக்கும் இணக்கக் கட்டணத்தை வசூல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, ஓட்டுநர் தேர்ச்சி தளம் தேர்வு செய்யப்பட வேண்டும் என்றும் அந்தச் செலவை சரிசெய்யக்கூடிய வகையிலே சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து அதைச் சரி செய்துகொள்ளலாம் என்றும் அன்போடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, போக்குவரத்துத் துறையில் சிறப்பாகப் பணியாற்றுபவர்களுக்கு மற்ற துறைகளிலே உள்ளதுபோல் அவர்களையும் கௌரவிக்கக்கூடிய வகையிலே அண்ணா பதக்கம் போன்ற பதக்கங்களைக் கொடுத்து ஊக்குவிக்கலாம் என்று அன்போடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். அல்லது அந்த ஆய்வாளர் போன்றவர்களுக்கு முதல்வருடைய பதக்கம்கூடக் கொடுத்து, அவர்களுக்கு ஓர் உற்சாகத்தைக் கொடுத்தால் இந்தத் துறையை அவர்கள் நன்கு பாராமரிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, ஒவ்வொரு துறையிலும் குழுக்களை அமைத்துள்ளார்கள். போக்குவரத்துத் துறைக்கும் ஒரு குழுவை அமைத்து, ஓய்வுபெற்ற அதிகாரிகள், வேறு நபர்களை வைத்து, அந்தத் துறையைப் பாராமரிக்கக்கூடிய வகையிலே, இலாபத்தை ஈட்டக்கூடிய வகையிலே செயல்படுத்தினால் நன்றாக இருக்கும்.

அதேபோல. பல்வேறு மாநிலங்களையும் உள்ளடக்கிய மத்திய அரசாங்கமே ஒரு ஆலோசனைக் குழுவை உருவாக்கக்கூடிய வகையிலே ஏற்படுத்தினால், அந்தக் குழுவும் மத்திய அரசின் மூலமாக, நாமும் அதிலே அங்கம் வகித்து, நிலைமைகளைக் கண்டறிந்து அனைத்து மாநிலங்களும் முறையாகச் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு உருவாகும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய மோட்டார் வாகன விதி 22A/2 Certificate to be issued to the body builders கூண்டு கட்டுபவர்களுக்கு வழங்க வேண்டி ஆணை உள்ளது. இதில் ஆணையாளரிடம் அனுமதி பெறக்கூடிய வழிவகைகளை நாம் வலியுறுத்த வேண்டும். கூண்டு கட்டுபவர்களிடமிருந்து அரசு கட்டணம் வசூல் செய்தால் அரசுக்கு வருவாய் கிட்டும். கூண்டுகளும் தரமாக இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கும். இதன் மூலமாக அரசுக்கு ஒரு பெரிய அளவில் வரி கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கும் என்பதை அன்போடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



பிற்பகல் 5-15

அதேபோல, மோட்டார் வாகன ஓட்டுநர்கள் குற்றம் செய்தால் காவல் துறை பிடித்து அதே இடத்தில் spot fine- வசூல் செய்கிறார்கள். ஆனால் அதேபோல ஆய்வாளர்களாக இருக்கக்கூடிய போக்குவரத்துத் துறையைச் சேர்ந்தவர்கள், குற்றவாளிகளைப் பிடித்து கோர்ட்டுக்குத்தான் அனுப்பக்கூடிய ஒரு சூழ்நிலை உள்ளது. இதையும் மாற்றி அவர்களும், காவல் துறையைப் போல போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் அதே இடத்தில் spot fine போடக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கினால் நிர்வாகத்திற்கும், அந்தத் துறைக்கும் நன்றாக இருக்கும் என்பதை ஓர் ஆலோசனையாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், ஓட்டுநர் உரிமங்களை smart card முறையில் வழங்குவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதையும் இன்னும் துரிதப்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கோவையிலிருந்து உடுமலை வரக்கூடிய வழியிலே N.H 209 ரோடு உள்ளது. அதிலே விபத்துகள் அதிகமாக நடக்கின்றன. என்னுடைய தொகுதியில், பூலாங்கிணறு, அதேபோல் பொள்ளாச்சி, கோலார்பட்டி, வடக்கிவாளயம் போன்ற பிரிவுகளிலே விபத்துகள் அதிகமாக நடக்கின்றன. இந்த விபத்துப் பகுதிக்கு அவசர விபத்துப் நிவாரண மையம் ஒன்று அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கோவையிலேயிருந்து திண்டுக்கல் செல்லக்கூடிய அகல இரயில் பாதையானது பன்னெடுங்காலமாகக் கிடப்பிலே உள்ளது. அதை மத்திய அரசுக்கு எடுத்துரைத்து உடனடியாக நிவர்த்தி செய்யக்கூடிய வகையிலே அந்தப் பணியைத் தொடங்குவதற்கு நம்முடைய அரசு வலியுறுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோவைக்கு அருகிலுள்ள ஈச்சநாரி இரயில்வே கேட் மேம்பாலமானது, நீண்ட நாட்களாக அந்த மேம்பாலம் கட்டக்கூடிய பணி கிடப்பிலேயே உள்ளது. அதைத் துரிதப்படுத்தி, மத்திய அரசிடம் துரிதப்படுத்தி அந்த மேம்பாலத்தைக் கட்டித்தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, அம்மா அவர்கள் ஆட்சியில சாலைப் போக்குவரத்தை

மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் முறையாக மேற்கொள்ளபபட்டு வருகின்றன என்பதை இந்த மாமன்றத்திற்கு அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில், இன்று ஒரு செம்மையான நிர்வாகம் நடைபெற்று வருவதால், அம்மா அவர்களின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை உறுதியாக மேம்படுத்தும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை என்பதை இந்த மாமன்றத்திற்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தியாவிலேயே ஏனைய போக்குவரத்துடன் ஒப்பிடும்போது, நமது போக்குவாத்துக் கழகம் தொடர்ந்து முன்னிலையில் உள்ளது என்பது அனைவாராலும் பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

அதேபோல, பேருந்து பயன்பாட்டுப் பணியாளர்கள் உற்பத்தித் திறன் முதலான அம்சம் இந்தியாவிலேயே முதல் இடம் என்பதும் பாராட்டக்கூடிய ஒன்றாகும். சாலைப் போக்குவரத்து மூலம் தொடங்கப்பபட்ட பொறியியல் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, கனரக ஓட்டுநர் பயிற்சி மையம் ஆகிய அனைத்துமே சிறப்பான முறையிலே நடப்பதன் பயனாக அந்தத் தொழிலாளர்களுடைய குழந்தைகள் வாழ்க்கையில் முன்னேறக்கூடிய வகையிலே அவர்களுக்கு உறுதுணையாக உள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

அதேபோல, போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதிலே அந்த நிறுவனமானது ரூ.1931.18 கோடி அளவிற்கு நிதி ஆதாரம் பெற்றுள்ளது என்பது ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

அதேபோல, சேது சமுத்திரத் திட்டத்தை, குறிப்பிட்ட காலக்கெடுவில் முடிக்க மத்திய அரசை நம்முடைய அம்மாவினுடைய அரசு வலியுறுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எனவே பல்வேறு சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் இடையே கடுமையான நிதிநெருக்கடியைச் சமாளித்து, நாட்டிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றிட இரவென்றும், பகல் என்றும் பாராமல் அயராது உழைக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் சீரிய தலைமையில் இயங்கும் இந்தத் தமிழக அரசுப் போக்குவரத்துத் துறை எதிர்காலத்தில் மென்மேலும் வலிவும், பொலிவும் பெறும் எனக்கூறி இந்த அரிய வாய்ப்பினை நல்கியதற்கு மீண்டும் எனது நெஞ்சார்ந்த



நன்றியினைக் காணிக்கையாக்கி விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூக்கள் ஒளியை மறக்கலாம். பயிர்கள் மழையை மறக்கலாம், உயிர்கள் காற்றை மறக்கலாம். ஆனால் 6½ கோடி தமிழர்களின் அற்புதத் தலைவியாம் இதய தெய்வம் அம்மா அவர்களைச் சரித்திரம் மறக்காது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

சரித்திரம் படிப்பவர்கள் உண்டு, சரித்திரம் படைப்பவர்கள் உண்டு, ஆனால் தானே சரித்திரமாய், வாழ்கின்ற வரலாறாய் இருப்பவர் இன்று இந்தியாவிலேயே ஒருவர்தான் உண்டு. அவர்தான் இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்பு காட்டுவதில் தாயாய், அறிவு ஊட்டுவதில் தந்தையாய், வழி காட்டுவதில் ஆசானாய், காத்து இரட்சிப்பதில் தெய்வமாய் விளங்கும் இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிந்து, வணங்கி, என் உரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 5-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் வரவு-செலவுக் கணக்கு மற்றும் இதர விளக்கங்களைப் புள்ளிவிவரங்களுடன் விளக்கிச் சொல்வது எனது கடமையெனக் கருதுகிறேன். கணக்கு என்று சொன்னாலே, சிலருக்குப் பிடிக்காது. அதனால்தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கணக்கைக் கேட்டவுடன். அவரது கணக்கை முடிக்க வேண்டுமென்று நினைத்து, தனக்குத்தானே தன் கணக்கை முடித்துக் கொண்டவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அவைக்கு வருவதில்லை. அவர்கள் வரமாட்டார்கள். காரணம், அவைக்கு வந்தால், மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லியாக வேண்டுமே என்ற ஆதங்கம், அது அவர்களால் முடியாது. எனவே அவர்கள் இயலாமையை ஒப்புக்கொண்டு அவர்கள் அவைக்கு வருவதில்லை. அவர்களை மக்கள் பார்த்துக்கொள்வார்கள்.

இன்றைக்கு தமிழக அரசினுடைய போக்குவரத்துக் கழகங்களுடைய வரவு-செலவு நிலைகள், நிதி நிலைமை மற்றும்

இயக்கத் திறன் முன்னேற்றம் மற்றும் பல்வேறு வளர்ச்சிகளைப்பற்றி இன்றைக்கு மிகச் சுருக்கமாக உங்கள் மத்தியிலே சில விவரங்களைச் சொல்ல விரும்புகின்றேன். இந்த விவரங்களைச் சொல்லும்போது எல்லா விவரங்களும் ஏறத்தாழ புள்ளிவிவரங்களோடு இருக்கின்ற காரணத்தினால், ஏதோ புள்ளிவிவரங்களைச் சொல்கின்றபோது பள்ளியிலே கணக்கு ஆசிரியர் பாடம் நடத்துவது போன்றுதான் இருக்கும். இருந்தாலும் சற்றுப் பொறுமையாக அதை நீங்கள் கேட்டிட வேண்டுமென்று முதலிலேயே எனது அன்பு வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம், தமிழகத்திலே 21 போக்குவரத்துக் கழகங்களாக இருந்த - தமிழ்நாட்டில் ஏற்கெனவே 21 போக்குவரத்துக் கழகங்களாக இயங்கி வந்த அந்தப் போக்குவரத்துக் கழகங்கள் தற்போது 18 போக்குவரத்துக் கழகங்களாக இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த 18 போக்குவரத்துக் கழகங்களிலும் ஏறத்தாழ 16,670 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகள் நாள் ஒன்றுக்கு 62.84 இலட்சம் கிலோ மீட்டர் இயக்கபபடுகின்றன. இதில் சுமார் 156.21 இலட்சம் பயணிகள் தினந்தோறும் பயணம் செய்து பயனடைகிறார்கள். மொத்தம் இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் அனைத்திலும் 1,20,380 பணியாளர்கள் பணி புரிகிறார்கள். ஒரு பேருந்து நாள் ஒன்றுக்கு சராசரியாக 413 கிலோ மீட்டர் இயக்கப்படுகிறது. ஒரு பேருந்துக்கு சராசரியாக 7.22 என்ற அளவில் பணியாளர்கள் உள்ளனர். காலையிலேகூட பேசும்போது சொன்னார்கள். இங்கு ஏற்கெனவே பணியாளர்கள் பற்றாக்குறை என்று சொன்னார்கள். பணியாளர்கள் பற்றாக்குறை இல்லை. தேசிய சராசரியே 7.2 தான். மேற்கு வங்காளத்தை இழுக்கிறீர்கள் என்று சொல்லாதீர்கள். உங்களுடைய மாநிலத்திலே ஒரு பேருந்துக்கு 7.1 என்ற விகிதாச்சாரத்தில்தான் அங்கே பணியாளர்கள் இருக்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, I am not yielding.

**திரு. என். நன்மாறன்:** தலைவர் அவர்களே, எங்கள் மாநிலம் தமிழ்நாடுதான்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இப்போதே சொல்கிறேன். இன்னும் ஒப்பிட்டுச் சொல்கின்ற சில விஷயங்கள் எல்லாம் வரவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதுமட்டுமல்ல, பயணிகள் பயன்பாடு occupancy ratio 76.18 சதவீதமாக இருக்கிறது. பேருந்துகளின் பயன்பாடு fleet utilisation 91.73 சதவீதம். நாள் ஒன்றுக்கு பேருந்து இயக்கத்தின் மூலம் கிடைக்கும் மொத்த வருவாய் ரூ.8.83 கோடி. நாள் ஒன்றுக்கு பேருந்து இயக்கத்திற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ.8.83 கோடி. ஆக, வருவாயைக் காட்டிலும் செலவு சற்றுக் கூடுதலாக இருக்கிறது. அதேபோல, பேருந்து ஒரு கிலோ மீட்டர் இயக்குவதால் கிடைக்கும் மொத்த வருவாய் ஒரு கிலோ மீட்டருக்கு 13 ரூபாய் 96 காசுகள் கிடைக்கிறது. ஒரு கிலோ மீட்டர் பேருந்து இயக்குவதற்கு ஆகின்ற செலவு 14 ரூபாய் 5 காசுகள். ஆக, 1 கிலோ மீட்டருக்கு 9 பைசா என்ற அளவிலே கூடுதல் செலவோடுதான் இன்றைக்கும் போக்குவரத்துக் கழகங்கள் நடைபெற்று வருகின்றன.

பிற்பகல் 5-25

முதலில் இலாபத்தில் இயங்கிவந்த அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் படிப்படியாக சரிவினைச் சந்தித்து நட்டத்தை சந்திக்கத் தொடங்கின. 1991ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் முதல் முறையாக முதலமைச்சராக இங்கு பொறுப்பேற்கின்றபோது, அன்றைக்கு இருந்த நட்டம், அவர்கள் பொறுப்பேற்கின்ற நேரத்திலே ஏற்கெனவே போக்குவரத்துக் கழகங்கள் அடைந்திருந்த நட்டம் ரூ.164.13 கோடி. அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், ஆட்சிக்கு வந்த 1991-1996-ல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட மொத்த திரண்ட நட்டம் ரூ. 368.85 கோடி. ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில், 5 ஆண்டு கால ஆட்சியில், அவர்களுடைய நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக, அந்தத் திறமையற்ற ஆட்சியின் காரணமாக, ஊழல் நிறைந்த ஆட்சியின் காரணமாக, அன்றைக்கு அவர்களுடைய ஆட்சியிலே ஏற்பட்ட நட்டம் ரூ. 1498.2 கோடி. அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 5 ஆண்டு காலத்திற்கு, ரூ.368.85 கோடி. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ரூ. 1498.2 கோடி. ஏறத்தாழ ரூ. 1,500 கோடி. ஆக மொத்தம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முடிகின்ற தருவாயில் ரூபாய் 2031.18 கோடி ரூபாய் திரண்ட நட்டம் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்டுவிட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் முதலமைச்சராக, தமிழகத்திலே இரண்டாவது முறையாக பொறுப்பேற்றபோது, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு இருந்த நட்டம் ரூ.2,031.18 கோடி. அதற்குப் பின்பு இந்த நிலையை அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த

பிறகு ஆய்வு செய்தார்கள். இப்படிப்பட்ட கடுமையான நிதி நெருக்கடியிலே அரசும் இருக்கிறது. போக்குவரத்துக் கழகங்களும் நிதி நெருக்கடியிலே இருக்கின்றன. இந்தப் போக்குவரத்துக் கழகங்களைச் சீரமைக்க வேண்டிய என்று சொன்னால், அரசு நிதியுதவியைக் கொடுப்பதற்கும், இங்கு அரசின் கஜானாவும் காலி, அதேபோல களஞ்சியமும் காலி, அரசு நடத்துகின்ற நிறுவனங்கள் அத்தனையும் காலி என்ற நிலையிலேதான் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார்கள். அந்த நிலையிலேதான் அப்போது சிந்தித்தார்கள். ஆய்வு செய்தார்கள். தன்னுடைய தீர்க்கதரிசனத்தால், சாதுரியத்தால், ராஜதந்திரத்தால், திறமையால், நிர்வாகத் திறமையால் பல்வேறு அறிவுரைகளை வழங்கி, ஆலோசனைகளை வழங்கி, திட்டங்களைத் தீட்டி, போக்குவரத்துக் கழகங்கள் அடைந்து வருகின்ற நட்டத்தை எப்படிச் சீர் செய்வது என்பதற்காக பல ஆலோசனைகளை வழங்கி, அன்று அவர்கள் வழங்கிய ஆலோசனையின் அடிப்படையில், இப்போது கடந்த 2 ஆண்டு காலமாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் பல்வேறு சீரமைப்பு நடவடிக்கைகள் எடுத்து, இந்த நட்டத்தை, ஏற்பட்டு வந்த நட்டத்தை ஓரளவிற்கு தடுத்து நிறுத்தியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலிலே அந்த நிர்வாகச் சீரமைப்புக்கு இன்று தவிர்க்க முடியாமல், இந்த அளவிற்கு கடன் இருக்கிறது. ஓரளவிற்கு மேலும் இந்தக் கடன் பெருகாமல் இருக்க வேண்டும் என்று சொன்னால், கட்டணத்திலே மாறுபட கொண்டுவர வேண்டுமென்று சொல்லி, தவிர்க்க முடியாமல்,—தவிர்க்க முடியாமல் சில கட்டண உயர்வை அம்மா அவர்கள் சிறிதளவு கொண்டுவந்தார்கள். அதற்குப் பின்பு, அந்தக் கட்டண உயர்வினால், கிடைத்த வருவாய், அதோடு மட்டுமல்ல, அந்த நிர்வாகம் எடுத்த சிக்கன நடவடிக்கை, இயக்கத் திறனை அங்கு கூட்டியது, அதுபோல, வெளிப்படையான கொள்முதல் கொள்கை, அதுபோல, தொழிலாளர்களுடைய முழுமையான ஒத்துழைப்பைப் பெறுவது போன்ற பல்வேறு முயற்சிகளின் காரணமாக, இன்றைக்குப் போக்குவாத்துக் கழகம் சில, இன்றைக்கு ஓரளவிற்கு தொடர்ந்து வந்த நட்டத்தைத் தடுத்து நிறுத்தி இருக்கிறது. அதற்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஏறத்தாழ ஆண்டுக்கு ரூ.350 கோடி என்ற அளவிலே சராசரியாக ஆண்டுக்கு ரூ.350 கோடி நட்டம் என்று இருந்த நிலையை அம்மா அவர்கள் மாற்றி, இப்போது அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, அவர்கள் எடுத்த சீரான நடவடிக்கைக்குப் பின்பு, முதல் ஆண்டிலே



2001-2002 ஆம் ஆண்டிலே அந்த நட்டம் ரூ. 98.86 கோடியாகக் குறைக்கப்பட்டது. ஆண்டுக்கு ரூ.350 கோடி என்று ஏற்பட்டு வந்த நட்டத்தை முதல் ஆண்டிலே அம்மா அவர்கள் ரூ.98.86 கோடியாக அதைக் குறைத்திருக்கிறார்கள். அதற்குப் பின்பும், கடுமையான நடவடிக்கைக்குப் பின்பும், இன்றைக்கு போக்குவரத்துக் கழகங்கள் எடுத்திருக்கின்ற சிக்கன நடவடிக்கைக்கு பின்னால், அந்த நட்டமும் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இந்த ஆண்டு 2002-2003 ஆம் ஆண்டிலே மட்டும் இந்த நட்டம் ரூ.20.5 கோடியாக குறைக்கப்பட்டிருக்கிறது. இன்றைய நிலையிலே இந்த ஆண்டிலே ரூ.20 கோடி என்ற அளவிற்கு இப்போது நாம் வந்திருக்கிறோம். இதைத்தான் இங்கே பேசிய நண்பர்கள் நமது மாண்புமிகு உறுப்பினர்கள்கூட—போக்குவரத்துக் கழகங்கள் அனைத்தும் இலாபத்திற்கு வந்துவிட்டன; அதற்கு எங்களுடைய பாராட்டுகள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்கள்கூட பாராட்டினார்கள். இன்னும் முழுமையாக இலாபத்திற்கு நாம் வரவில்லை. ஆனால் இந்த நடவடிக்கைகளையெல்லாம் அம்மா அவர்கள் எடுத்திருக்கவில்லையென்று சொன்னால், இந்தக் கடன், இந்த 2 ஆண்டு காலத்திலே ரூ.700 கோடி கூடுதலாக வந்திருக்கும். அப்படி ரூ.700 கோடி கூடுதலாக வரவிருந்த அந்தக் கடன் சுமையை அம்மா அவர்கள் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு அந்தக் கடன் சுமை தடுத்து நிறுத்தப்பட்டு, இப்போது அப்படியே அந்த வரவுக்கும் செலவுக்கும் ஏறத்தாழ சரி என்ற நிலையிலே போக்குவரத்துக் கழகங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 5-30

இடையிலே அம்மா அவர்கள் ஒருமுறை பேருந்துக் கட்டணத்தை ஏற்றினார்கள். இப்போதுகூட, திரு. சிவபுண்ணியம் அவர்கள் சொன்னார்கள். பேருந்துக் கட்டணத்தை நீங்கள் இங்கே ஏற்றுகின்றீர்கள். அங்கே பாண்டிச்சேரியிலே ஏற்றாதீர்கள் என்று சொல்கிறீர்கள். இங்கே ஏற்றியிருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகின்ற தமிழ்நாட்டிலேதான் பேருந்துக் கட்டணம் இந்தியாவிலேயே நமது தமிழகத்திலேதான் குறைந்திருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓர் ஒப்பீட்டை உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே புறநகர்ப் பேருந்துகளுக்கு 1 கிலோ மீட்டருக்கு 28 பைசா கட்டணம். மேற்கு வங்கத்தைச் சொன்னால் கோபித்துக்கொள்ளக்கூடாது. மேற்கு வங்கத்திலே 35 பைசா ஒரு கிலோ மீட்டருக்கு கட்டணம். அதைப்போல ஆந்திராவிலே 35 பைசா, கேரளாவிலே 35 பைசா, கர்நாடகத்திலே 30.25 பைசா, மஹாராஷ்டிராவிலே 41.83 பைசா, மத்தியப் பிரதேசத்திலே 40 பைசா, பஞ்சாபிலே 39 பைசா, உத்தரப் பிரதேசத்திலே 38.5 பைசா, இராஜஸ்தானிலே 38 பைசா. ஆக காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களிலும் கூடுதலாக இருக்கின்றது; கம்யூனிஸ்டுகள் ஆளுகின்ற மாநிலத்திலும் கூடுதலாக இருக்கிறது; பி.ஜே.பி. கூட்டணியோடு ஆளுகின்ற மாநிலங்களிலும் கூடுதலாக இருக்கிறது. உத்தரப் பிரதேசத்திலே அங்கே இருக்கின்ற, பி.ஜே.பி. கூட்டணி ஆளுகின்ற அந்த மாநிலத்திலும் கூடுதலாக இருக்கிறது. ஆக, இந்தியாவிலேயே குறைவாக இருப்பது தமிழ்நாட்டிலேதான்.

இன்னொன்றையும் கோடிட்டுச் சொல்ல விரும்புகிறேன். சொகுசுப் பேருந்து...(குறுக்கீடு) I am not yielding .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் குறைவு என்று அவர் சொன்ன கணக்கை நாங்களும் ஏற்றுக்கொள்கிறோம், அது சரியாக இருக்குமானால். ஆனால் அ.தி.மு.க. ஆட்சியைவிட, தி.மு.க. ஆட்சியில், இதைவிடக் குறைவாக இருந்தது என்பதை நான் நினைவுபடுத்துகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே இன்றைக்கு நட்டம் குறைவு, குறைந்த நட்டம். ஏறத்தாழ வரவுக்கும் செலவுக்கும் சரியாகின்ற நிலைமை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்திற்குப் பிறகு பெட்ரோல், டீசல் விலை பல முறை ஏற்றப்பட்டுவிட்டது. அப்படி டீசல் விலை



கடுமையாக உயர்ந்துள்ள சூழ்நிலையில்கூட, இன்றைக்கும் தமிழ்நாட்டிலேதான் பேருந்துக் கட்டணங்கள் இந்தியாவிலேயே குறைவாக இருக்கின்றன என்றால், அது எங்களுடைய நிருவாகத் திறனுக்கு ஓர் அச்சாரம், (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் அடையாளம் என்று கூறுகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு அம்மா அவர்கள் உங்களுக்குத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பேருந்துக் கட்டணத்தை ஏற்றியதற்குப் பின்பும்கூட, எத்தனை முறை டீசல் விலை ஏறியிருக்கிறது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏறத்தாழ 9 முறை. இந்தப் பேருந்துக் கட்டண உயர்விற்குப் பிறகு, டீசல் விலை ஏற்றப்பட்டிருக்கிறது; மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அதிலே 35 சதவீதம் டீசல் விலை கூடியிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், ஒரு லிட்டருக்கு 6 ரூபாய் என்ற அளவிற்கு இப்போது டீசல் விலை கூடியிருக்கிறது. நாங்கள் கட்டணச் சீரமைப்பு செய்ததற்குப்பின்பு, ஒரு லிட்டருக்கு டீசல் விலை 6 ரூபாய் ஏறியதற்குப் பின்பும், மாண்புமிகு அம்மா அவர்கள் இன்னும் பேருந்துக் கட்டணத்தை ஏற்றவில்லை.

இன்னும் சொல்லப்போனால், ஒரு லிட்டருக்கு ஒரு ரூபாய் டீசல் விலை ஏறினால், அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஆண்டுக்கு ரூ.50 கோடி கூடுதல் செலவு வரும். நீங்கள் அப்படி ஒரு கணக்குப் பார்த்தால், ஒரு லிட்டருக்கு 6 ரூபாய் ஏறியிருக்கிறது. அந்தக் கணக்கிலே மட்டும், ஏறத்தாழ ரூ.300 கோடியை இன்றைக்குக் கூடுதல் செலவினமாக, நமது போக்குவரத்துக் கழகங்கள் அந்தக் கூடுதல் செலவினத்தைத் தாங்கிக்கொண்டிருக்கின்றன.

அதற்குப் பின்னால்கூட, இந்த விலை உயர்விற்குப் பின்பு அனைத்து மாநிலங்களிலும், ஏறத்தாழ பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்கள் எல்லாம் ஆந்திரா, கர்நாடகா எல்லாம், சமீபத்திலே, இப்போது பேருந்துக் கட்டணத்தை மீண்டும் ஏற்றியிருக்கின்றன. நாம் ஏற்றியதற்குப் பின்பு மீண்டும் ஒருமுறை மற்ற மாநிலங்கள் ஏற்றியிருக்கின்றன. ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும், நான் இந்தக் கட்டணத்தை ஏற்ற மாட்டேன்; பொதுமக்களுக்காக, இப்போது இருக்கின்ற கட்டணம் அப்படியே இருக்கட்டும் என்று தமிழகத்திலேதான், மாண்புமிகு அம்மா அவர்கள், டீசல் விலை இவ்வளவு ஏறியதற்குப் பின்பும் கட்டணத்தை உயர்த்தவில்லை என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. இரா. விசுவநாதன்] [2003 ஏப்ரல் 28

*பிற்பகல் 5-35*

அதேபோல, நான் ஒப்பிட்டுச் சொல்கிறபோது ஒன்றைச் சொன்னேன். இன்றைக்கு புறநகர் பேருந்துக்கு மட்டும் அந்த வித்தியாசம் அல்ல. சொகுசுப் பேருந்து, அதிசொகுசுப் பேருந்துகளுக்கெல்லாம் கட்டணம் இன்னும் கூடுதலான வித்தியாசம் இருக்கின்றது. அதையெல்லாம் உங்களுக்குச் சொல்வதென்றால், இன்னும் நேரம் அதிகம் ஆகும். ஆகவே எல்லா வகையிலும் அது புறநகர் பேருந்தாக இருந்தாலும் சரி, சொகுசுப் பேருந்தாக இருந்தாலும் சரி, அதிசொகுசுப் பேருந்தாக இருந்தாலும் சரி, அல்லது நகரப் பேருந்தாக இருந்தாலும் சரி, எல்லா வகையிலும் இன்றைக்கு எல்லா மாநிலங்களையும்விட குறைவான கட்டணம் வசூலிக்கப்படுவது நம்முடைய தமிழகத்திலேதான் என்பதை மீண்டும் ஒருமுறை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மற்றொரு அறிவிப்பினை—ஏற்கெனவே இந்தப் போக்குவரத்துக் கழகங்களைச் சீரமைப்பதற்காக, நிருவாக நடைமுறைகளுக்காக, மக்களினுடைய வசதிகளைப் பெருக்குவதற்காக, மக்களுடைய நலனுக்காக இன்னும் சில கொள்கை முடிவுகளை அறிவித்தார்கள். அதைத்தான் காலையிலிருந்து அனைவருக்கும் பலமுறை மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு அல்ல. ஏற்கெனவே ஓராண்டு காலமாக அம்மா அவர்கள் பலமுறை வலியுறுத்தி விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். அரசுப் போக்குவரத்துக் கழகங்களை தனியாருக்குத் தாரை வார்க்கவில்லை. கொடுக்கவில்லை. மாறாக ஏதோ ஒரு சில தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடங்களைத்தான் தனியாருக்குக் கொடுப்பதுபற்றி பரிசீலனை செய்துகொண்டு இருக்கிறோம் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் பலமுறை விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும்கூட, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் தெரிவித்ததைப்போல, அரைத்த மாவையே அரைப்பது போல, இன்றைக்குக் காலையிலிருந்து மீண்டும் யார் பேசினாலும் போக்குவரத்துக் கழகங்களை தனியாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள் என்று சொல்கிறார்கள். நீங்கள் எத்தனை முறை போக்குவரத்துக் கழகங்களைத் தனியாருக்குக் கொடுக்கப்



2003 ஏப்ரல் 28] [திரு. இரா. விஸ்வநாதன்]

போகிறீர்கள் என்று சொன்னாலும், நாங்களும் அத்தனை முறை நாங்கள் அப்படிச் செய்யவில்லை என்றுதான் ஒவ்வொரு முறையும் பதில் சொல்வோம். ஆகவே ஒவ்வொரு முறையும் நீங்கள் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்காமல், அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், நீங்களெல்லாம் இன்றைக்கு உலக அளவிலே பார்த்தால்கூட, பொருளாதாரச் சிந்தனைகளும், கொள்கைகளும், நாளுக்குநாள் மாறுபட்டுக்கொண்டே வருகின்றன. இன்றைக்கு கம்யூனிஸ்டுகள், பொதுவுடைமையைப் பெரிதும் மதிக்கின்ற கம்யூனிஸ்டு நண்பர்களின் மேலான சிந்தனைக்கு ஒன்றை மட்டும் நான் உங்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இந்தியாவிலே மட்டுமல்ல, உலக அளவிலேகூட பொதுவுடைமைத் தத்துவங்கள் மாறுதலுக்கு உட்பட்டு இருக்கின்றன. சில நாடுகளிலே அந்தத் தத்துவத்தையே முழுமையாகக் கைவிட்டுவிட்டார்கள். சில நாடுகளிலே அதை மாறுதலுக்கு உட்படுத்தியிருக்கிறார்கள். நமது மேற்கு வங்க அரசிலேகூட, சில விஷயங்களில் இப்பொழுது liberalisation-ஐ அனுமதித்து இருக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே இருக்கின்ற பொதுவுடைமை கட்சியினர் மட்டும் இன்றைக்கும் தங்களை மாற்றிக்கொள்ள மறுக்கிறார்கள். அதைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்னும் சொல்லப்போனால், மார்க்சியத்தினுடைய பிறப்பிடம் என்று சொன்ன அந்த சோவியத் ரஷ்யா, சோவியத் ரஷ்யா என்ற அந்த நாடே இன்றைக்கு இருக்கிறதா? மார்க்சிய கட்சியினுடைய பிறப்பிடம் இன்றைக்கு அந்த நாடே, அப்படி ஒரு நாடே இல்லை. அது பலவாறாகப் பிரிந்துவிட்டது. உலகத்திலே பல நாடுகள் பிரிந்திருக்கின்றன. பல நாடுகள் சேர்ந்திருக்கின்றன. ஆனால் சோவியத் ரஷ்யாவைப் பொறுத்தவரையிலே, சிதறுண்டு போய்விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்று சொன்னால், இன்றைக்கு உலக அளவிலே மாறி வருகின்ற பொருளாதார மாற்றம், பண்பாடு, கலை, கலாச்சாரம் ஆகிய எல்லா வகையிலும்.... *(குறுக்கீடு)* நான் முழுமையாகச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

[2003 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் உதாரணம் சொல்கிறார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Why Soviet Union was dismantled? There are some historical reasons. அதையெல்லாம் சொன்னால்தான் என்ன ஏது என்று சொல்ல முடியும். சகட்டுமேனிக்கு.....

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுது என்ன சொல்ல வந்தார் என்றால், ஒரு காலகட்டத்தில் பொதுவுடைமை கொள்கை என்று சொல்லி, அதன் அடிப்படையில் உருவான நாடுகளே இப்பொழுது இல்லாமல் போய்விட்டன. இருக்கின்ற நாடுகளிலேகூட, அந்த கம்யூனிசக் கொள்கையை இப்போது மிகவும் கலப்படம் செய்து—dilute செய்து, capitalism-ஐ உள்ளே விட்டுவிட்டார்கள். உதாரணம் சீனா. ஆனால் இங்கே இந்தியாவில், குறிப்பாக, தமிழ்நாட்டில் இருக்கின்ற கம்யூனிஸ்ட்கள்தான் அப்பழுக்கற்ற கலப்படம் இல்லாத பழைய கம்யூனிசக் கொள்கையை இன்னும் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் அவர் சொல்ல வருகிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. ஹேமச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரும் சரி, முதல்வர் அவர்களும் சரி, உங்களைப் பாராட்டத்தான் செய்கிறார்கள். கம்யூனிசக் கொள்கைகளில் அழுத்தமாக இருக்கிறீர்கள் என்றுதான் சொல்கிறார்கள்.

*பிற்பகல் 5-40*

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சியம் என்பது ஒரு சமூக விஞ்ஞானம். அது ஒரு தத்துவம். அது ஒருபோதும் இந்த உலகத்திலே தோல்வியடையவில்லை. இன்றைக்கும் உலகில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் அந்தத் தத்துவத்தின்கீழ் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான்.........



2003 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்ல வந்தேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் மிகத் தெளிவாக விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்ல வந்ததே அதுதான். உலக அளவிலேகூட, இன்றைக்கு சித்தாந்தங்கள் எல்லாம் மாறுதலுக்குட்பட்டு இருக்கும்போது, இங்கே இருக்கின்ற, நமது நாட்டிலே நீங்கள் ஆளுகின்ற மேற்கு வங்காளத்திலேகூட liberalisation-ஐ, தாராளமயமாக்கத்தை ஓரளவு ஏற்றுக்கொண்டிருக்கிறபோது, இங்கு மட்டும் நீங்கள் ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி. இன்னும் சொல்லப்போனால்.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கேள்விக்கு நான் பதிலளிக்கின்றேன். இங்கு மட்டும் ஏன் பழைய கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தையே அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அதற்கு விளக்கம், இங்கே அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இல்லை. எங்கெல்லாம் கம்யூனிஸ்டுகள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறார்களோ, அங்கெல்லாம் பழைய கம்யூனிஸ்ட் சித்தாந்தம் கதைக்கு உதவாது; ஆகவே அதைக் கலப்படம் செய்தே ஆக வேண்டும்; தாராளமயமாக்கியே தீர வேண்டும் என்ற முடிவிற்கு வந்து, அவர்கள் காலத்திற்கேற்ப தங்களை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்திற்கேற்ப மாற்றம் இங்கேயும் வந்ததால்தான், சென்ற தேர்தலிலே நாங்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியை ஆதரிக்கிற நிலை ஏற்பட்டது. (குறுக்கீடுகள்)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. ஹேமச்சந்திரன் சொல்லிவிட்டார்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இல்லை, அவர் போதிய விளக்கம் சொல்லிவிட்டார்.

[2003 ஏப்ரல் 28

***செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிச சித்தாந்தம் என்பது, பழையது, புதியது என்றெல்லாம் இல்லை. கம்யூனிஸ்ட் சித்தாந்தம் என்பது பசியை, பட்டினியை, வறுமையை ஒழிப்பதற்கான பொதுவான ஒன்று. ஆகவே அந்த சித்தாந்தத்தின் அடிப்படையிலேதான்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் அவர்கள், விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்ததை மாண்புமிகு அம்மா அவர்கள் மிகத் தெளிவாக உங்களுக்கு விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் சொன்னதற்கு நான் பதில் கூற விரும்புகிறேன். பசியைப் போக்குவதுதான் கம்யூனிஸ்டுகளின் சித்தாந்தம் என்று சொல்கிறார். ஆனால் எந்தக் கம்யூனிஸ்ட் ஆட்சியிலும் சத்துணவுத் திட்டத்தையோ, அன்னதானத் திட்டத்தையோ கொண்டுவரவில்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான், 1982-ல் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) பிறகு இப்போது அன்னதானத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, செல்வி பாலபாரதி சொல்வது, புரட்சித் தலைவிதான் உண்மையான கம்யூனிஸ்ட் என்று சொல்கிறார். (சிரிப்பு) (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். கம்யூனிஸ்ட் ஆளுகின்ற மாநிலங்களிலே, கம்யூனிஸ்ட் ஆளுகின்ற நாடுகளிலே வறுமை கிடையாது; வேலையின்மை கிடையாது; பட்டினி கிடையாது; பசி கிடையாது. (குறுக்கீடு) நான் சொல்கிறேன்.



2003 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை, ஒரு நிமிடம், நான் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. ஹேமசந்திரன், போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கைக்கு வாருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** நேரமாகிவிட்டது; நான் பேச வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நேரமாகி விட்டது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இல்லை, ஆறு மணிக்கு முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Mr. Speaker, Sir, இந்தியாவிலே பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கம்யூனிஸ்ட் அல்ல. அவர்கள், கம்யூனிஸ்ட் ஆளுகின்ற சோவியத் யூனியனைப் பார்த்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. ஹேமசந்திரன், பிறகு வைத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) இன்னொரு நாள் இந்த விவாதத்தை வைத்துக்கொள்ளலாம். போக்குவரத்துத் துறை அமைச்சர், முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அவர்களே பேசிக்கொண்டிருந்தால் எப்படி? நான் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்கூட, சோவியத் யூனியனைப் பார்த்து, அங்கே, சோற்றுக்கும், வேலைக்கும் அலையக்கூடிய நிலைமை இல்லை என்று சொன்னது இன்றைக்கும் ரெக்கார்டிலே இருக்கிறது.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு சோவியத் ரஷ்யா அந்த நிலையிலே இருந்தது என்பது உண்மை. ஆனால் இன்றைய நிலை என்ன? இன்றைக்கு அந்த நாடு பசியாலும், பட்டினியாலும், வறுமையாலும் சிதறுண்டு போய் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் முடித்துவிடுகிறேன். நான் முடித்ததற்குப் பிறகு பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து நான்

முடித்ததற்குப் பிறகு நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து நான் முடித்ததற்குப் பிறகு நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மாண்புமிகு அமைச்சர். போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கைக்கு வாருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் என்ன சொன்னார்களோ, எனக்குத் தெரியாது. ஆனால் சோவியத் ரஷ்யா ஒன்றாக இருந்த காலத்திலேயே, அங்கே ரேஷன் கடைகளுக்கு முன்னால் மக்கள் நீண்ட queue வரிசையில் நின்று, ரொட்டிகூட கிடைக்காமல் பட்டினி கிடந்திருக்கிறார்கள் என்ற செய்திகளை உலகமே அறியும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இனிமேல் இந்த விவாதத்தை அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** போதும், போதும் விடுங்கள், நான் பேசிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ பொதுவுடமை கட்சி ஆளுகின்ற மாநிலங்களில், நாடுகளில் பசியும், பட்டினியும், வறுமையும் இல்லை என்பது போல மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். அந்த நிலை வந்ததால்தான் இன்றைக்கு அந்த நாடே சிதறுண்டு போய்விட்டது. ஒரு நாடு, இரண்டு நாடாக இல்லை, அஜர்பைஜான், பெலாரஸ், எஸ்டோனியா, ஜியார்ஜியா, அர்மேனியா, கரேலியா, கைகிஸ்தான், கசகஸ்தான், லாட்வியா, லித்துவியா, ரஷியா, மோல்டாவியா, டஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், உக்ரைன், உஸ்பெகிஸ்தான். பாருங்கள் இந்த மாதிரி 16 நாடுகள், ஒரு நாடல்ல, 16 நாடுகளில் இப்போது ஒரு கட்சி ஆட்சி முறை இல்லை. இந்த அனைத்து நாடுகளிலும் பல கட்சி ஆட்சிமுறைதான் இப்போது வந்திருக்கிறது. அந்தக் கட்சிகள் எல்லாம் இன்றைக்கு பொதுவுடமை சித்தாந்தங்களிலிருந்து இதுவெல்லாம் மாறி இன்றைக்கு democratic ஜனநாயக அமைப்புக்கு வந்திருக்கிறது என்பதைத்தான் அவைக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



**செல்வி க. பாலபாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் ரஷியாவைப் பற்றிப் பேசக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லாமல் பேசக்கூடாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும்..... (குறுக்கீடு) இல்லை நான் சொல்ல வருவது அந்த 16 நாடுகள்...... (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, ரஷியா வந்து...... (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்காகச் சொல்ல வருகிறேன் என்று சொன்னால், பொதுவுடமைக் கட்சியினுடைய சித்தாந்தங்களின் பிறப்பிடமாகிய இடங்களிலேகூட மாறுதலுக்கு உட்பட்டு இன்றைக்கு ஒரு கட்சி ஆட்சி முறை எல்லாம் மாறி பலகட்சி ஆட்சிமுறை ஜனநாயகத்திற்கு வந்து விட்டது. கொள்கையெல்லாம் ஒரு மாறுதலுக்கு உட்பட்டிருக்கிறது. ரஷியாவில் மட்டுமல்ல; உலக அளவில் ஏற்பட்டு வந்திருக்கிற மக்களுடைய மாற்றத்தால், சிந்தனையால், கலாச்சாரப் புரட்சியால், உடை, உணவு, பழக்கவழக்கங்கள் என்ற வகையிலும், எல்லா வகையிலும் மக்களுடைய சிந்தனை மாறியிருக்கிறது. சிந்தனை மாறியிருக்கிறது. அதற்குத் தகுந்தாற்போல் நீங்கள் மாறவில்லை என்பதைத்தான் சொல்ல வந்தேன். நான் அடுத்த subject-க்கு வந்துவிடுகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. அமைச்சர் எதை வேண்டுமானாலும் சொல்லலாமா? நான்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், வேண்டாம், வேண்டாம். (குறுக்கீடு) இந்த விவாதத்தை வளர்க்க வேண்டாம். நேரமில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** இல்லை, இல்லை. நான் எதையும் சொல்லவில்லை. (குறுக்கீடு) உங்களைப் பாராட்டித்தான் சொல்கிறேன். நான் அடுத்த subject-க்கு வந்துவிடுகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையிலே....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு திரு. ஹேமச்சந்திரன் சொன்னதெல்லாம் பதிவாகியிருக்கிறது. (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அரசியல் விளக்கம் சொல்வது, உலக நிலைமையைச் சொல்வது, தேசிய நிலைமையைச் சொல்வதில் எனக்கு மாற்றுக் கருத்தில்லை. ஆனால் மாறுதல் என்பது நடந்துகொண்டே இருக்கிறது. அதை யாரும் மறுக்கவில்லை. அப்படி மாறுதல் நடந்துகொண்டிருக்கிற காரணத்தால்தான் 1996-லிருந்து 2001 வரையிலும் அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வர முடியவில்லை. திரும்பவும் இப்போது வந்திருக்கிறீர்கள். ஏற்கெனவே ஒருதரம் வந்திருக்கிறீர்கள். ஆகவே தி.மு.க., அ.தி.மு.க, காங்கிரஸ் மாற்றி மாற்றி அதிகாரத்திற்கு வருவதைப்போல கம்யூனிஸ்ட் கட்சியும் அப்படிப்பட்ட மாறுதல்களுக்கு உட்படும், திரும்ப அதிகாரத்திற்கு வரும். ஆனால் மார்க்சிய தத்துவம் என்பது அழியாது என்பதை மட்டும் நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அது விஞ்ஞானபூர்வமான தத்துவம்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மீண்டும் நான் விளக்கம் சொல்ல



முடியும். ஆனால் பிரச்சினை தொடர்ந்துகொண்டே போகும். அது சம்பந்தப்பட்ட விளக்கம் சொன்னால் இன்னும் வருத்தப்படுவீர்கள். இதற்குமேல் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த அளவிலே இன்றைக்கு தொழில் உறவு என்ற முறையில் எடுத்துக்கொண்டால், அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்ததற்குப் பின்பு ஏதோ இங்கு அவர்களுடைய சலுகைகள் எல்லாம் பறிக்கப்பட்டுவிட்டது போலவும், அவர்களுக்கு உரிய சலுகைகள், போனஸ் வழங்கப்படவில்லை என்பதைப் போன்றெல்லாம் காலையிலே நமது மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இருந்தாலும்கூட இன்றைக்கும் சொல்கிறேன். இப்போதும் சொல்கிறேன். தொழிலாளர்களைப் பொறுத்த அளவிலே இன்றைக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் உண்மையிலேயே தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை கொண்டு, போக்குவரத்துத் தொழிலாளர்கள்மீது அக்கறை கொண்டு அனைத்து வசதிகளையும் செய்துகொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஏற்கெனவே நான் சொன்னேன், போனஸ் பிரச்சினை, போனஸ் 8.33 சதவீதம் என்ற அளவிலே, இந்தியாவிலேயே தமிழ்நாடும்—அதிலே கர்நாடகாவும் கொடுக்கிறார்கள். இல்லையென்று சொல்லவில்லை—தமிழ்நாடும் கர்நாடகமும்தான் 8.33 சதவீதம் போக்குவரத்துத் தொழிலாளிகளுக்கு எல்லா தொழிலாளர்களுக்கும், சம்பள வரம்பை நீக்கி, உச்ச வரம்பை நீக்கி, போனஸ் சட்டத்தை, விதி முறையைத் தளர்த்தி, போனஸ் வழங்கி இருக்கிறது என்பதை நான் உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-50*

அதேபோல, பக்கத்திலே இருக்கின்ற கேரள மாநிலம் வழங்கவில்லை. மேற்கு வங்காளம் வழங்கவில்லை. வேறு எந்த மாநிலத்திலும் 8.33 சதவிகிதம் வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், Bonus Act-படி மாத சம்பளம் ரூ.3,500/- பெறுகிறவர்களுக்கு போனஸ் கிடையாது. ரூ.3,500/-க்கு மேல் சம்பளம் வாங்குபவர்களுக்கு போனஸ் இல்லை. ரூ.3,500/-க்கு கீழே குறைவாகப் பெறுகிறவர்களுக்குத்தான் 8.33 சதவிகிதம் என்ற Bonus Act, விதியை அமல்படுத்தி, மேற்கு வங்காளம் மற்றும் ஆந்திரா, கேரளா போன்ற

மற்ற மாநிலங்களிலெல்லாம் போனஸ் வழங்கியிருக்கிறார்கள். ஆனால் அந்த உச்சவரம்பை நீக்கி, அனைத்துத் தொழிலாளிகளும் பலனடைகின்ற வண்ணம் போனஸ் வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதேபோல, இன்றைக்கும் சொல்லப்போனால், (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். சொல்லி முடித்த பின்பு சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இதில் என்ன தப்பு இருக்கிறது. இதில்கூடவா தப்பு?(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இன்றைக்கும் போக்குவரத்துத் தொழிலாளிகளுடைய சம்பளத்தையும் ஒப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தமிழகத்திலே ஓட்டுநராகப் பணியிலே புதியதாகச் சேருகின்ற ஒரு ஓட்டுநருக்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திலே மாத ஊதியம் ரூ.5,031/-: ஆந்திராவிலே ரூ.4,235/-; கர்நாடகாவிலே ரூ.4,967/-; கோளாவிலே ரூ.4,572/-; அதேபோல், நடத்துநருக்கு தமிழ்நாட்டிலே ரூ.4,993/-; ஆந்திராவிலே ரூ.3867/-; கர்நாடகாவிலே ரூ.4,632/-; கேரளாவிலே ரூ.4,498/-; Technical—தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு தமிழகத்திலே ரூ.4,993/- மாதச் சம்பளம்; ஆந்திராவிலே ரூ.4,000/- தான்; கர்நாடகாவிலே ரூ.4,967/-; கேரளாவிலே ரூ.4,498/-. ஆக, சம்பளம் என்று எடுத்துக்கொண்டாலும், மாத ஊதியம் என்று எடுத்துக்கொண்டாலும், இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் போக்குவாத்துத் தொழிலாளிகள் கூடுதல் சம்பளம் பெறுகிறார்கள் என்பதை இந்த நோத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல. நான் ஏற்கெனவே wage settlement-ஐப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். ஊதிய ஒப்பந்தத்தைப்பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மேற்கு வங்காளத்திலே பத்தாண்டுக் காலத்திற்கு ஒருமுறைதான் ஊதிய ஒப்பந்தம் போடப்படுகிறது என்ற தகவலை நான் ஏற்கெனவே உங்களுக்குச் சொல்லியிருக்கின்றேன். இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு விடுமுறையை எடுத்துக் கொண்டாலும்கூட, தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற விடுமுறை—அதிலேகூட தமிழகத்திலே 62 நாட்கள் தொழிலாளிகளுக்கு விடுமுறை வழங்கப்படுகிறது. சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்படுகிறது. ஆனால் ஆந்திராவிலே 54 நாட்கள்தான் வழங்கப்படுகிறது. அதேபோல, கர்நாடகாவிலே 58 நாட்கள். அதேபோல, கேரளாவிலே 48 நாட்கள்.



இன்னும், மேற்கு வங்காளத்திலே 41 நாட்கள். தொழிலாளர்களுடைய தோழர்கள் ஆளுகின்ற அந்த மாநிலத்திலேதான் விடுமுறை மிக மிகக் குறைவு என்பதை நான் உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, தொழிலாளர்களுக்கு அளிக்கப் பட்டிருக்கின்ற விடுமுறை சலுகைகளையெல்லாம் நீங்கள் பார்த்தால், இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு கூடுதல் விடுமுறை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்; இப்பொழுது தொழிலாளர்களுடைய நலனில் உண்மையிலேயே அக்கறை கொண்ட தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களா, அல்லது நீங்களா என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் மனசாட்சியைத் தொட்டுப் பார்த்து பதில் சொல்ல வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சாலைப் போக்குவரத்து நிறுவனம். தமிழ்நாடு அரசு, நமது போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த சாலைப் போக்குவாத்து நிறுவனம், இன்றைக்குக் கல்வி நிறுவனங்களை நடத்தி வருகிறது. இந்தத் தொழிலாளர்களுக்காக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலேதான் பெருந்துறையிலே, ஒரு பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, தொழில்நுட்பப் பட்டயக் கல்லூரி—பாலிடெக்னிக் போன்ற இந்தக் கல்வி நிறுவனங்களையெல்லாம் தொழிலாளர்கள் பலனடைகின்ற வகையிலே அங்கு ஏற்படுத்தியது மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே. ஆனால் அதற்குப் பின்பாக மாண்புமிகு அம்மா அவர்கள், சென்ற ஆட்சிக் காலத்திலேயும், இன்றைக்கு அவர்கள் ஆட்சிக் காலத்திலேயும், மாண்புமிகு புரட்சித் தலைவர் வழியிலே வருகின்றவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்ற காரணத்தால், அவர் வழியிலே நின்று போக்குவரத்துத் தொழிலாளர்கள் கூடுதலாகப் பலனடைவதற்காக அம்மா அவர்களுடைய சென்ற ஆட்சிக் காலத்திலே, போக்குவரத்துத் தொழிலாளர்கள் பலன் பெறுவதற்காக, சென்னை குரோம்பேட்டை, பர்கூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் இந்த பாலிடெக்னிக், தொழில்நுட்பப் பட்டயப் படிப்புக் கல்லூரிகளை உருவாக்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, தொழிலாளர்களுக்காக கல்வி நிறுவனங்களை உருவாக்கியது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு

புரட்சித் தலைவி அம்மா அவர்களும்தானே தவிர, இடையிலே ஆண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினர், அதற்கு முன்பும் ஆண்டு இருக்கிறார்கள். இடையிலே ஐந்தாண்டு காலம் ஆண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்தக் கல்வி நிறுவனங்களுக்கு சல்லிக் காசுகூட ஒதுக்கவில்லை.

இன்னும் சொல்லப்போனால், இந்தக் கல்வி நிறுவனங்களெல்லாம் புரட்சித் தலைவர் காலத்திலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலும் ஏற்படுத்தப்பட்டவை என்ற காரணத்தினால், மாற்றாந்தாய் மனப்பான்மையோடு, அந்தக் கல்வி நிறுவனங்களை அவர்கள் அறவே ஒதுக்கிவிட்டார்கள். அதனுடைய வளர்ச்சியிலே அக்கறை காட்டவில்லை. அந்தக் கல்வி நிறுவனங்கள் என்ன பாவம் செய்தன? அங்கே படிக்கின்ற குழந்தைகள், போக்குவரத்துத் தொழிலாளர்களின் குழந்தைகள். மற்றவர்களுடைய வசதிக்காக, அவர்கள் அதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேயில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள்தான் அதற்குப் பின்பும், இப்போதும், அந்தக் கல்வி நிறுவனங்களை, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அதைப் புறக்கணித்துவிட்டது, ஒதுக்கிவிட்டது என்று தெரிந்த மாண்புமிகு அம்மா அவர்கள், உடனடியாக, அதற்கு ஏதாவது செய்தாக வேண்டுமென்கின்ற எண்ணத்தோடு, மாண்புமிகு அம்மா அவர்கள், இப்பொழுது ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, ஓரளவு இலாபத்தில் இயங்குகின்ற விழுப்புரம், தருமபுரி, ஈரோடு மற்றும் திருச்சி போன்ற போக்குவரத்துக் கழகங்களில், 4 போக்குவரத்துக் கழகங்களிலிருந்து, மூன்று கோடி ரூபாயைப் பெற்று, இன்றைக்கு அந்த 4 போக்குவரத்துக் கழகங்களிலிருந்து இலவசமாக, அந்தக் கல்வி நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக, அந்தச் சாலைப் போக்குவரத்து நிறுவனத்திற்கு மூன்று கோடி ரூபாயை அம்மா அவர்கள் ஒதுக்கி வழங்கியிருக்கிறார்கள், ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மூன்று கோடி ரூபாயை வைத்து பெருந்துறையிலே இருக்கின்ற பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, பாலிடெக்னிக் அத்தனைக்கும் இன்றைக்கு புதிய கட்டடங்கள் மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் எல்லாம் விரைவிலே செய்யப்படும் என்று, இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அதற்காக அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியினை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 5-55

அதேபோல, சாலைப் போக்குவரத்து நிறுவனங்கள். கொள்முதல் பிரிவையும், மத்தியக் கொள்முதல் பிரிவையும் அது கண்காணித்து செயலாற்றி வருகிறது. இன்னும் சொல்லப்போனால், போக்குவரத்துத் துறைக்குத் தேவையான அத்தனை டயர்கள், அதுபோல Chassis-அடிச்சட்டங்கள் போன்றவை வாங்குவதற்கான, அந்தப் பணிகளை I.R.T.. நிறுவனம், சாலைப் போக்குவரத்து ) நிறுவனம்தான் செய்து வருகிறது. இன்னும் சொல்லப்போனால், அந்த நிறுவனத்தினுடைய வெளிப்படையான கொள்முதல் கொள்கையின் காரணமாக, இன்றைக்கு டயர்களைக் கொள்முதல் செய்த வகையிலே மட்டும் மேற்கொண்ட சிக்கன நடவடிக்கை காரணமாக, அந்தச் சாலைப் போக்குவரத்து நிறுவனம்—I.R.T. போக்குவரத்துக் கழகங்களுக்கு, ஏறத்தாழ, ரூ.3.05 கோடி சேமிப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதற்குமுன்பு இந்தக் கொள்முதல் எல்லாம் அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்கள் தங்கள் இஷ்டப்படி, தங்களுடைய விருப்பப்படி ஆங்காங்கே வாங்கிக்கொண்டு இருந்தார்கள். அதையெல்லாம் ஒருமுனைப்படுத்தி, மொத்த அளவிலே கொள்முதல் செய்ததன் காரணமாக, டயர்களைக் கொள்முதல் செய்ததன் காரணமாக, மற்றும் Chassis-களை கொள்முதல் செய்ததன் காரணமாக,—அடிச்சட்டங்களை கொள்முதல் செய்ததன் காரணமாக மட்டும் இன்றைக்கு வெளிப்படையான, அந்தக் கொள்முதல் கொள்கையின் காரணமாக, போக்குவரத்துக் கழகங்களில் ரூ.3.05 கோடி ரூபாய் அளவிற்கு மிச்சப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை மீண்டும் ஒருமுறை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, தமிழ்நாடு அரசு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை. இந்தப் போக்குவரத்துத் துறையின் கீழே பணியாற்றிக்கொண்டு இருக்கின்ற, அதன் கட்டுப்பாட்டிலே இயங்கிக்கொண்டிருக்கின்ற, தமிழ்நாடு அரசு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இன்றைக்குச் சிறப்பாகப் பணியாற்றி, அரசுக்குச் சொந்தமான வாகனங்களை எல்லாம் பழுது நீக்குதல், அந்தப் பழுதடைந்த வாகனங்களை ஏலம் விடுதல் மற்றும் கழிவு செய்தல் போன்ற பணிகளையெல்லாம் மிகச் சிறப்பாக செய்து வருகிறது. அது அரசு வாகனங்களையும் தரமுள்ள வாகனங்களாகச் சிறப்பாக

இயக்குவதற்கு இன்றைக்கு தமிழ்நாடு அரசு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை சிறப்பாகச் செயலாற்றி வருகிறது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, பல்லவன் போக்குவரத்துக் கழக ஆலோசனைக் குழு. இந்தப் போக்குவரத்துத் துறையின் கீழே இயங்குகின்ற அந்த Pallavan Transport Consultancy Services-என்ற ஆலோசனைக் குழு, இன்றைக்கு வணிகவரித் துறை போன்ற மற்ற துறைகளுக்கு கணினிமயமாக்குவதற்காக, தங்களுடைய தொழில்நுட்ப உதவிகளையெல்லாம் வழங்கி, அந்தப் பணிகளை எல்லாம், இந்தக் குழு சிறப்பான முறையில் செய்து வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்; தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பொது மக்களின் மத்தியிலே நல்ல பெயரைப் பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே, இந்த நிறுவனத்தின்மீது பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக, இன்றைக்கு, இந்த நிறுவனத்திலே வைப்புத் தொகையாக மக்கள் விரும்பி பணம் அளித்து வருகிறார்கள், அந்த வகையிலே தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் வைப்புத் தொகையாக மட்டும் 912.36 கோடி ரூபாய் இன்றைக்கு இருக்கிறது. இந்த நிதியை வைத்து, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு, இந்த நிதி நிறுவனம்தான் கடன்களை வழங்கி வருகிறது.

அந்த வகையிலே புதிய பேருந்துகள் வாங்குவதற்கு இந்த நிதி நிறுவனம் பெருமளவில் உதவி வருவதன் காரணமாக, இந்த நிதி நிறுவனத்தையும் சிறப்பாகப் பராமரித்து அதன் மூலமாக அந்த நிதி நிறுவனம் போக்குவரத்துக் கழகங்களுக்குப் பெரிதும் உதவியாக செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் நிருவாகம் தொடர்பான மானியக் கோரிக்கை தொடர்பாகவும் எனது பதிலுரையை மிகச் சுருக்கமாக ஓரிரு வரிகளிலே முடித்துக்கொள்ள விரும்புகிறேன். இயக்கூர்திகள்



சட்டத்தையும், அது தொடர்பான நிருவாகம் மற்றும் அனைத்து சட்டங்களையும் இன்றைக்கு இந்தத் துறை மிகச் சிறப்பாக செய்து வருகிறது. வாகனங்களுக்கு அனுமதி அளித்தல் —permit வழங்குதல், அதேபோல வாகனச் சட்டங்களை அமலாக்குதல், மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளை இன்றைக்கு இந்தத் துறை மிகச் சிறப்பாகச் செய்து வருகிறது. அதேபோல, வரிகள் விதிப்பது, வரிகள் வசூல் செய்வது போன்ற பணிகளையும் இன்றைக்கு இந்தத் துறை மிகச் சிறப்பாகச் செய்து வருகிறது. அதிலும் குறிப்பாகச் சொன்னால், லாரி strike பற்றி காலையிலே பேச முயற்சி செய்தார் மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் அவர்கள். அவருக்கு ஒரு தகவலை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

லாரிக்கு வரி குறைக்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், அந்த லாரி உரிமையாளர்களின் கோரிக்கையை தாயுள்ளத்தோடு ஏற்று, அவர்கள் வைத்த கோரிக்கையைவிட, இன்னும் சொல்லப்போனால், எதிர்பார்த்ததைவிட கூடுதலாக வரியைக் குறைத்து அவர்களுக்கு பேருதவி செய்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 15 ஆயிரம் கிலோகிராமுக்கு மேலாக சுமை ஏற்றும் லாரிகளுக்கு அடிப்படை வரி ரூ.2,500 என்ற அளவிலே இருந்ததை மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.2,300 ஆகக் குறைத்து, அதற்குப் பின்பு ஏற்றப்படும் ஒவ்வொரு 250 கிலோகிராமுக்கும் 75 ரூபாய் என்ற அளவிலே இருந்த வரியை 50 ரூபாய் என்ற அளவிலே குறைத்து, இன்றைக்கு அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றி இருப்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக அந்த லாரி உரிமையாளர்கள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்தார்கள். இதை நீங்கள் எல்லாம் பத்திரிகைகளிலே பார்த்து இருப்பீர்கள். அவர்கள், அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, விளம்பரங்கள்கூட கொடுத்து இருந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், அந்த அளவிற்கு இன்றைக்கு லாரி உரிமையாளர்கள்மீது அக்கறையோடு செயலாற்றி வருகிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதேபோல, மற்றொரு சம்பவத்தையும் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். சமீபத்திலே லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அகில இந்திய அளவிலே வேலைநிறுத்தம் செய்தார்கள். ஆனால் அந்த வேலைநிறுத்தத்தினுடைய பாதிப்பு மற்ற மாநிலங்களில் அதிகமாக இருந்தாலும், தமிழகத்திலே துளிகூட அந்த பாதிப்பு ஏற்படாத அளவிற்கு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையோடு, முன்னேற்பாடுடன் பல்வேறு பணிகள் குறித்து நடவடிக்கைகள் எடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) அந்த லாரி strikeனுடைய—வேலைநிறுத்தத்தினுடைய கஷ்டங்கள், சுமைகள் தமிழக மக்கள் மத்தியில் பாதிப்பு ஏற்படாத அளவிற்கு காத்தவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதுமட்டுமல்ல, அதே லாரி உரிமையாளர்கள் அந்த லாரி strike முடிந்ததற்குப் பின்பு என்னை வந்து பார்த்தார்கள். அவர்கள் வந்து சொன்னதை அப்படியே சொல்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், பாரதப் பிரதமர் மாண்புமிகு வாஜ்பாய் அவர்களைக் கடிதம் மூலமாக தொடர்புகொண்டு எங்களுடைய கோரிக்கைகளுக்காக, லாரி உரிமையாளர்களுடைய வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதோடு மட்டுமல்ல, அங்கு இருக்கின்ற இணை அமைச்சர், போக்குவரத்துத் துறையினுடைய இணை அமைச்சர் கந்தூரி அவர்களை, தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு, வேலைநிறுத்தம் நடைபெற்று வாபஸ் வாங்கிய அன்று காலையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் தொலைபேசியிலே பேசி—அந்த வேலைநிறுத்தம் முடிவுக்கு வர வேண்டும் என்பதற்காக திரு. கந்தூரியிடம் பேசியதற்குப் பின்புதான் அன்று மாலை மத்திய அரசு, இந்த லாரி strike வாபஸை ஒத்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கு அந்த லாரி strike பிரச்சினையை முடித்து வைத்தது அம்மா அவர்கள்தான் என்று சொன்னார்கள். நான் சொல்லவில்லை; அந்த லாரி சங்கத்தினரே, மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டும் அன்றைக்கு மத்திய அரசோடு தொடர்புகொண்டு இந்த முயற்சி எடுக்கவில்லை என்றால், இன்னமும் அந்த லாரி strike தொடர்ந்துகொண்டே போய் இருக்கும்; இப்போது முடிந்து இருக்குமா என்று எங்களால் சொல்ல முடியாது என்று அவர்கள் மனம் உருகி அன்போடு தங்களுடைய நன்றியைச் சொன்னார்கள். இதையெல்லாம் ஏன் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், லாரி



உரிமையாளர்கள்மீது அக்கறை உள்ளவர்தான் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-05

அதேபோல விபத்து அவசர சிகிச்சை மையம்பற்றி மற்றொரு தகவலையும் உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்பு, விபத்துகளைக் குறைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்கள். விபத்தைக் குறைப்பதற்கு அரசு பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிற அதேநேரத்தில், ஒரு பக்கம் அதையும் மீறி விபத்து நடந்துவிட்டால் உடனடியாக அவர்களைக் காப்பாற்றுவதற்காக, அந்த விபத்திலே சிக்கிக்கொண்ட உயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக, தாய் உள்ளத்தோடு, இந்தியாவிலேயே முதன்முறையாக Trauma Care Centres என்று சொல்லக்கூடிய விபத்து அவசர சிகிச்சை மையங்களை உருவாக்கியவர். தனது எண்ணத்திலே உருவாக்கி முதன்முதலாக அதை தன்னுடைய திருக்கரத்தால் தொடங்கி வைத்தவர்கள், மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கி வைத்ததற்குப் பின்பு, இன்றைக்கு அந்த விபத்து அவசர சிகிச்சை மையங்கள், தேசிய நெடுஞ்சாலைகளில் 11 இடங்களில் வெற்றிகரமாக நல்லமுறையில் செயலாற்றிக்கொண்டிருக்கின்றன. இன்னும் இரண்டு இடங்களில் மிக விரைவிலே அந்த விபத்து அவசர சிகிச்சை மையங்களும் செயல்பட இருக்கின்றன. தேசிய நெடுஞ்சாலைகளில் 50 கிலோ மீட்டருக்கு ஒரு மையம் என்ற அளவிலே அந்த விபத்து அவசர சிகிச்சை மையங்கள் இப்போது நடைபெற்று வருகின்றன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பின்பாக மற்றொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன். விபத்து நடந்துவிட்டால்—விபத்து நடப்பதைத் தடுப்பதற்கு ஒரு நடவடிக்கை. அதையும் மீறி நடந்துவிட்டால் அந்த உயிர்களைக் காப்பாற்றுவதற்கு ஒரு நடவடிக்கை. அதையும் மீறி யாராவது விபத்திலே இறந்துவிட்டால் அவர்களுக்கும் தாய் உள்ளத்தோடு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து மற்றும் சிறப்பு நிதிகளிலிருந்து இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உடனுக்குடன் அந்த இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு

நிதி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் சொல்லப்போனால், இன்று, மாண்புமிகு அம்மா அவர்கள்தான் உயிர்களுடைய மதிப்பை உணர்ந்து விபத்திலே இறந்தவர்கள்—இயற்கையான மரணம் தவிர்க்க முடியாதது. ஆனால் மனிதன் கோர விபத்திலே இறந்துவிட்டால் அது மிகக் கொடியதாகும். அதற்காக அந்தக் குடும்பத்திற்கு பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக, இதற்கு முன்பு இருந்த அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் விபத்தைச் சந்தித்து இறந்தால் மட்டும்தான் ரூ.50,000 விபத்து நஷ்ட ஈடு என்று இருந்த நிலையை மாற்றி, மாண்புமிகு அம்மா அவர்கள், எந்த வண்டியில், எந்த வாகனத்தில், யார் இறந்தாலும் அவர்கள் அனைவருக்கும் விபத்து நஷ்ட ஈடு வழங்கப்படும் என்று சொன்னவர் மாண்புமிகு அம்மா அவர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்கள்; அந்தத் தாய் உள்ளத்தோடு, அந்தக் கருணை உள்ளத்தோடு, இப்படிப்பட்ட கருணை மிகுந்த தாயாக இன்றைக்கு இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது இதற்கு முன்பு இருந்தவர்களுக்கு எல்லாம் இந்த யோசனையே வரவில்லை. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அந்த ஈவும், இரக்கமும், கருணையும் இயற்கையிலேயே ஆண்டவன் கொடுத்த வரம் என்பதால் (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட சிந்தனைகள் அவருக்கு இயற்கையாக வந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதறகுப் பின்பாக முதலமைச்சர் அவர்கள் நிவாரண நிதியிலிருந்து கிடைத்துவிட்டாலும்கூட அதற்கு மேலாகவும் நீதிமன்றங்களிலே சென்று அங்கே நஷ்டஈடு கேட்பவர்களுக்கு லோக் அதாலத் முறையை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த 'லோக் அதாலத்' முறையிலே நஷ்டஈடு வழங்குவதற்கு ஒருவர் இறந்துவிட்டால் அதற்கு உயர்ந்தபட்ச நஷ்டஈடு 2 இலட்சம் ரூபாய்தான், 'லோக் அதாலத்திலே' வழங்க முடியும் என்ற உச்சவரம்பு இருந்தது. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள், தாய் உள்ளத்தோடு, கருணை உள்ளத்தோடு நஷ்ட ஈடு வழங்குகின்ற அதிகாரம் 'லோக் அதாலத்'-க்கு இரண்டு இலட்சம் ரூபாய் என்று இருந்ததை மாற்றி இப்போது 10 இலட்சம் ரூபாய் வரை (மேசையைத் தட்டும் ஒலி) நஷ்டஈடு வழங்கலாம் என்று உத்தரவிட்டு இருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.



இன்று, ஒவ்வொரு விஷயத்திலும், அவர்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும், கருணை, ஈவு, இரக்கம் அத்தனையும் அந்தக் கோப்புகளோடு மட்டுமல்ல, அந்தக் கோப்புகளைப் பார்க்கிறபோது, அதற்குப் பின்னால் இருக்கிற மக்களையும் பார்க்கின்றவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வெறும் பேப்பரை மட்டும் பார்ப்பவர் அல்ல. அந்த பேப்பருக்குப் பின்னால் இருக்கிற பல கோடி மக்களை நினைத்து நடவடிக்கை எடுப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கு ஓட்டுநர் உரிமம் வழங்குவதைப் பற்றியும், விபத்துகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் சண்முகவேலு அவர்கள் சொன்னார்கள். அவருக்கும் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஓட்டுநர் உரிமம் வழங்குவதிலே மிகக் கடுமையான நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு, முறையாக உரிய பயிற்சி பெற்றவர்களுக்குத்தான் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுகிறது. அதற்குரிய ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளையும் இன்றைக்கு ஒழுங்குபடுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அமமா அவர்களுடைய ஆணையின்படி போக்குவரத்துத் துறையிலே செய்ய வேண்டிய பணிகள் குறித்து கீழ்க்கண்ட அறிவிப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிடச் சொல்லி ஆணையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஒப்புதலோடு, அவர்களுடைய ஆசியோடு, ஆணையின்படி கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பிற்பகல் 6-10

## போக்குவரத்துத் துறை அறிவிப்புகள்

(1) அனைத்து மாதகரப் பேருந்துகளிலும், மாநகர போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையங்களிலும், ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம், பண்பலை வானொலி ஒலிபரப்பு வசதி அமைக்கப்படும். இதன் மூலம் திரை இசை, போக்குவரத்து சம்பந்தப்பட்ட

பாதுகாப்பான பயணத்திற்குண்டான முக்கிய அறிவிப்புகள் மற்றும் சென்னை பொதுமக்களுக்கு பயனுள்ள தகவல்கள், பயண நேரத்தின்போது பயணிகள் வசதியை முன்னிட்டு தொடர்ந்து ஒலிபரப்பு செய்யப்படும். மாநகரப் போக்குவரத்துக் கழக நிர்வாக அறிவிப்புகளும் இத்தகவல் ஒலிபரப்பில் இடம் பெறும்.

(2) சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில், 'ஒப்பந்த ஊர்தி' என்ற முறையில் இயக்கப்படும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் வாடகைக் கட்டணம், தற்போதுள்ள ரூ. 6,500/-க்குப் பதிலாக நாள் ஒன்றுக்கு பேருந்து வாடகை ரூ. 2,000/- ஆகக் குறைக்கப்படும். மேலும் கிலோ மீட்டர் அடிப்படையில் 1 கிலோ மீட்டருக்கு ரூ. 15/- ஆக ஓடும் தூரத்தின் அடிப்படையில் (குறைந்தபட்சம் 100 கி.மீ.) வாடகை சீரமைக்கப்படும்.

(3) வெளி மாநிலத்திற்கு இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இருக்கை முன்பதிவு செய்பவர்களுக்கு அவர்கள் சென்னையில் வசிக்கும் இடத்திலிருந்து கோயம்பேடு பேருந்து நிலையம் செல்ல, மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவச அனுமதி வழங்கப்படும். விரைவுப் பேருந்து புறப்படும் நேரத்திலிருந்து இரண்டு மணி நேரம் முன்னர் வரை இந்த இலவசப் பயணம் மேற்கொள்ளும் வசதி அனுமதிக்கப்படும். இந்தத் திட்டத்தின் வெற்றியைப் பொறுத்து தமிழகத்திற்குள் இயக்கப்படும் பேருந்துகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

(4) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால், தமிழகத்திற்குள் இயக்கப்படும் பகல் நேரப் பேருந்துகளில் (செமி-டீலக்ஸ்) மற்றும் சொகுசு (டீலக்ஸ்) பேருந்துகளில் பயணிகளின் நலன் கருதி, இதர போக்குவரத்துக் கழகங்கள் இயக்கும் புறநகர்ப் பேருந்துகளில் வசூலிக்கப்படும் கட்டண அளவிலேயே பயணக் கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(5) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இருக்கை முன்பதிவு செய்பவர்கள், சேரும் இடத்திலிருந்து புறப்படும் இடம் வரை திரும்ப வரவும் ஒரே நேரத்தில் முன்பதிவு செய்தால் (Return Ticket Reservation) அவர்களுக்கு பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் கழிவு வழங்கப்படும்.



(6) சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்படுகின்ற பெருந்துறை மருத்துவக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மருத்துவக் கல்வி, M.B.B.S., பட்டப்படிப்பிற்கு மாணவர்கள் சேர்க்கை எண்ணிக்கை தற்போதுள்ள 60-லிருந்து 100 ஆக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் குழந்தைகளுக்குக் கூடுதலாக இடங்கள் ஒதுக்கப்படும்.

(7) மேலும், இம்மருத்துவக் கல்லூரியில் புதிதாக சமூக மருத்துவ இயல் (M.D. Community Medicine) முதுகலை பட்டப்படிப்பு மற்றும் குழந்தைகள் மருத்துவத்தில் (M.D. Paediatric) முதுகலை பட்டப்படிப்பு ஆகியவற்றைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(8) சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் ஈரோடு பொறியியல் கல்லூரியில் புதியதாக கட்டுமான பொறியியல் துறை M.E.. (Structural Engineering) முதுகலை பட்டப்படிப்பு தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(9) சாலைப் போக்குவரத்து நிறுவனம், தரமணி வளாகத்தில் ஓட்டுநர் பயிற்சிக்காக புதிய ஓட்டுநர் பயிற்சித் தளம் ஒன்று (Driving Range) ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 2003-2004 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டப் பணிகள்

(1) சென்னை வேளச்சேரி அரசு மத்திய தானியங்கிப் பணிமனையில் ரூ. 5 இலட்சம் செலவில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(2) இராமநாதபுரம், சிவகெங்கை, திண்டுக்கல், உதகமண்டலம், விழுப்புரம், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள அரசு தானியங்கிப் பணிமனைகளில் ரூ. 10.5 இலட்சம் செலவில் மின் இயந்திர தானியங்கி நிலை உயர்த்திகள் அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் (போக்குவரத்து) துறையில் கீழ்க்கண்ட அறிவிப்புகளை அறிவிக்கச் சொல்லி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். அவர்களுடைய ஆணையின்படி கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

படிப்பதற்கு முன்பாக அறிவிப்புகள் ஒவ்வொன்றுக்கும் உள்ள தலைப்புகள் நீங்கலாக அறிவிப்புகளை மட்டும் படிக்கிறேன். தலைப்பு ஒன்று கொடுத்து இருப்பார்கள். அதற்கு அடுத்து பின்னாலே விளக்கம் கொடுத்து இருக்கிறார்கள். நேரடியாக அறிவிப்புகளை மட்டும் படிக்கிறேன்.

(1) வேலூர், திருச்செங்கோடு மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மூன்று இடங்களில் ஓட்டுநர் உரிமம் கோருபவரின் திறமையை சோதிக்க ஏதுவாக தேர்ச்சித் தளங்கள் ரூ. 47.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தபபடும்.

(2) பொதுமக்கள் மற்றும் வாகன உரிமையாளர்கள் வசதிக்கென அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் (86 அலுவலகங்கள்) நாற்காலிகள் மற்றும் மின்விசிறிகள் ரூ. 4.00 இலட்சம் செலவில் நடப்பு ஆண்டில் வழங்கப்படும்.

(3) தற்போது தமிழ்நாட்டில் சோதனைச் சாவடிகள் உட்பட மொத்தம் 105 போக்குவரத்துத் துறை அலுவலகங்கள் உள்ளன. அலுவல் நிமித்தமாக இவ்வலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களுக்கு நல்ல குடிநீர் வழங்கும் பொருட்டு எவர்சில்வர் குடிநீர் பாத்திரங்கள், டம்ளர்கள் மற்றும் ஸ்டூல்கள் நடப்பாண்டில் ரூ. 1.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

பிறபகல் 6-15

(4) தற்போது போக்குவரத்து அலுவலகங்களில் போலி ரூபாய் நோட்டுகளைக் கண்டறியும் கருவி ஏதுமில்லை. எனவே போலி ரூபாய் நோட்டுகளைக் கண்டறிய ரூ.1.00 இலட்சத்தில் Ultra Violet Detector கருவிகள் வழங்க இவ்வரசு முடிவு செய்துள்ளது.

(5) சென்னை போக்குவரத்து தலைமை அலுவலகத்திற்கு இரண்டு Fast Track நகலெடுக்கும் இயந்திரங்கள் ரூ.2.50 இலட்சம் செலவில் வழங்கப்படும். விரைவாகப் பணியினை முடித்திட இவ்வியந்திரங்கள் பயன்படும்.

(6) தற்போது சென்னை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் போதுமான தொலைபேசி உள் இணைப்புகள் இல்லை. காலதாமதமின்றி அலுவலகப் பணியைச் செவ்வனே நிறைவேற்றிட



ரூ. 0.5 இலட்சத்தில் உள்ளிணைப்பு தொலைபேசி வசதிகள் செய்து தரப்படும். (குறுக்கீடு) சரி ரூ.0.5 இலட்சம். (குறுக்கீடு) ரூ.50,000 செலவில் தொலைபேசி வசதிகள் செய்து தரப்படும்.

(7) தற்போது மாநிலத்தில் 11 அவசர விபத்து நிவாரண மையங்கள் இயங்கி வருகின்றன. இதன் தொடர்ச்சியாக விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் உயிரினைக் காப்பாற்றும் பொருட்டு இம்மையங்கள் அமைக்கப்படாத மற்ற பகுதிகளில், குறிப்பாக தென் மாவட்டங்களில், நடப்பு ஆண்டில் மேலும் 20 அவசர விபத்து நிவாரண மையங்கள் ஏற்படுத்தப்படும்.

(8) தற்போது வட்டாரப் போக்குவாத்து அலுவலகங்களில் Fax கருவி வசதி இல்லை. எனவே தலைமை அலுவலகம் மற்றும் சார்நிலை அலுவலகங்கள் இடையே சிறந்த தகவல் பரிமாற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு முதற்கட்டமாக 10 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு ரூ.1.00 இலட்சம் செலவில் Fax கருவிகள் வழங்கப்படும்.

(9) பகுதி அலுவலகங்கள் மிகவும் பின்தங்கிய மற்றும் வசதிகள் குறைவான இடங்களில் அமைந்துள்ளன. அலுவலக ரீதியாக பொதுமக்களும் உயர் அலுவலர்களும் அடிக்கடி பகுதி அலுவலர்களிடம் தொடர்புகொள்ள வேண்டியிருப்பதால் இந்த அலுவலகங்களுக்குத் தொலைபேசி இணைப்பு வசதிகள் ரூ. 60,000/- செலவில் ஏற்படுத்தப்படும்.

(10) சென்னையில் ஓட்டுநர் உரிமம் பெறவரும் நபர்களின் வாகனம் ஓட்டும் திறனைக் கண்டறிவதற்கு தற்போது தேர்ச்சித் தளம் ஏதுமில்லை. இதற்கென தனியாக சோதனைத் தளம் இருந்தால் ஓட்டுநர் உரிமம் கோரும் நபர்களின் வாகன ஓட்டும் திறனை அறிவியல் முறையில் மதிப்பீடு செய்ய இயலும். எனவே சென்னை தரமணியில் உள்ள சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகத்தில் சென்னையில் உள்ள 8 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் பயன்பெறும் வகையில் ஒரு மிக நவீன தேர்ச்சித் தளம் ரூ. 35.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

(11) வாகனங்கள் பதிவு செய்தல், உரிமம் பெறுதல், கட்டணம் செலுத்துதல், Permit விண்ணப்பித்தல் போன்றவற்றிற்கு வரும் பொதுமக்கள், அலுவலகத்திற்கு வெளியே தாழ்வாரத்திலும் மரத்தடியிலும் நின்று காத்திருக்க வேண்டிய இந்த நிலைமையைத்

தவிர்க்க, சென்னை (வடமேற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு காத்திருக்கும் கூடம் ரூ. 2.02 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

(12) வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், கோவை (வடக்கு) மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், கோவை (தெற்கு) ஆகிய இரண்டு அலுவலகங்களும் ஒரே கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இதனால் பதிவறைக்கென போதுமான இடவசதி இல்லை. இந்நிலையைப் போக்க முக்கியமான ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு ஏதுவாக ரூ.3.47 இலட்சம் செலவில் பதிவறை ஒன்று கட்டித்தரப்படும்.

(13) கோவில்பட்டியில் உள்ள பகுதி அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இலுப்பையூரணி கிராமத்தில் ஊரக வளர்ச்சித் துறைக்குச் சொந்தமான பழைய கட்டடம் ஒன்று தற்போது தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் உத்தரவின்படி போக்குவரத்துத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பழைய கட்டடத்தை நடப்பு ஆண்டில் ரூ. 6.65 இலட்சம் செலவில் பழுதுபார்த்து புதுப்பித்து அலுவலகக் கட்டடமாகப் பயன்படுத்தப்படும். கூடுதல் வசதியுடன்கூடிய அக்கட்டடம் பொதுமக்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவு உரையாக, இந்திய அரங்கில் இன்று இதய தெய்வம் அம்மா அவர்களுக்குக் கிடைத்திருக்கும் மதிப்பு, மரியாதை வேறு எவர்க்கும் கிடைக்காததற்கு என்ன காரணம்? இணையில்லாத் தலைவியாய் அம்மா அவர்கள் இருப்பதற்கு என்ன காரணம்? புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புரட்சிப் பெருந்தலைவியாக இருந்ததற்கு என்ன காரணம்? கூரிய அறிவு காரணம்; கொள்கையில் உறுதி காரணம்; சீரிய திட்டம் காரணம்; செயல் வேகத் திறமை காரணம்; நேரிய பார்வை காரணம்; நிகரில்லா துணிச்சல் காரணம்; ஏழைகளிடம் இரக்கம் காரணம்; எவரிடத்தும் அன்பு காரணம். ஆகவேதான் ஈடு இணையற்ற அங்கீகாரத்தை இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு இந்தியா வழங்கியுள்ளது. மதிப்பு என்பது கேட்டுப் பெறுவதல்ல. ஒருவரைப் பார்த்தாலே பார்த்தவரின் மனதில் தோன்றுவது. இன்றைக்கு சில பேர் நாற்காலியோடுதான் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். பாவம், அவர்களுக்கு நாற்காலி ஆசை இன்னும் விடவில்லை. அது காவல் துறையானாலும் நாற்காலியோடுதான் போகிறார்கள். மரியாதை என்பது அடித்துக் கேட்டு, அடாவடித்தனமாகப் பெறுவதல்ல.



காணுகின்றபோதே கையெடுத்துக் கும்பிடத் தோன்ற வேண்டும். அதுதான் மரியாதை. அப்படி எதிரிகளால்கூட கும்பிடப்படுகின்ற இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு புதிய சாதனைகளை இன்னும் படைக்கும் என்பதை இம்மாமன்றத்திற்குப் (மேசையைத் தட்டும் ஒலி) பணிவோடு தெரிவித்துக்கொண்டு, என் உரையை நிறைவு செய்கிறேன்.

பிற்பகல் 6-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ள அனைத்தையும் நான் படித்துப் பார்த்தேன். அதிலே இருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களின் கோரிக்கைகளைப் படிப்படியாக நமது அம்மா அவர்களின் அரசு, நிதிநிலைக்கேற்ப அந்தக் கோரிக்கைகளையெல்லாம் பரிவுடன் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்து, நான் அவர்கள் எழுப்பியிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக சொல்லியிருக்கின்ற கருத்துகளுக்கு ஓரளவு என்னுடைய பதிலுரையில் விளக்கம் அளித்திருக்கிறேன் என்று நம்புகிறேன். ஆகவே இந்த விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த போக்குவரத்துத் துறை, இயக்கூர்திகள் சட்டங்கள் குறித்த இரண்டு மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருமாறு அன்போடு வேண்டி, பணிவோடு அமர்கிறேன், நன்றி. வணக்கம்.

## கோரிக்கை எண் 24—உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 24—உள் துறை — இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் — நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. மணி,இருக்கையில் இல்லை. திரு. டி.மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. லா. சந்தானம், இருக்கையில் இல்லை. திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் போவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப பெறப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மே. ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"உள் துறை—இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 42,15,91,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**கோரிக்கை எண் 46 - போக்குவரத்துத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46 — போக்குவரத்துத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ. இரா. மலையப்பசாமி.

**திரு. அ. இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. மணி, இருக்கையில் இல்லை. திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மேப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மேப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. லா. சந்தானம், இருக்கையில் இல்லை. திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2003 ஏப்ரல் 28

"போக்குவரத்துத் துறை பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 149,27,29,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 16,70,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## 8. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 29-4-2003 ஆம் நாளன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி எண் 32-ஐ 29-4-2003ஆம் நாளன்று தளர்த்தி, அந்நேரத்தினை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை.



2003 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

29-4-2003 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29-4-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 6-24 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

214. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தின்போது மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ்)

215. மானியக் கோரிக்கை எண் 24—உள் துறை — இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003—2004. (தமிழ், ஆங்கிலம்)

216. மானியக் கோரிக்கை எண் 46—போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003—2004. (தமிழ், ஆங்கிலம்)

217. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தி ஏழாவது அறிக்கை. (2001—2003)

218. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தி எட்டாவது அறிக்கை. (2001—2003)

219. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தி ஒன்பதாவது அறிக்கை. (2001—2003)

220. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பதாவது அறிக்கை. (2001—2003)

# இணைப்பு I

*(360ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

**மானியக் கோரிக்கை எண் 24-உள்துறை, இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் - நிருவாகம்**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004**

## 1. சாலைப் போக்குவரத்தின் முக்கியத்துவம்

போட்டி நிறைந்த பொருளாதார சூழ்நிலை காணப்படும் இன்றைய சமூக அமைப்பில், திறமையான போக்குவரத்து முறை இன்றியமையாத ஒன்றாகும். சிறந்த போக்குவரத்து முறையின்றி எந்தப் பொருளாதாரமும் பீடு நடை போட இயலாது. உலக மயமாக்கல் கொள்கையும், மாறி வரும் சமூகப் பொருளாதார மாற்றங்களும் பல்வகையான போக்குவரத்துத் தேவையினை, குறிப்பாக சாலைப் போக்குவரத்துத் தேவையினை அதிகரித்துள்ளன. ஆகவே மாநிலம் முழுவதும், பல்வேறு வகையான வாகனங்களும் போதுமான அளவில் இயக்கப்படும் வகையில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், சாலைகளில் போதுமான அளவு வாகனங்களை அறிமுகப்படுத்துவதோடு போக்குவரத்துத் துறையின் பணி முடிந்து விட்டது என்பது இதன் பொருளன்று. போக்குவரத்துத் துறை, தடங்கல் மற்றும் விபத்து இல்லா பயணத்தை உறுதி செய்ய அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்து செயல்பட வேண்டும். அத்துடனின்றி பல்வேறு போக்குவரத்து அமைப்புகளும் ஒன்றுக்கொன்று சார்ந்து செயல்படுகின்ற வகையில் போக்குவரத்துத் துறை செயலாற்ற வேண்டும். அனைத்துக்கும் மேலாக, பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும், விபத்துகளைக் கட்டுப்படுத்துவதற்கும், தற்பொழுதுள்ள சாலை வசதிகளை எப்படி அறிவியல் பூர்வமாக பயன்படுத்த வேண்டும் என்பதற்கான உத்திகளை வகுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. அத்துடன், வாகனங்கள் வெளியிடும் புகையினை முற்றிலுமாகக் கட்டுப்படுத்தும்வகையில் மாற்று

[2003 ஏப்ரல் 28

போக்குவாத்து எரி சக்தி தொழில்நுட்பங்களைக் கண்டறிய வேண்டிய அவசரத் தேவையும் எழுந்துள்ளது. இம்முன்னுரிமைகளை கருத்திற்கொண்டு சடடம் சார்ந்த மற்றும் சட்டம் சாராத திட்டங்களை கவனமாகவும் திறம்படவும் போக்குவரத்துத் துறை செயல்படுத்தி வருகிறது.

## 2. நிருவாக அமைப்பு

போக்குவாத்துத் துறை போக்குவரத்து ஆணையரின் தலைமையில், உள் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. போக்குவரத்து ஆணையரே தமிழ்நாட்டின் மாநில போக்குவரத்து அதிகாரியாகவும் (State Transport Authority) செயல்படுகிறார். சென்னை நகரில், இணைப் போக்குவாத்து ஆணையர் (நகரம்) வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாகவும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்கள் வட்டாரப் போக்குவாத்து அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர். வட்டாரப் போக்குவரத்து அதிகாரி மற்றும் மாநில போக்குவரத்து அதிகாரி ஆகியவர்களின் ஆணைகளின்மீதான மேல் முறையீடுகளும், மறு ஆய்வு மனுக்களும் சென்னை மாநில போக்குவரத்து மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தால் பரிசீலிக்கப்படுகின்றன.

## 3. போக்குவரத்துத் துறையின் பணிகள்

1988 ஆம் ஆண்டு மத்திய அரசு மோட்டார் வாகனச் சட்டம், 1989 ஆம் ஆண்டு மத்திய அரசின் மோட்டார் வாகன விதிகள், 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள், 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டம் மற்றும் விதிகள் ஆகியவற்றை போக்குவரத்துத் துறை நிருவகிக்கிறது. அத்துடன் இயக்கூர்திகளைப் பதிவு செய்தல், போக்குவரத்துத் வாகனங்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்குதல், ஓட்டுநர் மற்றும் நடத்துநர் உரிமங்கள் வழங்குதல், விபத்துக்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்தல், கட்டணங்களையும், வரிகளையும் வசூல் செய்தல், வாகனங்களின் புகையினால் மாசு ஏற்படுவதைக் கட்டுப்படுத்துதல், சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் போக்குவாத்து சார்ந்த இதர பணிகளும் இத்துறையின் முக்கிய பணிகளில் அடங்கும்.



2003 ஏப்ரல் 28]

## 4. 01-01-2003 நிலவரப்படி மோட்டார் வண்டிகளின் எண்ணிக்கை

| போக்குவரத்து வாகனங்கள் | | போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | |
|---|---|---|---|
| **பயணிப் பேருந்துகள்** | | **இரு சக்கர வாகனங்கள்** | |
| மாநில போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படுபவை | 16843 | மோட்டார் சைக்கிள் | 1515440 |
| | | ஸ்கூட்டர் | 806526 |
| தனியாரால் இயக்கப்படுபவை | 6068 | மொபட்டுகள் | 2608730 |
| சிற்றுந்துகள் | 4395 | இரண்டு சக்கர வாகனங்கள் | 4933696 |
| மொத்தம் | 27306 | மோட்டார் கார | 511847 |
| **ஒப்பந்த வாகனங்கள்** | | | |
| ஆட்டோ ரிக்ஷாக்கள் (சென்னை மாநகரம் 39500) | 114820 | ஈப்பு | 38042 |
| சாதாரண டாக்ஸி | 751 | மூன்று சக்கர வாகனம் (ஆட்டோ தனியார்) | 4025 |
| மோட்டார் கேப் (மாநில அனுமதி) | 34687 | ஸ்டேஷன் வேகன் | 2262 |
| மோட்டார் கேப் (தேசிய அனுமதி) | 4663 | டிராக்டர் | 72589 |
| மேக்ஸி கேப் (மாநில அனுமதி) | 27215 | மூன்று சக்கர வாகனம் | 14719 |
| மேக்ஸி கேப் (தேசிய அனுமதி) | 951 | நான்கு சக்கர வாகனம் (பிற இனங்கள்) | 4998 |
| ஆம்னி பேருந்து (மாநில அனுமதி) | 355 | சாலை உருளை | 476 |
| ஆம்னி பேருந்து (தேசிய அனுமதி) | 162 | மற்றவை | 43152 |
| மொத்தம் | 183604 | | 5592806 |

**பிற இனங்கள்**

| | |
|---|---|
| தனியார் சேவை வாகனங்கள் | 3510 |
| பள்ளிப் பேருந்துகள் | 2700 |
| ஆம்புலன்ஸ் | 2546 |
| தீயணைப்பு வாகனங்கள் | 766 |
| மொத்தம் | 9522 |

**சரக்கு வாகனங்கள்**


| | | | |
|---|---|---|---|
| லாரிகள் (மாநில அனுமதி) | 109706 | | |
| லாரிகள் (தேசிய அனுமதி) | 27600 | | |
| டிராக்டர் மற்றும் டிரெய்லர் | 36303 | | |
| இலகு ரக வாகனங்கள் | 45388 | பயணிகள் வாகனங்களின் மொத்த எண்ணிக்கை | 448506 |
| ஆர்டிகுலேட்டட் வாகனங்கள் | 9077 | | |
| மொத்தம் | 228074 | பயணிகள் அல்லாத வாகனங்களின் மொத்த எண்ணிக்கை | 5592806 |
| போக்குவரத்து வாகனங்களின் மொத்த எண்ணிக்கை | 448506 | மாநிலத்தில் உள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கை | 6041312 |



2003 ஏப்ரல் 28]

**5. தமிழ்நாட்டில் சாலைகளில் ஓடும் வாகனங்களின் வளர்ச்சி**

**1998–ஆம் ஆண்டு முதல் வாகன வளர்ச்சி**




| | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 (1-1-2003 நிலவரப் படி) |
|---|---|---|---|---|---|---|
| போக்குவரத்து வாகனங்கள் | 344244 | 384880 | 399300 | 432959 | 432106 | 448506 |
| போக்குவரத்து அல்லாத வாகனங்கள் | 3270004 | 4071839 | 4207928 | 5126772 | 5225991 | 5592806 |
| மொத்தம் | 3614248 | 4456719 | 4607228 | 5559731 | 5658097 | 6041312 |

**6. கணினி மயமாக்குதல்**

இடர்ப்பாடற்ற, விரைவான மற்றும் திறமையான சேவையினை வழங்கும்பொருட்டு போக்குவரத்துத் துறையினை கணினிமயமாக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. முதற்கட்டமாக, பதினேழு அலுவலகங்கள் தற்போது கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இவ்வலுவலகங்களில் ஓட்டுநர் உரிமங்கள் வழங்குதல், பதிவுச் சான்றுகள் வழங்குதல், வாகனங்களுக்கான மாநில மற்றும் தேசிய அனுமதிச் சீட்டுகள் வழங்குதல், வரி வசூலித்தல் போன்ற பணிகள் கணினி மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் வாகன உரிமையாளர்கள் மற்றும் பொது மக்கள் மேற்கண்ட பணிகளுக்காக அலுவலகங்களில் காத்திருக்கும் நேரம் கணிசமாகக் குறைந்துள்ளது.

புள்ளிவிவர அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் மென்பொருள் படிவங்கள் இந்திய அரசால் ஒருநிலைப்படுத்தப்பட்டுள்ளதால், இரண்டாம் கட்டமாக கணினி மயமாக்கப்படவுள்ள ஏனைய அலுவலகங்களில், தேசிய தகவல் மையத்தால் (NIC) உருவாக்கப்பட்டு மைய அரசால் அங்கீகரிக்கப்பட்ட மென்பொருளைப் பயன்படுத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த புதிய மென்பொருள் கட்டமைப்பினைப் பயன்படுத்தி தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளுக்கேற்ப இதனைச் செயல்படுத்தும் வகையில் வியாசர்பாடியில் அமைந்துள்ள சென்னை (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், மாதிரி அலுவலகமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய கணினி மென்பொருள், சரியான முறையில் செயலாற்றுகிறது என்பதை உறுதி செய்த பின்னர், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும் இப்புதிய செயல்முறை அமல்படுத்தப்படும்.

**7. ஓட்டுநர் திறனை அறிய சோதனை**

ஓட்டுநர் உரிமம் வழங்கப்படுமுன்னர் விண்ணப்பதாரரின் வாகன ஓட்டும் திறனை அறிவியல் ரீதியாக சோதனை செய்ய வேண்டும். இதற்காக, அவர்களின் ஓட்டும் திறனைக் கணிக்கும்வகையில் பழகுநர் உரிமம் மற்றும் நிரந்தர உரிமம் வழங்குவதற்குமுன் கடுமையான சோதனை முறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் மூலம் அளிக்கப்படும் பயிற்சிகள் உன்னிப்பாக கண்காணிக்கப்படுகின்றன. மத்திய மோட்டார் வாகன விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றாத பயிற்சிப்





பள்ளிகளின் அங்கீகாரம் இரத்து செய்யப்படுகின்றது. இந்நடைமுறையின் அடிப்படை நோக்கமே, ஓட்டுநர் திறனை அதிகரித்து அதன்மூலம் வாகன விபத்துகளின் எண்ணிக்கையினை குறைப்பதாகும். இது தவிர, அரசு, ஓட்டுநர் தேர்ச்சித் தளங்களை அமைக்கின்ற திட்டத்தினையும் செயல்படுத்தி வருகிறது. தருமபுரி, தஞ்சாவூர், திருநெல்வேலி, இராமநாதபுரம், காஞ்சிபுரம், திருவள்ளூர், நாமக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய நகரங்களில் ஓட்டுநர் தேர்ச்சித் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. திண்டுக்கல், பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஓட்டுநர் தேர்ச்சித் தளங்கள் அமைக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. தேனியில் புதிய தேர்ச்சித் தளம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள இடங்களில் இனிவரும் ஆண்டுகளில் படிப்படியாக தேர்ச்சித் தளங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**8. வரி விதிப்பு முறை**

1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்பு சட்டத்தின்படி மோட்டார் வாகனங்களுக்கு வாகன வரி விதிக்கப்படுகிறது. வாகன வகை, அதன் எடை, இருக்கைகளின் எண்ணிக்கை, இயந்திர சக்தி போன்றவற்றின் அடிப்படையில் வரி விதிக்கப்படுகிறது. வரி விதிப்பு முறை பின்வருமாறு:-

| வாகன வகை | வரி விதிப்பு முறை |
|---|---|
| சிற்றுந்து (மினி பஸ்) | இருக்கை அடிப்படையில் |
| பெருநகர்ப் பேருந்துகள் | இருக்கை அடிப்படையில் |
| நகரப் பேருந்துகள் | இருக்கை அடிப்படையில் |
| விரைவுப் பேருந்துகள்/புறநகர்ப் பேருந்துகள் (Mofussil Bus) | இருக்கை அடிப்படையில் |
| ஆம்னி (சொகுசு) பேருந்து | இருக்கை அடிப்படையில் |
| மேக்ஸி கேப் | இருக்கை அடிப்படையில் |

[2003 ஏப்ரல் 28

| [illegible] வகை | வரி விதிப்பு முறை |
|---|---|
| ஆட்டோ ரிக்ஷா/சாதாரண வாடகைச் சிற்றுந்து / சுற்றுலா வாடகைச் சிற்றுந்து | 5 ஆண்டுகால வரி (அனுமதி காலம் முடியும் வரை) |
| சரக்கு வாகனங்கள் | பதிவு செய்யப்பட்ட சுமை ஏற்றும் எடை அடிப்படையில் |
| இரு சக்கர வாகனங்கள் | இயந்திரங்களின் செயல்திறன் அடிப்படையில் ஆயுட்கால வரி |

இந்த ஆண்டு முதல் போக்குவரத்து அல்லாத நான்கு சக்கர வாகனங்களுக்கு அவற்றின் மொத்த மதிப்பின் அடிப்படையில் ஆயுட்கால மோட்டார் வாகன வரி விதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய வரி விதிப்பு முறை, புதிய வாகனங்களுக்கு மட்டும் பொருந்தும்.

நடப்பு ஆண்டில் (2003 - 2004) பழைய மோட்டார் வாகனங்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள வரியுடன் (Normal tax) கூடுதலாக "பசுமை வரி" (Green Tax) விதிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாசு ஏற்படுத்தும் பழைய மோட்டார் வாகனங்கள் சற்று கூடுதலாக வரி செலுத்த வேண்டும் என்பதே இதன் அடிப்படை நோக்கமாகும். "பசுமை வரி" கீழ்க்கண்ட அடிப்படையில் வசூலிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | வாகன வகை | பசுமை வரி அமலுக்கு வரும் நாள் | வரி விகிதம் மற்றும் காலம் |
|---|---|---|---|
| 1 | இரு சக்கர வாகனங்கள் | வாகனம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 15 வருடங்கள் முடிவுற்ற நாள் முதல் | ரூ. 500/- (ஐந்து ஆண்டுகளுக்கு) |
| 2 | இரு சக்கர வாகனம் தவிர போக்குவரத்து அல்லாத பிற வாகனங்கள் | வாகனம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 15 வருடங்கள் முடிவுற்ற நாள் முதல் | ரூ. 1,000/- (ஐந்து ஆண்டுகளுக்கு) |
| 3 | அனைத்து போக்குவரத்து வாகனங்கள் | வாகனம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 7 ஆண்டுகள் முடிவுற்ற நாள் முதல் | ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500/- |



2003 ஏப்ரல் 28]

இதனை அமல்படுத்த தமிழ்நாடு மோட்டார் வாகன வரி வி[illegible] சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவர, இச்சட்டமன்றக் கூட்டத் [illegible] தேவையான சட்டமுன்முடிவுகள் அறிமுகப்படுத்தப்படவு[illegible]

சரக்கு வாகன உரிமையாளர்கள் எதிர்கொண்ட இடர்ப்பாடுகளை போக்கும் வண்ணம், வாகன எடை 15,000 கிலோவிற்கு (laden weight) மேலான சுமை ஏற்றும் சரக்கு வாகனங்களின் வரி விகிதம் ரூ. 2,500/- மற்றும் கூடுதலாக உள்ள ஆயிரம் கிலோவிற்கு ரூ. 400/- வீதம் வசூலிக்கப்படுவதற்குப் பதிலாக ரூ. 2,500/- மற்றும் கூடுதலாக உள்ள ஒவ்வொரு 250 கிலோவிற்கும் ரூ. 75/- வீதம் எனவும், பல அச்சு (Multi Axle) கொண்ட சரக்கு வாகனங்களுக்கு 15,000 கிலோவிற்கு ரூ. 2,300/- மற்றும் கூடுதலாக உள்ள ஒவ்வொரு 250 கிலோவிற்கும் ரூ. 50/- வீதம் வரி எனவும் 1-4-2003 முதல் குறைக்கப்பட்டுள்ளன.


**9. வருவாய்**

மாநில அரசின் அதிக வருவாய் ஈட்டும் துறைகளில் போக்குவரத்துத் துறையும் ஒன்றாகும். கடந்த ஏழு ஆண்டுகளில் வரிகள் மற்றும் கட்டணங்கள் வாயிலாக இத்துறை ஈட்டிய மொத்த வருவாய் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:—

[2003 ஏப்ரல் 28

**1997-1998 ஆம் ஆண்டு முதல் ஈட்டிய வருவாயின் வளர்ச்சி**

**(ரூபாய் கோடிகளில்)**




**(ரூபாய் கோடிகளில்)**

| 1997-1998 | 1998-1999 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 | 2002-2003 | 2003-2004 |
|---|---|---|---|---|---|---|
| 469.00 | 561.75 | 581.45 | 592.37 | 648.43 | 750.00 | 860.00 |



2003 ஏப்ரல் 28]

**10. சாலைப் பாதுகாப்பு**

சாலைப் பாதுகாப்பு, போக்குவரத்துத் துறையின் முக்கியமான பணிகளில் ஒன்று. விபத்துகளைத் தவிர்த்து ஒப்பற்ற உயிர்களைக் காப்பாற்ற அரசு சாலைப் பாதுகாப்புப் பணிகளை முனைப்போடு மேற்கொண்டு வருகிறது. மோட்டார் வாகனச் சட்டம், 1988 பிரிவு 215-ன்கீழ் மாநில அளவிலான சாலைப் பாதுகாப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இக்குழுவின் தலைவராவார். இக்குழுவின் இதர உறுப்பினர்கள் பல்வேறு துறைகளிலிருந்து தெரிவு செய்யப்படுகின்றனர். போக்குவரத்துத் துறை ஆணையர், தமிழ்நாடு சாலைப் பாதுகாப்பு ஆணையராகவும் நியமிக்கப்பட்டு பிற அரசுத் துறைகள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து செயலாற்றி வருகிறார்.

இது தவிர, மாவட்ட அளவில், ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையில் சாலைப் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சாலைப் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு உள்ளூர் பிரச்சினைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கும் அமைப்புகளாக இக்குழுக்கள் செயல்படுகின்றன. தற்பொழுதுள்ள ஆணைகளின்படி மூன்று மாதங்களுக்கொருமுறை இக்குழுச்கள் கூட்டப்படல் வேண்டும்.

சாலைப் பாதுகாப்பு மேம்பாடு குறித்து மேற்கொள்ளப்படும் திட்டங்கள் வெற்றி பெற வேண்டுமானால் இத்தகைய நடவடிக்கைகளில் பொது மக்களின் பங்கேற்பும் இன்றியமையாதது. இதனைக் கருத்திற்கொண்டு பொது மக்களின் பிரதிநிதித்துவம் கொண்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்கள், பயணிகள் நலச் சங்கங்கள், மோட்டார் வாகனச் சங்கங்கள், அரசு சாரா அமைப்புகள், சாலைப் பாதுகாப்புத் திட்டங்களின் வல்லுநர்கள் போன்றோர்களுடன் இணைந்து அரசு செயல்படுகின்றது.

**11. சாலைப் பாதுகாப்பு நிதி**

சாலைப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு நிதி வழங்க ஏதுவாக 'சாலைப் பாதுகாப்பு நிதி' என்ற ஒன்றினை அரசு ஏற்படுத்தியுள்ளது. போக்குவரத்து மற்றும் காவல் துறையினரால் வசூலிக்கப்படும் இணக்கக் கட்டணம் (Compounding Fee) மற்றும் அபராதத் தொகை

[2003 ஏப்ரல் 28

(spot fine) ஆகியவற்றிலிருந்து இந்நிதிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. உள் துறை செயலாளரைத் தலைவராகக் கொண்ட குழுவினால் இந்த 'சாலைப் பாதுகாப்பு நிதி' நிர்வகிக்கப்படுகின்றது. சாலைப் பாதுகாப்பு முன்னேற்றப் பணிகளுக்காக கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் இந்த நிதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை பற்றிய விவரங்கள் பின்வருமாறு:-

| ஆண்டு | ஒதுக்கீடு |
|---|---|
| 2000-2001 | ரூ.2.00 கோடி |
| 2001-2002 | ரூ.3.75 கோடி |
| 2002-2003 | ரூ.5.00 கோடி |
| 2003-2004 | ரூ.5.00 கோடி |

கடந்த இரண்டாண்டுகளில் அரசு சாரா நிறுவனங்களுடன் துறை மேற்கொண்ட சாலைப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு இந்நிதியிலிருந்து நிதி வழங்கப்பட்டது. இவ்வாண்டிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்களுக்கான செயல்முறைத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

**12. விபத்துக்குள்ளானவர்கட்கு நிவாரணம் வழங்குதல்:**

1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு, தவறு நிருபிக்கப்படும் முன்னர் வழங்கப்படும் நிதியுதவி (No fault liability scheme), சொலேசியம் திட்டம் மற்றும் மோட்டார் வாகன விபத்துத் தீர்ப்பாயங்கள் மூலம் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ஆகியவை மூலம் நிதி உதவி வழங்கப்படுகிறது.

அத்துடன் முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியின்கீழ், விபத்தில் பாதிக்கப்பட்டோர் அல்லது அவர்களின் வாரிசுதாரர் ஆகியோருக்கு கீழ்க்கண்டவாறு உடனடி நிவாரணம் வழங்கப்படுகிறது:



2003 ஏப்ரல் 28]

| | | | |
|---|---|---|---|
| (i) | இறப்பு | - | ரூ.10,000 |
| (ii) | நிரந்தர செயலிழப்பு | - | ரூ.6,000 |
| (iii) | ஒரு கண் அல்லது ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | - | ரூ.4,000 |
| (iv) | ஏனைய சிறு காயங்கள் | - | ரூ.500 |

மேலும், பரிதாபமான விபத்துகளில் கூடுதல் கருணைத் தொகையும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

**13. அவசர சாலை விபத்து சிகிச்சை மையங்கள்:**

சென்ற ஆண்டு அளிக்கப்பட்ட உறுதிமொழிக்கிணங்க, தமிழ்நாட்டிலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் 50 கிலோமீட்டர் இடைவெளியில் அவசர சாலை விபத்து சிகிச்சை மையங்களை ஏற்படுத்தும் செயற்குறிப்புக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. முதற்கட்டமாக சென்னை-பெங்களூர் மற்றும் சென்னை-திருச்சி நெடுஞ்சாலைகளில் 13 இடங்கள் அவசர விபத்து சிகிச்சை மையங்கள் ஏற்படுத்த தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஸ்ரீபெரும்புதூர் மற்றும் மாமண்டூர் ஆகிய இடங்களில் இரு அவசர விபத்து சிகிச்சை மையங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 21-11-2002 அன்று தொடங்கி வைத்தார்கள். தற்பொழுது 11 மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இம்மையங்கள் "பொன்னான நேரம்" என்று கருதப்படும் ஆபத்தான நேரத்தில் சாலை விபத்துக்குள்ளானவர்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்கின்றன. ஒவ்வொரு மையத்திலும் விபத்துக்குள்ளானவர்களை மீட்க தனியாக ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்று உள்ளது. இந்த மையங்களில் விபத்துக்குள்ளானோருக்கு அவசர சிகிச்சை வழங்கிட ஏதுவாக பயிற்சி பெற்ற மருத்துவப் பணியாளர்கள் (Para Medical Staff) மற்றும் ஓட்டுநர்

[2003 ஏப்ரல் 28

எந்நேரமும் இருந்து வருகின்றனர். பொது மக்கள் விபத்து பற்றிய தகவல்களை கட்டணம் செலுத்தாமல் உடனடியாகத் தெரிவிக்க ஏதுவாக ஒவ்வொரு மையத்திலும் 1033 என்ற நான்கு இலக்கம் கொண்ட தொலைபேசி உள்ளது. சாலை விபத்துகள் பற்றிய தகவல் கிடைத்தவுடன் விபத்து நடந்த இடத்துக்கு ஆம்புலன்ஸ் விரைந்து சென்று அவசர மருத்துவ முதலுதவி வழங்கி உயிர்களைக் காப்பாற்றிய பின்னர், பலத்த காயமடைந்தவர்களை தீவிர மருத்துவ சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கின்றனர். பல முன்னணி மருத்துவமனைகளும் அரசு சாரா அமைப்புகளும் இத்திட்டத்தில் பங்கேற்க முன்வந்துள்ளன. மேலும் அவசர விபத்து சிகிச்சை மையங்களை ஏற்படுத்தவும் முன்வந்துள்ளனர். இம்மருத்துவமனைகளில் விபத்துக்குள்ளானோருக்கு உடனடி மருத்துவ வசதி இலவசமாகவே வழங்கப்படுகிறது. மேலும் விபத்துக்குள்ளானோரைக் கொண்டுசெல்ல போக்குவாத்துக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை.

இந்த அவசர விபத்து நிவாரண மையங்களை (Emergency Accident Relief Centres) பொது மக்கள் எளிதில் அடையாளம் கண்டுகொள்வதற்கு ஏதுவாக தனிப்பட்ட வடிவமைப்பு கொண்ட சாவடிகள் (Distinctive Cubicles) இயங்குகின்றன. எந்நேரமும் இயங்கும் வகையில் தொலைபேசி, தண்ணீர், முக்கிய மருத்துவ உபகரணங்கள் ஆகிய வசதிகளுடன் இம்மையங்கள் தேசிய நெடுஞ்சாலைகளில் ஓரமாக அமைக்கப்பட்டுள்ளன. அடுத்தகட்டமாக இத்திட்டத்தினை மாநிலத்தின் தென் பகுதியிலும் விரிவுபடுத்த அரசு கருதியுள்ளது.

**14 மாசுக் கட்டுப்பாடு:**

மோட்டார் வாகனங்கள் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்து வருவதால் அவற்றால் வெளியேற்றப்படும் புகை சுற்றுப்புறச் சூழலை வெகுவாக மாசுபடுத்தும் அபாயம் உருவாகியுள்ளது. மோட்டார் வாகனம் வெளியிடும் புகையின் அளவு குறித்து 1989 ஆம் ஆண்டைய மத்திய மோட்டார் வாகன விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 28]

பதிவு செய்யப்பட்டு ஓராண்டுக்கும் மேற்பட்ட வாகனங்கள் மாசுக் கட்டுப்பாடு சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். வாகனங்களில் புகை வெளியேற்றும் அளவு (Emission level) வரையறுக்கப்பட்ட அளவிற்குள் இருந்தால் தொடர்புடைய அலுவலர்களால் "மாசுக் கட்டுப்பாட்டுச் சான்று" (Pollution Under Control) வழங்கப்படுகிறது.

சென்னை மாநகரில் சரக்கு வாகனங்களின் புகை வெளியேற்றும் அளவை சோதனை செய்ய மூன்று சோதனை மையங்கள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ளன. செங்கல்பட்டு, திண்டுக்கல் மற்றும் நீலகிரி ஆகிய இடங்களிலும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள "மாசுக் கட்டுப்பாடு சோதனை மையங்கள்" செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, தமிழ்நாட்டில் சென்னை, சேலம், திருச்சி, கோயம்புத்தூர், மதுரை போன்ற நகரங்களிலும், மாநிலத்தின் இதர பகுதிகளிலும் 210 தனியார் புகைச் சோதனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

தற்சமயம் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் வாகனங்களுக்கான கட்டாய மாசுக் கட்டுப்பாடு சோதனை அமல்படுத்தப்பட்டு வருகிறது.

**15. முடிவுரை:**

எதிர்வரும் சவால்களைச் சந்திக்கும் விதத்தில் போக்குவரத்துத் துறையின் நிருவாகத் திறனை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை அரசு முழுமையாக உணர்ந்துள்ளது. இதற்கிணங்க ஒவ்வொரு செயல்பாட்டிலும் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, இயலும் இடங்களிலெல்லாம் தொழில்நுட்ப மேம்பாடுகளை இவ்வரசு அறிமுகப்படுத்தி வருகிறது. வாகன உரிமையாளர்களுக்கும், பொது மக்களுக்கும் மனநிறைவு அளிக்கும் வகையில் செயல்பட அனைத்து முயற்சிகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.

**இணைப்பு II**

## மானியக் கோரிக்கை எண் 46—போக்குவரத்துத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004

*(76 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### 1.0. முன்னுரை

மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை திறம்படச் செய்து தருவதில் தமிழக அரசு இந்தியத் துணைக் கண்டத்திற்கே முன்னோடியாக அமைந்துள்ளது. சாரத்திலே மிகு சாத்திரங்கண்டு தருவதிலேயுயர் நாடாம் நம் தமிழ்நாட்டில் நாட்டு மக்கள் நலமுற்று வாழவும், நானிலத்தவர் மேனிலை எய்தவும், அடிப்படை ஆதாரமாக அணிசெய்வது போக்குவரத்துத் துறையாகும். முளைத்து எழும் பிஞ்சு முதல் முதியவர் வரை அனைவருக்கும் முதுகெலும்பாய், நீலத்திரை கடலோரத்திலே நின்று தவஞ்செய் குமரி எல்லை முதல் சீர்மிகு சென்னை வரையும், வைகறை முதல் யாமம் வரை மின்னல் வெட்டியிடித்தாலும், மேகம் கொட்டியிடித்தாலும், காற்று தக்கையடித்தாலும் இடைவிடாது போக்குவரத்து வசதிகளை அளித்து வருகின்றது தமிழ்நாடு அரசு. தமிழ்நாட்டில் குறிஞ்சியோ, முல்லையோ, மருதமோ, நெய்தலோ, எட்டு திசைகளிலுஞ் சென்றிவைவிற்றே எண்ணும் பொருளனைத்தும் கொண்டு வருவோம் என்ற பாரதியின் கனவை நிறைவேற்றிட நகர, புறநகரப் பேருந்துகள், மலைப்பகுதிப் பேருந்துகள், விரைவுப் பேருந்துகள், மாநிலங்களுக்கிடையேயான பேருந்துகள் என பலதரப்பட்ட பேருந்துகளைக் கொண்டு இவ்வுலக மனிதர்களை உடன்பிறந்தார்களைப் போல பாவித்து பக்கத்தில் வந்து பளிச்சென்று ஏற்றிக் கொண்டு, நித்தமும் பாதுகாப்பான, சிக்கனமான, சிறப்பான சேவையினை தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் பொது மக்களுக்கு அளித்து வருகிறது.

போக்குவாத்துத் துறையின் கட்டுப்பாட்டில் 18 போக்குவரத்துக் கழகங்களும், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து ஆலோசனை பணிக் குழு மற்றும் சாலைப் போக்குவரத்து நிறுவனம் ஆகியவையும், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை என்ற துறைத் தலைமையகமும் உள்ளன.



185-078 சென்னை-600 009



இதைத் தவிர, மத்திய அரசுத் துறைகளான இரயில்வே, தபால் மற்றும் தொலைத் தொடர்பு, விமானப் போக்குவரத்து ஆகிய துறைகள், தமிழ்நாட்டில் செயல்படுத்தும் திட்டங்கள் தொடர்பாக மாநில அரசின் ஒருங்கிணைக்கும் முகமையாக போக்குவரத்துத் துறை செயல்படுகிறது.

### 2.0 அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்

2.1 தமிழ்நாட்டில் 1971 ஆம் ஆண்டு வரை போக்குவரத்து இயக்கம் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. பின்னர், இந்திய நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்களிடம் 1971 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. 1976-ல் பட்டாபிராமன் குழுவும், 1990-ல் தில்லைநாயகம் குழுவும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அமைப்பு மற்றும் செயலாக்கத்தை ஆய்வு செய்து, அதனைச் சீரமைக்கத் தக்க பரிந்துரைகளைத் தந்தன. அவற்றில், முக்கியமான பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தேவைக்கேற்ப செயல்படுத்தி, போக்குவரத்துக் கழகங்கள் மேம்படுத்தப்பட்டன.

2.2 31-03-2003 நிலவரப்படி அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பணிகள் மற்றும் செயல்திறன்கள் ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| | சென்னை மாநகரப் பேருந்துகள் | 2554 |
| | நகரப் பேருந்துகள் (மாவட்டங்களில்) | 5590 |
| | புறநகர் பேருந்துகள் | 5810 |
| | விரைவுப் பேருந்துகள் | |
| | மாநிலத்திற்குள் | 524 |
| | வெளி மாநிலங்களுக்கு | 278 |
| | மலைப் பகுதி பேருந்துகள் | 523 |
| | மொத்தம் | 15279 |
| | உபரி பேருந்துகள் | 1391 |
| | மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை | 16670 |
| 2. | ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் | 62.84 (இலட்சம் கி.மீ.) |
| 3. | நாளொன்றுக்கு ஏற்றிச் செல்லப்படும் பயணிகளின் எண்ணிக்கை | 156.28 (இலட்சம்) |

[2003 ஏப்ரல் 28

| | |
|---|---|
| 4. பேருந்துகளின் உபயோகம் | 91.73% |
| 5. கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சிறப்புப் பேருந்துகள் நீங்கலாக) | 97.55% |
| 6. கிலோ மீட்டர் செயல்பாட்டுத் திறன் (சிறப்புப் பேருந்துகளையும் சேர்த்து) | 100.89% |
| 7. பயணிகள் அடர்வு | |
| (அ) மாநகரம் மற்றும் நகரம் | 68.35% |
| (ஆ) புறநகர் | 83.39% |
| (இ) விரைவுப் பேருந்து | 74.59% |
| (ஈ) மலைப் பகுதி | 95.77% |
| சராசரியாக | 76.18% |
| 8. பழுதுபடுதல் (10,000 கிலோ மீட்டருக்கு) | 0.28 |
| 9. விபத்துகள் (1,00,000 கிலோ மீட்டருக்கு) | 0.31 |
| மொத்த விபத்துகள் | 7206 |
| உயிரிழப்பு விபத்துகள் | 1243 |
| இறந்தவர்களின் எண்ணிக்கை | 1488 |
| 10. எரிபொருள் செயல் திறன் (கி.மீ/லிட்டருக்கு) | |
| (அ) மாநகரம் மற்றும் நகரம் | 4.19 |
| (ஆ) புறநகர் | 4.58 |
| (இ) விரைவு | 4.37 |
| (ஈ) மலைப் பகுதி | 3.44 |
| சாரசரியாக | 4.37 |
| 11. 10,000 கிலோ மீட்டருக்கு எஞ்சின் ஆயில் | 11.10 லிட்டர் |
| 12. கழிவு செய்யப்பட்ட உருளையின் ஓட்டம் | 1.62 (இலட்சம் கி.மீ.) |
| 13. புதுப்பிக்கப்பட்ட உருளைப்பட்டை காரணக்கூறு | 4.12 |
| 14. ஒரு பேருந்துக்குப் பணியாளர்கள் (பணிமனை உட்பட) | 7.64 |



2003 ஏப்ரல் 28]

**2.3 போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைத்தல்**

போக்குவரத்துக் கழகங்கள் அதிகமான எண்ணிக்கையில் இருந்ததன் காரணமாக நிர்வாகச் செலவுகள் அதிகரித்தன. நிர்வாகச் செலவு அதிகரிப்பு மற்றும் போக்குவரத்துக் கழகங்களிடையே பேருந்து இயக்கத்தில் தேவையற்ற போட்டி காரணமாக போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தைச் சந்தித்தன. எனவே நிர்வாகச் செலவுகளைக் குறைக்கவும், தேவையற்ற போட்டியைத் தவிர்க்கவும் போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைக்க முடிவெடுக்கப்பட்டு, மாநகரப் போக்குவரத்துக் கழகம் கோட்டம்-1 உடன், மாநகரப் போக்குவரத்துக் கழகம் கோட்டம்-2ஐயும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் கோயம்புத்தூர்--கோட்டம்--1 உடன், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் கோயம்புத்தூர்--கோட்டம்--3 (உதகமண்டலம்)ஐயும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு கோட்டம்--1 உடன், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு--கோட்டம்--2)-ஐயும் ஒருங்கிணைக்கும் பணி முறையே 10-01-2001, 07-11-2000 மற்றும் 12-01-2002-ல் முடிவடைந்து விட்டது. ஏனைய போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைக்கும் வரைவுக் கருத்துருவின்மீது மைய அரசின் இறுதி ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைக்கும் பணிகளின் தற்போதைய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| வ.எண் | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் | ஒருங்கிணைப்பிற்குப் பின் கழகத்தின் பெயர். | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | மாநகரப் போக்குவரத்துக் கழகம் (சென்னை-கோட்டம்—1) சென்னை | மாநகரப் போக்குவரத்துக் கழகம். சென்னை. | 10-01-2001 முதல் ஒருங்கிணைக்கப் பட்டது. |
| 2 | மாநகரப் போக்குவரத்துக் கழகம் (சென்னை-கோட்டம்—2) சென்னை | | |
| 3 | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு கோட்டம்—1) சென்னை | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) சென்னை. | 12-01-2002 முதல் ஒருங்கிணைக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 4 | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு கோட்டம்-2) சென்னை | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) சென்னை. | 12-01-2002 முதல் ஒருங்கிணைக்கப் பட்டது. |
| 5 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-1) விழுப்புரம் | | |
| 6 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-2) வேலூர் | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) விழுப்புரம். | மையஅரசின் இறுதி ஆணை எதிர்பார்க்கப் படுகிறது |
| 7 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-3) காஞ்சிபுரம் | | |
| 8 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம்-1) சேலம் | | |
| 9 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம்-2) தருமபுரி | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) சேலம். | மையஅரசின் இறுதிஆணை எதிர்பார்க்கப் படுகிறது |
| 10 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்-1) கோவை | | கோட்டம்-2 ஐ கோட்டம் 1 உடன் ஒருங்கிணைக்கும் வரைவுக் கருத்துரு மீது மைய அரசின் இறுதி ஆணை எதிர்பார்க்கப் படுகிறது. |
| 11 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்-2) ஈரோடு | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) கோவை. | |



| | | | |
|---|---|---|---|
| 12 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை-கோட்டம்-3), உதகமண்டலம் | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) கோவை. | 07—11—2000 முதல் கோவை கோட்டம். 3, (உதகமண்டலம்) கோவை கோட்டம் 1, (கோயம்புத்தூர்) உடன் ஒருங்கிணைக்கப் பட்டது. |
| 13 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-1) கும்பகோணம் | | |
| 14 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-2) திருச்சி | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) கும்பகோணம். | மைய அரசின் இறுதி ஆணை எதிர்பார்க்கப் படுகிறது. |
| 15 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-3) காரைக்குடி | | |
| 16 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-4) புதுக்கோட்டை | | |
| 17 | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரைக் கோட்டம்-1) மதுரை | | |

| | | |
|---|---|---|
| 18 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (மதுரை கோட்டம்-2) திருநெல்வேலி | | |
| 19 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-3) நாகர்கோவில் | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) மதுரை | மைய அரசின் இறுதி ஆணை எதிர்பார்க்கப் படுகிறது |
| 20 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-4) திண்டுக்கல் | | |
| 21 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-5) விருதுநகர் | | |

மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட்டபின், மேற்குறிப்பிட்ட 18 போக்குவரத்துக் கழகங்கள் 7 போக்குவரத்துக் கழகங்களாக இணையும். இதன் மூலம் நிர்வாகச் செலவுகள், தேவையற்ற போட்டிகள் குறைந்து, போக்குவரத்துக் கழகங்கள் லாபம் ஈட்ட வழி வகுக்கும்.

### 3.0 அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலை

**3.1** அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் நிர்வாகச் செலவும், இயக்கச் செலவும் தொடர்ச்சியாக அதிகரித்ததன் காரணமாக, ஒட்டுமொத்த செலவினங்கள் அதிகரித்தன. மாறாக, பேருந்துப் பயணக் கட்டணம் தொடர்ந்து குறைவாக இருந்ததால், அக்கழகங்களுக்குத் தொடர்ந்து இழப்பு ஏற்பட்டு வந்தது. போக்குவாத்துக் கழகங்கள் செயல்பட தொடங்கியது முதல், மார்ச் 2003 (தணிக்கைக்கு முன்) வரை சேர்ந்து வந்த மொத்த இழப்பு ரூபாய் 2150.53 கோடி. வருமானத்திற்கும், செலவினத்திற்கும் உள்ள பெருத்த இடைவெளியே, இந்த அதிக இழப்பிற்குக் காரணமாகும்.





### 3.2 டீசல் விலை அதிகரிப்பு

உலக அளவில் பெட்ரோலிய எண்ணெய்ப் பொருட்களின் விலை அதிகரிக்கும்போது அவ்வப்போது டீசல், பெட்ரோல், மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலையை மைய அரசு மாற்றி அமைக்கின்றது. அவ்விலை உயர்விற்கேற்ப, தமிழகத்தில் பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்படுவதில்லை. 1991-92 ஆம் ஆண்டில் ரூ.229.22 கோடியாக இருந்த இச்செலவினம் படிப்படியாக உயர்ந்து தற்போது 2002-2003ஆம் ஆண்டில் ரூ.1061.31 கோடியாக (தணிக்கைக்கு முன்) உயர்ந்துள்ளது.

### 3.3 நிர்வாகச் செலவு அதிகரிப்பு

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு, நேரடிப் பேச்சுவார்த்தை மூலம், ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது. 1-9-1998 முதல் செய்யப்பட்ட ஊதிய உயர்வின் மூலம், சராசரியாக ஒரு பணியாளருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.835 அதிகமாக அளிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட மொத்த செலவினம், ஓராண்டிற்கு ரூ.231 கோடியாகும். பேருந்து இயக்க வருவாயில், நிர்வாகச் செலவினம் 38 முதல் 53 சதவீதமாகும்.

பணியாளர் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க உயர்வு இல்லையாயினும் நிர்வாகச் செலவினம் ஒவ்வொரு வருடமும் கணிசமாக உயர்ந்துள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் ரூ.388 கோடியாக இருந்த செலவினம், 2002-2003 ஆம் ஆண்டில் (தணிக்கைக்கு முன்) ரூ.1366.10 கோடியாக உயர்ந்துள்ளது.

### 3.4 செலவினத்தை உள்ளடக்கும் அளவு

நிர்வாகச் செலவு அதிகரிப்பு, டீசல் மற்றும் இடுபொருள் விலை அதிகரிப்பு இவற்றிற்குத் தகுந்தாற்போல், போக்குவரத்துக் கழகங்களின் வருவாயை அதிகப்படுத்த இயலவில்லை. 2001ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பேருந்துக் கட்டணங்கள் மாற்றியமைக்கப்பட்டபின், மைய அரசு உலக அளவில் எண்ணெய்ப் பொருட்களின் விலை மாற்றத்தையொட்டி அடிக்கடி எரிபொருட்களின் விலையை அதிகப்படுத்தியுள்ளது. எனினும், டிசம்பர் 2001-க்குப் பின் பேருந்துக் கட்டணங்கள் மாற்றியமைக்கப்படவில்லை. எனவே போக்குவரத்துக் கழகங்களின் வருமானம் உயரவில்லை. பெருகிவரும் எரிபொருள் செலவு, நிர்வாகச் செலவு மற்றும் உதிரிபாகங்கள், இடுபொருட்கள் விலை உயர்வு ஆகியவற்றின் காரணமாக, வருவாய்க்குள்

[2003 ஏப்ரல் 28

செலவினங்களைக் கட்டுப்படுத்த இயலாமற்போய், இவற்றிற்கிடையேயுள்ள இடைவெளி படிப்படியாக உயர்ந்துள்ளது.

**3.5 நிலுவையில் உள்ள கடன் பொறுப்புகள்**

போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான அன்றாட செலவுகளுக்குக்கூட போதுமான அளவு வருவாய் இல்லாததாலும், போக்குவரத்து இயக்கத்தின் செயல்பாட்டை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு அக்கழகங்கள் அதிகமான வெளிக்கடன் பெற வேண்டி உள்ளது. இதன் காரணமாக, அதிக அளவு வட்டியினை நிதி நிறுவனங்களுக்குத் தரவேண்டியுள்ளது. மேலும், விபத்துகளில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு சட்ட ரீதியாக செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையை உரிய காலங்களில் தர முடிவதில்லை. படிப்படியாக நட்டங்களையே சந்தித்து வரும் போக்குவரத்துக் கழகங்கள் கடன் சுமையில் சிக்கி, நிதி நிறுவனங்களுக்கும் எரிபொருள் வழங்கும் நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டிய தொகையினை உரிய காலங்களில் அளிக்க இயலவில்லை. எனவே வெளி நிறுவனங்களிடமிருந்து தேவைக்குத் தகுந்தாற்போல், மேலும் நிதி உதவி பெற இயலவில்லை.

எரிபொருள், உதிரி பாகங்கள் ஆகியவற்றிற்காக பட்ட கடன்களைச் செலுத்துவதற்கும் மற்றும் சட்டபூர்வமாக செலுத்தப்பட வேண்டிய தொகை ஆகியவை உயர்ந்து கொண்டே வருவதன் காரணமாக, போக்குவரத்துக் கழகங்களுக்குக் கடன் பொறுப்புகள் அதிகமாகி, அவற்றின் நிதி நிலைமை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. 31-03-2003-ல் போக்குவரத்துக் கழகங்களின் கடன் பொறுப்புகள் பற்றிய விவரம் பின் வருமாறு:—

| விவரம் | ரூபாய் கோடியில் |
|---|---|
| உயர் வேக டீசல் எண்ணெய் மற்றும் மசகு எண்ணெய் | 71.95 |
| உதிரி பாகங்கள், உருளிகள் மற்றவை வழங்கியவர்களுக்கு | 38.60 |
| விபத்து இழப்பீடாக நீதிமன்றங்களில் செலுத்த வேண்டியது | 57.37 |
| சட்டரீதியாக செலுத்தப்பட வேண்டிய வருங்கால வைப்பு நிதி, பணிக் கொடை மற்றும் தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை | 256.96 |
| இதர இனங்கள் | 5.79 |
| மொத்தம் | 430.67 |



2003 ஏப்ரல் 28]

பழுதடைந்த மற்றும் வயது முதிர்ந்த பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை வாங்கி இயக்க முடியாமலும் போதிய உதிரி பாகங்களைக் கொள்முதல் செய்யாததாலும், பேருந்துகளின் இயக்கத்தைச் செம்மையாகவும் சீராகவும் வைத்திருக்க இயலவில்லை.

கடந்த ஆண்டுகளில், மார்ச் 2003 முடிய போக்குவரத்துக் கழகங்கள் அடைந்த தொடர் நட்டம் ரூ.2,150.53 கோடியாகும். போக்குவரத்துக் கழகங்கள் 31-03-2003 முடிய செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.430.67 கோடியாகும். இதில் போக்குவரத்துக் கழகங்கள் வாங்கிய டீசல், உதிரி பாகங்கள், சட்டரீதியாகச் செலுத்த வேண்டிய தொகை மற்றும் விபத்து ஈட்டுத் தொகையும் அடங்கும். நிதி நிறுவனங்களிடமிருந்து இப்போக்குவரத்துக் கழகங்கள் பெற்ற கடன், 31-03-2003 அன்றைய நிலவரப்படி ரூ.975.69 கோடி நிலுவையில் உள்ளது. பேருந்துப் பயணக் கட்டணத்தை உயர்த்துவதற்குமுன், நிதி நெருக்கடியின் காரணமாக பல போக்குவரத்துக் கழகங்கள், கடன் மற்றும் வட்டித் தொகை போன்றவற்றை குறித்த காலத்தில் செலுத்த முடியவில்லை. நடப்பாண்டில் தவணை தவறிய கடன் தொகை மார்ச் 2003 வரை மட்டும் ரூ. 213.07 கோடி நிலுவையாக உள்ளது. 1995-96-ல் கட்டிய வட்டித் தொகை ரூ.77.77 கோடி. ஆனால் 2002-2003-ல் செலுத்த வேண்டிய வட்டித் தொகை ரூ.141.30 கோடியாக உயர்ந்துள்ளது.

**4. பழைய பேருந்துகளைக் கழித்தல் மற்றும் அவற்றிற்குப் பதிலாக புதிய பேருந்துகள் வாங்குதல்.**

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் கடுமையான நிதி நிலைமை காரணமாக, கடந்த சில ஆண்டுகளாக பழைய பேருந்துகளை உரிய நேரத்தில் மாற்றி, போக்குவரத்துத் தேவைக்கேற்ப போதுமான புதிய பேருந்துகளை வாங்கி இயக்க முடியவில்லை. 31-03-2002-ல் மாற்றப்பட வேண்டிய பழைய பேருந்துகளின் எண்ணிக்கை 6,123 ஆக இருந்தது. இது போக்குவரத்துக் கழகங்களின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கையில் 36.5 சதவீதமாகும். இவ்வரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, நடப்பாண்டில் மார்ச் 2003 முடிய மொத்தம் 1,047 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன. அதில் 1,031 புதிய பேருந்துகள் தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 16 பேருந்துகள் கட்டப்பட்டு வருகின்றன. 31-03-2003 நிலவரப்படி, மாற்றப்பட வேண்டிய பழைய பேருந்துகளின் எண்ணிக்கை 6,376 ஆகி, மொத்த எண்ணிக்கையில் 38.2 சதவீதமாக மாறியுள்ளது.

[2003 ஏப்ரல் 28

நடப்பு 2003-2004 ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்களுக்கு, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் அளிக்கும் கடன் தொகை மூலம், ரூ.30.00 கோடி செலவில் 300 புதிய பேருந்துகள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.0 பேருந்து பயணக் கட்டணம் - மற்ற மாநிலங்களுடன் ஒப்பீடு

பெருகி வந்த நிர்வாகச் செலவு மற்றும் எரிபொருள் செலவு ஆகியவற்றின் காரணமாகவும், போக்குவரத்துக் கழகங்கள் சந்தித்து வந்த கடுமையான நிதி நெருக்கடி காரணமாகவும், போக்குவரத்துக் கழகங்கள் அரசிடமிருந்தும், இதர நிதி நிறுவனங்களிடமிருந்தும் நிதி உதவியை எதிர்பாராது தன்னிறைவாகத் தனது செயல்பாடுகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலும், தமிழக அரசு 25-10-1999-க்குப் பின்னர் உயர்த்தப்படாமல் இருந்த பேருந்துக் கட்டணத்தை 6-12-2001 முதல் சிறிதளவு உயர்த்தி சீரமைத்தது.

ஏனைய மாநிலங்களோடு ஒப்பிடும்பொழுது, தற்பொழுதும் தமிழ்நாட்டில்தான் பேருந்துக் கட்டணம் மிகவும் குறைவாக உள்ளது. தற்போதைய பேருந்துக் கட்டண விகிதம் அண்டைய மாநிலங்களின் பேருந்துக் கட்டண விகிதத்துடன் ஒப்பிடப்பட்டு அதன் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

(ஒரு கி.மீ. கட்டணம் பைசாவில்)

| மாநிலம் | கட்டண விகிதம் அமலுக்கு வந்த தேதி | புறநகர் (சாதாரணம்) | புறநகர் (குறிப்பிட்ட நிறுத்தத்தில் நிற்கும் பேருந்து) | புறநகர் (விரைவு) | சொகுசு | அதி சொகுசு |
|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு | 6-12-2001 | 28 | - | - | 32 | 38 |
| ஆந்திரா | 4-02-2003 | 35 | - | 40 | 45 | 52 |
| கேரளா | 1-10-2001 | 35 | 43 | 46 | 54 | 63 |
| கர்நாடகம் | 13-4-2003 | 30.25 | - | 37.25 | 45.00 | 55.00 |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் பேருந்துக் கட்டணங்கள் மிகவும் குறைவு என்பது தெளிவாகும்.



2003 ஏப்ரல் 28]

### 6.0 சாலைப் பாதுகாப்பு மற்றும் விபத்துகளைத் தவிர்த்தல்

போக்குவரத்துக் கழகங்கள் வழங்க வேண்டியுள்ள விபத்து இழப்பீட்டுத் தொகை 1991-1992ஆம் ஆண்டில் ரூ.16.03 கோடியாக இருந்தது. 2002-2003ஆம் ஆண்டில் (தணிக்கைக்கு முன்) ரூ.[illegible]4.12 கோடியாக உயர்ந்துள்ளது. எனவே அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளைக் குறைப்பதற்கு, முக்கியத்துவம் தரப்பட்டு தக்க மேல்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்களுக்குப் பாதுகாப்பான, சிக்கனமான, சிறப்பான போக்குவரத்து இயக்கத்தை அளிப்பது போக்குவரத்துக் கழகங்களின் தலையாய கடமையாகும். விபத்துகளைத் தடுப்பதில் ஓட்டுநர்களின் பங்கு மிகவும் இன்றியமையானதாகும்.

விபத்தினைத் தவிர்த்து, பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யும்பொருட்டு, ஓட்டுநர்களுக்கு பயிற்சி, ஊக்கத்தொகை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் எடுத்துள்ளன. ஓட்டுநர்களுக்கு ஒருமித்த கவனத்தை அளிக்க யோகாசனப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் பாதுகாப்புப் பயிற்சி தரப்படுகிறது. சாலைப் பாதுகாப்பு சுற்றுக்காவல் முறை மூலம் தவறு செய்பவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஓட்டுநர்கள், விபத்தின்றி பணிபுரிவது தொடர்பாக பாதுகாப்பு விழிப்புணர்வை அவர்களுக்குப் பயிற்றுவிக்கும் பொருட்டு, பேருந்துகளைப் பாதுகாப்பாக ஓட்டுவதற்கான பரிசுத் திட்டம் ஒன்றை போக்குவரத்துக் கழகங்கள் கடைப்பிடித்து வருகின்றன. திறமைவாய்ந்த ஓட்டுநர்களை உருவாக்கும் வகையில், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை போக்குவரத்துக் கழகங்கள் நடத்தி வருகின்றன. ஓட்டுநர்களுக்கு, தொடர்ந்து விபத்தில்லாமல் பணிபுரிந்த ஒவ்வொரு 10 ஆண்டு காலத்திற்கும், ஒரு சிறப்பு ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது. அடிக்கடி விபத்தினை ஏற்படுத்தும் ஓட்டுநர்கள், ஓட்டுநர் பணியில் உள்ள குறைகளைச் சரிசெய்து கொள்ளவும், விபத்துகளைத் தவிர்க்கவும். ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியில் புத்தாக்கப் பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்பப்படுகின்றனர். பேருந்துகளைச் சிறப்பாக இயக்கும் திறமை வாய்ந்த ஓட்டுநர்களை உருவாக்கும் நோக்கத்துடன், சாலைப் போக்குவரத்து நிறுவனம், திறமைவாய்ந்த, பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற இளைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு 12

[2003 ஏப்ரல் 28

வாரங்களுக்கு கனரக மோட்டார் வாகனங்களை இயக்குதல், பேருந்தில் ஏற்படும் பழுதுகளைச் சரிபார்த்தல், பொதுமக்களுடன் நல்லுறவு கொண்டு பழகுதல் மற்றும் முதலுதவி அளித்தல் ஆகியவற்றில் தீவிர பயிற்சிகள் அளிக்கின்றது. இப்பயிற்சி பெற்ற ஓட்டுநர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் வேலைவாய்ப்பு ஏற்படும்பொழுது முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. சாலைப் போக்குவாத்து விதிகளை நன்கு அறிந்துகொள்வதற்கு ஏதுவாக, தமிழ்நாடு அரசு, போக்குவரத்துக் கழகங்களில் கனரக வாகன ஓட்டுநர்களாக நியமனம் பெறுவதற்குரிய கல்வித் தகுதியை 8 ஆம் வகுப்பிலிருந்து எஸ்.எஸ்.எல்.சி/பத்தாம் வகுப்புத் தேர்ச்சி என உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. நெடுந்தூரப் பேருந்துகளில் இரவுப் பணியில் ஈடுபடும் ஓட்டுநர்களின் சிரமத்தினையும், பயணிகளின் பாதுகாப்பினையும் கருதி, தேவையான தடங்களில் இரண்டு ஓட்டுநர்களை பணியில் ஈடுபடுத்தும் முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

**7.0 பயணிகளுக்கான வசதிகள்**

சென்னையிலும், இதர முக்கிய நகரங்களிலும் பல பேருந்து நிறுத்தங்களிலும், பேருந்து நிலையங்களிலும் இரவு நேரப் பயணிகளின் பாதுகாப்பு கருதி மின்னொளி விளம்பரப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. இரண்டு சக்கர வாகனங்களை, பேருந்து நிலையங்களில் நிறுத்த ஏதுவாக, சில பேருந்து நிலையங்களில் போதுமான இடங்களை மாநகரப் போக்குவரத்துக் கழகம் ஒதுக்கியுள்ளது. சென்னையில், பாரிமுனையிலிருந்த பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் விரைவுப் போக்குவரத்து பேருந்து நிலையம், புதிதாக கோயம்பேட்டில் அமைக்கப்பட்ட சென்னை பெருநகரப் பேருந்து நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, பயணிகளின் நலன் கருதி, புதிய பேருந்து நிலையத்தை சென்னையிலுள்ள அனைத்துப் பகுதிகளுடன் இணைக்குமாறு, பல புதிய வழித்தடங்கள் தொடங்கப்பட்டு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே இதுவரை சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தைச் சுற்றி போக்குவரத்திற்கு இடையூறாக சாலைகளில் நிறுத்தப்பட்டிருந்த மாநகரப் பேருந்துகள் அனைத்தும், இவ்விரு பேருந்து நிலையங்களுக்குள் நிறுத்தப்பட்டு பயணிகளின் பாதுகாப்பும், நலனும் மேம்படுத்தப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 28]

**8.0 பயணச் சலுகைகள்**

தமிழ்நாட்டில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய பல்வேறு தரப்பினருக்கு சலுகைகள அளிக்கப்படுகின்றன. அவர்கள்—சட்டப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள், மாணவர்கள், அரசினால் தெரிவு செய்யப்பட்ட பத்திரிகை நிருபர்கள், நாடகக் கலைஞர்கள், மத்திய, மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திர/ எல்லைப் போராட்ட வீரர்கள் மற்றும் மொழிக்காவலர்கள், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவை மனைவியர் மற்றும் வாரிசுதாரர்கள், அரசிடமிருந்து மொழிக் காவலர் நிதி உதவி பெறுபவர்களின் மனைவி அல்லது கணவர் மற்றும் வயதடையாத வாரிசுதாரர்கள், அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் புற்றுநோயாளிகள், கை கால் ஊனமுற்றோர், காது கேளாதோர் மற்றும் கண் பார்வையற்றவர்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் வலிப்பு நோயாளிகள் ஆகியோர் ஆவார்கள்.

**8.1 மாணவர் பயணச் சலுகை**

மாணவர் பயணச் சலுகையினால் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் அடையும் நட்டத்தினை ஈடுகட்டுவதற்காக இந்த ஆண்டு ரூபாய் 252 கோடி அரசிடமிருந்து கோரப்பட்டது. ஆனால் அரசின் நிதி நெருக்கடி காரணமாக மிகவும் நட்டத்தில் இயங்கி வரும் மூன்று போக்குவரத்துக் கழகங்களுக்கு மட்டும் அரசு ரூபாய் 85.76 கோடியை இழப்பீடாக வழங்கவும், மீதமுள்ள தொகையைச் சமுதாயச் செலவாக ஏற்றுக்கொள்ளுமாறும் போக்குவரத்துக் கழகங்களை அறிவுறுத்தியுள்ளது.

மாணவர் பயணச் சலுகையினால் 2002-2003 ஆம் ஆண்டில் 23,44,068 மாணவர்கள் பயன் பெற்றனர். போக்குவரத்துக் கழகங்கள் அளிக்கும் பல்வேறு சலுகைக் கட்டணங்களில், சலுகைக் கட்டணமாக வசூலிக்கும் தொகை மற்றும் அரசு வழங்கும் இழப்பீடு போக, மீதமுள்ள தொகையினை அக்கழகங்களே சமுதாயச் செலவாக வழக்கமாக ஏற்றுக்கொள்கின்றன.

[2003 ஏப்ரல் 28

**9.0 பயணிகளுக்குச் சலுகைகள்**

தொடர்ந்து பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் நலன் கருதி, மாதாந்திரப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. இதற்கு பெருநகர் மற்றும் நகரப் பேருந்துகளில் மாதத்தின் எல்லா நாட்களிலும், இருப்பிடத்திலிருந்து செல்லுமிடத்திற்குச் சென்று வர குறிப்பிட்ட நிறுத்தத்தில் நிறுத்தும் பேருந்துகளில் 40 நடைகளுக்குரிய கட்டண விகிதமே மாதாந்திரக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

**விருப்பம் போல பயணம் செய்யும் கட்டணச் சீட்டுகள் (மாநகரப் போக்குவரத்துக் கழகம் மட்டும்)**

கீழ்க்கண்ட கட்டண விகிதத்தில் பயணிகள் தங்கள் விருப்பம் போல் நகரத்தில் எங்கு வேண்டுமானாலும் பயணச் சீட்டில் அச்சிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பயணம் செய்யலாம்:-

1) விடுமுறை நாள் பயணச் சீட்டு .. ரூ.30
2) வாராந்திரப் பயணச் சீட்டு .. ரூ.160
3) மாதாந்திரப் பயணச் சீட்டு .. ரூ.600

**10.0 தொழிலாளர் நலத் திட்டங்கள்**

போக்குவரத்துக் கழகங்கள் அதன் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலன் பேண, கீழ்க்கண்ட திட்டங்களை வகுத்து அதனைச் செயல்படுத்தி வருகின்றன:

1. பணி அடிப்படையிலான சிறப்பு சம்பள உயர்வு
2. தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இலவச பயண அனுமதிச் சீட்டு வழங்குதல்
3. சலுகைக் கட்டண சிற்றுண்டி வசதிகள்
4. கல்விப் படிகள்
5. ஊதியம் சார்ந்த படிகள்
6. வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்
7. சீருடைகள்
8. குடும்பநல நிதி
9. இறுதிச் சடங்கு செலவுகள்
10. திருமணக் கடன்
11. திருப்பாள் படி (Steering Allowance)



2003 ஏப்ரல் 28]

12. விருப்ப ஓய்வூதியத் திட்டம்
13. விடுப்புப் பயன்கள்
14. விடுமுறை விடுதி
15. சிறப்பு நலநிதித் திட்டம்
16. ஊழியர்களின் பிள்ளைகளின் நலனுக்காக மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்கள்
17. தொழிலாளர் ஓய்வுகால சேமநல நிதித் திட்டம்
18. அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

**11.0 பேருந்து இயக்கத்தினைப் படிப்படியாக தாராளமயமாக்குதல்**

2002-2003 ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலும், பின்னர் வரவு செலவுத் திட்ட உரையிலும், சில குறிப்பிட்ட தடப் பேருந்துகள் படிப்படியாகத் தாராளமயமாக்கப்படும் என்ற அரசின் கொள்கை முடிவு அறிவிக்கப்பட்டது.

தாராளமயமாக்கத்திற்குரிய வழிமுறைகளையும், அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் மறுசீரமைப்பிற்கான வழிமுறைகளையும் கண்டறிவதற்கு அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு விரிவான ஆய்விற்குப் பின் தனது அறிக்கையை அரசிற்கு சமர்ப்பித்தது. பல்வேறு தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விரிவான மற்றும் ஆழ்ந்த கலந்தாய்விற்குப் பிறகு, பேருந்து போக்குவரத்தில் ஆரோக்கியமான போட்டியை அறிமுகப்படுத்தும் வகையில் பொதுமக்களின் நலனைக் கருதி தாராளமயமாக்கலை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நிலையில் உயர்மட்ட குழுவின் பரிந்துரைகளை ஏற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடங்கள் மற்றும் இயக்கங்களை தாராளமயமாக்குவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

தனியார் நிறுவனங்களுக்கு மாற்றம் செய்வதற்கான வழித்தடங்களை கண்டறியவும் மற்றும் அதற்கான குறிப்பிட்ட குறுமத் தொகையை (upset price) நிர்ணயம் செய்யவும், ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து தனியார் உரிமையாளர்களுக்கு திறந்த ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள உரிமங்கள்,

தேசியமயமாக்கப்படும் பகுதித் திட்டத்திலிருந்து விலக்கப்படும் வகையில் பகுதித் திட்டத்தை மாற்றியமைக்க பகுதித் திட்டத்தின் திருத்தப்பட்ட வரைவு அறிவிக்கை 12-11-2002 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டது. விசாரணை நாள் 17-12-2002 என்று குறிப்பிடப்பட்டது. இதற்கிடையே, சிலர் இந்த அறிவிக்கையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுதாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது. உயர்நீதிமன்றத்தில் இவ்வழக்கு முடிவடைந்தவுடன் உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

## 12.0 போக்குவரத்துக் கழகங்களைச் சீரமைக்க கடந்த இரண்டாண்டுகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

### 12.1 நட்டக் குறைப்பு

போக்குவரத்துக் கழகங்கள் குறைந்த பயணக் கட்டணத்தாலும் டீசல் விலை உயர்வின் காரணமாக ஏற்பட்ட அதிக இயக்கச் செலவினங்களாலும், வருவாயில் அதை ஈடுகட்ட முடியாததால் அதிக நட்டத்தில் இயங்கிக்கொண்டு வந்தன.. ஏப்ரல் 2001 முதல் நவம்பர் 2001 முடிய இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் சுமார் ரூ.194.21 கோடி நட்டம் அடைந்தன. தொடர்ந்து ஏற்பட்ட நட்டத்தின் காரணமாக இப்போக்குவரத்துக் .கழகங்கள், டீசல் வாங்கிய வகை, வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதிய நிதி, பணிக்கொடை நிதி, தொழிலாளர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை, நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகை முதலியவற்றை குறித்த காலத்தில் திரும்பச் செலுத்தாததால், இவ்வகைகளின் நிலுவைத் தொகை அதிக அளவில் இருந்தது. இவற்றை ஈடுகட்டும் வகையில் 1-12-2001 முதல் பேருந்துக் கட்டணம் தமிழ்நாட்டில் உயர்த்தப்பட்டு 6-12-2001 முதல் சிறிதளவு குறைத்து திருத்தி அமைக்கப்பட்டது. பேருந்துக் கட்டண உயர்விற்குப் பின் போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலைமை ஓரளவு மேம்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டு அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் ரூ.98.86 கோடி நட்டம் அடைந்தன. இந்த நட்டம், கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் அடைந்த நட்டமான ரூ.228.86 கோடியைவிட மிகக் குறைவானதேயாகும். எண்ணெய் நிறுவனங்களால் நடப்பாண்டில் டீசல் விலை அதிக அளவில் உயர்த்தப்பட்டுள்ள போதிலும், 2002-2003 ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்கள் ரூ.20.50 கோடி (தணிக்கைக்கு முன்) மட்டுமே நட்டம் அடைந்துள்ளன.





நடப்பாண்டில் புதிய பேருந்துகள் இயக்கப்பட்டதன் காரணமாக போக்குவரத்துக் கழகங்களின் இயக்கத்திறன் மேம்பட்டு பொதுமக்களுக்கு சிறந்த சேவை செய்து வருகின்றன.

### 12.2 போக்குவரத்துக் கழகங்கள் ஒருங்கிணைப்பு

தமிழ்நாட்டில் இயங்கிவந்த 21 போக்குவரத்துக் கழகங்களை 7 கழகங்களாக ஒருங்கிணைப்பதன் மூலம் அவற்றின் இயக்கத்திறன் மேம்பட்டு, கட்டமைப்புகளை நல்ல முறையில் பயன்படுத்தி நிர்வாகச் செலவினங்களைக் குறைப்பதற்கு உதவியாக இருக்கும். போக்குவரத்துக் கழகங்களிடையே தற்போது போட்டி மனப்பான்மையுடன் இயக்கப்படும் பேருந்து இயக்கம் சீர் செய்யப்பட்டு நட்டத்தைக் குறைக்க இயலும். இதன் முதல் கட்டமாக மாநகர் போக்குவரத்துக் கழகம், கோட்டம் 1 மற்றும் 2, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், கோட்டம் 1 மற்றும் 2, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் மற்றும் உதகமண்டலம் ஆகிய கழகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 16 போக்குவரத்துக் கழகங்களை, 5 கழகங்களாக இணைப்பதற்கு மாநில அரசின் ஒப்புதலுடன் மத்திய அரசு கம்பெனிகள் சட்டவாரியத்திற்கு இறுதியாணைக்காக அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு விரைவில் ஒப்புதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 12.3 போக்குவரத்துக் கழகங்களுக்கு புதிய பேருந்துகள் வாங்குதல்

போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.150 கோடி மதிப்பில் 1,550 புதிய பேருந்துகள் வாங்க அனுமதிக்கப்பட்டு, மூன்று போக்குவரத்துக் கழகங்கள் 263 புதிய பேருந்துகளை டிசம்பர் 2001 முடிய தடத்தில் இயக்கியுள்ளன. எல்லா போக்குவரத்துக் கழகங்களும் நடப்பாண்டில் மார்ச் 2003 முடிய 1,047 புதிய பேருந்துகளை போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திடம் கடனாகப் பெற்று வாங்கியுள்ளது. 127 புதிய மாசற்ற (ஈரோ-2) பேருந்துகளை சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் இந்தியாவிலேயே முதல் முறையாக இயக்கி, சென்னை மாநகரத்தில் சுற்றுச்சூழல் மாசுபடுவதைக் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. நடப்பாண்டிற்கு (2002-03) 534 புதிய பேருந்துகளை வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 28

## 12.4 பேருந்து இயக்கத்திறனை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

குறைந்த அளவே புதிய பேருந்துகள் வாங்கப்பட்டதன் காரணமாக போக்குவரத்துக் கழகங்களில் அதிக அளவு வயது முதிர்ந்த பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதனால் பேருந்துகளின் இயக்கத்திறன் ஓரளவு குறைந்துள்ளது. இதனை மேம்படுத்தவும், தொழிலாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஜூலை 2001 முதல் கீழ்க்கண்ட வாரங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன:

(அ) பராமரிப்பு வாரம்-I
பேருந்துகளின் கட்டமைப்பை மேம்படுத்தல்

(ஆ) பராமரிப்பு வாரம்-II
பேருந்துகளின் தொழில்நுட்பக் குறைகளை நிவர்த்தி செய்தல்

(இ) பிரேக்டவுன் இல்லா வாரம்
பேருந்து தடத்தில் பழுதாகி நின்றுவிடாமல் இருப்பதற்காக பராமரிப்புப் பணியை மேம்படுத்தல்

(ஈ) பாதுகாப்பு வாரம்
பயணிகள் பாதுகாப்பு மற்றும் விபத்துகளைக் குறைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தல்

(உ) மரியாதை வாரம்
ஓட்டுநர் மற்றும் நடத்துநர்கள் பொதுமக்களிடையே நல்லுறவை வளர்ப்பதன் அவசியத்தை உணர்த்துதல்

(ஊ) பேருந்து தடங்களில் பரிசோதனை முடுக்கி விடப்பட்டு பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்யும் பயணிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

(எ) சகோதர போக்குவரத்துக் கழகங்களிடையே பயணச்சீட்டு பரிசோதனை செய்யும் முறை அமல்படுத்தப்பட்டு வருவாய் அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது

மேற்கண்ட நடவடிக்கைகளின் காரணமாக பேருந்து இயக்கத்திறன் மேம்பட்டு, பேருந்துகளின் தோற்றம் மேம்படுத்தப்பட்டு வருவாய் அதிகரிப்பதற்கும் ஏதுவாக உள்ளது.

## 12.5 விபத்துக் குறைவு விவரம்

பாதுகாப்பான இயக்கத்திற்கு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளால்



2003 ஏப்ரல் 28]

விபத்துகள் கீழ்க்கண்ட அளவில் குறைந்துள்ளன.

| விவரம் | 2000-2001 | 2001-2002 | 2002-2003 |
|---|---|---|---|
| மொத்த விபத்து குறியீடு (ஒரு லட்சம் கி.மீ இயக்கத்திற்கு) | 0.39 | 0.37 | 0.31 |
| உயிர் இழப்பு விபத்து | 1,401 | 1,332 | 1,243 |
| இறந்தவர்களின் எண்ணிக்கை | 1,706 | 1,661 | 1,488 |

## 12.6 சிக்கன நடவடிக்கைகள்

நிர்வாகச் செலவை கட்டுப்படுத்தும்பொருட்டு போக்குவரத்துக் கழகங்களால் கீழ்க்கண்ட சிக்கன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

1. புதிதாக பணியாளர்களை பணியில் அமர்த்துவது (ஓய்வு பெற்ற பணியாளர்கள் இடத்திற்கு பணியாளர் அமர்த்துவது உட்பட) நிறுத்தப்பட்டுள்ளது.
2. புதிதாக பணியிடங்களை உருவாக்குவது எல்லா பிரிவுகளிலும் நிறுத்தப்பட்டுள்ளது.
3. அலுவலர்களுக்கு பணி உயர்வு அளிப்பது நிறுத்தப்பட்டுள்ளது.
4. விபத்து இழப்பீட்டுச் செலவினைக் கட்டுப்படுத்த லோக் அதாலத் முறையில் இழப்பீட்டுத் தொகை வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 12.7 போக்குவரத்துக் கழகங்கள் பெற்ற விருது

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலிக்கு 2001-2002 ஆம் ஆண்டிற்கான அதிக அளவில் டீசல் சிக்கனத்திற்கான விருது, புது டெல்லியிலுள்ள மாநிலப் போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பினால் (ASRTU, New Delhi) வழங்கப்பட்டுள்ளது.

## 12.8 பயணக் கட்டண வசூலில் சாதனை

2002-2003 ஆம் ஆண்டில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்

[2003 ஏப்ரல் 28

மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கைகள் காரணமாக, போக்குவரத்துக் கழகங்கள் தொடங்கப்பட்ட நாள் முதல், ஒரே நாளில் வசூலிக்கப்பட்ட கட்டணத் தொகையைவிட, மிக அதிகத் தொகையான ரூ.11.20 கோடியை, 20-1-2003 அன்று எய்தி சாதனை புரிந்துள்ளன. இதே போன்று சில போக்குவரத்துக் கழகங்களுக்கு அவை தொடங்கப்பட்ட நாள் முதல் வசூலிக்கப்பட்ட கட்டணத் தொகைகளில் 20-1-2003 அன்று பெறப்பட்ட வசூல் தொகை மிகவும் உயர்ந்தபட்சமானது. 20-1-2003 நாளைய வசூல் தொகை, கழகம் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:



2003 ஏப்ரல் 28]

| போக்குவரத்துக் கழகங்கள் | மொத்த வசூல் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | குறிப்புகள் |
|---|---|---|
| மாநகரப் போக்குவரத்துக் கழகம், சென்னை | 107.37 | |
| அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் | 66.00 | |
| அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் | 109.29 | உயர்ந்த பட்ச வசூல் |
| அரசுப் போக்குவரத்துக் கழகம், வேலூர் | 58.77 | |
| அரசுப் போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் | 58.70 | |
| அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் | 70.09 | உயர்ந்த பட்ச வசூல் |
| அரசுப் போக்குவரத்துக் கழகம் தருமபுரி | 57.70 | உயர்ந்த பட்ச வசூல் |
| அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் | 86.74 | |
| அரசுப் போக்குவரத்துக் கழகம், ஈரோடு | 80.48 | உயர்ந்த பட்ச வசூல் |
| அரசுப் போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் | 61.73 | |
| அரசுப் போக்குவரத்துக் கழகம், திருச்சி | 75.05 | உயர்ந்த பட்ச வசூல் |
| அரசுப் போக்குவரத்துக் கழகம், காரைக்குடி | 40.24 | |
| அரசுப் போக்குவரத்துக் கழகம், புதுக்கோட்டை | 27.14 | |
| அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை | 54.34 | |
| அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி | 53.50 | உயர்ந்த பட்ச வசூல் |
| அரசுப் போக்குவரத்துக் கழகம், நாகர்கோவில் | 36.46 | |
| அரசுப் போக்குவரத்துக் கழகம், திண்டுக்கல் | 52.06 | |
| அரசுப் போக்குவரத்துக் கழகம், விருதுநகர் | 24.31 | |
| மொத்தம் | 1119.97 | உயர்ந்த பட்ச வசூல் |

**13.0 உறுதிமொழிகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

பேருந்து இயக்கத்தில் குறிப்பிட்ட தடங்கள் படிப்படியாக தாராளமயமாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதற்கான அரசு நியமித்த உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடங்கள் மற்றும் இயக்கங்களை தாராளமயமாக்குவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

[2003 ஏப்ரல் 28

போக்குவாத்துக் கழகங்களின் சீரமைப்புப் பணியினை மேம்படுத்த தற்போதுள்ள 18 போக்குவரத்துக் கழகங்களை 7 கழகங்களாக ஒருங்கிணைக்க மத்திய அாசின் அனுமதியைப் பெற துரித நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. மத்திய அரசுடன் இவ்வரசு மேற்கொண்ட தொடர் முயற்சியின் பயனாக, மைய அரசு அளித்த வரைவு அறிக்கையின்மீது பொதுமக்கள், போக்குவரத்துக் கழக ஊழியர்கள் மற்றும் அனைத்துத் தரப்பு மக்களிடம் இருந்து மைய அரசு கோரியவாறு கருத்துகள் பெறப்பட்டு, அவற்றைப் போக்குவரத்துக் கழகங்கள் மைய அரசுக்கு அனுப்பி உள்ளன. மைய அரசின் இறுதி அனுமதி விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றது. மைய அரசின் இறுதி ஆணை பெற்றபின், தமிழ்நாட்டில் இதுவரை 18 போக்குவரத்துக் கழகங்களாக இயங்கிவரும் பல்வேறு கழகங்கள், நிர்வாக சீரமைப்பு வலுப்பெறும் வகையில், மொத்தம் 7 போக்குவரத்துக் கழகங்களாக இணைக்கப்படும்.

சென்னை நகரில் வாகனப் புகையையும், காற்று மண்டலம் மாசுறுவதைத் தவிர்த்து, சுத்தமானக் காற்றை மேம்படுத்தும் வண்ணம், ஏற்கெனவே ஓடிக்கொண்டிருக்கும் பழைய பேருந்துகளை படிப்படியாக மாற்றி, அவற்றிற்குப் பதிலாக காற்று மாசுபடுவதைத் தடுக்கும் ஈரோ-2 தகுதி பெற்றுள்ள இன்ஜின்கள் பொருத்தப்பட்டுள்ள புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும் எனவும், முதற்கட்டமாக சென்னை மாநகரத்தில் இவ்வகைப் பேருந்துகள் 200 புதிதாக அறிமுகப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. அதற்கொப்ப நடப்பாண்டில், சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் இவ்வகைப் புதிய பேருந்துகள் 117 இயக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர, மேலும் 10 பேருந்துகள் வயதானவர்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் சுலபமாக ஏறும் வகையில் தாழ்வான படிக்கட்டுகள் கொண்டவையாக கட்டப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு போக்குவாத்துத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது, போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலை சீரமைப்பு, இயக்கத் தகுதி முன்னேற்றம், பராமரிப்பு, சாலைப் பாதுகாப்பு இவற்றைச் சீரமைத்து, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடித்திட தக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. அதற்கொப்ப, அனைத்து நிர்வாக இயக்குனர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு பேருந்து இயக்கங்கள் சீரமைப்பு, பயணச்சீட்டு பரிசோதனை மூலமாக போக்குவரத்துக் கழகங்களின் வருவாயைப் பெருக்குதல், பேருந்துகளின் காலமுறைப்



2003 ஏப்ரல் 28]

பராமரிப்பினை ஒழுங்குபடுத்துதல், பேருந்துகளை இயக்கச் செலவாகும் எரிபொருட்களைக் கட்டுப்படுத்துதல், தேவைபற்ற பதவிகளைக் குறைத்தல், தவறு புரிபவர்கள்மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் பணியாளர்களிடையே கட்டுப்பாட்டினையும் ஒழுக்கத்தையும் கொண்டு வருதல், போக்குவரத்து கட்டமைப்பின் மூலம் இதர வழிகளில் கூடுதல் வருவாய் பெறுதல் ஆகிய வழிகளில் போக்குவரத்துக் கழகங்களை சீரமைக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**14.0 தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்**

மாநில போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பேருந்துகளுக்கு அடிச்சட்டங்கள் வாங்கவும், பேருந்து மேற்கூடு கட்டுமானப் பணிகளுக்கும், பணிமனைகள் நிறுவுவதற்கும், நடைமுறை மூலதனத்திற்கும், குறைந்த வட்டியில் நிதி உதவி வழங்கும் பொருட்டு பொது வைப்பீடுகள் திரட்டி கடன் வழங்க ஏதுவாக, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் 1975 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நிறுவப்பட்டது. இக்கழகத்தின் மொத்த அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 70 கோடியாகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.61.73 கோடியில், அரசின் பங்களிப்பு ரூ.43.03 கோடியாகவும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பு ரூ.18.70 கோடியாகவும் உள்ளன.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் இலாபத்தை ஈட்டி வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் இந்நிறுவனம் ஈட்டிய இலாபம் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சங்களில்)

| ஆண்டு | வருமான வரிக்கு முந்தைய ஆதாயம் | வருமான வரி | வரிக்குப் பிந்தைய ஆதாயம் |
|---|---|---|---|
| 1998-1999 | 1541.62 | 541.00 | 1000.62 |
| 1999-2000 | 2134.58 | 900.00 | 1234.58 |
| 2000-2001 | 1821.38 | 800.00 | 1021.38 |
| 2001-2002 | *1185.40 | 490.00 | 695.40 |
| 2002-2003 (திருத்திய மதிப்பீடு) | **766.20 | 270.00 | 496.20 |

[2003 ஏப்ரல் 28

* மூன்று போக்குவரத்துக் கழகங்களின் வட்டி பாக்கி ரூ.22.23 கோடிகளைத் தள்ளுபடி செய்த பிறகு ஈட்டப்பட்ட ஆதாயம்.

** நலிவடைந்த நிலையிலுள்ள போக்குவரத்துக் கழகங்களின் வட்டி பாக்கி ரூ.15.00 கோடி வரை தள்ளுபடி செய்யவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

31-3-2003-ல் இந்நிறுவனத்தின் வைப்புத் தொகை ரூ.912.36 கோடிகளாகும். தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 31-3-2003 வரை ரூ.4931.18 கோடி நிதி உதவி அளித்திருக்கிறது. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் உதவியுடன் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இதுநாள்வரை 32,725 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன.

## 15.0 பல்லவன் போக்குவரத்து ஆலோசனை பணிக் குழு

பல்லவன் போக்குவரத்து ஆலோசனை பணிக் குழு 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூ. 5 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடனும், ரூ. 2 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடனும், தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2000 ஆண்டு மே மாதம் இந்நிறுவனத்திற்காக செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10 இலட்சமாகவும், அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தற்போது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட தலைவர் உள்ளிட்ட ஏழு இயக்குநர்கள் கொண்ட குழுவின் மேற்பார்வையில் இயங்குகிறது. இப்பணிக் குழு முழுநேர தொழில்முறை நிர்வாக இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

பல்லவன் போக்குவரத்து ஆலோசனை பணிக் குழு கணினி மென்பொருள் தயாரித்தல், நிர்வாக சேவை, போக்குவரத்துப் பணி, தகவல் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய துறைகளிலும் ஆலோசனை வழங்கும் பணிகளை மேற்கொண்டு செயல்படுகிறது. இந்நிறுவனம் அந்தந்தத் துறைகளில் தகுதியும் அனுபவமும் கொண்ட சிறந்த ஆலோசகர்களின் ஆதரவோடு இயங்கி வருகிறது. மேலும் இந்நிறுவனம் சிறந்த தேர்ச்சி பெற்ற வல்லுநர்களின் ஆலோசனையின் அடிப்படையிலும், தனது சகோதர சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் மாநில நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் பணியாளர்களிடமிருந்து



2003 ஏப்ரல் 28]

தனது ஆலோசனைப் பணித்தன்மைக்கேற்ப தேர்ந்தெடுத்துக் கொள்வதோடு, அண்ணா பல்கலைக்கழகத்திலுள்ள பேராசிரியர்கள்/விரிவுரையாளர்களின் சேவையையும் பயன்படுத்தி செயல்பட்டு வருகிறது. இதுமட்டுமின்றி, அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற அனுபவம் மிக்க அலுவலர்களையும் தேவைக்கேற்றபடி இந்நிறுவனம் ஈடுபடுத்திக்கொள்கிறது. பல்லவன் போக்குவரத்து ஆலோசனை பணிக் குழு புதிய பணிகளைப் பெறுவதற்கான முன்அனுபவமும் மற்றும் திறமையும் வாய்ந்த ஆலோசனை நிறுவனங்களுடன் கூட்டு முயற்சியாக பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகளில் பங்கேற்று வருகிறது.

பல்லவன் போக்குவரத்து ஆலோசனை பணிக் குழு தனது தொடக்க காலமான 1984 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக முன்னேறிக் கொண்டு வருகின்றது. கணினிமயமாக்குதல் மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள், நிர்வாக சேவை ஆகிய துறைகளில் பணிகளை விரிவாக்கும் திட்டங்கள் போன்ற திட்டங்களை வகுத்து வருகின்றது.

பல்லவன் போக்குவரத்து ஆலோசனை பணிக் குழு நிறுவனத்தின் கணினிப் பிரிவில் பல பணிகளை வெற்றிகரமாகவும் வாடிக்கையாளர்களின் பாராட்டுகளைப் பெறும் வகையிலும் நிறைவேற்றி முடித்துள்ளன. மேலும், தமிழ்நாடு அரசு வணிக வரித் துறைக்கான விரிவான கணினிமயமாக்கும் திட்டத்தை பெருமைக்குரிய வகையில் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தில் கணினி மென்பொருள் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல், தேவைக்கேற்ப கணினி மென்பொருள் மற்றும் கணினி உபகரணங்கள் வாங்குதல், ஒருங்கிணைந்த கணினி செயற்பாட்டை வடிவமைத்தல் ஆகியவை அடங்கும். மேலும், புதுடெல்லியிலுள்ள மாநில அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டமைப்பிற்காக கணினி மென்பொருள் தயாரித்தல், டானிடா தமிழ்நாடு சுகாதார பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சுகாதாரம்-தடுப்பு மருந்துகள் இயக்ககத்திற்கான பணியாளர் நிர்வாக அமைப்பை கணினிமயமாக்குதல் ஆகியவையும் நடந்தேறிவரும் முக்கிய பணிகளில் அடங்கும்.

## 16.0 சாலைப் போக்குவரத்து நிறுவனம்

சாலைப் போக்குவரத்து நிறுவனமானது, இந்திய சங்கங்களின் பதிவு சட்டம் 1860-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். இந்நிறுவனம், 2002-2003 ஆம் ஆண்டில் தனது 27 வது ஆண்டு பணியில் அடியெடுத்து வைத்து தொடர்ந்து பணி செய்து வருகின்றது. மேலும், சாலைப் போக்குவரத்து தொடர்புள்ள பிரச்சினைகளைப்பற்றி ஆய்வு மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளையும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கொள்முதல் செய்யப்படும் வாகனப் பொருட்களின் தரக்கட்டுப்பாட்டிற்காக பரிசோதித்து மதிப்பீட்டறிக்கைகளையும் அளித்து வருகிறது. பலதரப்பட்ட பயிற்சி அளிக்கப்பட வசதியாக மிகப் பெரிய அளவில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

போக்குவாத்து மற்றும் மோட்டார் வாகன ஆய்வு மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காக 1984 ஆம் ஆண்டில் சாலை மற்றும் போக்குவாத்து பொறியியல் கல்லூரி ஈரோட்டில் தொடங்கப்பட்டது. அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் நலனுக்காகவும், மருத்துவ ஆராய்ச்சிப் பணியினை மேற்கொள்ளவும், பெருந்துறை மருத்துவக் கல்லூரி, 1986 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டு, 1992-1993 ஆம் கல்வியாண்டிலிருந்து தனது சொந்த வளாகத்தில், பெருந்துறையில் செயல்பட்டு வருகின்றது. இதைத்தவிர சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின்கீழ் மூன்று தொழில்நுட்பப் பயிலகங்கள், குரோம்பேட்டை (சென்னை), பர்கூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1992-1993 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன. பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களில் 50% இடங்கள் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் குழந்தைகளுக்காக ஒதுக்கப்பட்டு, தகுதியின் அடிப்படையில் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தினால் நிரப்பப்படுகின்றன. பெருந்துறை மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில், மொத்தமுள்ள 60 இடங்களில், 40 இடங்கள் தமிழக அரசின் ஒற்றைச் சாளரமுறைக்கும், மீதமுள்ள 20 இடங்கள் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கும் ஒதுக்கப்படுகின்றன. இவ்வனைத்துக் கல்வி நிறுவனங்களும், போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் வட்டியில்லா கடனாக வழங்கிய வைப்புத் தொகையின் மூலம் கிடைக்கும் வட்டி வருமானத்திலிருந்து இயங்கி வருகின்றது. மேலும், மேற்கண்ட கல்லூரிகளுக்கு ஏற்படும் மூலதனச்





செலவுகளை, போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து பெறப்படும் சிறப்பு மூலதனப் பங்குத் தொகையைக் கொண்டு ஈடுசெய்யப்படுகிறது.

மேலும், 2002-2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் சார்பாக ரூ.100.00 இலட்சமும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், தருமபுரி சார்பாக ரூ. 50.00 இலட்சமும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், ஈரோடு சார்பாக ரூ.100.00 இலட்சமும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருச்சி சார்பாக ரூ.50.00 இலட்சமும், ஆக மொத்தம் ரூபாய் 3 கோடி, சாலைப் போக்குவரத்து நிறுவனத்திற்கு சிறப்பு பங்களிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

சாலைப் போக்குவரத்து நிறுவனம், கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி மற்றும் தமிழகத்தின் இதர இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 14 வட்டாரப் பயிற்சி மையங்கள் ஆகியவற்றின் மூலமாக, கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளித்து வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டு வரை சுமார் 33,893 மாணவர்களுக்கு ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது இந்த வருடத்தில் 2,778 மாணவர்கள் ஓட்டுநர் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் இருசக்கர வாகன மற்றும் சிறுவாகன ஓட்டுநர் பயிற்சி மையம் ஒன்று 1997-லிருந்து சென்னை குரோம்பேட்டையிலும், இலகுரக வாகன மற்றும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம் ஒன்று திருச்சிராப்பள்ளியிலும் செயல்பட்டு வருகின்றன.

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் தேவையான முக்கிய பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள், பயணச்சீட்டு அச்சிடல், டயர் புதுப்பிக்கத் தேவையான அடிப்படை பொருட்கள் ஆகியவற்றின் விலை மற்றும் ஒப்பந்த விதிகளை முடிவு செய்ய, சாலைப் போக்குவரத்து நிறுவனத்தை இணைப்பு அலுவலகமாக அரசு நியமித்துள்ளது.

## 17.0 தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை

தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, பணித் துறையாகச் செயலாற்றி வருகிறது. இத்துறை மாநிலத்திலுள்ள சுமார் 10,100 அரசுத் துறை வாகனங்களுக்கு பழுது நீக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்துறையில் இப்பணிக்கென மாவட்டத் தலைநகரங்களில் 20 தானியங்கிப் பணிமனைகளும், சென்னை,

தலைமைச் செயலக வளாகத்தில் ஒரு பராமரிப்பு நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாவட்டப் பணிமனைகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிட சென்னை, சேலம் மற்றும் மதுரையில் மூன்று மண்டல துணை இயக்ககங்கள் செயல்பட்டு வருகின்றன.

அரசுத் துறை வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கும் பொருட்டு சென்னையில் தலைமைச் செயலகம், நந்தனம் ஆகிய இடங்களிலும், தஞ்சாவூர், மதுரை, சேலம், கோவை, திருச்சி, தருமபுரி, கடலூர், நாகர்கோவில் ஆகிய இடங்களிலும், ஆக மொத்தம் பத்து எரிபொருள் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

## 18.0 இரயில்வே மற்றும் தபால் துறை ஆகியவை

மத்திய அரசுத் துறைகளான இரயில்வே, தொலைத்தொடர்பு மற்றும் விமானப் போக்குவரத்து ஆகிய துறைகள், தமிழ்நாட்டில் செயல்படுத்தும் திட்டங்களை, மாநில அரசின் ஒருங்கிணைக்கும் முகமையாக போக்குவரத்துத் துறை செயல்படுகிறது. அத்துறைகள் தமிழகத்தில் செயல்படுத்தும் திட்டங்களுக்குத் தேவையான நிலங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், நிலநிர்வாக ஆணையர் ஆகியோருடன் ஒருங்கிணைந்து கையகப்படுத்தப்பட்டு, அத்துறைகளுக்கு வழங்கப்பட்டு, திட்டத்திற்கு உறுதுணையாக போக்குவரத்துத் துறை இயங்குகின்றது.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே இரயில்வே துறையால் மேற்கொள்ளப்படும் திட்டங்களைத் தவிர்த்து, கீழ்க்குறிப்பிட்ட திட்டங்களில் மட்டும், திட்டச் செலவுகளில் 50:50 என்ற விகிதத்தில் தமிழக அரசு தனது பங்கினை ஏற்க இசைவளித்துள்ளது:

| இரயில் பாதை மாற்றம் | திட்டத்திற்கான தொகை |
|---|---|
| கடலூர்-விருத்தாச்சலம் | ரூ.198.68 கோடி (தொழில் துறையால் நிறைவேற்றப்படும் திட்டம்) |
| சென்னை கடற்கரை-தாம்பரம் (12 சந்திக் கடவுகள், மேம்பாலங்கள் கீழ்ப்பாலங்கள் ஆகியவை உட்பட) | ரூ.520 கோடி (போக்குவரத்துத் துறையால் மேற்கொள்ளப்படும்) |
| புதிய வழித்தடம்: அதிவேக போக்குவரத்து வசதி (சென்னை கடற்கரை-வேளச்சேரி) | இத்திட்டத்திற்கு மாநில அரசின் பங்காக 3-ல் 2 பங்கும், இரயில்வே துறையின் பங்காக மீதமுள்ள 3-ல் 1 பங்கு என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டம் நிறைவேற்றப்படும் (வீட்டு வசதித் துறையின் மூலம் மேற் கொள்ளப்படும்) |



நாகப்பட்டினம்-வேளாங்கண்ணி அகல இரயில் பாதை அமைக்கும் திட்டத்திற்கு புனித வேளாங்கண்ணி ஆலய நிர்வாகம் ரூ. 1 கோடி நிதி வழங்கியுள்ளது. இதற்கான நில எடுப்புப் பணிகள் நடந்து வருகின்றன.

இம்மாநிலத்தில் புதிய இரயில் பாதைகள் அமைப்பது, மீட்டர் கேஜ் இருப்புப் பாதைகளை அகல இரயில் பாதையாக மாற்றுவது ஆகிய திட்டங்களை விரைவில் நிறைவேற்றும்படி மத்திய அரசை மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இரயில்வே நிர்வாகத்தை ஏற்கெனவே நடைபெற்று வரும் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யக்கோரி, தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மேலும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு விரைவில் அனுமதி அளித்து நிதி ஒதுக்கீடு செய்து தரும்படியும் மைய அரசைக் கேட்டுள்ளது:

(1) பட்டாபிராம்-அரக்கோணம் நான்கு வழிப்பாதை.

(2) ஆவடி-ஸ்ரீபெரும்புதூர் புதிய இரயில் பாதை.

(3) நாகூர்-காரைக்கால், தஞ்சாவூர்- விழுப்புரம்-அகல இரயில் பாதையாக மாற்றும் திட்டம்.

(4) சத்தியமங்கலம் மற்றும் பழநிக்கு புதிய இரயில் பாதை (திருப்பூர், காங்கேயம், தாராபுரம் வழியாக)

மைய அரசும், நடப்பு நிதியாண்டில் பட்டாபிராம்-அரக்கோணம் இரயில் பாதையை நான்கு வழிப்பாதையாக ஆக்க அனுமதி அளித்துள்ளது.

[2003 ஏப்ரல் 28

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும், ஒரு கணினி முன்பதிவு மையம் அமைத்திட வேண்டும் என்ற இரயில்வே துறையின் கொள்கை முடிவிற்கேற்ப, இரயில் நிலையம் இல்லாத மாவட்டத் தலைநகரங்களில், கணினி முன்பதிவு மையம் அமைத்திட அத்துறை மாநில அரசு இலவசமாக இடம் தரவேண்டும் எனக் கேட்டிருந்தது. இரயில்வே துறையின் வேண்டுகோளுக்கிணங்க இரயில் நிலையம் இல்லாத மாவட்டத் தலைநகரங்களான, நாமக்கல் மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் கணினி முன்பதிவு மையம் அமைக்க 500 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டடத்தினை இரயில்வே துறைக்கு இலவசமாக வழங்க தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் இரயில்வே துறை அதிகாரிகள் தொடர்பு கொண்டு தேவையான கட்டடத்தை தெரிவு செய்தபின், அவ்விடங்களில் கணினி முன்பதிவு மையம் செயல்படத் தொடங்கும்.

அடுத்த ஆண்டு கும்பகோணத்தில் நடைபெறவுள்ள மகாமகத் திருவிழா சிறப்புடன் நடைபெறவும், அதில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் மக்கள் கலந்துகொள்ளவும் ஏதுவாக, அங்குள்ள மீட்டர் கேஜ் பாதை விரைவில் அகலப் பாதையாக மாற்றப்படவேண்டும் என மைய அரசை இவ்வரசு கேட்டுக்கொண்டது. மைய அரசும், 2004 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மகாமகத் திருவிழாவிற்கு முன்னர் தஞ்சாவூர்-கும்பகோணத்திற்கிடையேயான, மீட்டர் கேஜ் பாதையை அகலப் பாதையாக மாற்ற முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.

**19.0 விமான தளம்**

மாநில அரசின் தொடர் முயற்சியின் காரணமாகவும், போக்குவரத்து வளர்ச்சியின் காரணமாகவும், இந்திய விமான நிலைய ஆணையம், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய விமான நிலையங்களை விரிவுபடுத்தவும், அதன் ஓடுதளத்தை விரிவுபடுத்தவும், ஓடு பாதையில் மின் விளக்கு வசதியை ஏற்படுத்தவும், தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் பெரிய விமானங்களை இவ்விமான நிலையங்களில் இயக்க முடியும்.



2003 ஏப்ரல் 28]

இத்தேவைகளுக்காக, திருச்சியில் 19.12.05 ஹெக்டேர், மதுரையில் 24.61.0 ஹெக்டேர் மற்றும் கோயம்புத்தூரில் 45.96 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மதுரையிலும் திருச்சியிலும், தேவையான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, விமான நிலைய ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சேலம், தூத்துக்குடி விமான நிலையங்களுக்கு, இவ்வரசு தொடர் முயற்சி மேற்கொண்டும், விமானப் போக்குவரத்து இயக்கம் இல்லாததற்குக் காரணம், பயணிகளின் ஆதரவு இல்லாமையே ஆகும். எனினும், பெருகிவரும் மக்கள் தேவை மற்றும் தொழில் கட்டமைப்புகளின் மேம்பாடு இவற்றைக் கருத்திற்கொண்டு இவ்விமான நிலையங்கள் இயக்கத்திற்கு கொண்டுவரப்பட வேண்டுமென மீண்டும் இவ்வரசு மைய அரசை அணுகியுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கென தஞ்சாவூரிலும், கன்னியாகுமரியிலும் புதிய விமான நிலையங்கள் அமைக்கப்படவேண்டுமெனவும் இவ்வரசு மைய அரசை அணுகி உள்ளது.

**20.0 சென்னை விமான பறக்கும் குழாம்**

சென்னை விமான பறக்கும் குழாமிற்கு அரசு ஊக்குதவித் தொகை வழங்கி, மாணவர்களுக்கு விமானம் ஓட்டும் பயிற்சியளித்து, அவர்கள் விமான ஓட்டுநர் உரிமம் பெற அரசு உதவி செய்து வருகிறது. இக்குழாமிற்கு, நிலையான உதவித் தொகையாக ஓர் ஆண்டிற்கு ரூ.3.80 இலட்சம் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. விமான எரிபொருள் உதவித் தொகையாக ஓராண்டிற்கு ரூ.3.72 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர, ஆண்டிற்குப் பத்து மாணவர்களுக்கு உதவித் தொகை அளித்து, அவர்கள் தனிப்பட்ட விமான ஓட்டுநர் உரிமம் பயிற்சி பெறுவதற்கும் (Private Pilot Licence Training), வணிக விமான ஓட்டுநர் உரிமம் பயிற்சி பெறுவதற்கும் அரசு உதவி புரிந்து வருகிறது.

185078
சென்னை-600 008

**மானியக் கோரிக்கை எண் 46**

**போக்குவரத்துத் துறை**

**வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2003-2004**

*(ரூபாய் ஆயிரத்தில்)*

| வ. எண் | துறைத் தலைமையகம் | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| *1* | தலைமைச் செயலகம் | *126,82,26* | *21* | *126,82,47* |
| *2* | மோட்டார் வாகனப் பாராமரிப்புத் துறை | *22,45,04* | *16,49* | *22,61,53* |
| | மொத்தம் | ***149,27,30*** | ***16,70*** | ***149,44,00*** |

**மானியக் கோரிக்கை எண் 46**

**போக்குவரத்துத் துறை**

**வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2003-2004**

*(ரூபாய் ஆயிரத்தில்)*

| வ. எண் | துறைத் தலைமையகம் | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| *1* | தலைமைச் செயலகம் திட்டத்தில் சேராதது | *126,82,26* | .. | *126,82,26* |
| | மாநிலத் திட்டம் | .. | *21* | *21* |
| *2* | மோட்டார் வாகனப் பாராமரிப்புத் துறை திட்டத்தில் சேராதது | *20,09,26* | *92* | *20,10,18* |
| | மாநிலத் திட்டம் | *2,35,78* | *15,57* | *2,51,35* |
| | மொத்தம் | ***149,27,30*** | ***16,70*** | ***149,44,00*** |

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.